# இயல் - 4

## பிறப்புச் சடங்கு

"புத்திரச் செல்வம் பெறாதவர் பொருட்செல்வம் பெற்றும் பயனில்லையே் புத்திரன் போல் நமக்கு இந்த அரசச் செல்வம் இம்மை மறுமை இன்பங்களைக் கொடாதே."1 என்று மகப்பேற்றின் சிறப்பினை எடுத்துக்காட்டுகிறது.

கன்னியாகுமாரி மாவட்டத்தில் உள்ள நான்கு வட்டங்களில் மேற்கில் அமைந்த வட்டம் விளவங்கோடு ஆகும். இவ்வட்டத்தின் பிறப்புச் சடங்குகள் மதங்களின் அடிப்படையிலும் சாதியின் அடிப்படையிலும் வேறுபட்ட தன்மையினைக் கொண்டிருக்கின்றன. சாதியின் அடிப்படையில் உள்ள வேறுபாடுகளைக் காட்டிலும் மதத்தின் அடிப்படையிலேயே வேறுபாடுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. எனவே கன்னியாகுமாரி மாவட்டத்தின் விளவங்கோடு வட்டாரத்தில் காணப்படும் பிறப்புச் சடங்குகள் மதத்தின் அடிப்படையில் இங்குப் பிரித்து ஆராயப்படுகின்றன.

1. இந்து சமயத்தினாரிடையே காணப்படும் பிறப்புச் சடங்குகள்
2. கிறித்தவச் சமயத்தினாரிடையே காணப்படும் பிறப்புச் சடங்குகள்
3. இஸ்லாமிய சமயத்தினாரிடையே காணப்படும் பிறப்புச் சடங்குகள்

1. இந்து சமயத்தினாரிடையே காணப்படும் பிறப்புச் சடங்குகள்

கன்னியாகுமாரி மாவட்டத்தில் இந்து மதம், தான் கொண்டுள்ள சைவம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சாக்தம், சௌரம் என்னும் ஆறு பிரிவுகளுக்கு அப்பாற்பட்டு ஒரே தன்மையுடன் பிறப்புச் சடங்குகளைக் கொண்டிருந்தாலும் சிற்சில வேறுபாடுகளும் காணப்படுகின்றன.

திருமணம் முடிந்தபின்னர் இல்வாழ்க்கையைத் தொடங்குகின்ற தம்பதியாரிடையே அடுத்த நிலையில் அனைவராலும் எதிர்பார்க்கப்படுவது பிள்ளைப்பேறு ஆகும். இந்தப் பிள்ளைப்பேற்றிற்கு முதற்கட்டமாக விளங்குவது

கருவுறுதல் ஆகும். இந்தக் கருவுறுதல் நிகழ்வினை உணர்ந்து கொண்ட பெண் முதன்முதலில் அந்தக் கருவுறலுக்குக் காரணமான கணவனிடம் தொரிவிக்கிறாள். அந்தக் காலத்தில் இந்த அறிவிப்பிற்குப் பிறகு உள்ளூர் மருத்துவச்சி அழைத்து வரப்பட்டு அந்தக் கருவுறுதல் உறுதி செய்யப்படும். தற்காலத்தில் இது மருத்துவப் பாரிசோதனையில் உறுதி செய்யப்படுகிறது.

கருவுறுதல் உள்ளூர் மருத்துவச்சியால் அல்லது மருத்துவரால் உறுதி செய்யப்படுவதற்கு முன்பே கருவுற்ற பெண் தன் தாய்க்குத் தான் கருவுற்றிருக்கும் செய்தியை, உறுதிப்படுத்திக் கொள்ளும் நோக்கில் தொரிவிப்பதும் உண்டு. அவ்வாறு தொரிவிக்கும் போது பெண்ணின் தாய் தந்தையர் மகளின் வீட்டிற்கு வருகைபுரிந்து தங்கள் மகளை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று கருவுற்றதை உறுதி செய்து கொள்வர். அவ்வாறு மருத்துவமனைக்குச் செல்வதற்கு முன்பாகத் தாய் தன் மகளைத் தனியாக அழைத்து, கருவுற்ற பெண்ணிற்கு ஏற்படும் அறிகுறிகள் தனது மகளுக்கு ஏற்பட்டிருக்கின்றனவா என்று கேட்டுத் தொரிந்து கொள்வாள். கருவுற்ற நிகழ்வு ஓரளவு உறுதி செய்யப்பட்டாலும் மருத்துவப் பாரிசோதனைக்குப் பிறகே கருவுற்றது உறுதியாகும்.

மேலே கூறிய கருவுறல் நிகழ்ச்சி, திருமணத்திற்கு அடுத்த நிலையில் ஏற்பட்ட நிகழ்வாக இருந்தால் அதாவது முதல் கருவுறல் (தலைப்பிள்ளை கருவுறல்) நிகழ்வாக இருந்தால், குழந்தைப்பேற்றில் அனுபவம் வாய்ந்த அந்தத் தாய் எத்தகைய அறிகுறிகள் இனிமேல் ஏற்படும் என்பதை விளக்கி அந்த அறிகுறிகளைக் கண்டு அஞ்ச வேண்டாம் என்று அறிவுறுத்துவாள். சில வேளைகளில் கரு நிலைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பெண்ணைத் தாய் வீட்டிற்கு அழைத்துச் செல்வதும் உண்டு. தாய் வீட்டிற்கு அந்தப் பெண் அழைத்துச் செல்லப்பட்டால் அங்கேயே ஓரிரு நாள் தங்குவதோ அல்லது வாரக் கணக்கிலோ மாதக் கணக்கிலோ தங்குவதோ நிகழும்.

பெரும்பாலும் பெண் தாய் வீட்டில் தங்கும் சூழ்நிலை ஏற்பட்டால் அந்தச் சூழ்நிலையைக் கணவனும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் இருப்பான். ஏனெனில் தனது மனைவிக்கு அவளது தாய் வீட்டை விடவும் பாதுகாப்பான இடம் வேறு இருப்பதாக அவன் கருதமாட்டான். இவ்வாறு தாய் வீட்டிற்கு வந்து பெண் தங்குவது என்பது பிறப்புத் தொடர்பான கட்டாயச் சடங்கு என்னும் நிலையில் இல்லையென்றாலும் இதனைப் பெண்ணின் தாய் வீட்டார் தங்கள் கௌரவமாகக் கருதுகின்றனர்.

கருவுற்ற பெண்ணுக்கு மூன்றாம் மாதம், ஐந்தாம் மாதம், ஏழாம் மாதம், ஒன்பதாம் மாதம் ஆகிய ஒற்றைப்படை மாதங்களை முக்கியமான மாதங்களாகக் கருதுகின்றனர். எனவே பெண்ணின் உடல்நிலையைக் கருத்திற்கொண்டு மேற்கூறப்பட்ட ஏதேனும் ஒரு மாதத்தில் பெண்ணின் வீட்டிலிருந்து தாயின் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறார்கள். இவ்வாறு அழைத்துச் செல்வதைச் ‘சூல் அழைப்பு“ என்பர்.

சூல் அழைப்பு

மூன்றாம், ஐந்தாம், ஏழாம், ஒன்பதாம் மாதங்களில் நடைபெறுகின்ற சூல் அழைப்பு என்பது பெரும்பாலும் ஏழாம் மாதத்தில் நடைபெறும். சில இடங்களில் தாய் வீட்டின் வசதிக்கேற்ப முந்தைய மாதங்களிலோ ஒன்பதாம் மாதத்திலோ நிகழும். சூல் அழைப்புச் சடங்கின்போது பெண்ணின் தாய் வீட்டிலிருந்து நெருங்கிய உறவினர்கள் பெண்வீட்டிற்கு வந்து அழைத்துச் செல்வர். அவ்வாறு வருகிறவர்களில் பெண்ணின் தாய், தந்தை, அத்தை, அக்காள் இருந்தால் அவர், அண்ணி (மதனி) இருந்தால் அவர் ஆகியோர் கட்டாயமாக இருப்பர். இவர்கள் தவிர பிற உறவினர்களும் வருவதுண்டு.

சூல் அழைக்க வரும்போது அரிசி, பருப்பு, உழுந்து, மஞ்சள், அவியல் காய்கறிகள், சாம்பார் காய்கறிகள், பிற கூட்டுகளுக்கான காய்கறிகள், தேங்காய், வாழைப்பழம், இலை, வெற்றிலை, பாக்கு, புகையிலை முதலானவையும் பூசை தொடர்பான பொருட்களும் கொண்டு வருவது வழக்கம். இந்தப் பொருட்களின் அளவு அவரவர் வசதிக்கேற்ப வேறுபடும். இவ்வாறு கொண்டுவரும் பொருட்களைப் பெண் வீட்டில் சமைத்து அனைவரும் சாப்பிடுவது அந்தக் காலத்தில் மரபாக இருந்தது. தற்காலத்தில் இவ்வாறு கொண்டு வரும் பொருட்களைச் சமைக்காமல் பெண் வீட்டிலேயே பொருட்களை வாங்கிச் சமையல் ஏற்பாடுகளைச் செய்வதைக் காணமுடிகிறது. அந்தக் காலத்தில் இத்தகைய சடங்குகளின்போது பெரும்பாலும் வீட்டுப்பெண்களே சமைப்பது வழக்கம். அரிதாகச் சமையற்காரர்களை ஏற்பாடு செய்வர். தற்காலத்தில் சமையற்காரர்களின் துணையுடன் பலவகையான உணவுப்பொருட்கள் சமைக்கப்படுகின்றன.

இத்தகைய சூல் அழைப்பின்போது பெண்ணுக்கும் அவள் கணவனுக்கும் ஆடை எடுத்து வழங்குவது, அணிகலன்கள் வழங்குவது முதலானவையும் நிகழும்.

சமையல் முடிந்தபிறகு கணவன் வீட்டைச் சேர்ந்தவர்களுக்கு முதலில் உணவு பாரிமாறப்படும். அதன்பிறகே தாய் வீட்டைச் சேர்ந்தவர்கள் உணவு உண்பார்கள்.

இந்த நிகழ்வு கணவன் வீட்டில் நிகழ்ந்தாலும் பெண்ணின் தாய் வீட்டினரே நடத்தும் நிகழ்வாக நடைபெறுகிறது. அதன்பிறகு பெண்ணைத் தாய் வீட்டிற்கு அழைத்துச் செல்வதற்கான சடங்கு நிகழும். இந்தச் சடங்கில் சமயச் சார்பு காணப்படும். பெண்ணின் தாய் வீட்டைச் சேர்ந்தவர்களும் கணவன் வீட்டைச் சேர்ந்தவர்களும் இந்து மதத்தின் ஒரே உட்பிரிவினராக இருந்தால் எந்தப் பிரச்சனையும் ஏற்படாது. பெண்ணின் தாய் வீட்டைச் சேர்ந்தவர்கள் ஓர் உட்பிரிவைச் சார்ந்தவர்களாகவும் கணவன் வீட்டைச் சேர்ந்தவர்கள் வேறு உட்பிரிவைச் சார்ந்தவர்களாகவும் இருந்தால் பெரும்பாலும் பெண்ணின் தாய் வீட்டினாரின் உட்பிரிவின்படியே சடங்குகள் நிகழும். இங்கே உட்பிரிவு என்று கூறப்படுவது பெரும்பாலும் இரண்டு பிரிவுக்குள்ளேயே அடங்கிவிடும். ஒன்று சைவ சமயம் சார்ந்த பிரிவு. மற்றொன்று வைணவ சமயம் சார்ந்த பிரிவு. இங்கே சைவம், வைணவம் என்று இந்து சமயப் பிரிவுகள் குறிப்பிடப் பட்டாலும் இந்தப் பிரிவுகள், சிறு தெய்வ வழிபாட்டிற்குள்ளேயே அடங்கும் எனலாம். முத்தாரம்மன், இசக்கியம்மன், பத்திரகாளியம்மன் முதலான பெண்தெய்வ வழிபாடுகளும் சுடலைமாடன், செங்கிடாக்காரன், வண்ணாரமாடன் முதலான ஆண்தெய்வ வழிபாடுகளும் சைவ சமய உட்பிரிவுக்குள் அடங்கும். இந்த வழிபாடு சார்ந்தவர்கள் சமயச் சின்னமாகத் திருநீறு பூசுவதையும் குங்குமம் இடுவதையும் கொள்கின்றனர்.

தென் திருவிதாங்கூர் சமஸ்தானத்திற்குட்பட்ட பகுதியாகக் கன்னியாகுமாரி மாவட்டம் இருந்தபோது அய்யா வைகுண்டர் என்பவர் இந்து சமயத்திற்குள்ளேயே ஒரு சீர்திருத்த வழிபாட்டுமுறையை ஏற்படுத்தினார். இந்த வழிபாடு சார்ந்தவர்கள் திருமண்ணால் நாமம் பூசுகின்றனர். பெரும்பாலும் இந்த இரண்டு வகையிலேயே வழிபாட்டுமுறை அமைகிறது.

பெண்ணின் தாய் வீட்டைச் சேர்ந்தவர்கள் திருநீறு பூசும் வழக்கம் கொண்டவர்களாக இருந்தால் பெண்ணின் நெற்றியில் திருநீறு பூசும் சடங்கு நடைபெறுகிறது. பெண்ணின் தாய் வீட்டைச் சேர்ந்தவர்கள் திருமண் பூசும் மரபினைச் சார்ந்தவர்களாக இருந்தால் பெண்ணின் நெற்றியில் நாமம் இடுகின்றனர். இவ்வாறு நாமம் இடும்போது பொரியவர்கள் சட்டை அணிந்து கொள்ளாமல் துண்டினைத் தலைப்பாகையாக அணிந்துகொண்டு பெண்ணின் நெற்றியில் நாமம் இடுவது வழக்கம்.

இந்தச் சடங்கிற்குப் பிறகு பெண்ணைத் தாய் வீட்டிற்கு அழைத்துச் செல்வர். பழங்காலத்தில் அதாவது மோட்டார் வாகனங்கள் பெருவாரியாகப் பயன்பாட்டிற்கு வராத காலத்தில் வில் வண்டியில் பெண்ணை ஏற்றி அழைத்துச் செல்வர். மோட்டார்

வாகனங்கள் பயன்பாட்டிற்கு வந்தபின்னர் காரில் ஏற்றி அழைத்துச் செல்வர். இவ்வாறு அழைத்துச் செல்வது பெண்ணைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்வதற்கே ஆகும்.

கருவுற்ற பெண்ணைக் கர்ப்பிணிப் பெண் என்றும் கூறுவர். மேலும் சூலி என்றும் கூறுவர். சூல் அழைத்துச் செல்லும்போது கணவன் வீட்டிலுள்ள குலதெய்வங்களுக்குப் பூசை நடத்துதல் அல்லது கருவுற்ற பெண்ணின் தலையைத் தேங்காயால் சுற்றி, அந்தத் தேங்காயைக் கோவில் வாசலில் உடைத்தல் ஆகியவை நிகழும். கணவன் வீட்டிலிருந்து தாயார் வீடு செல்வது வரை அவரவர் மதப்பிரிவிற்கு ஏற்ப இருக்கும் கோவில்களில் தேங்காய் உடைத்துச் செல்வது வழக்கம்.

இவ்வாறு கோவில்களில் தேங்காய் உடைப்பதும் பூசை செய்வதும் அந்தக் கருவுற்ற பெண்ணைத் தெய்வம் காக்க வேண்டும் என்னும் நம்பிக்கை சார்ந்த நிகழ்வு ஆகும்.

சூல் அழைத்துக் கொண்டு தாய் வீட்டிற்குப் போன பிறகு பெரும்பாலும் தாயின் நேரடிக் கண்காணிப்பிலேயே கருவுற்ற பெண் இருப்பாள். கருவுற்ற பெண்ணிற்கு எவை ஒவ்வும் எவை ஒவ்வா என்பதை அறிந்து, தாய் உணவு சமைத்துக் கொடுப்பாள். தற்காலத்தில் சித்த மருந்துகள் என்று அழைக்கப்படும் மருந்துகள் அந்தக் காலத்தில் கைமருந்துகள் எனப்பட்டன. அந்த மருந்துகளை வேளையறிந்து கருவுற்ற பெண்ணிற்குத் தாய் கொடுப்பாள். இந்த வேளைகளில் உள்ளூர் மருத்துவச்சி அந்தப் பெண்ணை வந்து பார்த்துக்கொள்வாள். தற்காலத்தில் மருத்துவாரின் ஆலோசனைப்படி கருவுற்ற பெண் பராமாரிக்கப்படுகிறாள்.

பிள்ளைப்பேறு

பெரும்பாலும் தலைப்பிள்ளைப் பேறு, பெண்ணின் தாய்வீட்டில் நிகழ்வது இயல்பு. அதற்காகவே பெண்ணை அழைக்கும் நிகழ்வானது சூல் அழைப்பு என்னும் பெயாரில் நிகழ்த்தப்பெறுகிறது. இந்தச் சூல் அழைப்பிற்குப் பின் அந்தப் பெண் தனது தாய் வீட்டிலேயே தங்கியிருப்பாள்.

தற்காலத்தில் பிள்ளைப்பேறு மருத்துவமனைகளில் நிகழ்கிறது. சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குமுன் பிள்ளைப்பேறு தாயின் வீட்டிலேயே நிகழ்ந்துள்ளது. அவ்வாறு பிள்ளைப்பேறு நடக்கும் அறையினை ஈற்றுப்புரை என்று குறிப்பிடுவது உண்டு. எல்லா வீடுகளிலும் ‘ஈற்றுப்புரை“ என்னும் வழக்கம் இல்லை என்றாலும் தற்காலத்தில்

படுக்கையறை என்று அழைக்கப்படுவதைப்போல் அக்காலத்தில் அரங்கு வீடு என்னும் அறையிலேயே பிள்ளைப்பேறு நிகழ்ந்துள்ளது.

சூல் அழைப்பிற்குப்பின்

பெண்ணை அவளது தாய்வீட்டிற்குப் பிள்ளைப்பேற்றை முன்னிட்டு அழைத்துச்செல்வது எதற்காக என்றால் குழந்தைப்பேறு என்பது அந்தப் பெண்ணிற்கு முன் அனுபவம் இல்லாத ஒன்றாக இருப்பதாலும், அந்தக் காலத்தில் மருத்துவமனையில் பிள்ளைப்பேறு நிகழாமல் வீட்டிலேயே நிகழ்ந்ததாலும் அவ்வாறு அழைக்கப்பட்டுள்ளாள். கணவன் வீட்டில் இருக்கக் கூடிய வயது முதிர்ந்த அனுபவம் மிக்க பெண், மாமியார் ஆவார். மாமியாருக்கு மருமகள் மேல் ஏதேனும் மனக்கசப்பு இருந்தால் பிள்ளைப்பேற்றுக்கு அது இடையூறாக அமைந்துவிடும். எனவே பெண் அவளது தாய் வீட்டிற்கு அழைக்கப்படுகிறாள்.

அந்தக் காலத்தில் பிள்ளைப்பேறு என்பது தற்காலத்தைப்போல் அவ்வளவு எளிதானதாக இல்லை. கருவுற்ற பெண்ணும் குழந்தையும் உயிருடன் மீள்வது என்பது அரிதான செயலாக அமைந்திருந்தது. பிள்ளை பெற்றெடுத்த ஒரு பெண்ணை, மறுபிறப்பு அடைந்த பெண்ணாகவே அந்தக் காலத்தில் கருதினர். எனவேதான் அந்தப் பெண்ணிடம் மிகுந்த அன்பு கொண்டிருக்கும் தாய் வீட்டிற்கு அவள் அழைக்கப்படுகிறாள்.

ஊட்டச்சத்து

கருவுற்றுச் சூல் முற்றிய நிலையில் இருக்கும் பெண்ணுக்குக் குழந்தையை ஈன்றெடுப்பதற்கான வலிமை வேண்டும் என்னும் நோக்கில் மருத்துவ குணம் அடங்கிய காய்கறிகளை, மீன்வகைகளைச் சமைத்துக் கொடுப்பது வழக்கம். இந்த வழக்கத்தின் ஒரு பகுதியாகச் சூல்கொண்ட பெண்ணின் நெருங்கிய உறவினர்கள் இத்தகைய சத்தான உணவுப் பொருட்களை வழங்குவதும் உண்டு. உடலுக்கு உறுதி ஏற்றும் மருந்துப் பொருட்கள் அடங்கிய ‘குடிமிளகு“ என்னும் கலவையை அரைத்து அருந்தச்செய்வர். குடிமிளகில் அடங்கியுள்ள பொருட்களான சுக்கு, மிளகு, திப்பிலி போன்ற மருந்துப் பொருட்கள் அடங்கிய கலவையானது பெண்ணின் இடுப்புத் தொடர்பான உறுப்புகளுக்கு வலிமை சேர்ப்பது ஆகும்.

கருவுற்ற பெண்ணின் வயிற்றில் வளரும் கரு ஆணா, பெண்ணா என்று அறியும் வசதி அக்காலத்தில் இல்லை. (இக்காலத்திலும் ஆணா, பெண்ணா என்று அறியும் வசதி தடைசெய்யப் பட்டுள்ளது.) எனவே எந்தக் குழந்தையாக இருந்தாலும் அது

சிவப்பாகப் பிறக்க வேண்டும் என்னும் விருப்பம் கொண்டவர்களாக அனைவரும் இருந்தனர். அதற்காகப் பாலில் குங்குமப்பூக் கலந்து பெண்ணுக்குக் குடிக்க வழங்கும் வழக்கம் தொடர்ச்சியாக இருந்து வருகிறது.

கன்னியாகுமாரி மாவட்டத்திலுள்ள அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு ஆகிய நான்கு வட்டங்களில் விளவங்கோடு வட்டம் மட்டுமே முழுமையாக மலைப்பகுதியைக் கொண்டது எனலாம். இந்த வட்டமே கன்னியாகுமாரி மாவட்டத்தின் மேற்கு எல்லையில் உள்ள வட்டமுமாகும். இங்கே வாழுகிற மக்கள் கிழக்கு வட்டமாகிய அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் வாழுகிற மக்களைக்காட்டிலும் நிற அமைப்பில் மாநிறத்தைக் கடந்த சிவப்பு நிறம் கொண்டவர்களாக உள்ளனர். இருப்பினும் சூல் முற்றிய நிலையில் இருக்கின்ற பெண்ணிற்குக் குங்குமப்பூக் கொடுக்கும் வழக்கம் காணப்படுகிறது. இந்த நான்கு வட்டங்களில் விளவங்கோடு வட்டம் மட்டுமே மலை என்னும் பொருண்மை கொண்ட கோடு என்னும் சொல்லையும் தாங்கியுள்ளதையும் காணமுடிகிறது.

மருத்துவம்

தற்காலத்தில் மருத்துவாரின் அறிவுரைப்படி சூல் கொண்ட பெண் மருந்து முதலானவற்றைப் பயன்படுத்துகிறாள். இன்றுபோல் மருத்துவ வசதி மிகுதியாக இல்லாத அக்காலத்தில் பல குழந்தைகளைப் பெற்றெடுத்த பெண்களே தங்கள் அனுபவ அறிவைக் கொண்டு முன்னர்க் குறிப்பிட்ட மருத்துவ முறைகளைச் செய்வது வழக்கம். இவர்கள் தவிரவும் அதே ஊரிலேயோ அல்லது அருகிலுள்ள ஊரிலேயோ மருத்துவச்சி என்னும் பெயர் கொண்ட பெண் வாழ்ந்து வருவாள். அந்தப் பெண்ணே சூல் முதிர்ந்த பெண்ணிற்குத் தேவையான மருத்துவத்தைச் செய்வாள்.

மருத்துவச்சி

மருத்துவச்சி எனக் குறிக்கப்படும் பெண் பெரும்பாலும் வயது முதிர்ந்தவளாக இருப்பாள். இந்தப் பெண் பெரும்பாலும் அந்தக் குறிப்பிட்ட ஊரில் உள்ளவர்களுக்கு அல்லது அருகிலுள்ள ஊர்களில் உள்ளவர்களுக்கு முடிவெட்டும் தொழில் செய்பவாரின் மனைவியாக இருப்பாள் அல்லது அந்தத் தொழில் செய்பவாரின் குடும்பம் சார்ந்த பெண்ணாக இருப்பாள். முடிவெட்டும் தொழிலைச் செய்பவரைக் குடிமகன் என்றும் மருத்துவச்சியாக இருக்கும் பெண்ணைக் குடிமகள் என்றும் குறிப்பிடுவர். இவர்கள் பெரும்பான்மையாக அந்த ஊர்களில் வாழும் நாடார் சமுதாயத்திலிருந்து வேறுபட்ட சமுதாயத்தவராக இருப்பர். குடிமகன் என்று குறிக்கப்படுபவர் பெரும்பாலும் நாவிதர் என்னும் சமுதாயத்தைச் சேர்ந்தவராக

இருப்பார். அந்த ஊரில் உள்ளவர்களின் முடிவெட்டும் தேவைக்காகவும் மருத்துவம் தொடர்பான தேவைக்காகவும் இவர்கள் அங்கே குடியமர்த்தப்பட்டவர்களாக இருப்பர்.

நாடார் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தற்காலத்தில் பிற்படுத்தப் பட்டவர்கள் என்னும் பிரிவிலும் நாவிதர் சமுதாயத்தைச் சேர்ந்தவர் மிகவும் பிற்படுத்தப்பட்டவர் என்னும் பிரிவிலும் சேர்க்கப்பட்டிருந்தாலும் உயர்வு தாழ்வு இல்லாமல் வாழ்வதைக் காணமுடிகிறது. மருத்துவச் சமுதாயத்தைச் சேர்ந்த நாவிதர் என்போர் அந்த ஊரில் உள்ள பெரும்பான்மையோர் வழங்கும் பொருட்களைக் கொண்டே வாழ்க்கையை நடத்துவர். பெரும்பாலும் பணப்புழக்கம் இல்லாமல் பொருட்புழக்கம் இருந்த காரணத்தினால் பொருட்களாக அந்தக் காலத்தில் வழங்கினர். தற்காலத்தில் (2014) பொருட்களுக்குப் பதிலாகப் பணமாக வழங்கும் பழக்கம் உருவாகி வருகிறது. எந்தப் பொருளுக்கும் தற்காலத்தில் மதிப்பானது பணத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ள காரணத்தினால் பணமாக வழங்குகிறார்கள். ஆனால் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பாக, பொருட்களின் பயன்பாட்டிற்கு ஏற்பவே அப்பொருட்களுக்கு மதிப்பு வழங்கப்பட்டது. அந்தக் காலத்தில் கன்னியாகுமாரி மாவட்டத்தில் நெல் மதிப்புமிக்க பொருளாகக் கருதப்பட்டதால் மருத்துவம் செய்யும் மருத்துவச்சிக்கும் முடிவெட்டும் நாவிதருக்கும் நெல்லே வழங்கப்பட்டது.

மருத்துவச்சி, சூல் முற்றிய பெண்ணின் சூழ்நிலையைப் பார்த்து, வயிற்றில் குழந்தை அமைந்திருக்கும் நிலையைப் பார்த்து, தகுந்த மருத்துவத்தைச் செய்வாள். அவளே கருவுற்ற பெண்ணிற்கு வழங்க வேண்டிய உணவு முறையையும் தொரிவிப்பாள். இவ்வாறு குறிப்பிட்ட கால இடைவெளியில் மருத்துவச்சி அந்தப் பெண்ணை வந்து பார்த்து மருத்துவ உதவிகளைச் செய்து வருவாள்.

பிள்ளை பிறத்தல்

பிள்ளை பிறப்பதற்கான காலத்தை வயது முதிர்ந்த பெண்களும் மருத்துவச்சியும் சாரியாகக் கணித்துச் சொல்லிவிடுவர். என்றைக்குக் குழந்தை பிறக்கும் எனக் கருதப்படுகிறதோ அன்றைக்கு அந்தப் பெண் ஈற்றுப்புரைக்கு அழைத்துச் செல்லப்படுவாள். தற்காலத்தில் லேபர் வார்டு என மகப்பேற்று மருத்துவமனைகளில் குறிக்கப்படுவதற்கு இணையானது இந்த ஈற்றுப்புரையாகும். எல்லா வீடுகளிலும் ஈற்றுப்புரை என ஒரு தனிப்பகுதி இல்லை என்றாலும் எந்த அறையில் குழந்தைப்பேறு நிகழ்கிறதோ அந்த அறையே ஈற்றுப்புரை என அழைக்கப்படும்.

கன்னி காணுதல்

பிள்ளைப்பேற்றின் முதல் நிகழ்வாகக் கருதப்படுவது கன்னி காணுதல் ஆகும். கன்னியாகுமாரி மாவட்டத்தில் கன்னி என்னும் சொல்லுக்கு முதல் என்னும் பொருளும் வழங்கப் பெறுகிறது. கன்னி வேட்டை என்றால் முதல் வேட்டை என்று பொருள். அதைப் போல, குழந்தைப்பேற்றின் முதல் நிகழ்வைக் கன்னி காணுதல் என்கிறார்கள். கருப்பையில் இருக்கும் குழந்தையைச் சூழ்ந்து நீர்க்குடம் காணப்படும். நீர்க்குடத்தோடு குழந்தை முதன்முதலில் வெளிப்பட முயல்வதை இவ்வாறு கூறுகின்றனர்.

பனிக்குடம் உடைதல்

குழந்தையைச் சூழ்ந்திருக்கக் கூடிய நீர்க்குடத்தைப் பனிக்குடம் என்று கூறுவர். இது மெல்லிய சவ்வு போன்ற பகுதியை வெளிப்புறத்தில் கொண்டிருக்கும். அதனுள்ளே நீரும் அதற்குள்ளே குழந்தையும் இருக்கும். நீர் நிறைந்திருக்கும் பனிக்குடமானது கன்னி கண்டவுடன் வெளிப்புறச் சூழலால் தாக்குறும். எனவே மெல்லிய சவ்வு போன்ற வெளிப்பகுதி கிழிந்து நிறைந்திருக்கும் நீர் வெளியேறும். இந்த நீர் வெளியேறிய உடன் அல்லது சில நிமிடங்களில் குழந்தையின் தலைப்பகுதி வெளிப்புறமாகத் தோன்றும். இந்த நிகழ்விற்குப் பிறகு குழந்தைப் பிறப்பில் தாமதம் ஏற்படக்கூடாது. ஏனெனில் பனிக்குடம் என்ற திரவத்தில் பாதுகாப்பாக இருந்த குழந்தை வெளிப்புறச் சூழலால் தாக்குற்று விறைப்புத் தன்மை அடைய நோரிடும். எனவே கருவுற்ற பெண் தனது வலிமையின் துணையுடன் குழந்தையை வெளியேற்றுவதற்கான செயலில் முயல வேண்டும். இதற்கு மருத்துவச்சியும் அனுபவம் வாய்ந்த பிற பெண்களும் துணையாய் இருப்பர்.

குழந்தைப் பேற்றில் குழந்தையின் தலைப்பகுதி வெளிவருவதில் மட்டும்தான் சூல் முற்றிய பெண்ணின் முயற்சி மிகுதியாகத் தேவைப்படும். அதன்பிறகு நெளியும் நெகிழ்வுத்தன்மை கொண்ட குழந்தையை இழுத்து வெளியே மருத்துவச்சி எடுத்து விடுவாள்.

தொப்புள் கொடி அறுத்தல்

தாய்க்கும் தாயின் வயிற்றில் கருவாக இருந்த குழந்தைக்கும் உள்ள தொடர்பானது தொப்புள் கொடியை அடிப்படையாகக் கொண்டது. பனிக்குடத்தில் இருந்தது வரை குழந்தையின் உணவானது இந்தத் தொப்புள் கொடியின் வழியாகத்தான் சென்றது. பனிக்குடத்தை உடைத்துவிட்டு வெளிவந்த குழந்தைக்கு இப்போது உணவு செல்லும் வழியாக வாய் அமைகிறது. இனி, தாயின் தொப்புளுக்கும் குழந்தைக்கும் தொடர்பு தேவையில்லை என்பதால் தாயும்

குழந்தையும் தொப்புள் கொடி அறுக்கப்பட்டு, தனித்தனியே பிரிக்கப்படுகிறார்கள். இந்தப் பணியை மருத்துவச்சியே வெற்றிகரமாகச் செய்து முடிக்கிறாள். இந்தச் செயலுக்கு மனவலிமையும் அனுபவமும் மிகுதியாகத் தேவை. மருத்துவச்சி தனது அனுபவத்தின் துணையால் நன்கு கூராக்கப்பட்ட கத்தியைக் கொண்டு தொப்புள் கொடியைக் குழந்தையின் தொப்புளுக்கு அருகில் அறுக்கிறாள். உடனே அந்த அறுபட்ட பகுதியில் புண் ஆறுவதற்கான அனுபவ மருந்துகள் வைத்துக் கட்டப்படுகின்றன.

தொப்புள் கொடி அறுபட்டவுடன் தாயின் கருப்பையில் இருந்து தொடங்கும் அந்தக் கொடி தேவையற்ற ஒன்றாகி விடுகிறது. எனவே அது தாயின் கருப்பையிலிருந்து முழுவதுமாக வெளியேற வேண்டும். இதுவரை தொப்புள் கொடி என்னும் பெயரோடு இருந்த அந்தக் கொடி, நச்சுக் கொடி என்னும் பெயரைத் தாங்குகிறது. அந்தக் கொடி வெளியேறுவதற்கான பணிகளை மருத்துவச்சி செய்கிறாள்.

பெரும்பாலும் குழந்தை பிறந்தவுடன் அனுபவம் வாய்ந்த பெண்கள் குழந்தையைக் குளிப்பாட்டி அதன் மூக்கு, வாய் முதலான பகுதிகளில் தேவையற்ற பொருட்கள் ஏதேனும் நுழைந்திருந்தால் அவற்றை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபடுவார்கள். மருத்துவச்சி மட்டும் குழந்தையைப் பற்றிய கவலையை மற்றவர்களிடம் விட்டுவிட்டு, தாய்க்குத் தேவையான மருத்துவச் செயல்களிலேயே ஈடுபடுவாள்.

தற்காலத்தில் பிறந்த குழந்தையை மருத்துவர்கள் தலைகீழாகத் தூக்கிப் பிடிப்பார்கள். அது தேவையற்ற நீர்மப்பொருட்களைக் குழந்தையிடமிருந்து வெளியேற்றுவதற்காகும். இந்தச் சமயத்தில் வெளிப்புறச் சூழலால் தாக்குற்ற குழந்தை தனது பாதுகாப்பைக் கருதி வேகமாக அழுகிறது.

சேனைத்தண்ணீர்

“குழந்தைக்கு முதல் உணவு கொடுப்பதைச் ‘சேனை வார்த்தல்“ என்று அழைக்கின்றனர். இது ‘ஜாத கர்மம்“ என்றும் அழைக்கப்படுகிறது”. 2 கருவில் இருக்கும் வரை தாயிடமிருந்து உணவினைப் பெற்ற குழந்தைக்கு முதன்முதலாக வாய் வழியாக உணவு செலுத்தும் முயற்சியில் அனுபவம் வாய்ந்த பெண்கள் ஈடுபடுவார்கள். தொடர்ச்சியாகச் சீரான உணவைப் பெற்று வந்த குழந்தை இனிமேல் இடைவெளிவிட்டு உணவைப் பெறவேண்டும். அதற்கு முதற்கட்டமாகப் பழங்காலத்தில் கருப்புக்கட்டி என்னும் பனைவெல்லக் கரைசலைச் சங்கின்

துணைகொண்டு குழந்தைக்கு ஊட்டுவர். இவ்வாறு ஊட்டப்படும் கரைசலைச் சேனைத் தண்ணீர் என்று கன்னியாகுமாரி மாவட்டத்தின் விளவங்கோடு வட்டப் பகுதியில் கூறுகின்றனர். மிகப் பழங்காலத்தில் சங்கு என்பது கடலிலிருந்து எடுக்கப்பட்ட சிப்பியாக இருந்தது. தற்காலத்தில் உலோகத்தின் பயன்பாடு மிகுதியான பிறகு ஈயத்தை வார்த்துச் செய்யப்பட்ட சங்கு, வெள்ளியில் செய்யப்பட்ட சங்கு, தங்கத்தில் செய்யப்பட்ட சங்கு எனப் பல வகைகளில் சங்கு காணப்படுகிறது.

கடலிலிருந்து கிடைக்கப்பெற்ற சங்கின் வடிவத்தில் உலோகத்தாலான சங்குகள் உருவாக்கப்பட்டதால் உலோகத்தில் ஆனவற்றையும் விளவங்கோடு வட்டத்தைச் சேர்ந்த மக்கள் சங்கு என்றே குறிப்பிடுகின்றனர். சென்னை முதலான பிற பகுதிகளில் சங்கினைப் பாலாடை எனக் குறிப்பிடுகின்றனர். கடற்சிப்பியிலிருந்து சங்கு எடுக்கப்பட்டு அதன் மூலமாகக் குழந்தைகளுக்குச் சேனைத்தண்ணீர், பால் முதலானவற்றைப் புகட்டியிருக்கிறார்கள் என்பதைக் குறிக்கும் வகையில், பெண்கள் குழந்தை அருந்திய பாலின் அல்லது திரவத்தின் அளவைக் குறிப்பிடும்போது, ‘ஒரு சிப்பிபோலக் குடித்திருப்பான்“ என்னும் சொலவடை தற்காலத்திலும் விளவங்கோடு வட்டத்தில் பேச்சுவழக்கில் இருக்கிறது. எனவே பால் புகட்டுவதற்குச் சிப்பி பயன்பட்டிருக்கிறது என அறிய முடிகிறது.

கொப்பாடை புடைத்தல்

விளவங்கோடு வட்டத்தில் சுளகு என்னும் புடைப்பதற்குப் பயன்படும் பொருளைப் பயன்படுத்துகின்றனர். இதைப் பேச்சு வழக்கில் ‘சொளவு“ எனக் குறிப்பிடுகின்றனர். இந்தச் சுளகினைத் தமிழகத்தின் பிற பகுதிகளில் முறம் என அழைக்கின்றனர். இந்தச் சுளகு பெரும்பாலும் பனை ஓலையினாலும் பனை மட்டையினாலும் பின்னப்பட்டிருக்கும். இவ்வாறு பனை ஓலையினால் உருவாக்கப்பட்ட சுளகு கன்னியாகுமாரி மாவட்டத்தின் பிற பகுதிகளிலும் திருநெல்வேலி மாவட்டப் பகுதிகளிலும் பயன்பாட்டில் உள்ளது.

கொள்ளு எனத் தமிழகத்தின் பல பகுதிகளில் குறிப்பிடப்படும் தானியம் கன்னியாகுமாரி மாவட்டத்தில் காணம் என அழைக்கப்படுகிறது. இது கறுப்பு நிறத்திலும் வெள்ளை நிறத்திலும் கிடைக்கிறது. இந்தக் காணத்தில் கறுப்பு நிறக் காணம் மருத்துவக் குணம் கொண்டது என நம்பப்படுகிறது. குழந்தைக்கு அந்த இளம்பருவத்தில் காணத்தை உணவாக வழங்க இயலாது. அவித்த காணத்திலிருந்து வெளியேறும் ஆவிக்குக் கெட்ட நீரை அகற்றும் தன்மை இருப்பதாக நம்புகிறார்கள். எனவே குழந்தை பிறந்து மூன்று மாதத்திற்குள்ளாகக் கறுப்புக் காணத்தை

வேகவைத்து நீரை நன்கு வடித்தபின் காணத்தைச் சுளகில் கொட்டி அந்த ஆவி குழந்தையை நோக்கிப் போகும் வகையில் புடைப்பார்கள். இதனைக் குழந்தையை ஈன்ற தாயின் தாய் அல்லது அந்த நிலையில் இருப்பவர்கள் புடைப்பது வழக்கம். இதனைக் 'கொப்பாடை புடைத்தல்" என்கிறார்கள்.

கொப்பு என்னும் சொல் கிளையைக் குறிப்பதற்குக் கன்னியாகுமாரி மாவட்ட மக்களால் பயன்படுத்தப்படுகிறது. மரக்கிளையில் படர்ந்திருக்கும் தேமல் போன்ற பகுதிகள் குழந்தையின் உடலில் படராமல் தடுப்பதற்கு இந்தக் கொப்பாடை புடைக்கப்படுகிறது. தேமல் போன்ற தோல் நோய்கள் உருவாவதற்குக் குழந்தை பிறக்கும்போது அது குடித்த கழிவு நீர் முதலானவை காரணமாகும். அந்தக் கழிவு நீர் ஆவியாகும் வகையில் கொப்பாடை புடைக்கப்படுவதால் தேமல் போன்றவை வராமல் தடுக்கப்படுகிறது என நம்புகிறார்கள். கொப்பாடை புடைத்த காணத்தைக் குழந்தையின் தாய் மாமனுக்குக் கொறிக்கும் நொறுக்குத் தீனியாக வழங்கும் வழக்கம் உள்ளது. அவ்வாறு தாய்மாமன் இல்லையென்றால் அந்த வீட்டிலுள்ள பிற ஆண்களுக்கு வழங்கப்படுவதும் உண்டு. காணம் என்னும் இந்த உணவுப் பொருள் உடலினை உறுதி செய்யும் தன்மை கொண்டது என்பதால் ஆண்களுக்கு வழங்கப்படுகிறது. உழைப்பை அடிப்படையாகக் கொண்ட மக்கள் மிகுதியாக அந்தக் காலத்தில் வாழ்ந்ததால் உடலை உறுதிப்படுத்தும் காணத்தை உடல் உழைப்பு வழங்கும் ஆண்களுக்கு வழங்கியிருக்கிறார்கள் எனத் தெளியலாம்.

தொப்புள் கொடி

கருவில் இருக்கும் குழந்தையின் உயிர்க்கொடி தொப்புள் கொடிதான். இது 12 செமீ முதல் ஒன்றே கால் மீட்டர் வரை நீளமுள்ளது. இதன் வழியாகத்தான் கருவில் இருக்கும் சிசுவிற்கு உணவும், பிராண வாயுவும் தாயின் உடலிலிருந்து செலுத்தப்படுகிறது. தாய்க்கும் குழந்தைக்கும் உள்ள உறவினைத் தொப்புள்கொடி உறவு என்று கூறுவர்.

பெயர் சூட்டுதல்

பெயர் சூட்டுதல் என்னும் பழக்கம் அவரவர் செல்வ நிலைக்கேற்ப நடத்தப்படுகிறது. இந்த நிகழ்வு பெண் வீட்டில் நிகழ்ந்தாலும் இந்த நிகழ்வுக்கு உரிமையுடையவர்களாகக் குழந்தையின் தந்தை சார்ந்த உறவினர்களே இருக்கிறார்கள். பழங்காலம் முதலே கன்னியாகுமாரி மாவட்டத்தில் உள்ள பெண்கள் திருமணமானதும் கணவன் வீட்டிற்குச் சென்றுவிடுவதும் அவர்களுடைய செயற்பாட்டினால் ஏற்படும் புகழ் என்றாலும் வேறு ஏதேனும் என்றாலும் அது அந்தக்

கணவன் வீட்டைச் சார்ந்ததாகவே கருதப்படுகிறது. ஆண், பெண் என்னும் பாலினத்தில் உயர்வு என்றும் தாழ்வு என்றும் கருதும் வழக்கம் அந்தக் காலத்தில் இல்லை. வாழ்க்கையின் வசதிக்காகவும் குடும்ப அமைவுக்காகவும் பெண், கணவன் வீட்டைச் சார்ந்தவளாகிறாள். அப்படியென்றால் அந்தப் பெண்ணின் வீட்டின் நிலை என்ன என்னும் கேள்வி எழும்போது அந்தப் பெண்ணுக்கு அண்ணன், தம்பி என்னும் நிலையிலிருப்பவர்களுக்குத் திருமணமாகும்போது அவர்களுடைய மனைவியர் அவர்களின் வீட்டிற்கு வந்து விடுவதால் ஆண் சார்ந்து பெண் செல்லும் வழக்கம் ஒரு வசதியான ஏற்பாடாகவே நிலவுகிறது.

குழந்தைக்குப் பெயாரிடும்போது ஏதேனும் ஒரு காரணம் கருதி அந்தக் காலத்தில் பெயர் சூட்டியிருக்கிறார்கள். பெரும்பாலும் குழந்தையின் தந்தைவழித் தாத்தாவின் பெயரை அல்லது பாட்டியின் பெயரைச் சூட்டுவது வழக்கமாக இருந்தது. பாட்டன் அல்லது அந்தக் குடும்பத்தில் அண்மையில் காலமான ஒருவர் ஆகியோர் பெயரைக் குழந்தைக்கு இடுவதே பெரும்பாலும் பழக்கம். தெய்வத்தின் பெயரும் இடப்படும்.

விளவங்கோடு வட்டார இந்து சமய மக்கள் கோவிலுக்குச் சென்று அங்குள்ள பூசாரியிடமோ அல்லது சோதிடர்களிடமோ கணித்துக் குழந்தைகளுக்குப் பெயாரிடும் வழக்கம் காணப்படுகிறது. அவர்கள் கூறும் எழுத்தை முதலெழுத்தாகக் கொண்டு பெயாரிடுதலே பெரும்பாலான மக்களிடம் காணப்படுகிறது. பழங்காலம் தொட்டு இன்றுவரை பெயர்களில் இறை உணர்வே முதலிடம் வகிக்கிறது. குல தெய்வங்களின் பெயர்களை வைத்தால் நீண்ட ஆயுள் கிடைக்கும் இடையூறுகள் நீங்கும் தீய சக்திகள் அவர்களை அணுகாது என்ற நம்பிக்கை காணப்படுகிறது.

பெயர்கள் தெய்வங்களின் திருப்பெயர்களாக இருந்துவிட்டால் அழைப்பவர்களும் தெய்வத்தைக் கூப்பிடுபவர்கள் ஆவார்கள். அழைக்கப்படுபவரும் தெய்வப் பெயர்களைக் கேட்டுக் கேட்டு, தாமும் சிறந்த சக்தியைப் பெறுகிறார்கள். 3 மத நம்பிக்கை மிகுதியான பிறகு இவ்வாறு பெயர் சூட்டும் வழக்கம் படிப்படியாகக் குறைந்து திருமுழுக்கைக் கருத்திற்கொண்டு கிறித்தவம் சார்ந்த பெயர்களைக் கிறித்தவர்கள் சூட்டத் தொடங்கினர். கிறித்தவர்களாக மதம் மாறியவர்கள் அடுத்த தலைமுறை கிறித்தவர்களாக ஆகும்போது குழந்தையின் தாத்தாவின் பெயரும் கிறித்தவப் பெயராக இருக்கும் நிலையில் அந்தப் பெயரையே சூட்டுகிறார்கள். இந்த மரபைப் பின்பற்றிப் பிற மதம் சார்ந்தவர்களும் அவரவர் மதம் சார்ந்த பெயர்களைச் சூட்டும் மரபும் காணப்படுகிறது.

கன்னியாகுமாரி மாவட்டம் மலைப் பகுதியும் சமவெளிப்பகுதியும் கடற்கரையும் கொண்ட ஒரு மாவட்டம். விளைச்சல் நிலப் பகுதிகள் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் நில உடைமையாளர்கள் என்போர் பிற மாவட்டத்தில் உள்ளவர்களைப் போல, பெரு நிலக்கிழார்களாக இல்லை. ஒவ்வொருவரும் தங்கள் குடும்பத் தேவைக்கு ஏற்ப நிலங்களை உடைமையாக வைத்திருப்பார்கள். அந்த நிலப்பரப்பானது அவர்களின் வீட்டுத் தேவையை நிறைவு செய்யும் அளவினைக் கொண்டது ஆகும். எனவே செல்வ நிலையில் மிகுந்தவர்களாக இருப்பதுமில்லை செல்வ நிலையில் தாழ்ந்தவர்களாக இருப்பதுமில்லை. தங்கள் செல்வ நிலைக்கேற்பக் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டும் விழாவினைக் கொண்டாடுவர். இவ்வாறு பெயர் சூட்டும் விழா கட்டாயச் சடங்குகளுள் ஒன்றாக நடைபெறுவதில்லை. குழந்தையின் காதுக்குள் குழந்தைக்குச் சூட்டிய பெயரைச் சிலர் சொல்லும் வழக்கமும் காணப்படுகிறது.

தொட்டிலில் போடுதல்

குழந்தையைத் தொட்டிலில் போடும் சடங்கு என்பதும் கொண்டாடப்படுகின்ற ஒன்றாக இருந்தாலும் இந்தச் சடங்கும் விளவங்கோடு வட்டப் பகுதியில் உள்ள அனைவராலும் கொண்டாடப்படுவது இல்லை. அவரவர் செல்வ நிலைக்கேற்ப உறவினர்களை அழைத்து, தொட்டிலில் போடும் சடங்கு நடத்தப்படுகிறது. இந்தத் தொட்டிலில் போடும் சடங்கிற்கான தொட்டில், பெண்ணின் தாய் வீட்டிலிருந்து வழங்கப்படுகிறது. இந்தத் தொட்டில் மரத்தால் கடைசல் வேலைப்பாடுடன் செய்யப்பட்டிருக்கும். தாயின் அம்மா தனது குழந்தைகளைக் கிடத்தி வளர்த்த தொட்டிலைப் பெரும்பாலும் தனது மகளுக்கு வழங்குவது உண்டு. அதனைப் பழைய தொட்டில் என்று கருதுபவர்கள் அதற்கு இணையான அல்லது அதனை விடச் சிறந்த தொட்டிலை வாங்கிக்கொடுப்பதும் உண்டு. பெரும்பாலும் தொட்டிலில் போடும் சடங்கு குழந்தை பிறந்த மூன்றாம் மாதத்தில் நிகழ்வதால் அதற்குள்ளாகப் பிள்ளைப்பேற்றை முடித்த பெண் தனது கணவன் வீட்டிற்குச் சென்றிருப்பாள். அவ்வாறு கணவன் வீட்டிற்குச் சென்றிருந்தால் தொட்டிலில் போடும் சடங்கு கணவன் வீட்டிலேயே நிகழும்.

பெண்ணைக் கணவன் வீட்டிற்கு அனுப்புதல்

குழந்தைப்பேற்றை முடித்த பெண்ணைக் கணவன் வீட்டிற்கு அனுப்பும் நிகழ்வு பெரும்பாலான வீடுகளில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்த நிகழ்விற்கு உறவினர்கள் அனைவரும் அழைக்கப்படுகிறார்கள். அவ்வாறு

அழைக்கப்பட்டவர்களில் பலரும் குழந்தையைப் பெற்ற பெண்ணோடு செல்வது உண்டு. பெண்ணின் தாய், தந்தை, தமையன்மார், தம்பிமார் ஆகியோருடன் நெருக்கமான உறவினர்களும் செல்வார்கள். குழந்தைக்கு முக்கியமான உணவு பால் என்பதால் குழந்தையைப் பெற்ற தாயைக் கணவன் வீட்டில் கொண்டு விடும்போது புதிதாகக் கன்றினை ஈன்ற பசுவையும் கொண்டு விடுவது வழக்கம். பசுவின் பால் குழந்தைக்கு உதவும் என்ற நோக்கிலேயே பசுவையும் கன்றையும் பெண் வீட்டிற்கு அனுப்பி வைப்பார்கள். மாடு என்றால் செல்வம் என்று பொருள். அந்தக் காலத்தில் மாட்டைச் செல்வமாகக் கருதியதால் பெண் வீட்டிற்குப் பெற்றோர் மாடு என்ற செல்வத்தையும் சேர்த்தே அனுப்பி வைத்தார்கள். வேளாண்மைச் சமுதாயமாக இருந்த காலம்வரை இந்த வழக்கம் தொடர்ந்து வந்தது. பசுவைப் பராமாரிக்கும் சூழல் தற்காலத்தில் பல வீடுகளில் இல்லாத காரணத்தால் பசுவையும் கன்றையும் பெண்ணுடன் அனுப்பி வைக்கும் வழக்கம் அருகிவருகிறது. இவ்வாறு பெண்ணையும் குழந்தையையும் கணவன் வீட்டிற்கு அனுப்பி வைக்கும்போது புதிதாகச் செய்த அல்லது தாயின் பழைய தொட்டிலையும் கொண்டுபோய்க் கொடுப்பர். தொட்டில் வழங்குவதைத் தங்கள் குடும்பத்தின் கௌரவமாக நினைத்து உயர்ந்தரகத் தொட்டிலை வழங்குவதும் உயர்ந்தரகப் பசுவினையும் கன்றினையும் வழங்குவதும் மரபாகக் கருதப்படுகிறது.

குழந்தைக்குப் பொன் அணிவித்தல்

குழந்தைக்குப் பொன்னாலான சங்கிலி, மோதிரம், காப்பு, அரைஞாண், கைச்சங்கிலி, கொலுசு முதலானவற்றை அணிவிப்பார்கள். இந்தப் பொன்னாலான அணிகலன்களை அணிவிப்பதற்கு முன்பாக முதன்முதலில் குழந்தையின் தந்தையார் ஏதேனும் ஒரு தங்க அணிகலனைக் குழந்தைக்கு அணிவிக்க வேண்டும் என்னும் வழக்கமும் சிலாரிடம் காணப்படுகின்றது. அவ்வாறு குழந்தையின் தந்தை பொன் அணிகலனை அணிவித்த பிறகு குழந்தையின் தாய் மாமன், தாய்வழித் தாத்தா, தாய்வழிப் பாட்டி, தாய் வழி உறவினர்கள் மேலே குறிப்பிட்ட வகையிலான அணிகலன்களை அணிவிப்பது வழக்கம். பொன் அணிகலன்கள் என்று குறிப்பிட்டவற்றில் அரைஞாண், கொலுசு முதலியவற்றைப் பொன்னுக்குப் பதிலாக வெள்ளியில் செய்து அணிவிப்பதும் வழக்கம். இந்த இரண்டு அணிகலன்களையும் பொன்னிலும் வெள்ளியிலும் சேர்த்தே செய்து கொடுப்பதும் உண்டு. இது அவரவர் செல்வ நிலைக்கேற்ப நிகழும்.

தலைமுடி இறக்குதல்

தலைமுடி இறக்குதல் என்னும் சடங்கினை மொட்டை அடித்தல் என்றும் விளவங்கோடு வட்டாரத்தில் குறிப்பிடுகின்றனர். விளவங்கோடு வட்டாரத்தில் இந்துக்கள், கிறித்தவர்கள், இஸ்லாமியர்கள் என்னும் மூன்று மதச் சார்பினரும் வாழ்கின்றனர். இந்துக்களில் வைதீக மரபு சார்ந்தவர்களும் ஐயாவைகுண்டரை வழிபடுபவர்களும் வாழ்கிறார்கள். வைதீக மரபு சார்ந்தவர்களில் சக்தி வழிபாட்டை முதன்மையாகக் கொண்டவர்களும் சைவ வழிபாட்டை முதன்மையாகக் கொண்டவர்களும் வைணவ வழிபாட்டை முதன்மையாகக் கொண்டவர்களும் அடங்குவர். இந்துக்களில் ஒரு பிரிவினரான சைவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள உவாரி சுயம்புலிங்க சுவாமி திருக்கோவிலுக்குச் சென்றோ திருச்செந்தூரில் உள்ள முருகன் திருக்கோவிலுக்குச் சென்றோ தலைமுடி காணிக்கை செலுத்துதல் உண்டு. இக்கோயில்கள் தவிரச் சைவத்தைச் சேர்ந்த வேறு திருக்கோவில்களிலும் முடி காணிக்கை செலுத்துதல் உண்டு. வைணவர்கள் தங்கள் மரபு சார்ந்த திருக்கோவில்களுக்குச் சென்று தலைமுடி இறக்குவார்கள்.

ஐயா வைகுண்டர் வழியில் வழிபாடு செய்பவர்கள் ஐயா வைகுண்டாரின் திருக்கோவில் இருக்கும் இடமான சாமிதோப்பிற்கோ வேறு இடங்களுக்கோ சென்று முடி காணிக்கை செலுத்துதல் வழக்கம்.

குழந்தைக்கு முடி இறக்கும்போது ஆண் குழந்தையாக இருந்தாலும் பெண் குழந்தையாக இருந்தாலும் தாய் மாமனின் மடியில் குழந்தையை அமர்த்தி முடி இறக்குவது வழக்கம். கன்னியாகுமாரி மாவட்டத்தின் விளவங்கோடு வட்டத்தில் ஆண் குழந்தைகளுக்குக் காது குத்தும் வழக்கம் கிடையாது. பெண் குழந்தைகளுக்கு மட்டுமே காது குத்துவது உண்டு. இவ்வாறு காது குத்தும் போதும் தாய் மாமனின் மடியில் அமர்த்திக் காது குத்துவது மரபு.

2. கிறித்தவச் சமயத்தினாரிடையே காணப்படும் பிறப்புச் சடங்குகள்

கன்னியாகுமாரி மாவட்ட விளவங்கோடு வட்டாரக் கிறித்தவர்கள் குழந்தை பிறக்குமுன்னும் குழந்தை பிறந்தபின்னரும் சில சடங்குகளை மேற்கொள்ளுகின்றனர். திருமணமாகி ஒரு பெண் தாய்மையடைந்தவுடன் இருவீட்டாரும் மகிழ்ச்சியடைகின்றனர். தாய்மையடைந்த பெண்ணை வீட்டு வேலைகளைச் செய்ய அனுமதிப்பதில்லை. குழந்தையைப் பெற்றெடுக்கும் வரை நன்கு கவனிக்கின்றனர். ரோமன் கத்தோலிக்கக் கிறித்தவர்களுக்கும் சீர்திருத்தக் கிறித்தவர்களுக்குமிடையே பிறப்புச் சடங்கில் சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றன.

(ஹ) ரோமன் கத்தோலிக்கக் கிறித்தவாரின் பிறப்புச் சடங்குகள்

கன்னியாகுமாரி மாவட்ட ரோமன் கத்தோலிக்கக் கிறித்தவர்களில் நாடார், மீனவர் என்ற இரு பிரிவினர் காணப்படுகின்றனர். ரோமன் கத்தோலிக்கக் கிறித்தவர்கள் சமயம் சார்பாகப் பிறப்புச் சடங்கினைத் திருமுழுக்கு, புது நன்மை, உறுதிபூசுதல் என்ற மூன்று கோணங்களில் மேற்கொள்கின்றனர்.

கர்ப்பிணிப் பெண்

தாய்மையடைந்தபின் ஐந்தாவது மாதம் அல்லது ஏழாவது மாதம் அல்லது ஒன்பதாவது மாதம் பெண்ணின் உறவுமுறையில் உள்ளவர்கள் பெண்ணைத் தாய்வீட்டிற்கு அழைத்து வருவர். அழைத்து வருகின்ற அன்று போதகர் வேண்டுதல் செய்து ஆசீர்வதிப்பார். அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கும் அனைவருக்கும் விருந்து பாரிமாறப்படும். பின்னர்ப் பெண்ணின் கையில் தேங்காய் எண்ணெயைக் கொடுத்து அனுப்புவர். பெண்ணிற்குத் தேவையான வேறு பொருட்கள் எதுவும் கொடுத்து அனுப்ப மாட்டார்கள். குறிப்பிட்ட நாளில் தாய்மையடைந்த பெண் குழந்தையைப் பெற்றெடுத்தவுடன் அனைவருக்கும் இனிப்புக் கொடுத்து மகிழ்கின்றனர்.

குழந்தை பிறந்தவுடன் செவிலியர்கள் குழந்தையைக் குளிப்பாட்டி உறவினர்களிடம் கொடுக்கின்றனர். உடனே பாலாடையில் வெந்நீர் கொடுக்கின்றனர். ஒரு சிலர் தங்கத்தைப் பாலாடையில் உரசி கொடுக்கின்றனர். அவ்வாறு கொடுத்தால் குழந்தை வளரும்போது வெள்ளை நிறத்தில் இருக்கும் என்பது அம்மக்களின் நம்பிக்கை.

பிள்ளை காண வருதல்

குழந்தை பிறந்ததை அறிந்த உறவினர்களும், நண்பர்களும், பக்கத்து வீடுகளில் உள்ளவர்களும் குழந்தையைப் பார்க்க வருகின்றனர். அப்பொழுது மகிழ்ச்சியைத் தொரிவிக்கும் வகையில் குழந்தையைப் பார்க்க வருகின்றவர்களுக்கு இனிப்பு வழங்குகின்றனர். சில நாட்கள் கழித்துக் குழந்தை பிறந்த பெண்ணின் கணவர் மற்றும் கணவருடைய உறவினர்கள் சேர்ந்து பிள்ளையைக் காண வருவர். பிள்ளையைக் காண வரும்போது பிள்ளையினுடைய தந்தை தங்கச் சங்கிலியைக் குழந்தைக்கு அணிவார். உறவினர்கள் தங்க வளையல், மோதிரம், கை காப்பு, உடுப்பு, பவுடர், சோப் எனப் பல பொருட்களைக் குழந்தைக்கு அன்பளிப்பாக வழங்குவர். குழந்தையின் தாய் வீட்டில் விருந்து பாரிமாறப்படும். குழந்தை பிறந்து நாற்பத்தொரு நாட்கள் எங்கும் செல்ல மாட்டார்கள். பின்னர் முதலில் குழந்தையை

ஆலயத்திற்குக் கொண்டு செல்கின்றனர். பின்னர்த் தந்தை வீட்டிற்கு அழைத்துச் செல்வர். அங்கும் விருந்து பாரிமாறப்படுகிறது.

திருமுழுக்கு

திருமுழுக்கு என்பது ஞானஸ்நானம் என்று அழைக்கப்படுகிறது. குழந்தை பிறந்து ஒரு மாதத்திற்குப் பிறகு தேவாலயத்திற்கு கொண்டு சென்று அந்தக் குழந்தையைக் கிறித்தவ மதத்தில் இணைக்கிறார்கள். இதனையே ஞானஸ்நானம் என்று கூறுகின்றனர். கிறித்தவ சமயத்தில் தாய் தகப்பன் கொள்கின்ற உடலுறவே பாவம் என்று எண்ணுகின்றனர். தாய் தகப்பனுடைய பாவம் பிள்ளைகளைத் தொடர்ந்து வராமல் இருப்பதற்காக இச்சடங்கு மேற்கொள்ளப்படுகிறது.

கத்தோலிக்கர் திருமுழுக்குக் கொடுக்கும் போது அந்தப் பிள்ளையுடன் ஞானப்பெற்றோர் அதாவது ஞானத்தாய், ஞானத்தகப்பன் என்ற இருவர் இருப்பார்கள். ஞானப்பெற்றோர்கள் அந்தத் திருச்சபையைச் சார்ந்தவர்களாக இருப்பர். உறவினர்களாகவும் இருக்கலாம். அல்லது குழந்தையின் பெற்றோருக்கு நண்பர்களாகவும் இருக்கலாம். உயர்வாக மதிக்கக் கூடிய பொரியவர்களாகவும் இருக்கலாம். ஞானப்பெற்றோர் குழந்தைக்கு ஞானத்தை ஊட்டி வளர்க்கக் கூடிய பெற்றோர்கள் ஆவர். அந்தக் குழந்தையின் புது நன்மை, உறுதி பூசுதல், திருமணம் போன்ற அனைத்து நிகழ்வுகளிலும் இந்த ஞானப்பெற்றோர் கலந்து கொள்வார்கள். ஞானப்பெற்றோர் அந்தப் பிள்ளையின் இன்னொரு பெற்றோர் ஆவர். ஒரு வீட்டில் நான்கு பிள்ளைகள் இருந்தால் நான்கு பிள்ளைகளுக்கும் வெவ்வேறு ஞானப்பெற்றோர் வருவர். நான்கு பிள்ளைகளுக்கும் ஒரே பெற்றோர் இருக்கக் கூடாது. ஆனால் ஒரு சில வீடுகளில் முதல் பிள்ளையின் ஞானப்பெற்றோர் அந்தக் குழந்தையின் குடும்பத்தில் மிகுந்த அன்னியோன்யம் ஆகிவிட்டாலோ அல்லது அந்த ஞானப்பெற்றோர் ஞானத்தை ஊட்டி வளர்க்கும் முறை பிடித்திருந்தாலோ நம்பத்தகுந்தவர்களாக இருந்தாலோ அந்தக் குழந்தைக்குப் பின்னர்ப் பிறக்கும் குழந்தைகளுக்கும் அதே ஞானப்பெற்றோரை வைப்பர்.

திருச்சபைகளில் மாதத்திற்கு ஒருமுறை ஓய்வு நாளில்தான் ஞானஸ்நானம் கொடுப்பது வழக்கம். அதுதவிரக் கிறிஸ்துபிறப்பு, உயிர்த்தெழுதல் போன்ற பண்டிகை நாட்களிலும் கொடுப்பர். ஞானஸ்நானம் கொடுக்கும்போது ஞானப்பெற்றோர் திருச்சபைக்குமுன் வருவர். திருச்சபையின் தொழுகை முடிந்ததும் பாதிரியார் ஞானஸ்நானம் கொடுப்பார். பிள்ளைகளின் பெற்றோர் ஞானப்பெற்றோரை வாரிசையாக நிற்க வைத்துவிட்டுக் குருவானவர் அந்தச் சடங்கினைச் செய்வார். ஞானஸ்நானம்

பெற்றோர்கள் வழிவழியாகச் செய்த பாவத்தை அறிக்கை செய்வதற்காக நடத்தப்படும் சடங்காகும். குழந்தையின் காது கேட்பதற்காக, வாய் பேசுவதற்காக, இதயம் ஒழுங்காக இயங்குவதற்காக ஜெப எண்ணெய் பூசியும் தொழுகை நடத்தப்படுகிறது. பின்னர் அந்தக் குழந்தையின் புனிதத்தன்மை அதாவது வெண்மை தூய்மைக்காக வெண்மையான உடையை குருவானவர் போட்டுக் கொடுப்பார். அந்தக் குழந்தை உலக வாழ்க்கையில் ஒளியைக் கொடுப்பதற்காகப் பாதிரியார் மெழுகுவர்த்தியைக் குழந்தையின் கையில் கொடுப்பார். பிள்ளை கையில் பிடிக்க முடியாதபட்சத்தில் பெற்றோர் குழந்தையின் கையைச் சேர்த்து மெழுகுவர்த்தியைப் பிடிப்பர். கிறிஸ்துவின் ஒளியைப் பெற்றுக்கொள்வதற்கு அடையாளமாக இந்தச் சடங்கு கைக்கொள்ளப்படுகிறது.

யோவான்ஸ்நானன் என்று சொல்லக்கூடிய அருளப்பர் இயேசு நாதருக்கு யோர்தான் ஆற்றில் ஞானஸ்நானம் கொடுத்ததற்கு அடையாளமாகப் பாதிரியார் ஒரு பாத்திரத்தில் உள்ள நீரைச் செபம் செய்து பிள்ளையின் தலையில் ஊற்றுவார். அதற்கு முன்னால் அந்தப் பெற்றோரிடம் இந்தப் பிள்ளைக்கு நீங்கள் என்ன பெயாரிட விரும்புகிறீர்கள் என்று பாதிரியார் கேட்பார். பெற்றோரிடம் இந்தக் குழந்தையைக் கிறிஸ்துவின் வழியில் நடத்த முயற்சி செய்வீர்களா என்ற கேள்வியைக் கேட்டு உறுதிமொழி எடுக்கச் செய்வார். பின்னர் அந்தக் குழந்தையின் பெயரைச் சொல்லி, “பிதா, சுதன், பாரிசுத்த ஆவியின் பெயராலே உனக்கு ஞானஸ்நானம் கொடுத்து உன்னை இந்தத் திருச்சபையின் அங்கத்தினராகச் சேர்த்து உன் நெற்றியில் சிலுவையின் அடையாளத்தை வரைகிறேன்” என்று குழந்தையின் நெற்றியில் சிலுவை அடையாளத்தை வரைவார். அன்றுமுதல் அந்தக் குழந்தை அந்தத் திருச்சபையின் அங்கத்தினராகக் காணப்படுகிறது. தண்ணீரைக் குழந்தையின் தலையில் ஊற்றுவதன் மூலம் அந்தக் குழந்தையின் பாவங்கள் நீங்கி ஒரு கத்தோலிக்கக் கிறித்தவனாகப் புதுப்பிறப்பாக மாறுகிறான் என்ற நம்பிக்கை கொண்டுள்ளனர். இதன் மூலம் ஜென்மப் பாவங்கள் நீங்கி அந்தக் குழந்தை சுத்திகாரிக்கப்படுகிறது. ஜென்மப் பாவம் என்பது பிறக்கும்போதே தாய் தகப்பன் மூலமாக ஏற்படுகின்ற பாவம் ஆகும். இவ்வாறு அந்தக் குழந்தை பாவம் நீங்கிப் புது மனிதனாக அந்தத் திருச்சபையின் அங்கத்தினராகச் சேர்வதுதான் ஞானஸ்நானம் ஆகும்.

புது நன்மை

முற்காலத்தில் விளவங்கோடு வட்டாரத்தில் வாழும் பிள்ளைகள் இரண்டாம் வகுப்பு மூன்றாம் வகுப்புடன் படிப்பை நிறுத்தி விடுவார்கள். அதனால் எட்டாம் வகுப்பு முடித்தபின்னர்ப் புது நன்மை கொடுப்பார்கள். ஏனென்றால் அந்தக் குழந்தை கல்வி அறிவு பெற்றிருக்க வேண்டும். படிப்பை இடையில் நிறுத்தி விடக் கூடாது என்பதற்காகவே அதனைக் கடைப்பிடித்தனர். பின்னர்க் கட்டாயக் கல்வி வந்தபின் கட்டாயம் குழந்தைகள் 14 வயது வரையாவது கல்வி கற்க வேண்டும் என்ற அரசின் சட்டம் வந்தபின்னர்த் தற்காலத்தில் ஐந்தாம் வகுப்பு முடித்தவுடனே புது நன்மை கொடுக்கின்றனர். புது நன்மை என்பது இயேசு கிறிஸ்துவினுடைய உடலையும் இரத்தத்தையும் உள்ளுக்குள் வாங்குவதாகும். அதற்கு எந்த அளவு புனிதத்தன்மை இருக்கிறது என்பதை உணரக்கூடிய பருவம் உணரக்கூடிய வயது உள்ள குழந்தைகளுக்கு மட்டுமே புது நன்மை கொடுக்கப்படுகிறது.

ஒருமாதத்திற்கு முன்னால் புது நன்மை எடுக்கக் கூடிய குழந்தைகளுக்குக் கிறித்தவச் சமயத்தைப் பற்றி, இறை நம்பிக்கையைப் பற்றி,இயேசு நாதர் யார் என்பதைப் பற்றி, கன்னி மாரியாள் யார் என்பதைப்பற்றி மறைக்கல்வி அதாவது மந்திரப்பாட வகுப்பு நடைபெறும். அந்த வகுப்பில் கலந்துகொண்டு சான்றிதழுடன் வருபவர்களுக்கு மட்டுமே புது நன்மை கொடுக்கப்படுகிறது. புது நன்மைக்கு முந்தைய நாளே அதற்குத் தயார் படுத்தக்கூடிய வேலைகள் நடைபெறும். புது நன்மை எடுக்கக்கூடிய குழந்தைகள் வெள்ளை ஆடைகள் அணிவார்கள். பெண்கள் வெண்ணிற நெட், £த் வைத்து அலங்காரம் செய்வார்கள். கையில் மெழுகுவர்த்தி வைத்திருப்பார்கள். அந்த மெழுகுவர்த்தியைச் சுற்றிப் பூக்களால் அலங்கரிப்பார்கள். தொழுகை நடந்து கொண்டிருக்கும் போதே புது நன்மை பெறக் கூடிய குழந்தைகளை முன்வாரிசையில் உட்கார வைத்திருப்பார்கள்.

தொழுகையிலேயே புது நன்மை நிகழ்வும் நடைபெறும். இயேசு நாதர் மனுமக்களின் பாவத்திற்காகத் தன்னுடைய இரத்தத்தையும் உடலையும் கொடுத்தார் என்பதற்கு அடையாளமாக அப்பத்தைத் திராட்சை ரசத்தில் தோய்த்துப் புது நன்மை பெறும் குழந்தைகளுக்கு முதலில் வழங்குவார்கள். புது நன்மை வாங்கும்போதும் திருமணத்தின் போதும் மட்டுமே அப்பத்தைத் திராட்சை ரசத்தில் தோய்த்துக் கொடுப்பார்கள். மற்ற நேரங்களில் திராட்சை ரசம் கிடைக்காத காரணத்தால் அப்பத்தை மட்டுமே கொடுப்பார்கள். புது நன்மை கொடுக்கும்போது ஞானப்பெற்றோரும் உடனிருப்பார்கள். ஞானஸ்நானம் கொடுக்கும்போது உள்ள ஞானப்பெற்றோர் வெளி நாடுகளில் பணிபுரிந்தாலும் அவர்கள்தான் புது நன்மை கொடுக்கும்போதும் உடனிருப்பார்கள். ஒருசில குடும்பத்தினர் உறவினர்களை

அழைத்து, திருமண மண்டபத்தில் விருந்தளித்து விழாவாகக் கொண்டாடுவார்கள். அப்போது புது நன்மை எடுத்த குழந்தைகளுக்கு உறவினர்கள் அணிகலன்கள் அணிவிப்பார்கள். பாரிசுப்பொருட்கள் வழங்குவார்கள்.

உறுதிபூசுதல்

உறுதிபூசுதல் என்பது கிறித்தவ மதத்தில் இணைந்தார்கள் என்பதை உறுதிப்படுத்துதல் ஆகும். புது நன்மை எடுத்தவர்களுக்கு மட்டுமே உறுதி பூசுதல் கொடுப்பார்கள். உறுதி பூசுதல் புது நன்மை எடுத்து ஒரு வருடத்திற்குள் நடைபெறும் சடங்காகும். பேராயர் அவர்கள் ஒரு வருடத்திற்கு ஒருமுறை பந்தி விசாரணை செய்வதற்காக ஒவ்வோர் ஆலயத்திற்கும் செல்வார். அந்த ஒரு வருடத்திற்குள் புது நன்மை எடுத்த அனைவருக்கும் பேராயர் அவர்கள் உறுதி பூசுதல் அளிப்பார்கள். உறுதி பூசுதல் அன்றும் வெள்ளை ஆடை அணிவார்கள். அண்மைக் காலத்தில் வறுமையில் இருக்கும்போது குழந்தைகள் கல்வி பயிலும் பள்ளியில் உள்ள சீருடையைப் புதிதாக எடுத்து அணிந்தனர். ஏனென்றால் பள்ளிச் சீருடை ஒன்று அல்லது இரண்டுதான் குழந்தைகளுக்கு இருக்கும். மாற்றி அணிவதற்குச் சீருடை இல்லாமல் இருக்கும். அதற்காக உறுதி பூசுதலுக்குக் கோடித்துணி அதாவது புதுத்துணி எடுக்கும்போது பள்ளிச் சீருடையை எடுக்கின்றனர். தற்காலத்தில் புதிய வெண்ணிற ஆடை அல்லது பிற நிற ஆடை அணிகின்றனர்.

பேராயர் அவர்கள் குழந்தைகளின் கன்னத்தில் இரு விரலால் தட்டிக் “கிறிஸ்துவைப் பெற்றுக்கொள்! நற்செய்தியை அறிவி!” என்று கூறுவார்கள். அந்தக் குழந்தைகள் மதத்தில் உறுதியாயிருக்கிறார்கள் என்பதற்காக உறுதிபூசுதல் சடங்கு நடைபெறுகிறது. ஞானஸ்நானம் கொடுக்கும்போது இந்தக் குழந்தைகளுக்கு எந்த அறிவும் கிடையாது என்ன நடக்கிறது என்றே தொரியாது. ஏனென்றால் இந்தக் குழந்தைகள் அப்போது கைக்குழந்தைகளாக இருந்தார்கள். அப்போதே குழந்தையைக் கிறித்தவ மதத்தில் பெற்றோர்கள் சேர்த்தார்கள். இப்போது இந்தக் குழந்தைக்கு அறிவு வந்ததனால் இந்தக் குழந்தை இந்த மதத்தில் இருக்க வேண்டுமா? அல்லது வேண்டாமா? எனக்குப் பிடித்த மதம் எது? என்று பகுத்தறிவதற்குள்ள பக்குவம் இருப்பதனால் அந்தக் குழந்தை நான் இந்தக் கத்தோலிக்கக் கிறித்தவனாகவே இருப்பேன் என உறுதிப்பாடு எடுப்பதே உறுதி பூசுதல் ஆகும்.

(ஐ) சீர்திருத்தக் கிறித்தவாரின் பிறப்புச் சடங்குகள்

கன்னியாகுமாரி மாவட்டத்தில் விளவங்கோடு வட்டத்தில் அனைத்துக் கிராமங்களிலும் சீர்திருத்தக் கிறித்தவப் பிரிவினர் வாழ்கின்றனர். ஏறத்தாழ இந்து சமூகத்தவர்களுக்கு இணையாகக் கருதும் அளவிற்கு மக்கள் தொகையினராக உள்ளனர். சீர்திருத்தக் கிறித்தவர்களில் பெரும்பான்மையோர் நாடார் சமூகத்தைச் சேர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர். இந்து மதம் சார்ந்த நாடார்களின் வீடுகளில் நடைபெறும் பிறப்புச் சடங்குகளுக்கும் சீர்திருத்தக் கிறித்தவ மதத்தைச் சேர்ந்த நாடார்களின் வீடுகளில் நடைபெறும் பிறப்புச் சடங்குகளுக்கும் சிற்சில வேறுபாடுகளே காணப்படுகின்றன.

சூலினை அறிவித்தல்

சீர்திருத்தக் கிறித்தவம் சார்ந்த திருமணமான பெண் சூலுற்றதும் அதனைப் பிற நாடார் சமூகப் பெண்களைப் போன்றே கணவன் முதலானோருக்குத் தொரிவிக்கின்றாள். கருவுற்ற பெண்ணிற்கு உறவினர்கள் சூலினைத் தக்க வைப்பதற்கு ஏற்றாற் போன்ற உணவுப் பழக்கவழக்கத்தை அறிவிக்கின்றனர்.

சூல் அழைப்பு

கருவுற்ற பெண்ணைச் சீர்திருத்தக் கிறித்தவர்கள் ஏழாம் அல்லது ஒன்பதாம் மாதத்தில் தாய் வீட்டிற்கு அழைத்துச் செல்கின்றனர். அவ்வாறு அழைத்துச் செல்லும் நாளில் அனைவருக்கும் விருந்து பாரிமாறப்படுகிறது. பிள்ளைப் பேற்றை எதிர் நோக்கித் தாய் வீட்டிற்குச் செல்லும் பெண் எந்தப் பொருளையும் எடுத்துச் செல்லக்கூடாது என்னும் நடைமுறை, வழக்கத்தில் இருக்கிறது. சிலர் எண்ணெய்க் குப்பியை மட்டும் எடுத்துச் செல்ல அனுமதிக்கின்றனர். இவ்வாறு சூல் அழைப்பு நடைபெறும் நாளில் சீர்திருத்தத் திருச்சபையின் போதகர் அழைக்கப்படுகின்றார். போதகர் வேதத்தின் வசனத்தைப் படிக்கும்போது உறவினர்கள் அனைவரும் எழுந்து நின்று இறைவனைத் தொழுகின்றனர். சூல் அழைப்பிற்கான ஜெபத்தினைப் போதகர் படிக்கும் போது அனைவரும் மனத்துக்குள் ஜெபிக்கின்றனர். போதகாரின் இந்த ஜெப நிகழ்விற்குப் பின்னரே சூல் அழைத்துச் செல்லும் நிகழ்வு நடைபெறுகிறது.

மருத்துவம்

அந்தக் காலத்தில் பிறந்த குழந்தைக்குக் கரப்பான் முதலான சிரங்குகள் வந்திருக்கின்றன. அந்தவகைச் சிரங்குகள் வராமல் இருப்பதற்காக மருத்துவக் குணம் கொண்ட வேர்களைக் காய்ச்சி வடிகட்டிய நீரைக் கருவுற்ற பெண்ணிற்குக் குடிக்கக் கொடுக்கின்றனர்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னதாக மருத்துவச்சி எனப்படும் வயது முதிர்ந்த பெண்களே பிள்ளைத் தாய்ச்சியை அவ்வப்போது சோதிக்கும் வழக்கம் இருந்திருக்கிறது. தாய் சேய் நல விடுதிகள் தொடங்கப்பட்ட பின்னர் அவ்விடுதியைச் சேர்ந்த செவிலியர், கருவுற்ற பெண்ணைப் பாரிசோதித்துத் தேவைப்படும் மருத்துவ உதவிகள் செய்கின்றனர். பழங்காலத்தில் பிள்ளைப்பேறு பெரும்பாலும் வீட்டிலேயே நிகழ்ந்திருக்கிறது. அண்மைக் காலத்திலும் தற்காலத்திலும் பிள்ளைப் பேறு பெரும்பாலும் மருத்துவமனையிலேயே நிகழ்கிறது. பிறந்த குழந்தையைத் தூய்மைப்படுத்தி குழந்தையின் பாட்டியின் கையில் முதலாவதாக வழங்குகின்றனர். ஒரு சில நாட்கள் கழித்துத் தங்கத்தைத் தண்ணீரில் உரசி அந்தத் தண்ணீரைக் குழந்தைக்குக் குடிக்கக் கொடுக்கும் வழக்கம் காணப்படுகிறது. அவ்வாறு கொடுத்தால் குழந்தை பொன்னைப் போன்ற நிறத்துடன் தோன்றும் என்னும் நம்பிக்கை சீர்திருத்தக் கிறித்தவாரிடையே காணப்படுகிறது.

குழந்தைக்குப் பெயாரிடுதல்

ஒரு வகுப்பில் உள்ள நபரைத் தனியாகக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு வார்த்தையோ அல்லது வார்த்தைகளின் தொகுப்போ ‘பெயர்“ என்று அழைக்கப்படுகிறது. “மனிதனை இனம் கண்டு வாழ உறவுகள் உதவுவது போல மனிதனை அடையாளம் காட்டப் பெயர்கள் உதவுகின்றன.” 4

பத்து மாதம் சுமந்து வருந்திப் பெற்ற குழந்தையின் முகம் பார்த்துக் களிக்கும் தாய், குழந்தை உருவிலே மனதைப் பறிகொடுத்து அழகிலே மயங்கி, செயலிலே இன்பம் கொள்வாள். குழந்தைக்கு அருமையான பெயர் வைக்க எண்ணுகிறாள். அப்பெயர் எவ்வாறு இருக்க வேண்டும்? தன் உறவினர்களும், நண்பர்களும் விரும்பத்தக்கதாய் இருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக இம்மைக்கும் மறுமைக்கும் பயனளிக்க வல்லதாக இருக்க வேண்டும் என விரும்புகிறாள்.

தாலாட்டு

குழந்தை பிறந்து மருத்துவமனையிலிருந்து இல்லத்திற்கு வந்தவுடன் அறையில் தொட்டில் கட்டுகின்றனர். தொட்டில் கம்பு வாங்கி இருபக்கமும் துணியால் (வேட்டியால்) கட்டி அந்தத் துணித்தொட்டிலுள் குழந்தையைப் படுக்க வைக்கின்றனர். அந்தத் துணி குழந்தையைத் தாங்கிக்கொள்கிறது. துணித்தொட்டிலில் கிடத்தினால் குழந்தையின் தலை உருண்டு அழகாக அமையும் என்று விளவங்கோடு வட்டாரக்

கிறித்தவர்கள் நம்புகின்றனர். தொட்டிலில் கிடத்தித் தொட்டிலை ஆட்டி விடுகின்றனர். தொட்டில் அசையும் போது குழந்தை நிம்மதியாகப் பல மணி நேரம் தூங்குகிறது. தொட்டிலை ஆட்டி விடும்போது தாலாட்டுப் பாடல் பாடுகின்றனர்.

‘ஆராரோ ஆ£ரரோ

அச்சன்றே மோள் ஆராரோ

அம்மைக்கு நீ தேனல்லோ

ஆயிரம் மல்லிப் பூவல்லோ“

‘வா ..வா .. வாவோ... பிள்ளே

வாவோ... ராரோ... ராரிராரோ“

தாயின் குரலைக்கேட்டுக் குழந்தை தூங்குகின்றது. தொட்டிலின் மேல் குழந்தைக்குரிய விளையாட்டுப் பொருட்களைத் தொங்க விடுவர். தூக்கத்திற்காகக் குழந்தை அழும்போது சிலர் தாலாட்டுப்பாடல் பாடித் தூங்க வைப்பர். சிலர் கிலுகிலுப்பையை ஆட்டித் தூங்க வைப்பர்.

குழந்தையைக் குளிப்பாட்டல்

பிறந்த குழந்தைக்குத் தலை நிற்காது. ஆகவே குழந்தையின் தாய் அல்லது குழந்தையின் பாட்டி ஒரு பலகையில் உட்கார்ந்து இரு கால்களையும் நீட்டிக் காலில் குழந்தையைப் படுக்க வைத்துக் குளிப்பாட்டுகின்றனர். குளிப்பாட்டிய பின்னர்ப் பவுடர் பூசி, தலையில் உச்சிப்பொடி வைத்து, ஒட்டுடுப்பு அணிவிக்கின்றனர். குழந்தை விளையாடுவதற்காகச் சிறிது நேரம் ஓலைப்பாயில் படுக்க வைக்கின்றனர். ஓலைப்பாய் பனை ஓலையால் செய்யப்பட்டதாகும்.

பிள்ளைகாண வருதல்

சீர்திருத்தக் கிறித்தவத் திருச்சபையினைச் சேர்ந்தவர்கள் எந்தச் சபையில் உறுப்பினராக உள்ளாரோ அந்தச் சபையில் உள்ள கிறித்தவர்கள் பிள்ளை காண வரும் நிகழ்வு நடைபெறுகிறது. குழந்தை பிறந்து இத்தனை நாளைக்குள் இது நடைபெறும் என்னும் வரையறை காணப்படுவதில்லை. வசதிபெறும் ஓய்வு நாளில் இந்நிகழ்வு காணப்படுகிறது. பிள்ளை காணும் நிகழ்வில் போதகர் வருவதும் உண்டு. வராமலும் இருப்பார். போதகர் வந்தால் பிள்ளையின் நல்வாழ்வுக்காகச் செபிப்பார். செபிப்பதற்காகப் போதகர் வரும்போது சீர்திருத்தக் கிறித்தவச் சமயத்தைச்

சார்ந்தவர்கள் அவருக்குக் காணிக்கையாக ரூபாய் வழங்கும் வழக்கம் உண்டு. இவ்வளவு ரூபாய் வழங்க வேண்டும் என்னும் வரையறை இல்லை.

தேவாலயத்திற்குக் குழந்தையைக் கொண்டு செல்லல்

குழந்தை பிறந்து நாற்பது நாள் கழிந்த பிறகு தாயும் தந்தையும் உறவினர்களும் குழந்தையைத் தேவாலயத்திற்கு எடுத்துச் செல்வர். அவ்வாறு முதன்முதலில் குழந்தையைத் தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லும் போது போதகர் குழந்தைக்காகச் செபிப்பார். இந்த நாளில் குழந்தையின் பெற்றோர் தேவாலயத்திற்குக் காணிக்கை வழங்கும் வழக்கம் உள்ளது. இதற்கும் தொகை வரையறை இல்லை.

பிறந்த குழந்தைக்குத் தங்கத்திலான சங்கிலி அணிவிக்கும் வழக்கம் விளவங்கோடு வட்டத்தில் உள்ளது. தங்கச் சங்கிலியை முதன்முதலில் குழந்தையின் தந்தையார் அணிவிக்கும் மரபு உள்ளது. அதன் பின்னரே மற்றவர்கள் தங்க அணிகலன்களையும் ஆடைகளையும் அன்பளிப்பாக அளிக்கின்றனர். குழந்தைக்கு அணிவிக்கும் தங்கச் சங்கிலியில் சிலுவை அமைக்கப்பட்ட பதக்கம் இணைக்கப்படுவதுண்டு. சிலுவை இல்லாமல் தங்கச் சங்கிலியில் பதக்கம் அணிவிக்கும் வழக்கம் சீர்திருத்தக் கிறித்தவர்களின் வழக்கத்தில் இல்லை.

திருமுழுக்கு

குழந்தை பிறந்து ஒருவருடம் ஆனபிறகு திருச்சபையில் திருமுழுக்கு (ஞானஸ்நானம்) நிகழ்வு நிகழ்கின்றது. அன்றுமுதல் அந்தக் குழந்தை அந்தத் திருச்சபையில் உறுப்பினர் ஆகின்றது. இந்தத் திருமுழுக்கின்போது குழந்தைக்குக் கிறித்தவத் தன்மையுடன் கூடிய பெயர் சூட்டப்படுகிறது. ஓராண்டுக்குப் பிறகு இந்தப் பெயர் சூட்டப்பட்டாலும் குழந்தை பிறந்து சில மாதங்களிலேயே இந்தப் பெயரோ வேறு பெயரோ சொல்லி அழைக்கப்படுகிறது. பெயர்சூட்டும் விழா எனும் தனித்த விழா நடை முறையில் இல்லை.

திருமுழுக்கின் போது போதகர் குழந்தையின் தலையில் புனித நீரைத் தெளித்து அதன் பின் குழந்தையின் நெற்றியில் சிலுவைச் சின்னத்தைக் கையால் எழுதுகிறார். குழந்தையின் தாயும் தந்தையும் குழந்தையைக் கிறித்தவ நெறிமுறைக்குட்பட்டு வளர்ப்போம் என்று தேவ சமூகத்தில் உறுதி எடுத்துக் கொள்கின்றனர்.

பிறந்த நாள் விழா

குழந்தையின் முதல் ஆண்டு நிறைவின் போது பிறந்த நாள் விழா நடைபெறுகிறது. பிறந்த நாள் விழாவின் போது போதகர் அழைக்கப்பட்டுச் செபம் செய்யப்படுகிறது. இந்தப் பிறந்த நாள் விழாவின் போது கேக் வெட்டுதல் தவிர்க்க இயலாத நிகழ்வாக நடைபெறுகிறது. பெரும்பாலும் பிறந்த நாள் விழாவின் ஒரு பகுதியாக அசைவ விருந்து பாரிமாறும் நிகழ்வு நடைபெறுகிறது.

திருவிருந்து

ஆண் குழந்தை அல்லது பெண் குழந்தைக்குப் பதினாறு வயதாகும் போது திருவிருந்து என்னும் நிகழ்வு திருச்சபையில் நிகழ்த்தப்படுகிறது. இயேசு தமது சீடர்களுக்கு அப்பமும் திராட்சைரசமும் இறுதி விருந்தின்போது வழங்கினார். அதனை நினைவு கூரும்படி இந்தக் குழந்தையும் இயேசு கிறித்துவின் பந்தியில் இணைகிறது. இந்தத் திருவிருந்து நிகழ்வை முன்னிட்டுத் திருச்சபைக்குப் பணம் வழங்கும் வழக்கம் நடைமுறையில் உள்ளது. இந்தத் தொகை வரையறைக்குட்பட்டதல்ல.

3. இசுலாமியச் சமயத்தினாரிடையே காணப்படும் பிறப்புச் சடங்கு

குமாரி மாவட்ட இசுலாமியர்களிடையே காணப்படும் சடங்குகளைச் சமயம் சார்ந்த சடங்குகள், சமயம் சாராத சடங்குகள் என இரண்டாக வகைப்படுத்த இயலும். இசுலாமிய மக்கள் குழந்தை பிறக்கும் போது ஒரு சில சடங்குகளை மட்டுமே மேற்கொள்கின்றனர். இசுலாமிய சமயத்தில் சடங்குகள் பெருமளவில் காணப்படுவதில்லை. என்றாலும் அவர்களது வீட்டின் அண்டையில் வாழ்கின்ற மக்கள் இந்துக்களாக அல்லது கிறித்தவர்களாக இருப்பர். அவர்களைப் பார்த்துச் சில சடங்குகளைக் கடைப்பிடிக்கின்றனர்.

மடி நிறைத்தல்

தாய்மையடைந்த பெண்ணுக்கு ஏழாவது மாதம் அல்லது ஒன்பதாவது மாதம் ஆகும்போது தாய் வீட்டிலிருந்து பணியாரம் போன்ற பலகாரங்களோடு உறவினர்கள் தாய் வீட்டிற்கு அழைத்து வருவதற்காகச் செல்வர். அங்குத் தாய்மையடைந்த பெண்ணை இருக்கையில் அமர்த்தி, சேலை முந்தானையில் வெற்றிலை, பாக்கு, தேங்காய்த்துண்டு, பணியாரம் போன்றவற்றை ஒவ்வொருவராக வைத்து ‘மடி நிறைத்தல்“ என்ற சடங்கினை ஒரு சில மக்கள் செய்கின்றனர். அதன் பிறகே பெண் தாய் வீட்டிற்கு அழைத்து வரப்படுகிறாள். இந்தச் சடங்கு நடப்பதைக் ‘கஞ்சி வைப்பு நேர்ச்சை“ என்றும் குறிப்பிடுகிறார்கள். ஏனென்றால் அந்த நாள் ரவையில் உருவாக்கப்பட்ட இனிப்புக் கஞ்சி வைத்து அனைவருக்கும் பாரிமாறுவார்கள்.

சூல் சீர்

“பெண் கருவுற்று அப்பெண்ணைத் தலைப்பிரசவத்திற்குத் தாய் வீட்டிற்கு அழைத்துச் செல்லும்பொழுது சூல் சீர் கேட்கின்றனர். இச்சீரும் பொருளாகவோ அல்லது பணமாகவோ இருக்கும்.” 5

குழந்தை பிறந்தவுடன் குழந்தையைச் சுத்தம் செய்வர். சுத்தம் செய்தவுடன் குழந்தையின் வலது காதில் பாங்கு சொல்கின்றனர்.

1. அல்லாஹ் அக்பர், அல்லாஹ் அக்பர், அல்லாஹ் அக்பர், அல்லாஹ் அக்பர்

2. அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹ் அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹ்

3. அஷ்ஹது அன்ன முஹம்மதற் றசூலுல்லாஹ் அஷ்ஹது அன்ன முஹம்மதற் றசூலுல்லாஹ்

4. ஹய்ய அலஸ்ஸலாத் ஹய்ய அலஸ்ஸலாத்

5. ஹய்ய அலல் ∴பலாஹ் ஹய்ய அலல் ∴பலாஹ்

6. அல்லாஹ் அக்பர் அல்லாஹ் அக்பர்

7. லா இலாஹ இல்லல்லாஹ்

இதன் பொருள் பின்வருமாறு

1. அல்லாஹ் மிகப் பெரியவன்

2. நிச்சயமாக வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு நாயன் இல்லை என நான் சாட்சி கூறுகிறேன்.

3. மேலும் நிச்சயமாக முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அல்லாஹ்வின் திருத்தூதராக இருக்கிறார்கள் என நான் சாட்சி கூறுகிறேன்.

4. தொழுகையின் பக்கம் விரைந்து வாருங்கள்.

5. வெற்றியின் பக்கம் விரைந்து வாருங்கள்.

6. அல்லாஹ் மிகப் பெரியவன்.

7. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை.

பிறகு குழந்தையின் இடது காதில் இகாமத் சொல்கின்றனர். இகாமத் என்பது மேலே குறிப்பிட்டுள்ள பாங்கில் ஐந்தாவது வசனமான ஹய்ய அலல்.ஃ.பலாஹ் சொன்னவுடன், கத் காமத்திஸ் ஸலாத் (தொழுகை ஆரம்பமாகப் போகிறது) என்று சேர்த்துக் கூறிவிட்டு ஆறாவது மற்றும் ஏழாவது வசனத்தையும் கூறுவர். இவை இரண்டும் அரபி மொழியிலேயே கூறப்படும். இவ்வாறு குழந்தையின் வலது காதில் பாங்கும், இடது காதில் இகாமத்தும் ஓதுவது சமயம் சார்ந்த நம்பிக்கையாக அமைகிறது. இவ்வாறு ஓதுவதன் காரணமாகக் குழந்தை ஆரோக்கியமானதாகவும் சமயப் பற்றுள்ளதாகவும் வளரும் என்ற நம்பிக்கை குமாரி மாவட்ட இசுலாமிய மக்களிடம் காணப்படுகிறது.

அடுத்து, ஒருவர் போ£ச்சம் பழத்தின் சுளையை மென்று அதனைக் குழந்தையின் வாயில் தடவி, அக்குழந்தைக்காகத் துஆச் செய்வார். அவ்வாறு செய்பவர் மார்க்கப்பற்றும், இறையச்சமும் உள்ளவராயிருத்தல் வேண்டும்.

அகீகா விவரம்

ஒரு குழந்தை பிறந்ததும் அதற்காக ஆடோ, மாடோ பலியிடுவதற்கு அகீகா என்று பெயர். இதனைக் குழந்தை பிறந்ததிலிருந்து, அது வளர்ந்து வாலிப வயதை எய்தும் வரை செய்யலாம். எனினும், குழந்தை பிறந்த ஏழாம் நாள் பொழுது உதயமான சற்று நேரத்தில் செய்வதே அண்ணல் நபி அவர்களின் வழிமுறை ஆகும்.

“ஆண் குழந்தைகளுக்காக இரண்டு ஆடுகள் அகீகா கொடுப்பதும், பெண் குழந்தைகளுக்காக ஓர் ஆட்டினைக் கொடுப்பதும் ஏற்றமாகும்.” 9 பிறந்த குழந்தைகளுக்காக ஏழாம் நாளன்று அகீகா கொடுப்பது சுன்னத் ஆகும். குழந்தையின் தலைமுடிக்கு, எடைக்கு எடை தங்கமோ, வெள்ளியோ நிறுத்து அறம் செய்வதும் நபிகளின் வழிமுறையாகக் காணப்படுகிறது.

குழந்தையைத் தர்காவில் உறையும் புனிதாரின் அருள் பாதுகாக்கும் என்ற நம்பிக்கையும் காணப்படுகிறது. இப்பாதுகாப்பிற்காக, சில சடங்குகளும் நிகழ்த்தப்படுகின்றன. குழந்தை இரவில் பயந்து அழுவது, தீய ஆவிகளைக் கண்டு என நம்பப்படுகிறது. தர்காவுக்குக் கொண்டு செல்லும்போது தீய ஆவி குழந்தையை விட்டு விலகி விடுகிறது. கோரியை மூன்று முறை குழந்தையைக் கொண்டு சுற்றும்போது தர்காவில் உறையும் மேலான சக்தியின் அருளுக்கு உள்ளாகிறது. கோரியின் மீது இடப்பட்டிருக்கும் பூ அச்சக்தியைச் சேமித்து வைக்கிறது. அதைத் தண்ணீரில் விட்டு வீட்டிற்கு எடுத்துச் செல்வதன் மூலம் மேலான சக்தி

வீட்டிற்குள்ளும் வந்து குழந்தையைப் பாதுகாக்கிறது. இவ்விரு நம்பிக்கைகளும் சமயம் சார்ந்த நம்பிக்கைகளாக அமைகின்றன.

காத்து கறுப்பு என்பன பேய்களைக் குறிக்கின்றன. பேய்களினால் குழந்தைக்கு ஆபத்து விளையும் என்பது சங்ககாலம் தொட்டுத் தொடர்ந்து வரும் தமிழர்களின் நம்பிக்கை ஆகும். பிறந்த குழந்தையைத் தாயைத் தவிர மாமன், சித்தி வெளியில் கொண்டு செல்லலாம். தாயின் நச்சுக்கொடியும், குழந்தையின் தொப்புள் கொடியும் மேலான சக்தி கொண்டவைகளாக நம்பப்படுகின்றன. குழந்தை பிறந்த பின்பு இவை பாதுகாக்கப்படவும் வேண்டும். இல்லாவிடில் குழந்தைக்குத் தீங்கு நேரிடும். தாயின் நச்சுக்கொடியை வீட்டின் பக்கத்தில் புதைப்பார்கள். 16 நாள் வரை தண்ணீர் விடுவார்கள். மறி கடக்காமல் இருக்க கல்லெடுத்து வைப்பார்கள். நச்சுக்கொடி உயிருள்ள உடலின் உயிரற்ற உறுப்பாகிறது. உயிரற்ற உறுப்பிற்கு ஏற்படும் தீங்கு உயிருள்ள உடலையும் பாதிக்கக் கூடும் என்ற நம்பிக்கை எழுகிறது. நாய் நச்சுக்கொடியை நக்கினால் தாயின் பால் வற்றிவிடும் அடுத்த குழந்தை கிடைக்காது. நச்சுக்கொடி நாயால் தீண்டப்படும்போது தாய்மையின் வெளிப்பாடான பால் வற்றிவிடும். தாய்மையை இழப்பதினால் மீண்டும் குழந்தைப்பேறு அப்பெண்ணிற்குக் கிடைக்காததாகிவிடுகிறது.

தக்கலை பீரப்பா தர்காவுக்குப் பால் குடம் எடுப்பதாக நேர்ந்தால் தாய்க்குப் பால் ஊறும். குமாரி மாவட்ட இசுலாமியர் தர்காவை மேலான சக்தியின் இருப்பிடமாகக் கருதுகின்றனர். பாலை நேர்ச்சையாக வழங்குவதன் மூலம் தர்காவில் உறையும் புனிதர் அருளால் தாய் தன் தாய்மைப் பண்பை மீட்டுக் கொள்கிறாள்.

குழந்தை தவழ்ந்து தன்னுடைய முயற்சியால் படியைத் தாண்டுதல் என்பது முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது. குழந்தை தவழும் பருவத்தில் படி தாண்டி வரும் முன்னால் ஒவ்வொரு படியையும் மூன்றுமுறை சுற்றி முதல் வாசல் படியில் தேங்காய் உடைப்பார்கள்.

குழந்தைக்கு முதல் முறையாகப் பல் விழுவது முக்கிய நிகழ்வாக இசுலாமியர் கருதுகின்றனர். குழந்தைக்கு முதல் முறையாகப் பல் விழும்போது பல்லைப் பசுவின் சாணத்துடன் சேர்த்து உருட்டிக் கூரை மீது எறிவார்கள். அதுவும் கர்ப்பிணி வீட்டுக் கூரை மீது எறிவார்கள். கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றில் குழந்தை வளர்வதுபோல் புதிய பல்லும் வளரும் என்ற நம்பிக்கையும் காணப்படுகிறது. பல் விழுவது மட்டுமல்லாமல் பல் விழுவதும் சடங்கிற்குரிய நிகழ்வாகக் கருதப்படுகிறது. பல் முளைக்கும்போது பால் கொழுக்கட்டை செய்து கொடுப்பார்கள். கொழுக்கட்டை

செய்து கொடுப்பதன் மூலம் பல் முளைக்கும் செய்தி இசுலாமிய சமூகத்திற்கு அறிவிக்கப்படுகிறது.

பெண் தாய்மை அடைந்த ஏழு அல்லது ஒன்பது மாதத்தில் தாய் வீட்டிற்குப் பிள்ளைப் பேற்றிற்காகச் செல்வாள். ஏழு மாதத்தில் செல்வதாக இருந்தால் ஏழு நெய்யப்பம் மடியில் நிரப்பி அனுப்புவார்கள். ஒன்பது மாதத்தில் செல்வதாக இருந்தால் ஒன்பது நெய்யப்பம் மடியில் நிரப்பி அனுப்புவார்கள். கணவனின் சகோதாரிகள் நெய்யப்பத்தை மடியில் நிரப்புவார்கள்.

குழந்தை பிறந்து ஏழு நிமிடத்திற்குள் குழந்தையைக் கையில் வாங்கும்போது பாங்கு சொல்வார்கள். குழந்தை பிறந்து நாற்பது என்றொரு சடங்கினைக் கடைப்பிடிக்கின்றனர். அந்தச் சடங்கின்போது குழந்தையின் தாயின் அம்மாவும் குழந்தையின் தந்தையின் அம்மாவும் குழந்தைக்கு ஏதாவது அணிகலன்களை அணிவிப்பார்கள். அந்த நாற்பதாவது நாளில்தான் குழந்தையின் முடியினை எடுப்பார்கள். முடி எடுக்கும்போது தலையில் தேங்காய் பாலைத் தடவுவார்கள். நாற்பதாம் நாள் சடங்கு செய்யும் போது ஒரு சிலர் மாடு வெட்டி விருந்து அளிப்பார்கள். ஒரு சிலர் ஆடு வெட்டுவார்கள். அவரவர் வசதிக்கேற்ப ஆடு, மாடு என வெட்டுவார்கள். பெண் குழந்தை பிறந்தால் சடங்கு நிகழ்த்துவதில்லை. காது குத்துவதும் விழாவாகக் கொண்டாடப் படுவதில்லை. பெண் குழந்தைகளுக்கு இரண்டு வயது, ஐந்து வயது என அவரவர் வசதிக்கேற்பக் காது குத்துவார்கள்.

கர்ப்பிணிப் பெண் மாலை ஆறு மணிக்குப்பின் தகுந்த பாதுகாப்பின்றி வெளியே செல்வதின் காரணமாகப் பிறக்கும் குழந்தை பட்சி தோசம் பிடித்த குழந்தையாகப் பிறக்கின்றது. குழந்தையின் கை, கால் விரல்கள் விரியாமல் இணைந்து இருப்பது இதற்கு அறிகுறியாகிறது. பட்சிதோசத்தை நீக்கவும் சடங்கு செய்யப்படுகிறது. குழந்தையின் கழுத்தில் வடைமாலை முதலில் போடப்படுகிறது. அப்போது குழந்தை, தாயின் மடியில் இருக்க வேண்டும். தாய்மாமன் மூன்று முறை குழந்தையின் கழுத்தில் மாலையைப் போட்டு எடுக்க வேண்டும். இச்சடங்கைத் தாய்மாமனோ அல்லது உறவு முறையில் வருபவரோ மட்டும் செய்ய முடியும். பின் அந்த வடைமாலையை ஆலமரத்தில் வீசி எறிந்துவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் வீட்டிற்கு வரவேண்டும். இதையும் தாய்மாமனே நிகழ்த்த வேண்டும். ஆலமரத்தில் வீசப்பட்ட வடைமாலை பறவைகளுக்கு உணவாகும். பறவைகள் உண்பதால் ‘பட்சிதோசம்“ குழந்தையை விட்டு நீங்கும். பட்சி என்பது பறவையைக் குறிப்பிடுகிறது.

விளக்கு ஏற்றிய பின், குழந்தைகளை வெளியே கொண்டு செல்லக் கூடாது என்னும் கட்டுப்பாடு இசுலாமிய சமயத்தில் இருந்து வருகிறது. அதையும் மீறி, குழந்தையை வெளியே கொண்டு சென்றால் குழந்தைக்கு, 'பட்சிதோசம்" ஏற்படும் என்று இசுலாமியர் நம்புகின்றனர்.

கண்ணேறு கழித்தல் குறித்த நம்பிக்கை குமாரி மாவட்ட இசுலாமியர் வாழ்வில் தவறாது இடம்பெறுகிறது. கண்ணேறு கழித்தலுக்கு விலக்கப்பட்ட காலமும் குமாரி மாவட்ட்ட இசுலாமியர் வாழ்வில் உண்டு. குழந்தை பிறந்து 41 நாள் வரை குழந்தைக்கோ குழந்தையின் தாய்க்கோ 'திருஷ்டி" சுற்றுவதில்லை. இக்காலம் தீட்டு நாட்களாகக் கருதப்படுகிறது. தீட்டுக் காலம் முடியாமல் 'திருஷ்டி" சுற்றினால் அதனால் தீமையே விளையும் நோயும் அதிகாரிக்கும். எனவே, தீட்டு நாட்கள் முடிந்தவுடன் கடுகு, மூன்று வேப்பிலை, மூன்று மிளகு, மூன்று அத்தியிலை அல்லது முந்திரியிலை, உப்பு இவற்றைத் தடவித் தீயில் போடுவர். இது எல்லாக் கண்ணேறுகளையும் அதனால் விளையும் தீங்குகளையும் போக்கிவிடும் என்ற நம்பிக்கை குமாரி மாவட்ட இசுலாமியர்களிடையே காணப்படுகிறது. கண்ணேறு கழித்தலை வராது தடுத்தல், வந்தபின் நீக்குதல் என இரு படிநிலைகளாக வகுக்க இயலும். சடங்குகளின் போது முட்டையைச் சுற்றி எறிதல் அல்லது உயிருள்ள கோழியைச் சுற்றித் தானமளித்தல் ஆகியன வராது தடுக்கும் என்ற நம்பிக்கையில் நிகழ்த்தப்படும் சடங்குகளாகும்.

சில அறிகுறிகளைக் கொண்டு கண்ணேறு பட்டுள்ளதை நாட்டார் உணர்ந்து கொள்கின்றனர். குழந்தை இரவு நேரம் இடைவிடாது அழுவது கண்ணேற்றின் வெளிப்பாட்டுக்குறியாக அமைகிறது. இவ்வாறு கண்ணேறு விழுந்துள்ளதை உறுதிப்படுத்தியபின் அதைக் களைவதற்கான சடங்கு நிகழ்த்தப்படுகிறது. ஒரு வெள்ளைத் துணியை எடுத்துக் குழந்தையைச் சுற்றிப் பின் வயிற்றைத் தடவும்போது பேய்க்கண்ணு, ஊரார் கண்ணு, வந்தார் கண்ணு, இருந்தார் கண்ணு எனச் சொல்லி, பின் அதைச் சுருட்டித் தீ பத்த வச்சு சொம்பில் போடுவர். கொஞ்சம் நேரம் கழிச்சு ஒரு பாத்திரத்துல, கொஞ்சம் தண்ணி விட்டு அதில் கமுத்தித் தட்டணும். துணி தண்ணியை உறிய உறிய குழந்தை அழுகையை நிறுத்தும்.

குழந்தையின் அழுகையை நிறுத்த மற்றொரு சடங்கும் நிகழ்த்தப்படுகிறது. குழந்தையையும் தாயையும் நிர்வாணமாக விட்டு, தாய் ஒரு முட்டையை எடுத்து, குழந்தையின் தலை உடம்பு முழுசும் மூணு தடவைச் சுற்றி, பின் தலைவழியாக இரண்டு காலுக்கும் இடை வழியாக எடுத்து, இப்படி மறிக்கடக்காம மூணு முறை

எடுத்து முட்டையைக் கீழே வச்சிட்டு, குழந்தையை மூணு முறை மறிக்கடக்கணும். பின் தாய் முட்டையை எடுத்து மூணு முறை தலையைச் சுற்றிட்டுத் தீயில் போட்டுட்டுத் திரும்பிப் பார்க்காம வேற அறைக்குள் வந்து விட வேண்டும். முட்டை வெடிச்சுச் சிதறுகிற அளவுக்குக் கண்ணேறு போகும். எல்லோரும் தூங்குன பிறகுதான் செய்ய வேணும். அந்த அறைக்கு அடுத்த நாள் வரை யாரும் போகக்கூடாது.

கண்ணேறு கழிக்கும் சடங்கில் சில குறிகள் மூலம் கண்ணேறு உணர்ந்து கொள்ளப்படுகிறது. மாற்றுக்குறிகளை நிகழ்த்துவதின் மூலம் அதன் தீமை அகற்றப்படுகிறது. கண்ணேறு கழித்தல் குறித்த சடங்கில் குமாரி மாவட்ட இசுலாமியர் அனைத்துச் சமூக மக்களின் சடங்குகளுடன் உடன்படுகின்றனர்.

கர்ப்பிணி பெண் கல்லறைப் பக்கம் போக வேண்டிய நிலை ஏற்பட்டால் மோதிரத்தில் மண் கலந்து கைல வச்சுட்டுப் போகணும். ஆவிகள் குழந்தைகளுக்கும் கர்ப்பிணிப் பெண்களுக்கும் அதிக தீங்கிழைக்கின்றன. கல்லறைப் பக்கம் கர்ப்பிணிப் பெண் போய்விட்டு வீட்டிற்கு வந்தால் உடனே ஒரு முட்டையை எடுத்து, தலையைச் சுற்றி நாலு பக்கமும் ஒக்காட்டு காட்டிவிட்டு, பின் கல்லறைப் பக்கம் வீசி எறிவர். பின்னர், யாலேஸ் என்னும் நூல் ஓதி இடுப்பில் கட்டுவர். நாள் பார்த்து அதற்கான யாலேஸ் கட்டுவர். ஓதி நூல் கட்டுவது இசுலாமிய சமயம் தொடர்பான நிகழ்வாகும்.

குழந்தையைத் தொட்டிலிடல்

“குழந்தையைத் தொட்டிலிடும் அன்றே குழந்தை இடுப்பில் அரைஞாண் கயிறு கட்டப்படும். இதனைக் கயிறு கட்டுதல் என்பர்.” 7 இதனைக் குழந்தை பிறந்த ஏழாம் நாள் அல்லது பதினாறாம் நாள் விழாவாகச் செய்வர். தாய்மாமன் தான் இடுப்பில் கயிறு கட்ட வேண்டும்.

குழந்தையின் தொட்டிலில் இரும்புத் துண்டைப் போட்டு வைக்க வேண்டும். அவ்வாறு வைத்தால் பேய் பிசாசு அண்டாது எனக் குமாரி மாவட்ட இசுலாமியர் நம்புகின்றனர். சிலர், இசுமி இறைவனின் 99 திருப்பெயரை எழுதித் தொட்டிலில் கட்டுவர்.

ஒரு பெண்ணுக்குத் தலைப்பிரசவமாயிருப்பின் அவளின் தாய் வீட்டில் பிரசவம் பார்த்து, அனைத்துச் செலவுகளையும் ஏற்றுக் கொள்வதுடன், குழந்தை பிறந்தவுடன் மகளுக்கும், மருமகனுக்கும், பேரக் குழந்தைக்கும் சீர் செய்வது இந்திய மக்களிடையே காணும் வழக்கமாகும். அவ்வாறு சீர் செய்யும் பொழுது, குழந்தை

ஆணாயினும், பெண்ணாயினும் அதற்கு நகைகள் அணிவிப்பது வழக்கம். ஆனால் இசுலாமிய மார்க்கம் பெண்ணாயிருப்பின் நகை அணிவிப்பர். குழந்தை ஆணாக இருப்பின் அதற்குத் தங்க நகைகளையும் பட்டாடைகளையும் அணிவிக்க மாட்டார்கள். “ஆண்கள் வெள்ளி நகை அணிவதை மார்க்கம் தடை செய்யவில்லை.” 8

மருத்துவம்

குமாரி மாவட்ட இசுலாமிய மக்களிடையே நோய்க்கான மருத்துவமும் நம்பிக்கையின் அடிப்படையில் நிகழ்த்தப்படுகிறது. இம்மருத்துவம் சடங்கு அடிப்படையிலேயே நிகழ்த்தப்படுகிறது. மருத்துவக்குணம் கொண்ட பொருட்கள் இச்சடங்கில் இடம்பெற வேண்டும் என்பதில்லை. குழந்தைக்கு உளுக்குப் போட்டிச்சினா மாமன் காரனோட துணியப் போட்டு இரண்டு பேரு ஆட்டணும். அல்லது சுழவுல குழந்தையைப் போட்டு, கூட துணைக்குச் சங்கப்போட்டு, மூன்று முறை ஆட்டி, மூணு தடவைப் போட்டு எடுக்க வேண்டும். தாய்மாமன் குழந்தையின் உறவுமுறையில் முக்கியமானவன். எல்லாச் சடங்குகளும் அவன் முன்னிலையில்தான் நிகழ்த்தப்படும். இங்குச் சடங்கிற்குத் தாய்மாமனின் வேட்டியே பயன்படுத்தப்படுகிறது. குழந்தையை வேட்டியில் போட்டு ஆட்டுவதன் மூலம் நோயிலிருந்து விடுதலை பெற முடியும் என்ற நம்பிக்கை இங்குக் குறிப்பிடப்படுகிறது. தானியங்களைப் புடைப்பதன் மூலம் அவற்றிலுள்ள மாசு நீக்கப்படும். குழந்தையைப் புடைப்பதன் மூலம் அதன் உடம்பிலுள்ள தீய விளைவுகளை நீக்க முடியும் என்ற நம்பிக்கை குமாரி மாவட்ட இசுலாமிய மக்களிடம் காணப்படுகிறது. இசுலாமியர் இதனைப் பிற சமூகத்தோடு பகிர்ந்து கொள்கின்றனர்.

குழந்தை பேசத் துவங்கியதும் முதலில், ‘லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹி“ என்று கூறிப் பழக்குதல் அவசியமாக இசுலாமியர் கருதுகின்றனர்.

கத்னா (சுன்னத்)

ஆண் குழந்தைகள் பிறந்தால் ஏழு நாளிலிருந்து ஏழு வருடங்களுக்குள் சுன்னத் என்னும் சடங்கு நிகழ்த்துவார்கள். சுன்னத் என்பதைக் கத்னா என்று கூறுகின்றனர். சுன்னத் செய்வதை விளம்பரப்படுத்தக் கூடாது. ஏழு வயதிலிருந்து அந்தக் குழந்தை இறைவணக்கத்துக்குக் கட்டாயப்பட்டவனாகக் காணப்படுகிறான். ஒரு சிலர் குழந்தை பிறந்த உடன் ஆண் குழந்தையாக இருந்தால் சுன்னத் என்னும் விருத்தசேதனம் செய்வார்கள். ஒரு சிலர் குழந்தை வளர்ந்த பிறகு சுன்னத்

செய்வார்கள். சுன்னத் என்பது ஆணுறுப்பில் உள்ள நுனித்தோலின் மாமிசம் நீக்கப்படுவதாகும். அதாவது மர்ம உறுப்பின் முன் தோல் அறுக்கப்படுவதாகும்.

பிறப்புத் தொடர்பான நம்பிக்கைகள்

பால் கொடுக்கும்பெண் மற்றவர்களுக்கு முடி வெட்டக் கூடாது. அப்படி வெட்டினால் பெண் குழந்தை பிறந்திருந்தால் ஒரு திரிப்பான் முடியும், ஆண் குழந்தை பிறந்திருந்தால் ஒரு துடைப்பம் முடியும் கொட்டும்.

நாய் நச்சுக்கொடியை நக்கினால் தாயின் பால் வற்றிடும். அடுத்த குழந்தை கிடைக்காது. மாலை ஆறு மணிக்கு மேல் கர்ப்பிணிப் பெண் வெளியே சென்றால் பிறக்கும் குழந்தைக்குப் பட்சிதோசம் உண்டாகும்.

இயல் தொகுப்பு

பிறப்புச் சடங்கு என்னும் இவ்வியலில் இருந்து பெறப்பட்ட கருத்துகள் பின்வருமாறு தொகுத்தளிக்கப்படுகின்றன.

கன்னியாகுமாரி மாவட்டத்தின் விளவங்கோடு வட்டத்தில் உள்ள மக்களின் பிறப்புச் சடங்கு மதவாரியாக விளக்கப்பட்டுள்ளது. விளவங்கோடு வட்டத்தில் பெரும்பாலும் இந்து, கிறித்தவர், இஸ்லாமியர் என்ற மூன்று மதத்தைச் சார்ந்தவர்கள்தான் அதிகமாகக் காணப்படுகின்றனர். பிற மதத்தைச் சார்ந்தவர்கள் ஒரு சிலர் விரல்விட்டு எண்ணும் அளவிற்குப் பணிக்காக வந்து குடியேறியவர்களாக உள்ளனர். அவர்களது சடங்குகள் இங்கே குறிப்பிடப்படவில்லை.

திருமணமான பெண் கருவுறுதல் அதாவது சூல் கொள்ளுதல், சூல் கொண்ட பெண்ணிற்கு ஊட்டச் சத்துள்ள உணவு கொடுத்தல், மருத்துவச்சி மருத்துவம் செய்தல், கன்னி காணுதல், பனிக்குடம் உடைதல், தொப்புள் கொடி அறுத்தல், சேனைத்தண்ணீர் கொடுத்தல் அதாவது குழந்தைக்கு முதல் உணவு கொடுத்தல், தொட்டிலில் இடுதல், பெயர் சூட்டுதல், கண்ணேறு கழித்தல் போன்ற மூன்று மதத்திற்கும் பொதுவான சடங்குகள் குறித்த செய்திகள் பெறப்பட்டுள்ளன.

இந்து மதத்தினாரின் பிறப்புச் சடங்கில் குறிப்பிடத்தக்கது தலைமுடி இறக்குதல் ஆகும். குழந்தை பிறந்து குறிப்பிட்ட நாளில் புண்ணியத் தலங்களுக்குச் சென்று மொட்டையடித்துத் தலைமுடியைக் காணிக்கை செலுத்தும் செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

கிறித்தவ மதத்தைச் சார்ந்த மக்களின் சடங்குகளில் குறிப்பிடத்தக்கது திருமுழுக்கு மற்றும் திருவிருந்தாகும். ரோமன் கத்தோலிக்கக் கிறித்தவர்கள்

திருவிருந்தைப் புது நன்மை என்று குறிப்பிடுகின்றனர். அதுமட்டுமல்லாமல் ரோமன் கத்தோலிக்கக் கிறித்தவர்கள், கிறித்தவ மதத்தில் இணைந்ததற்கு அடையாளமாக உறுதி பூசுதல் என்னும் சடங்கினையும் நிகழ்த்துகின்றனர்.

இஸ்லாமிய மதத்தைச் சார்ந்த மக்களின் சடங்குகளில் குறிப்பிடத்தக்கது மடி நிறைத்தல் ஆகும். தாய்மையடைந்த பெண்ணிற்கு மடி நிறைய பண்டங்களை நிரப்பிப் பிள்ளைப் பேற்றிற்காக அழைத்துச் செல்லும் சடங்கும், ஆண் குழந்தைக்குச் சுன்னத் செய்யும் சடங்கும் நிகழ்வதை அறியமுடிகிறது.

சான்றெண் விளக்கம்

1. திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள் , மனுமுறை கண்ட வாசகம் : ப. 9
2. கலைக்களஞ்சியம் : தொகுதி 4 : ப. 392
3. சோமலே, தமிழ் நாட்டு மக்களின் மரபும் பண்பாடும் : ப. 99
4. அ. திருநாகலிங்கம், இந்து பள்ளர் திருமணச் சடங்குகள் : ப. 65
5. பே. சாந்தி, மேலப்பாளையம் முஸ்லீம்கள் : ப.31
6. பாண்டிச்சேரி எஸ். முஹம்மது பஷீர், இஸ்லாத்தில் கணவன் மனைவி கடமைகளும் குழந்தை வளர்ப்பும் : ப. 3
7. பே. சாந்தி, மேலப்பாளையம் முஸ்லீம்கள்: ப. 27
8. பாண்டிச்சேரி எஸ். முஹம்மது பஷீர், இஸ்லாத்தில் கணவன் மனைவி கடமைகளும் குழந்தை வளர்ப்பும் : ப.14

இயல் - 5

பூப்புச் சடங்கு

பெண் பருவம் அடைவதைப் பூப்புச் சடங்காகக் கொண்டாடுகின்றார்கள். பெண் திருமணத்திற்குத் தயார் ஆகிவிட்டாள் என்பதைச் சமுதாயத்திற்கு அறிவிக்க இந்தப் பூப்புச் சடங்கைச் செய்கிறார்கள். சாதிக்குச் சாதி பூப்புச் சடங்கு வேறுபடுகிறது. பொதுவாக எல்லா மக்களும் பூப்புச் சடங்கினை மகிழ்ச்சியான சடங்காகவே கருதி விழாப் போலக் கொண்டாடுகின்றார்கள். “ஒரு பெண்ணின் வாழ்வில் முதல் பூப்பு நாள் பொன்னான நாளாகும்.” 1

பூப்படைந்த மாதத்தின் சிறப்பு

பெண் எந்த மாதத்தில் பூப்பெய்துகிறாள் என்பதையெல்லாம் பாட்டாகப் பாடிக் களிக்கிறார்கள்.

சித்திரை மாதம் சிறுமுருங்கை பூத்தது போல்

வைகாசி மாதம் வாழைமரம் பூத்தது போல்

ஆனி மாதம் அவரைகள் பூத்தது போல்

ஆடி மாதம் அல்லிமலர் பூத்தது போல்

ஆவணி மாதம் அரளிப்பூ பூத்தது போல் 2

என மாதத்தின் பெயரையும் அந்த மாதத்தில் சிறப்பாகவும் வளமாகவும் பூத்துக்குலுங்கும் பூவையும் இணைத்துப் பாடிப் பூப்படைந்த பெண்ணின் வளத்தை வாழ்த்தி மகிழ்கிறார்கள்.

தென்னங்கீற்றுக் குடிசையில் இருக்கும் பூப்பெய்திய பெண்ணுக்குச் சிறப்பான பலகாரம் தயாரித்துக் கொடுப்பார்கள். இதை ஒரு பாடல் வழியாக அறிந்து கொள்ள முடிகிறது.

உழக்கு எண்ணெய் உரலிலே ஊற்றி

தற்குத் தகுந்த வெல்லத்தைப் போட்டு

அழகான தேங்காய் முடியையும் போட்டுக்

குத்தவாடி சிம்மிலி குத்தவாடி சிம்மிலி 3

என்று பாடும் பாடலின் மூலம் அந்தப் பலகாரத்தின் பெயர் சிம்மிலி என அறிகிறோம்.

பூப்படைதலின் வேறு பெயர்கள்

“பூப்பெய்துவதை வடமொழியில் ‘புஷ்பவதி“ என்னும் சொல்லால் குறிப்பர். நாட்டுப்புற மக்கள் பெண் பூப்பெய்துவதைச் ‘சமைதல்“ என்றும் ‘வயதிற்கு வந்துவிட்டாள்“ என்றும் கூறுவர்.” 4 ஆளாதல், பூத்தல் என்றும் கூறுகின்றனர். விளவங்கோடு வட்டார மக்கள் பூப்பெய்துவதை ‘வயதுக்கு வந்துட்டா“ என்று கூறுகின்றனர். விளவங்கோடு வட்டார மக்கள் பெரும்பாலும் 12 வயது முதல் 16 வயதிற்குள் பூப்படைகின்றனர். “தொல்பழங்காலத்தில் பண்டைய உழவுத் தொழிலின் தொடக்கத்தைப் போலவே பூப்பெய்தலும் குழந்தைப் பேற்றிற்குரிய தொடக்கம் எனக்

கருதினர்.”5 “பெண்கள் பூப்படையும் நிலை பருவ முதிர்ச்சியின் அறிகுறியாகும்.”6 பருவமடைவது புதியதொரு வாழ்க்கைக்கு அப்பெண் தகுதியுடையவள் என்பதை உறுதி செய்வதாக அமைந்துள்ளது. பருவம் அடையும் நிகழ்ச்சி குழந்தைப் பருவத்தின் இறுதியாகவும் பெண்மையின் தொடக்கமாகவும் அமைகிறது. ஒரு பெண் பெண்மை நிலை எய்திவிட்டாள் என்பதையும் குடும்ப வாழ்க்கைக்குத் தகுதியுடையவள் என்பதையும் சமுதாய மக்கள் அறியும் நோக்கில் நடத்தப்படுவதே பூப்புச் சடங்காகும்.

பெண் பூப்பெய்தல் என்பது, “பெண் மனித இனப்பெருக்கத்திற்குரிய பக்குவமடைந்து விட்டாள் என்பதைக் குறிப்பதாகும். பூ மலர்ந்த பிறகுதான் காயாகிறது. பூவே பின்னால் கிடைக்கும் பலனிற்குத் தொடக்கம். அதனால்தான் பெண், இனப்பெருக்கத்திற்குரிய வயதடைந்ததைப் பூவின் பெயரால் ‘பூப்பெய்தினாள்“ எனக் குறிப்பிடுகின்றனர்.” 7 “சமைதல்” எனின் பக்குவமடைதல் என்றும் பொருள் பயக்கும்”.8 ஒரு “பெண்ணுக்குக் கணவனைத் தேட ஒரு வாய்ப்பாக இந்தச் சடங்கு விளம்பரப்படுத்தப்படுகிறது.”9 “தங்கள் வீட்டில் பருவமடைந்த ஒரு பெண் மணத்திற்குத் தயாராக இருக்கிறாள் என்பதை உலகோர்க்கு அறிவித்தலே இச்சடங்கின் நோக்கமாகும்.”10 எனப் பூப்படைதல் குறித்து அறிஞர்கள் பலவாறாகத் தொிவித்துள்ளனர்.

விளவங்கோடு வட்டார மக்களில் ஒரு சில சமுதாயத்தினர் பூப்புச் சடங்கைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். தங்களது குழந்தைகள் பூப்பெய்திய உடனேயே அதனைப் பிறருக்கு அறிவிப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். ஒரு குடும்பத்தில் ஒரு பெண் பூப்புற்றிருப்பதை அறிந்ததும் பெண்ணின் பெற்றோர் தாய்மாமனுக்கு முதலில் அறிவிப்பர். அதன் பின்னர்ப் பிற உறவினர்களுக்கும் அறிவிப்பர். பூப்படைந்த பெண்ணை வீட்டிற்குள் வைத்திருப்பது தீட்டு என்று கருதி, வீட்டிற்கு வெளியே ஒரு குடில் அமைத்து அதனுள் பூப்படைந்த பெண்ணை இருத்திவிடுகின்றனர். குடில் அமைப்பதில் தாய்மாமன் பெரும்பங்கு வகிக்கின்றார். ஒரு பெண்ணுக்குத் தாய் மாமன் செய்ய வேண்டிய கடமைகள் இதிலிருந்து ஆரம்பிக்கின்றன.

மரக் கிளைகளைத் தூண்களாக நட்டு வாசலுக்கு மட்டும் இடைவெளி விட்டுத் தென்னை ஓலை, பனை ஓலை இவைகளில் ஏதேனும் ஒன்றினால் கூரை வேய்வர். குடிசை சுமார் ஏழு அடி உயரமும், பத்து அடி அகலமும் கொண்டிருக்கும். இக்குடில் இரண்டு அல்லது மூன்று பேர் படுக்கும் அளவிற்குச் சிறியதாய் இருக்கும்.

குடிசையின் உள்ளே சிறிது மேடை போலச் செய்து அதில் கோணிப்பையையோ அல்லது ஓலைப் பாயையோ விரித்து அதன் மேல் பூப்புற்ற பெண்ணை உட்கார வைப்பர். அறிவியல் பார்வையோடு இக்குடிசை கட்டித் தனியே இருக்கும் முறையை அணுகுவோமாயின் சுகாதாரமாக வாழ விரும்புதலையே அடிக்கருத்தாகக் கொண்டு இச்சடங்கு அமைகிறது எனக் கருதமுடிகிறது.

குடிசையின் வாசலில் ஒரு கொடுவாள் வைத்திருப்பர். அரிவாள் இரும்பானதால் அதனிடத்தில் தீய ஆவிகள் அணுகாது என்று நம்புகின்றனர். ஒரு தென்னந்துடைப்பத்தையும் ஒரு முறத்தையும் ஒரு செருப்பையும் வைத்திருப்பர். மருதாணி இலைக்கொத்து, புங்கன் இலைக்கொத்து இவற்றைப் பெண்ணைச் சுற்றி வைத்திருப்பர். இவை பகைவர்களிடமிருந்தும் காட்டு விலங்குகளிடமிருந்தும், தீய ஆவிகளிடமிருந்தும் பூப்புற்ற பெண்ணைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் வைக்கப்படுகின்றன.

விளவங்கோடு வட்டார மக்கள் ஒரு பெண் பூப்படைந்த நாள் முதல் தீட்டுக்கழியும் நாள் வரையிலும் பல கட்டுப்பாடுகளை விதித்திருக்கின்றனர். அக்கட்டுப்பாடுகளை அப்பெண்கள் சிறிதும் தவறாது பின்பற்றுகிறார்கள். இக்கட்டுப்பாடுகள் பெண்களின் ஆரோக்கியமான வாழ்க்கைக்கும், ஒழுக்கமான வாழ்க்கைக்கும் பயன்படுவதாக நம்புகின்றனர். உணவில் மட்டுமல்லாமல் பழக்கவழக்கங்களிலும் பல கட்டுப்பாடுகளை விளவங்கோடு வட்டார மக்கள் விதித்திருக்கின்றனர். பூப்புற்ற பெண் பூ, மஞ்சள், பொட்டு முதலியவற்றைத் தனியே குடிசையில் இருக்கும் பொழுது பயன்படுத்த அனுமதிப்பதில்லை. அவற்றை அணிந்தால் தீய ஆவியோ, காத்துக் கருப்போ தாக்கிவிடும் என நம்புகின்றனர்.

“மனித இன வரலாற்றில் பூப்புக் காலத்தில் வெளியேறிய இரத்தத்தைக் கண்டு அக்கால மக்கள் அச்சம் அடைந்தனர்.” 11 “தீட்டுக் கழிக்கும் சடங்கு முடியும் வரை பூப்படைந்த பெண்கள் ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள். அவர்கள் தொடும் பொருட்கள் அனைத்தும் பிறரால் தீண்டத்தகாததாகவும், தூய்மையினை இழந்ததாகவும் நம்பப்பட்டு வருகின்றது.”12 “இந்தத் தீட்டு என்பது துஷ்ட தேவதைகள் கருத்துடன் தொடர்புடையது என்பது மானிடவியலார் கருத்து”.13

விளவங்கோடு வட்டாரத்தில் வாழும் மலையாளிகளும் பூப்பெய்திய பெண்ணைத் தீட்டாகவே கருதுகின்றனர். ஆண்கள் யாரும் அப்பெண்ணின் முகத்தில் விழிப்பதும் இல்லை. பெண்களிலும் தாயார், சகோதாரிகள் போன்றவர்களைத் தவிர வேறு யாரும் பூப்புற்ற பெண் இருக்கும் குடிசைக்குச் செல்வது இல்லை.

அப்பெண்ணுக்குத் தனியாகச் சாப்பிடும் தட்டு போன்றவற்றை வைத்திருக்கின்றனர். பிறர் அந்தப் பாத்திரங்களை உபயோகிப்பது இல்லை. குடிசையில் இருக்கும் பொழுது அவர்கள் பயன்படுத்திய பாத்திரங்களைக் கூரையின் ஒரு பக்கமாக ஒதுக்கி வைத்துவிடுகின்றனர். அதனையே பின்வரும் மாதவிடாய் நாட்களிலும் பயன்படுத்துகின்றனர்.

கலந்தொடா மகளிர்

“பெண்கள் பூப்புற்றிருக்கும் காலங்களில் வீட்டுப் பண்டங்களைத் தொடாமல் ஒதுக்கி வாழ்ந்தமையால் அவர்கள் ‘கலந்தொடா மகளிர்“ எனப்பட்டனர்.” 14 “பூப்புக்காலப் பெண்கள் விளை நிலங்களுக்குச் சென்றால், விளை நிலத்திலுள்ள பயிர்கள் பலனற்றுப் போகும் என்றும், பயிர்களில் பூச்சி விழும் என்றும், தேனீக்கள் கூட இறந்து விடும் என்றும் மக்கள் நம்பியதாகப் பிளினி குறிப்பிடுகிறார்.” 15

பூப்புற்ற பெண்ணுடன் குடிசையில் அவளுக்குத் துணையாக அப்பெண்ணின் அக்காளோ தங்கையோ தங்குவது வழக்கம். அக்கா, தங்கை இல்லாத பெண்களுடன் பக்கத்து வீட்டுப் பெண்கள் வந்து துணையாகத் தங்கி இருப்பர். துணைக்கு இருக்கும் பெண்கள் வீட்டிற்கு வரவேண்டும் என்றால் அவர்கள் குளித்து உடை மாற்றிய பின்னரே வீட்டில் அனுமதிக்கப்படுகிறார்கள்.

விளவங்கோடு வட்டார மக்கள் பூப்புற்ற பெண்ணுக்கு உணவில் பல கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியுள்ளனர். பூப்படைந்த பெண்ணைப் பூப்படைந்த நாள் முதல் தீட்டுக் கழிக்கும் நாள் வரையிலும் மாமிச உணவு சாப்பிட அனுமதிப்பதில்லை. மரக்கறி வகைகளும், பழங்களும், முட்டையுமே சோறுடன் சாப்பிடக் கொடுக்கின்றனர். நல்ல சத்துள்ள உணவுப் பண்டங்களையும் உண்ணக் கொடுக்கின்றனர். இத்தகைய உணவுகள் அப்பெண்ணின் உடல் வளர்ச்சிக்குப் பொரிதும் துணைபுரிகின்றன. தீட்டு என்று பால், நெய் முதலியவற்றைப் பயன்படுத்துவதில்லை.

பெண், குடிசையின் அருகில் வெளியில் நின்று தினமும் குளிப்பாள். எண்ணெய் தேய்த்து, சோப்பு, சிகைக்காய்த்தூள் தேய்த்துக் குளிப்பாள். பூப்புற்ற பெண் தண்ணீர் வைத்திருக்கும் பாத்திரங்களைத் தொட அனுமதிப்பதில்லை. எனவே பூப்புற்ற பெண்ணின் தாயார் பாத்திரத்திலிருந்து தண்ணீர் எடுத்து அப்பெண்ணின் தலையில் ஊற்றுகின்றார். அப்பெண் குளித்து முடித்ததும் தன்னுடைய துணியைத் தானே துவைத்துக் குடிசையின் அருகிலேயே உலர வைப்பாள்.

விளவங்கோடு வட்டார மக்கள், பெண்கள் வயதுக்கு வந்ததும் பெற்றோர் தங்களது உறவினர்களுக்கு அறிவித்தாலும் அவர்கள் எல்லோரும் முதல் நாளிலேயே வருவது இல்லை. பூப்படைந்த பெண் குடிசையிலிருக்கும் நாட்களில், தங்களுக்கு வசதியான ஒரு நாளில் பலகாரங்கள் முதலியவற்றைச் செய்து கொண்டு வந்து பூப்படைந்த பெண்ணுக்குக் கொடுப்பர்.

விளவங்கோடு வட்டார மக்கள் ஏழு அல்லது ஒன்பது நாள் வரை பூப்புற்ற பெண்ணைக் குடிசையைவிட்டு வெளியேற அனுமதிப்பதில்லை. இரவிலும் பகலிலும் குடிசையிலேயே தங்க வைக்கப்படுகிறாள். விளவங்கோடு வட்டார மக்கள் குடிசையில் ஏழு அல்லது ஒன்பது நாட்கள் தங்க வைத்த பின்னர் அப்பெண்ணை அழைத்து வந்து மூன்று நாட்கள் வீட்டின் வெளித்திண்ணையில் உட்கார வைக்கின்றனர்.

விளவங்கோடு வட்டார மக்கள் முற்காலத்தில் பூப்புனித நீராட்டுவிழாவைத் திருமணத்தைப் போல விமாரிசையாகக் கொண்டாடினர். அழைப்பிதழ் அச்சடித்து, விருந்து பாரிமாறிப் பூப்படைந்த பெண்ணிற்குச் சேலை அல்லது தாவணி உடுத்தி விமாரிசையாகக் கொண்டாடினர். ஆனால் தற்காலத்தில் பூப்புற்ற பெண்ணின் தந்தை வழி, தாய் வழி நெருங்கிய உறவினர்களை மட்டுமே அழைத்துப் பூப்புச் சடங்கினைக் கொண்டாடுகின்றனர். அழைப்பிதழ் அச்சடிக்காமல் உறவினர் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று நீராட்டுச் சடங்கு எந்த நாள் என்பதைக் கூறி அழைக்கின்றனர். சிலர் கொண்டாடுவது இல்லை.

பூப்புனித நீராட்டு விழாவிற்குப் பூப்புற்ற பெண்ணின் தந்தைவழி, தாய் வழி உறவினர்களும், நண்பர்களும் வருவர். அவர்களில் நெருங்கிய உறவினர்கள் (தாய்மாமன் போன்றோர்) கம்மல், மூக்குத்தி, மோதிரம் போன்ற தங்கத்தாலான அணிகலன்களைப் பாரிசாக வழங்குகின்றனர். பிற உறவினர்களும் நண்பர்களும் கண்ணாடி, சீப்பு, ஆடை, பொட்டு முதலியவற்றைப் பூப்புற்ற பெண்ணுக்குப் பாரிசாக வழங்குகின்றனர்.

“வாழ்வியலில் சில நாட்கள் வரை ஒதுக்கி வைத்துப் பின்னர் நீராட்டிக் குடும்பத்தில் இணைத்துக் கொள்ளும் நிலை நடைமுறையில் நாகாரிகம் மற்றும் நாகாரிகமற்ற மக்களிடமும் காணப்படுகிறது. புனலாட்டும், மாற்றாடையும் தீட்டினை நீக்குவதற்குரிய அடையாளங்களாகக் கருதப்படுகிறது.”16 என்கிறார் காந்தி. விளவங்கோடு வட்டார மக்கள் பூப்புற்ற பெண்ணை மூன்று நாட்கள் வீட்டின் வெளித்திண்ணையில் உட்கார வைத்தபின் நான்காவது நாள் அவளுக்கு மஞ்சள் தேய்த்துக் குளிப்பாட்டுவர். இதனை ‘மாஞ்சா வைக்கிறது“ என்று கூறுகின்றனர்.

“மாதவிடாய் உண்டான பெண்களின் மேல் குறிப்பாகக் கன்னிப் பெண்களின் மேல் தீய ஆவிகள் விருப்பத்துடன் உறையுமென்று மக்கள் நம்புவதால் தீய ஆவியினின்று பெண்களை விடுவிக்கும் சடங்காகப் பூப்புச் சடங்கு அமைகிறது.”17 “தீட்டுக் கழிக்கும் விழா ஒரு பெண்ணிற்கு அவளது வாழ்க்கையின் தொடக்க விழாவாகும்.”18 விளவங்கோடு வட்டாரத்தில் வாழ்கின்ற மலையாளிகள் பசுவினைப் புனிதமாக, தெய்வமாக எண்ணுவதால் பூப்புற்ற பெண் வீட்டினுள் நுழையும் முன் வீட்டைப் பசுஞ்சாணத்தால் மெழுகி, பசு மூத்திரத்தைக் குடிசையின் எல்லாப் பகுதிகளிலும் தெளிக்கின்றனர். இவ்வாறு செய்வதனால் தீட்டு நீங்குவதாக நம்புகின்றனர். அதன் பின்பே பூப்புற்ற பெண் குளித்து, புத்தாடை அணிந்து வீட்டினுள் வருகின்றாள். வீட்டிற்குள் வரும் பூப்புற்ற பெண்ணை அனைவரும் வரவேற்கின்றனர். பெண் வீட்டிற்குள் வந்தபின் அவள் உபயோகித்த பாய், அவள் இருந்த குடிசை முதலியவற்றை எரித்து விடுகின்றனர். பூப்புனித நீராட்டு விழாவில் கலந்து கொண்ட உறவினர்களுக்குச் சிலர் மாமிச உணவையும், வேறு சிலர் காய்கறி உணவையும் பாரிமாறுகின்றனர். பெரும்பாலும் பிட்டு அவித்தே எல்லோருக்கும் கொடுக்கின்றனர்.

விளவங்கோடு வட்டாரத்தில் வாழும் மலையாளிகள் ஒவ்வொரு மாதமும் மாதவிடாய் நாட்களைத் தீட்டு நாட்களாகக் கருதி வெளியில் உட்கார வைத்து வந்தனர். ஆனால் இப்பொழுது அந்தப் பழக்கம் சிறிது சிறிதாக மாறி வருகின்றது. பூப்படைந்த பெண்களை முதல் மூன்று மாதங்கள் வரை மாதவிடாய் நாட்களில் வெளியில் திண்ணையில் உட்கார வைத்து விடுகின்றனர். பின்வரும் மாதங்களில் சில பெண்கள் குளித்துவிட்டு வீட்டிற்குள் வந்து விடுகின்றனர். என்றாலும் பெரும்பாலான பெண்கள் வீட்டிற்கு வெளியில் திண்ணையில் உட்கார்ந்திருக்கின்றனர். ஒரு பெண் பூப்புற்றதிலிருந்து மூன்று மாதங்கள் தலையில் பூ வைக்க அனுமதிக்கப்படுவதில்லை. “மாத விலக்கான பெண் பூ வைக்கக் கூடாது.” 19 சிவப்பு நிறத்திற்கு மதிப்பளித்தலும், சிவப்பு நீரை வாரி இறைத்தலும், மாதுளம் பழத்தின் சிவப்பும் வளமையை-செழிப்பைக் கொடுக்கும் பூப்பெய்திய குருதியின் குறியீடுகளாகும்.

“பூப்பெய்திய குருதிக்கு மாற்றாக வளமையின்

குறியீடாகச் சிவப்பு உள்ளது.” 20

என மிகத் தெளிவாகக் கூறுவது இக்கருத்தை மேலும் வலிவும் பொலிவும் பெறச் செய்கிறது.

ஊரெல்லாம் கோயிலாக-நாடெல்லாம் கோயிலாகத் திகழும் தமிழகத்தில் பெண் தெய்வ உருவங்கட்குச் சிவப்பு நிற ஆடைகளை அணிவிக்கின்றனர். இச்சிவப்பு நிற ஆடையும் வளமையைக் குறிக்கும் அடிப்படையைக் கொண்டதாகும். "பூப்பெய்துதல் பெண்ணின் வளமையைக் குறிக்கிறது". 21

பூப்புனித நீராட்டு விழா என்பது பூப்படைந்த பெண்ணைப் புனிதமாக்கும் விழா எனப்படும். பருவ வயதை அடைந்த ஒரு சிறுமி பால் முதிர்ச்சி அடைந்து கன்னிப்பெண்ணாக அதாவது குமாரியாக மாறும் பருவ மாற்றம் ஆகும். பெண், தாய்மை அடையக்கூடிய பருவத்தை எட்டி விட்டாள் என்பதற்கு அடையாளமாக மாதவிடாய் வெளியாகிறது. முதல் கரு உற்பத்தியாகிறதை வெளிப்படுத்தும் விதமாக உதிரம் வெளியேறுகிறது. அதனால் சில சடங்குகளைக் கடைப்பிடிக்கின்றனர். சடங்குகள் செய்வதன்மூலம் பருவமடைந்த பெண்ணிற்கு ஆசூசம், கண்ணூறு, தோஷ நிவிர்த்தி, மாங்கல்ய பாக்கியம், சந்தான விருத்தி ஆகியவை கிடைக்கப்பெறும் என்பது இந்து மதத்தினாரின் நம்பிக்கை ஆகும்.

முதல் முதலில் உதிரம் ஏற்பட்ட உடனே சடங்குகள் செய்யப்படுகின்றன. பூப்புச் சடங்குகள் இடம், சமூகம், வசதி, இனம், சாதி போன்றவற்றுக்கு ஏற்ப மாறுபடுகின்றன.

பூப்படைந்த பெண்ணை நீராட்டல்

விளவங்கோடு வட்டாரத்தில் நீராட்டல் என்னும் நிகழ்வினைத் 'தண்ணி ஊற்றல்" என்று கூறுவார்கள். ஒரு சிலர் முதல் முதலில் பூப்படைந்த பெண்ணிற்கு மஞ்சள் கலந்த நீரை ஊற்றுகின்றனர். பண்டைக்காலத்தில் ஒவ்வொரு வீடுகளிலும் குளியல் அறை காணப்படுவதில்லை. அதனால் கிணற்றடியில் சருகுகளின்மேல் இருத்தி நீராட்டுவார்கள். கிணற்றடி பொது இடம் என்பதால் பெண்ணுறுப்பில் இருந்து வெளிப்படும் தீட்டு பிறர் கண்ணில் படக்கூடாது என்பதற்காகச் சருகுகளின் மேல் இருத்தி நீராட்டுவார்கள். இதனை 'முதல் தண்ணி" என்பர்.

தற்காலத்தில் அனைத்து வீடுகளிலும் வீட்டினுள் அல்லது வீட்டின் அருகில் குளியல் அறை வைத்திருப்பார்கள். அதனால் குளியல் அறையில் இருத்தி நீராட்டுகிறார்கள். பின்னர் ஆடவாரின் முகத்தைப் பார்க்காமல் இருப்பதற்காகத் தனியறையில் உட்கார வைக்கின்றார்கள். கன்னிப்பெண் பருவமடைந்த காலத்தில் உதிரப்போக்கு ஏற்படுவதால் பேய், பிசாசுகள் பிடிக்கும் என்ற அச்ச உணர்வால்

வேப்பிலை, மற்றும் இரும்பு ஆயுதங்களைப் பூப்படைந்த பெண்ணின் அருகில் வைத்திருப்பர்.

இந்து சமயத்தினாரின் பூப்புச் சடங்கு

கன்னியாகுமாரி மாவட்டத்தில் விளவங்கோடு வட்டத்தில் வாழும் இந்து மதம் சார்ந்த மக்களின் இல்லங்களில் நடைபெறும் பூப்புச் சடங்கினைப் பார்ப்பதற்குமுன் இந்துமதம் என்பதற்கு ஒரு வரையறையை வகுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. சிறு தெய்வ வழிபாடு - குறிப்பாகச் சுடலைமாடன் வழிபாடு, முத்தாரம்மன் வழிபாடு, இசக்கி வழிபாடு, பத்திரகாளியம்மன் வழிபாடு முதலான வழிபாடுகளும், பெருந்தெய்வ வழிபாடு- குறிப்பாகச் சைவ, வைணவச் சார்பான வழிபாடு ஆகியவை இந்த இந்து சமய வரையறைக்குள் அடங்கும்.

மாற்றுமுறை

ஒரு பெண் பூப்படைந்து விட்டாள் என்பதை அறிந்ததும் முதலில் அந்தப் பெண்ணைத் தனிமைப்படுத்துகின்றனர். அவ்வாறு தனிமைப்படுத்தும் போது துணை தேவை என்பதற்காக ஒத்த வயதுடைய பெண்களை அருகில் அமர வைக்கின்றனர். குருதிக் கறைபடிந்த ஆடைகளை அகற்றி மாற்று ஆடை அணிவிக்கின்றனர். அவ்வாறு மாற்று ஆடை அணிவிக்கும்போது இருபது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்புவரை அந்த மாற்று ஆடையானது பாவாடை, தாவணியாகவே இருந்துள்ளது. தற்காலத்தில் அது சுடிதார் என்னும் நிலையைப் பெற்றுள்ளது.

பூப்படைந்த பெண்ணிற்கு மூன்றாம் நாளில் மாற்றுமுறை என்னும் சடங்கு நடைபெறுகிறது. இந்தச் சடங்கு நடைபெறும்போது நெருங்கிய உறவினர்கள் அழைக்கப்படுகின்றனர். பெரும்பாலும் நண்பகல் வேளையில் இந்தச் சடங்கு நடைபெறுகிறது. அழைக்கப்பட்ட உறவினாரின் எண்ணிக்கைக்கு ஏற்ப வீட்டின் முன்பகுதியில் பந்தல் போடப்படுகிறது. தென்னங்கீற்றினால் போடப்பட்ட இந்தப் பந்தலுக்குப் பதிலாக, தற்காலத்தில் துணிப்பந்தல் (சாமியானா) போடப்படுகிறது. பூப்படைந்த பெண்ணுடைய தாயின் சகோதரர்கள் என்னும் உறவுமுறையில் உள்ளவர்கள் சேலை முதலான ஆடைகளுடன் தங்க நகைகளும் அரிசி முதலான தானியங்களுடன் மளிகைப் பொருட்களும் கொண்டு வருகின்றனர். பூப்படைந்த பெண்ணை வீட்டிற்குப் பின்பக்கத்தில் உள்ள ‘வளவு“ என்னும் குளியலைறைக்கு அழைத்துச் சென்று வேப்பிலையும் மஞ்சளும் கலந்த நீரில் குளிப்பாட்டுகின்றனர். தற்காலத்தில் வளவுக்குப் பதிலாகக் குளியலறை பயன்படுத்தப்படுகிறது.

தாயின் நேரடிச் சகோதரர்களில் மூத்த சகோதரன் கொண்டு வந்த சேலையைப் பூப்படைந்த பெண்ணிற்குக் கட்டுகின்றனர். அதன்பிறகு ஒரு பெண்ணிற்குச் செய்ய வேண்டிய அலங்காரங்கள் அனைத்தையும் செய்கின்றனர். வீட்டிற்கு முன்னால் போடப்பட்ட பந்தலில் இரண்டு பெஞ்சு போடப்படுகிறது. அந்த இரண்டு பெஞ்சுகளில் ஒன்று கிழக்கு முகமாகவும் இன்னொன்று மேற்கு முகமாகவும் போடப்படுகிறது. கிழக்கு முகமாகப் போடப்பட்ட பெஞ்சில் வெள்ளை வேட்டி அல்லது வேறுவகையான துணி விரிக்கப்படுகிறது. இந்தத் துணி, துணி வெளுக்கும் சமுதாயத்தினரால் கொண்டு வரப்படுகிறது. மேற்கு முகமாகப் போடப்பட்ட பெஞ்சில் வாழையிலை அதில் சாணிப் பிள்ளையார், நிறைநாழி நெல், அரிசி, கைவிளக்கு, பூ முதலானவை வைக்கப்படுகின்றன. அந்த ஊருக்கென்று முடி வெட்டும் பணியைச் செய்யக்கூடிய குடிமகன் என்னும் பொறுப்புடையவர் இந்த மாற்றுமுறைச் சடங்கினை செய்விக்கிறார். சிலர் கிராமத்துப் பூசாரியைக் கொண்டும் இந்தச் சடங்கினைச் செய்வதுண்டு. தற்காலத்தில் பிராமணர்களை வரவழைத்துச் செய்பவர்களும் உண்டு.

பூப்படைந்த பெண்ணை அண்ணி உறவின் முறையில் உள்ளவர் அல்லது மாமி உறவின் முறையில் உள்ளவர் அழைத்துக் கொண்டு வந்து கிழக்கு முகமாகப் போடப்பட்ட பெஞ்சில் அமர வைப்பர். அவ்வாறு அமரும்போது இன்னொரு பெஞ்சிலிருக்கும் நெல் முதலான தானியங்களைத் தொட்டு வணங்குவாள். அந்தப் பெண்ணின் உறவினர்கள் அவளுக்கு நெற்றியில் பொட்டு வைத்துக் கன்னத்தில் சந்தனம் பூசுவர். அவளது உறவினர் பாரிசுப் பொருட்களையும் வழங்குவார்கள். நிறைவாக நெற்றியில் திருநீறு பூசப்படும். அதன் பின்னர் அந்தப் பெண் வீட்டிற்குள் அழைத்துச் செல்லப்படுவாள். அவ்வாறு அழைத்துச் செல்லப்படும்போது வாசலுக்கு முன்பாக உலக்கையும் கொள்ளிக்கட்டையும் போடப்பட்டிருக்கும். அவற்றைத் தாண்டி அவள் வீட்டிற்குள் செல்வாள். வந்திருந்த விருந்தினர்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும்.

பூப்புனித நீராட்டு விழா

ஒரு பெண் பூப்படைந்து நாற்பத்தொரு நாள் கழிந்ததும் பூப்புனித நீராட்டு விழா என்னும் சடங்கு நடைபெறும். இதனைச் சடங்கு கழித்தல் என்றே பேச்சு வழக்கில் குறிப்பிடுகின்றனர். இதற்கென அழைப்பிதழ் அடித்தால் மட்டுமே பூப்புனித நீராட்டு விழா என்று அச்சடிப்பது வழக்கம். அவ்வாறு அழைப்பிதழ் அச்சடிக்கவில்லை என்றால் சடங்கு கழிக்கிறோம் என்று வெற்றிலை பாக்குக் கொண்டு உறவினர்களை அழைப்பார்கள். மாற்றுமுறையிலும் சடங்குகழித்தலிலும் ஒரே மாதிரியான சடங்குகளே

நிகழ்த்தப் பெறும். பூப்புனித நீராட்டு விழாவின் போது அதே சடங்குகளை விரிவாகவும் கோலாகலமாகவும் நடத்துவர். சடங்கு கழித்தல் நிகழும்போது ஒலிபெருக்கி, மேளக்கச்சேரி முதலியவை ஏற்பாடு செய்யப்படும். பூப்படைந்த பெண்ணை அமரச்செய்யும் இடத்தில் மணவறைக்கு இணையான அலங்கார மேடை அமைக்கப்படும். இந்த விழாவிற்கு உறவினர்கள் மட்டுமல்லாமல் நண்பர்களும் அழைக்கப்படுவதுண்டு.

தற்காலத்தில் பூப்புனித நீராட்டு விழா நடத்தும்போது குறிப்பாக, பிராமணர்களை வைத்து நடத்தினால் ஓமம் நெருப்பு மந்திரங்களைப் பயன்படுத்தி நடத்துவதும் உண்டு. பொதுவாக இப்படிப்பட்ட சடங்கை நடத்துவதற்காக விளவங்கோடு வட்டாரத்தில் இருக்கும் அந்தந்தச் சாதி சார்ந்தவர்களை அழைத்து நடத்துவது வழக்கம். இந்தப் பூப்புனித விழா நண்பகல் வேளையில் அல்லது முன்னிரவு நேரத்தில் நடத்தப்படும்.

கிறித்தவச் சமயத்தினாரின் பூப்புச் சடங்கு

விளவங்கோடு வட்டாரத்தில் வாழும் கிறித்தவர்கள் ஒரு பெண் பூப்படைந்து விட்டால் பொரிய அளவில் கொண்டாடுவதில்லை. ஒரு சிலர் மட்டுமே கொண்டாடுகின்றனர். பூப்புச் சடங்கு கிறித்தவ சமயம் சார்ந்த சடங்காகக் காணப்படுவதில்லை. சமுதாயச் சடங்காகக் காணப்படுகிறது.

ரோமன் கத்தோலிக்கக் கிறித்தவாரின் பூப்புச் சடங்கு

ரோமன் கத்தோலிக்கக் கிறித்தவர்கள் பூப்பெய்தலைப் பொரிய சடங்காகக் கொள்வதில்லை. பூப்பெய்தல் சடங்கினை வீட்டினுள் வைத்தே நடத்துவார்கள். பூப்பெய்தல் மதம் சார்ந்த நிகழ்வாக இல்லை. இனம் சார்ந்த நிகழ்வாகக் காணப்படுகிறது. ஒரு பெண் பூப்படைந்தவுடன் தனியாக உட்காரவைக்கப்படுகிறாள். பின்னர்த் துணி வெளுக்கக்கூடிய இனத்தைச் சார்ந்த வண்ணான் அந்தப் பெண்ணிற்கு மாற்று வஸ்திரம் கொடுப்பார். தள்ளி என்று சொல்லக்கூடிய உதிரம் நிற்கிற நாள் வரை வண்ணான் கொடுக்கிற ஆடையையே அந்தப் பெண் அணிகின்றாள். பின்னர்த் தீட்டு முடிந்த பிறகு காவிதி இனத்தில் உள்ள பெண்கள் பூப்படைந்த பெண்ணைக் குளிப்பாட்டுவார்கள். கிழக்குப் பக்கமாகப் பார்த்து உட்கார வைத்துக் குளிப்பாட்டுகின்றனர். அரிசி, காய்கறி, தேங்காய் போன்ற பொருட்களைக் குளிப்பாட்டிய காவிதிக்குக் கொடுக்கின்றனர். போதகரை அழைத்துச் செபம் செய்வதில்லை. என்னுடைய குழந்தை பூப்பெய்துவிட்டாள். அவள் திருமணத்திற்குத் தயாராகிவிட்டாள் என்பதை மற்றவர்களுக்குத் தொரிய வைப்பதற்காக ஒரு சிலர்

விழாவாகக் கொண்டாடுகின்றனர். உறவினர் பூப்படைந்த பெண்ணிற்குச் செய்ய வேண்டிய தண்ணீர் ஊற்றுதல் போன்ற கடமைகளைச் செய்வார்கள். உறவினர்கள் மற்றும் அண்டை வீட்டாரை அழைத்து விருந்து அளிக்கப்படுகிறது. விருந்து அசைவ உணவாகவே காணப்படுகிறது. உறவினர்களுக்கு மட்டுமே தொரியப்படுத்துவார்களே தவிர மற்ற யாருக்கும் தொரியப்படுத்துவதில்லை. பூப்புச் சடங்கு சமூகச் சடங்காக நடக்கிறதே தவிர சமயச் சடங்காகக் காணப்படுவதில்லை.

சீர்திருத்தக் கிறித்தவாரின் பூப்புச் சடங்கு

விளவங்கோடு வட்டாரச் சீர்திருத்தக் கிறித்தவ மதத்தைச் சேர்ந்த ஒரு பெண் பூப்படைந்து விட்டால் உடனடியாக அந்தப் பெண்ணை வீட்டினுள் வைத்தே குளிப்பாட்டுகின்றனர். அந்தக் கால வீடுகளில் வீட்டினுள் குளியல் அறை அமைப்பதில்லை. வீட்டின் வெளியே கொல்லையில்தான் கழிவறை அமைத்திருப்பார்கள். அதனால் வீட்டில் ஒருபகுதியில் வைத்தே குளிப்பாட்டுகின்றனர். பூப்படைவதை முதலில் பெண்ணின் தாய் பார்க்கக்கூடாது. உறவு முறையில் உள்ள பெண்கள்தான் முதலில் தலையில் தண்ணீர் ஊற்றுகின்றனர். ஒரு சிலர் மஞ்சள் தண்ணீர் ஊற்றுகின்றனர். அண்மைக் காலத்தில் ஒரு பெண் பூப்படைந்துவிட்டால் பதினைந்து நாட்கள் வெளியில் செல்ல மாட்டாள். பின்னர் முதன் முதலாக ஆலயத்திற்குச் செல்வாள். பூப்படைந்தவுடன் அரிசி மாவும் பனைவெல்லமும் கலந்து அனைவருக்கும் கொடுக்கும் பழக்கம் விளவங்கோடு வட்டாரச் சீர்திருத்தக் கிறித்தவ மக்களிடம் இருந்து வந்தது. அதுமட்டுமல்லாமல் ஏத்தன் பழத்தைத் (நேந்திரம் பழம்) துண்டு துண்டாக வெட்டிச் சீனியும் போட்டு அனைவருக்கும் கொடுப்பர். பூப்படைந்த பெண்ணிற்கு முட்டையில் நல்லெண்ணெய் ஊற்றிக் கொடுப்பார்கள். பூப்படைந்த பெண்ணிற்கு இறைச்சி, மீன் போன்ற உணவுப்பொருட்களைக் கொடுப்பதில்லை. பூப்படைந்த பெண்ணைப் பார்க்க வரும் உறவினர்கள் முட்டை வாங்கிக் கொண்டுவரும் பழக்கம் விளவங்கோடு வட்டாரச் சீர்திருத்தக் கிறித்தவர்களிடம் காணப்படுகிறது.

அழைப்பிதழ்

விளவங்கோடு சீர்திருத்தக் கிறித்தவர்கள் பெண் பூப்படைவதை விழாவாகக் கொண்டாடுகின்றனர். இதனைப் பூப்புனித நீராட்டு விழா என்று அழைக்கின்றனர். அழைப்பிதழ் அச்சடிக்கப்பட்டு உறவினர்கள், சுற்றத்தார் அனைவருக்கும் கொடுத்துத் திருமணம் போன்ற விழாவாகக் கொண்டாடுகின்றனர். பூப்புனித விழா அன்று பூப்படைந்த பெண் புதிய தாவணி அல்லது சேலை உடுத்தி அலங்காரம்

செய்யப்பட்டு மணப்பெண் போன்ற பொலிவுடன் காணப்படுவாள். இரு கைகளிலும் வளையல்கள் அணிந்து நெற்றியில் நெற்றிச் சுட்டி வைத்துத் தலையில் மல்லிகைப் பூச்சூடி மிகுந்த பொலிவுடன் காணப்படுவாள். போதகர் செபம் செய்து ஆசீர்வதிப்பார். உறவினர் சுற்றத்தார் பெண்ணை வாழ்த்திப் பாரிசுப் பொருட்களை அளிக்கின்றனர். பாரிசுப் பொருட்களில் அதிக அளவு தாவணி, சேலை போன்ற ஆடையே காணப்படுகிறது. பின்னர் விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் விருந்து பாரிமாறப்படுகிறது.

இஸ்லாமியாரின் பூப்புச் சடங்கு

"பெண் பருவமெய்தினால் அச்செய்தியை விளம்பரப்படுத்திக் கூட்டத்தைக் கூட்டுவதை அண்ணல் நபி அவர்கள் தடை செய்துள்ளார்."22 விளவங்கோடு வட்டத்தில் வாழும் இஸ்லாமியர்கள் பூப்புச் சடங்கைக் கடைப்பிடிப்பதில்லை. இஸ்லாமியச் சட்டப்படி பூப்புச் சடங்கு என்ற ஒன்று கிடையாது. என்றாலும் இந்து, கிறித்தவம் போன்ற பிற மதத்தினருடன் இணைந்து வாழ்வதால் அவர்களைப் பார்த்து ஒரு சில சடங்குகளைக் கடைப்பிடிக்கின்றனர். இஸ்லாம் மதத்தைச் சார்ந்த ஒரு பெண் பூப்படைந்துவிட்டால் உடனடியாக உறவின் முறையில் உள்ள ஒன்று இரண்டு பேர் வந்து தண்ணீர் ஊற்றுவார்கள். பதினோரு நாட்கள் பூப்படைந்த பெண் வீட்டிற்கு வெளியே செல்ல மாட்டாள். உதிரம் வெளியே செல்வதால் அந்தப் பெண்ணிற்குப் பலம் இருக்காது. ஆகவே சத்தான உணவுப்பொருட்களைப் பூப்படைந்த பெண்ணிற்குக் கொடுக்கின்றனர். பாதாம், பிஸ்தா, போ£ச்சம்பழம், உலர்ந்த போ£ச்சம் பழம், காய்ந்த தேங்காய், பால், நாட்டு முட்டை போன்ற பொருட்களை உண்ணக் கொடுக்கின்றனர். பெண் தீட்டானவள் என்று கருதித் தனியே ஒதுக்கி வைக்க மாட்டார்கள். பதினொன்றாவது நாள் உறவினர்களை அழைத்து விருந்து பாரிமாறுவார்கள். உறவினர்கள் தங்கச் சங்கிலி, மோதிரம், ஆடை போன்ற பாரிசுகளைக் கொடுப்பார்கள். பூப்படைந்த பெண்ணிற்குப் புதுப் பட்டாடை அணிவிக்கின்றனர். பூப்படைந்த பெண்ணின் இரு கைகளிலும் வளையல் அணிந்து மல்லிகைப் பூச்சூடி அமர வைத்து உறவினர்கள் கன்னத்தில் மஞ்சள் தடவிக் காசு சுற்றி அந்தப் பெண்ணின் முன் இருக்கின்ற தட்டில் போடுவார்கள்.

"பெண்கள் பூப்படைந்ததும் தலைக்குத் தண்ணீர் விடல் என்ற சடங்கைச் செய்கின்றனர். பூப்படைந்த ஐந்தாம், ஏழாம் நாளன்று உறவினர்களை அழைத்துப் பெண்ணைக் குளிக்க வைத்து அலங்காரம் செய்து புத்தாடை அணிவிக்கின்றனர்."23

பெண்களின் மாதவிடாய்க்கு ஹைள் என்று பெயர். இந்த மாதாந்திர உதிரப் போக்கு பெண்களுக்கு அவர்களின் 55 ஆம் வயதில் நின்று விடும் என்பதாக இமாம்கள் நிர்ணயித்துள்ளனர். சிலருக்கு 60 வயது வரை மாத விடாய் ஏற்படும் என்பதாகவும் கூறப்படுகிறது. "ஹைளு காலத்தில் பெண்கள் தொழுவதோ, நோன்பு நோற்பதோ, குர் ஆன் ஓதுவதோ, உடலுறவு கொள்வதோ கூடாது." 24 மாதவிடாய் நேரத்திலும் பெண்கள் தொழுகை அறையில் செல்லலாம். ஆனால் இஸ்லாமியாரின் புனித நூலான திருக்குரானைத் தொடுவதில்லை.

தீட்டுக் கழித்தல்

தீட்டுக் குறித்ததான நம்பிக்கையும் குமாரி மாவட்ட இசுலாமிய மக்களிடையே நிலவுகிறது. மாத விலக்கான நாட்களில் தீட்டு, தமிழர் வாழ்வில் சங்ககாலம் முதல் தொடர்ந்து வருகிறது. இதே காரணத்தினால்தான் பெண் அனைத்துச் சமயங்களிலும் வழிபாட்டினை முன்னெடுத்துச் செல்லும் தகுதி கொண்டவளாகக் கருதப்படுவதில்லை. மாதவிலக்கான நாட்களில் வழிபாடு தொடர்பான எதையும் செய்யும் உரிமை இசுலாமியப் பெண்களுக்கு மறுக்கப்படுகிறது. தொழக்கூடாது பள்ளி, தர்கா போகக் கூடாது என்னும் கட்டுப்பாடு இசுலாமியச் சமூகத்தில் இன்றும் உள்ளது. ஏழு நாட்கள் தீட்டுக் காலமாகக் கருதப்படுகிறது. 7ஆம் நாள் நகத்தை வெட்டி நிய்யத் சொல்லிக் குளிக்க வேண்டும்.

மாதவிலக்கான பெண்கள், பூக்கும் செடிகளுக்கு அருகில் செல்லக் கூடாது. ஏனென்றால் மாதவிலக்கின்போது பெண் கருவேற்கும் தகுதியை இழக்கிறாள். பூக்கும் செடி கருவேற்றால்தான் அதிக பலனைத் தரும். மாதவிலக்கான பெண் பூக்கும்செடிப் பக்கம் சென்றுவிட்டால் செடிக்குத் தீட்டு உண்டாகும். நாகாரிகமான இக்காலகட்டத்தில் குமாரி மாவட்ட விளவங்கோடு வட்டார இசுலாமிய மக்கள் தீட்டான பெண்ணைத் தனிமைப் படுத்துவதில்லை.

பருவமடைதல் பற்றிய நம்பிக்கைகள்

திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் பூப்படைந்தால் நல்லது. செவ்வாய்க்கிழமை பருவமடைந்தால் நல்ல கணவன் கிடைக்க மாட்டான். ஞாயிற்றுக்கிழமை பூப்படைந்தால் குழந்தைப்பேறு கிட்டாது. சித்திரை மாதம் பருவமடைந்தால் கணவனுக்கு நல்லதல்ல. வைகாசி மாதம் பருவமடைந்தால் செல்வம் செழிக்கும். ஆனிமாதம் பருவமடைந்தால் பொருட்சேதம் உண்டாகும். ஆடிமாதம் பருவமடைந்தால் பொருள் சேரும். ஆவணி மாதம் பருவமடைந்தால் வாயாடியாக இருப்பாள். புரட்டாசி மாதம் பருவமடைந்தால் பொருட்சேதம் உண்டாகும்.

ஐப்பசி மாதம் பருவமடைந்தால் பிள்ளைகுட்டி நிறைய பெறுவாள். கார்த்திகை மாதம் பருவமடைந்தால் புண்ணியவதியாக இருப்பாள். மார்கழி மாதம் பருவமடைந்தால் பதிபக்தியுள்ளவளாக இருப்பாள். தை மாதம் பருவம் அடைந்தால் செல்வம் செழிக்கும். மாசி மாதம் பருவம் அடைந்தால் கர்ப்பத்தை அழித்திடுவாள். பங்குனி மாதம் பருவமடைந்தால் பதிவிரதையாக இருப்பாள்.

குழந்தை பிறக்கும்போது எழுதப்பட்ட சாதகத்தைவிட ஒரு பெண் பூப்படைந்த நேரத்தை வைத்துக் கணிக்கப்பெறும் சாதகம் சிறந்ததாகும்.

இயல் தொகுப்பு

பூத்தல் என்பது இயல்பாக நிகழும் ஒரு நிகழ்வாகும். தொல்காப்பியர் ஓரறிவு உயிராகக் குறிப்பிட்டுள்ள தாவரங்களில் நிகழும் பூத்தல் என்னும் நிகழ்வானது இனவிருத்தி சார்ந்த ஒன்றாக விளங்கினாலும் அது ஒரு சிறப்பு நிலையாக அறியப்படுவதில்லை. விலங்குகளும் பறவைகளும் கருவுறும் காலம் அடைவதும் கருவுறுதலும் இயல்பாக நிகழும் நிகழ்வாகவே அமைந்துள்ளன. மனித சமுதாயத்தில் ஒரு பெண் பூப்படையும் நிகழ்வானது பொரிதும் போற்றப்படும் நிகழ்வாக விளங்குகிறது. மனிதன் தனது மனித இனத்தை மேலும் விரிவடையச் செய்யும் எண்ணம் கொண்டு செயல்படுகிறான். அந்த எண்ணத்தின் காரணமாக ஒரு பெண் பூப்படைந்த நிகழ்வை அனைவருக்கும் அறிவித்து அதனைச் சடங்காக நிகழ்த்துகிறான். இந்தச் சடங்குமுறையானது கன்னியாகுமாரி மாவட்டத்தின் விளவங்கோடு வட்டத்தில் மாற்றுமுறை என்னும் சடங்காகத் தொடங்குகிறது. இந்தச் சடங்கினைத் தொடர்ந்து பெண் பூப்படைந்த நாற்பத்தோராம் நாளுக்குப் பிறகு அவர்கள் சார்ந்த மதத்தின் அடிப்படையில் சடங்கினை நிகழ்த்துகிறார்கள். பெண்கள் இணைந்து நடத்தும் நிகழ்வான இந்தச் சடங்கு முறையானது சமய நிறுவனத்திற்குட்பட்ட பிறகு அவர்கள் சார்ந்த மதக் குருக்களால் நிகழ்த்தப்படும் சடங்காக தற்காலத்தில் விளவங்கோடு வட்டத்தில் விளங்குகிறது.

சான்றெண் விளக்கம்

1. டாக்டர் மா. கோதண்டராமன், நாட்டுப்புறவியலும் பண்பாடும் : ப. 162
2. தகவலாளி
3. தகவலாளி
4. தே. லூர்து (ப-ர்) நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள் : ப.184
5. தே. லூர்து (ப-ர்), மு.நூ. : ப.184

6. க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் : ப. 89

7. தே.லூர்து (ப-ர்), மு.நூ. : ப.184

8. சோமலே (பு.பெ.), தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும் : ப. 100

9. ஆறு. இராமநாதன், நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல் : ப.195

10. ஆறு. இராமநாதன், நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல்: ப.195

11. து.பு. குசயணநச, வுாந புழடனநெ டீழரபா, ஏழட. ஐ, ியசவ ஏஜஜ : ீ.76.

12. க. காந்தி, மு.நூ. : ப. 89

13. தே. லூர்து (ப-ர்) மு.நூ : ப. 184

14. க. காந்தி, மு.நூ. : ப. 89

15. து.பு. குசயணநச, வுாந புழடனநெ டீழரபா, ஏழட. ஐ, ியசவ ஏஜஜ : ீ. 96.

16. க. காந்தி, மு.நூ. : ப. 91

17. தே. ஞானசேகரன், மக்கள் வாழ்வில் மந்திரச் சடங்குகள் : ப. 21

18. தே. லூர்து (ப-ர்)., மு.நூ. : ப. 184

19. சு. சண்முகசுந்தரம், நாட்டுப்புறவியல் : ப. 157

20. ஐடினை : ீ. 9

21. தே. லூர்து, நாட்டார் வழக்காற்றியல் : ப. 193

22. பாண்டிச்சோரி எஸ். முஹம்மது பஷீர், இஸ்லாத்தில் கணவன் மனைவி கடமைகளும் குழந்தை வளர்ப்பும் : ப. 17

23. பே. சாந்தி, மேலப்பாளையம் முஸ்லீம்கள் : ப. 27

24. பாண்டிச்சோரி எஸ். முஹம்மது பஷீர், இஸ்லாத்தில் கணவன் மனைவி கடமைகளும் குழந்தை வளர்ப்பும் : ப. 11

இயல் - 6

திருமணச் சடங்கு

“திரு - என்னும் சொல் அழகு, செல்வம், செம்மை, சிறப்பு முதலிய பொருட்களைத் தரும். கண்டோரால் விரும்பப்பெறும் தன்மை விளங்கும் இடமெல்லாம் திருவும் பொலிகின்றது“ என்பதால் அத்தகைய அழகு, செல்வம், செம்மை, சிறப்பு மணமக்களிடையே சேர வேண்டும் என்பதால் ‘திருமணம்“ என்ற சொல்லைப் பண்டை நாளிலிருந்தே இன்று வரை கையாண்டு வருகின்றார்கள் எனலாம்.”1

பண்டைத் தமிழர் திருமணத்தை ‘வதுவை“, ‘மன்றல்“, ‘மணம்“, ‘வரைவு“, ‘கரணம்“ என்ற சொற்களால் குறித்தனர். தொல்காப்பியம் குறிப்பிடும் “மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள்” என்பது எண்வகை மணத்தைச் சுட்டுவதாகக் கருதப்படுகிறது. பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தர்வம், அசுரம், இராட்சசம், பைசாசம் முதலியன எண்வகை மணங்களாகும். இதில் காந்தர்வம் மட்டும் அன்பின் ஐந்திணையில் வரும். மற்றவை கைக்கிளை, பெருந்திணையின் பாற்படும்.

“மணமென்பது மனமொத்தலாகும். வாழ்வு முழுவதும் மணம் பெற்றுத் திகழ்வதற்கு ஏதுவான இந்நிகழ்ச்சியை மணம் என்று பெயாரிட்டமை ஏற்புடையதாகும்.”2 குடும்பத்தில் நடைபெறும் சடங்குகளில் சிறப்பாகக் கருதப்படுவது திருமணச் சடங்கு ஆகும். திருமணம் மதத்துடன் தொடர்புடைய ஒன்றாகவே கருதப்படுகிறது. “பதினெட்டாம் நூற்றாண்டு வரை அநேகமாக ஐரோப்பாவில் அனைத்து நாடுகளிலும் திருமணம் என்பது தெளிவான ஒரு மத விஷயமாகவே இருந்து வந்தது. திருமணம் ஒரு முக்கிய மதச் சடங்காகவே உலக மதங்களில் இருக்கிறது.” 3 “திருமணம் என்பது ஓர் ஆடவனும் ஒரு பெண்ணும் இணைந்து வாழ்வதற்காகச் சமுதாயத்தால் ஏற்படுத்தப்பட்ட வினை முறையாகும்.” 4 “திராவிட ஆரியப் பண்பாட்டுக் கலப்பினால் நம் தமிழ்க் கோயில்களில் சமஸ்கிருத ஸ்லோகங்கள் ஒலிப்பதும், தமிழ்த் திருமணங்களில் புரியாத மொழியில் மந்திரங்கள் ஓதப்படுவதும் கடந்த பல நூறு ஆண்டுகளாகத் தமிழகத்தில் நடைபெற்று வரும் பண்பாட்டுச் சீரழிவாகும்,” 5 என்பன திருமணம் தொடர்பான செய்திகளை வழங்குகின்றன.

“மணமகன் மணமகளின் கழுத்தில் மங்கல நாணைப் பொருத்துவதற்கு முன்னால் மணமகளின் தாய்மாமன் தன் மருமகளுக்குப் பாரிசு கொடுக்கும்

நல்லதோர் நிகழ்ச்சி நடைபெறும். இதனை ‘மாமன் கல்யாணம்“ என்பர். இது குமாரிவாழ் நாடார் குல மக்களிடையே இன்றும் நடைமுறையில் உள்ளது. பிற மாவட்டங்களில் அக்காள் மகளைத் திருமணம் செய்து கொள்ளும் வழக்கம் காணப்படுகிறது. இவ்வழக்கம் குமாரி மாவட்ட மக்களிடையே இல்லை. தடை செய்யப்பட்ட ஒன்றாக உள்ளது,” 6 என்னும் மேற்கோள், கன்னியாகுமாரி மாவட்டத்தில் ஒரு பிரிவினாரிடையே காணப்படும் திருமண முறையின் தன்மையைக் காட்டுகிறது.

காமணம் என்னும் சொல் பேச்சுவழக்கில் காவணம் என்றும் பேசப்படுகிறது. காமணம் எனும் இவ்வழக்குச் சொல் மணமகன் மணமகளுக்குத் தாலி கட்டித் திருமணம் செய்து கொள்ளும் மணவறையைக் குறிப்பதோர் சொல் ஆகும். குமாரியில் காமணப் பந்தல் என்று குறிப்பிடுகின்றனர். பிற மாவட்டங்களில் மணவறை என்றே அழைக்கின்றனர்.

திருமணச் சடங்குகளின் நான்கு நிலைகள்

1. திருமணத்திற்குச் சில நாட்களுக்கு முன் மணமக்கள் இல்லங்களில் நடைபெறும் சடங்குகள்

2. திருமணத்திற்கு முதல் நாள் நடைபெறும் சடங்குகள்

3. திருமணத்தன்று நடைபெறும் சடங்குகள்

4. திருமணம் முடிந்தபின் நடைபெறும் சடங்குகள்

1. திருமணத்திற்குச் சில நாட்களுக்கு முன் மணமக்கள் இல்லங்களில் நடைபெறும் சடங்குகள்

திருமணத்திற்கு முன் மணப்பெண்ணிற்குப் பொட்டு இடும் சடங்கு நடைபெறும். மணப்பெண்ணின் தாயின் உடன் பிறந்த சகோதரர் அதாவது தாய் மாமன் மணப்பெண்ணின் நெற்றியில் பொட்டு வைப்பார். பல திருமணச் சடங்குகளில் மணமகள் நெற்றியில் சிகப்புப் பூசுகின்றனர். இது அவள் தன் கணவனுக்கு மட்டுமே உரியவள் என்பதையும் பிற ஆடவர்கட்கு உரியவள் அல்லள் என்பதையும், தன் கணவனுக்குக் குழந்தைப் பேற்றினை உறுதிப்படுத்தும் வளமுடையவள் என்பதையும் குறிக்கும் அடையாளமாகும். மணப்பெண்ணின் உறவினர்கள் திருமணத்திற்கு சில நாட்களுக்குமுன் அரிசி, பருப்பு போன்ற தானிய வகைகளும், காய்கறிவகைகளும் மணப்பெண்ணின் வீட்டிற்கு எடுத்துச் செல்வர். மணப்பெண்ணிற்கு பல்வேறு வகையான உணவுப்பொருட்களைச் சமைத்துக் கொடுக்கின்றனர். அதைப்போன்றே

மணமகன் இல்லத்திற்கும் மணமகனின் உறவினர்கள் சென்று மணமகனுக்குப் பல்வேறு வகையான உணவு வகைகளைச் சமைத்துக் கொடுக்கின்றனர்.

2. திருமணத்திற்கு முதல் நாள் நடைபெறும் சடங்குகள்

திருமணத்திற்கு முதல் நாள் மணப்பெண்ணின் வீட்டில் வரவேற்பு நடைபெறுகிறது. இந்த வரவேற்பு நிகழ்வில் மணமகன் கலந்து கொள்வதில்லை. மணப்பெண் அழகாக அலங்காரிக்கப்பட்டு அழகிய இருக்கையில் அமர வைக்கப்படுகிறாள். திருமணத்தன்று திருமண நிகழ்வில் கலந்து கொள்ள முடியாத உறவினர்கள், நண்பர்கள் முதல் நாள் வரவேற்பு நிகழ்வில் கலந்து கொண்டு தங்களுடைய வாழ்த்தைத் தொரிவிக்கின்றனர்.

3. திருமணத்தன்று நடைபெறும் சடங்குகள்

திருமணத்தன்று மணமகன் மணமகள் இல்லத்திற்குச் செல்லுமுன் அந்தந்தச் சமய மந்திரங்கள் ஓதப்படுகின்றன. பின்னர் எதிர்மாலை சந்தனம், தாலிக்கட்டுதல், பாலும்பழமும் ஆலங்கால் நாட்டுதல், போன்ற பல சடங்குகள் அவரவர் மதத்திற்கு ஏற்றார்போல் நடத்தப்படுகின்றன.

4. திருமணம் முடிந்தபின் நடைபெறும் சடங்குகள்

திருமணம் முடிந்தபின் மணமக்கள் மணமகனுடைய இல்லத்திற்குச் செல்கின்றனர். மணமகனுடைய இல்லத்தில் அன்றைய தினமே மாலை வேளையில் வரவேற்பு நடைபெறுகிறது. வரவேற்பு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே மணமகளின் உறவினர்கள் நண்பர்கள் சுற்றத்தார் சேர்ந்து வீடுகாண வருகின்றனர். வீடு காண வரும்போது மணமக்களுக்குத் தேவையான கட்டில், மெத்தை, குடம், பீரோ, அரவை இயந்திரம், கலவை இயந்திரம், சலவை இயந்திரம், குளிர்சாதனப் பெட்டி போன்ற பல பொருட்களை வாங்கி வருகின்றனர். ஒரு சிலர் மகிழ்வுந்தும் வாங்கி வருகின்றனர். பின்னர் ஐந்தாம் நாள் அல்லது ஏழாம் நாள் போன்ற ஒற்றைப்படை நாட்களில் மறுவீடு காண வருகின்றனர். வருடப் பிறப்பு, பொங்கல், தீபாவளி போன்ற விழாக்களில் ஒரு சில சடங்குகள் செய்கின்றனர்.

கிராம மக்கள் பெண்ணைப் பார்த்து நிச்சயம் பேசி முடித்துப் பாரிசம் போட்ட பிறகு திருமண நாள் நிச்சயிக்கப்பட்ட பிறகு சில சடங்குகளைச் செய்கின்றனர். திருமணத்திற்கு முதல் நாள் பெண் வீட்டில் வரவேற்பு நடைபெறும். மறுநாள் காலை தாலி கட்டும் சடங்கு நடைபெறும். பின்னர் மணமகனின் வீட்டில் வரவேற்பு, மணமகளின் உற்றார் உறவினர் மணமகனின் வீட்டிற்கு வீடுகாண வருதல்,

அடுக்களை காணவருதல் போன்ற சடங்குகள் நடைபெறும். அடுக்களை என்பது சமையல் அறை ஆகும்.

திருமணம் தொடர்பாகவும் சில நம்பிக்கைகள் மக்களிடையே நிலவுகின்றன. ஒரே நேரத்தில் இரண்டு திருமணங்கள் நடக்கக் கூடாது எனவும் அவ்வாறு நடந்தால் ஒரு குடும்பம் உயர்வடையும் என்றும் மற்றொரு குடும்பம் தாழ்வடையும் என்றும் நம்புகின்றனர். திருமணத்திற்குப் பிறகு மணப்பெண் வெள்ளிக்கிழமையில் கணவன் வீட்டிற்குச் செல்லக்கூடாது என்றும் அவ்வாறு செல்ல வேண்டிய சூழல் வாய்த்தால் மணப்பெண் கையில் ஏதாவது ஒரு பொருளைக் கொடுத்துவிட்டு வீட்டைவிட்டு வெளியே வந்ததும் அந்தப் பெண்ணிடம் அப்பொருளைப் பெற்றுக் கொண்டுவந்து வீட்டிற்குள் வைப்பர். "மணப்பெண் கணவன் வீட்டிற்குள் நுழைந்ததும் உப்பிலோ, நெல்லிலோ முதலில் கைவைக்க வேண்டும்", என்று கூறுவர். 7

திருமணத்தின் நோக்கம்

திருமணம் என்பது பிள்ளை பெறுவதும் வளர்ப்பதுமாகும். ஒரு பெண் பூப்பெய்தியவுடன் திருமணத்திற்கு ஏற்ற பக்குவம் அடைந்து விட்டாள் என்பதைக் காட்டுகிறது. ஓர் ஆணும் ஒரு பெண்ணும் ஒருவருக்கொருவர் துணையாக இருப்பதுதான் இல்லற வாழ்க்கையின் உன்னத நிலையாகும். ஓர் ஆடவனும் ஒரு பெண்ணும் மனதளவில் அன்புடன் இருப்பது மட்டுமல்லாமல் அன்பின் மிகுதியால் ஏற்படும் காமப்பசியினைப் போக்குவதும் திருமணத்தின் நோக்கமாகக் கருதப்படுகிறது.

லியோ மார்க்கம் என்பவர் "திருமணம் வாழ்வியல், சமுதாயவியல், பாலியல் நோக்கம் கொண்டது"8 என்பார். "பாலுறவை ஒழுங்குபடுத்துவதாகவும் குடும்ப வாழ்க்கையை நிறுவுவதாகவும் பொருளாதாரக் கூட்டுறவுக்கு வழி வகுப்பதாகவும், உணர்ச்சி பூர்வமான மற்றும் அறிவு பூர்வமான தூண்டல்களுக்குப் பரஸ்பரம் உதவுவதாகவும் சமூக நிலைப்பாட்டுக்கு அடிகோலுவதாகவும் திருமணச் செயல்பாடுகள் அமைகின்றன," 9 எனக் குறிப்பிட்டுள்ளார். விளவங்கோடு வட்டார மக்களின் திருமணமுறை மதத்திற்கு மதம், சமூகத்திற்குச் சமூகம் மாறுபடுகிறது. மதத்தின் அடிப்படையில் பார்த்தால் இந்து, இஸ்லாம், கிறித்தவம் போன்ற மதங்களின் திருமணங்களைக் குறிப்பிடலாம். சமுதாயத்தின் அடிப்படையில் பார்த்தால் பரதர், குயவர், நாடார், தேவர், பழங்குடியினர் மற்றும் பல திருமணங்களைக் குறிப்பிடலாம்.

கற்பெனப் படுவது கரணமொடு புணரக்

கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே 10

எனத் தொல்காப்பிய நூற்பா கூறுகின்றது.

விளவங்கோடு வட்டாரத்தில் ஒரு பெண்ணும் ஆணும் ஒருவரை ஒருவர் காதலிக்கும் பொழுது பெற்றோர் முறைப்படி திருமணம் செய்யச் சம்மதிக்காதபோது உடன்போக்குத் திருமணம் நடைபெறுகிறது. உடன் போக்கு சமூக அங்கீகாரம் பெற்றதாகவே கருதப்படுகிறது. இதனைத் தொல்காப்பியத்தில்,

கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே

புணர்ந்து உடன்போகிய காலையான 11

என்று உடன்போக்கு மணம் பற்றிய செய்தி இடம்பெறுகிறது. சங்க இலக்கியங்களில் பாலைத் திணைப் பாடல்களில் உடன்போக்குப் பற்றிய செய்திகளைக் காணமுடிகிறது.”பெண்ணுடைய சம்மதமோ அல்லது பெண்ணின் பெற்றோர் சம்மதமோ இல்லாமல் ஒரு பெண்ணைக் கடத்திக் கொண்டுபோய்த் திருமணம் செய்வதைக் ‘கடத்தல் மணம்“ என்பர்.”12 விளவங்கோடு வட்டாரத்தில் கடத்தல் மணம் பெரும்பாலும் நடைபெறுவதில்லை.

ஓர் ஆடவன் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து வாழ்வது ஒருதார மணமாகும். இது முறைப்படி நடைபெறும் திருமணமாகும். இதில் உறவினர்கள், ஊரார்கள், பொதுமக்கள் போன்ற அனைவரும் கலந்து கொள்வர். இதனைத் தொல்காப்பியம், “கொடுப்பக் கொள்வது” எனச் சுட்டுகிறது. உடைமைச் சமுதாயத்தின் உச்சக்கட்டம் ஒருதார மணமாகும். விளவங்கோடு வட்டார மக்களிடம் பொதுவாக ஒரு தார மணமே நடைமுறையிலிருக்கிறது. ஒரு பெண் பல கணவர்களையோ, ஓர் ஆண் பல மனைவியர்களையோ மணக்கும் முறை இவர்களிடம் பெரும்பாலும் காணப்படுவதில்லை. இது இவர்களது வளர்ச்சியடைந்த பண்பாட்டையும் நாகாரிகத்தையும் உணர்த்துகிறது.

தனது இனத்துக்குள்ளேயே திருமணம் செய்து கொண்டு வாழ்வது ‘அகநிலை மணம்“ எனப்படும். அகநிலை மணம் செய்து கொள்வதையே இன்று அனைத்து இனத்தினரும் விரும்புகின்றனர். விளவங்கோடு வட்டாரத்தில் வாழும் அனைத்து இன மக்களும் அகநிலை மணத்தையே விரும்புகின்றனர்.

மண வாழ்த்து

திருமணத்தின்போது பொரியோர்கள் மணமக்களை வாழ்த்துவர். மணமக்கள் வாழ்வும் வளமும் நலமும் பொலிய வேண்டுமென பொரியோர்கள் வாழ்த்துவர்.

கலப்பு மணம்

கலப்பு மணம் காதல் மணத்தின் ஒரு பிரிவாகக் கருதப்படுகிறது. இரு வேறு சாதியினாரிடையே கலப்பு மணம் நிகழும் போது சமுதாயத்தில் பல பிரச்சனைகள் தோன்றுகின்றன. கலப்புத் திருமணம் செய்தால் அவர்களை ஊரை விட்டே நீக்கி விடுகின்றனர். அவர்களுடைய நல்லது கெட்டதுகளில் ஊரார் கலந்து கொள்வதில்லை. ஊராரின் நல்லது கெட்டதுகளில் அவர்கள் கலந்து கொள்ள அனுமதிப்பதும் இல்லை.

மணப் பொருத்தம்

இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் சாதகம் பார்த்துப் பத்துப் பொருத்தம் பார்த்துத்தான் திருமணம் செய்வார்கள். "இன்றைய நிலையில் திருமணப்பொருத்தத்தைப் பற்றி அறிவியல் அடிப்படையில் வரையறுக்கப் பெற்ற எந்த விதமான முடிவுகளும் இல்லை. ஏனைய முறைகளைப் போலவே, திருமணத்திலும் பொருத்தப்பாடு என்பது இன்றியமையாத தேவைகளை அல்லது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் திறனே ஆகும்." 13 தொல்காப்பியம்,

பிறப்பே, குடிமை, ஆண்மை, ஆண்டோடு

உருவு நிறுத்த காமவாயில்

நிறையே அருளே உணர்வொடு திருவென

முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே 14

என்று தலைவன் தலைவிக்கு இருக்க வேண்டிய பத்து வகை ஒப்புமையைக் குறிப்பிடுகிறது. விளவங்கோடு வட்டார மக்கள் பூசாரிகளிடமோ அல்லது சோதிடர்களிடமோ சென்று மணமக்களின் பொருத்தம் பார்க்கின்றனர். பொருத்தம் பார்த்தல் பெற்றோர் பார்த்துச் செய்யும் திருமணத்தில் மட்டுமே காணப்படுகிறது.

திருமணத்தின் மேன்மை

திருமணம் என்பது மக்களின் வாழ்க்கையில் முக்கியமான ஒரு நிகழ்வாகக் கருதப்படுகிறது. ஆணும் பெண்ணும் அன்பில் கலந்து அனுபவிக்கும் இல்லற வாழ்க்கையாகிய நன்னெறி சிறந்து உயர்வடைய வேண்டும் வீடுபேறு அடைவதற்கென ஆண் பெண்ணையும், பெண் ஆணையும் வெறுத்து நீக்கித் துறவு

கொள்வதாகிய துன்பம் நாட்டில் உண்டாக வேண்டாம் என்று திரு.வி.க. தாம் இயற்றிய ‘பொதுமை வேட்டல்“ என்னும் நூலில் கடவுள் வாழ்த்துப்பாடலில் குறிப்பிடுகின்றார். இல்லற வாழ்க்கையை ‘ஈருடல் ஓருயிர்“ என்பர்.

திருமண வயது

இந்தியத் திருமணச் சட்டப்படி ஆணின் திருமண வயது இருபத்தொன்றும் பெண்ணின் திருமண வயது பதினெட்டும் ஆகும். ஆனால் ஒரு பெண்ணிற்கு வாழ்க்கையைப் புரிந்து கொள்ளும் பக்குவம் பதினெட்டு வயதில் ஏற்படுவதில்லை. இளம் வயதிலேயே திருமணம் செய்வதால், ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் பக்குவம் இல்லாமல் மணமுறிவு ஏற்பட வாய்ப்பு உள்ளது. “மணவாழ்க்கை பற்றிய அறிவு தோன்றாத சிறுவர் சிறுமியர்களுக்குத் திருமணம் செய்து வைப்பதே இளமை மணமாகும். தமிழகத்தில் இளமை மணம் பற்றிய குறிப்புகள் இல்லை என்று வ.சுப. மாணிக்கம் கூறுகிறார். நாட்டுப்புறப் பாடல்களை ஆதாரமாகக் காட்டி இளமை மணம் தமிழகத்தில் இருந்ததாக ஆறு. இராமநாதன் கூறுகிறார்.” 15 பெண்ணை விட ஆணுக்கு வயது அதிகம் இருக்க வேண்டும் என்ற நியதி உள்ளது. என்றாலும் பெண்ணைப் பிடித்திருந்தால் வயதைப் பற்றிக் கவலைப்படாமல் திருமணம் செய்து கொள்கின்றனர். இளம் வயதில் திருமணம் செய்வதால் குடும்பத்திற்கு இழிவு ஏற்படாது என்றும் வயது அதிகமான பின் திருமணம் செய்தால் மிருக உணர்ச்சிக்கு அடிமையாகி அவர்கள் குலத்திற்கு இழிவு ஏற்படுத்தி விடுவர் என்ற எண்ணத்தினாலேயே இளம் பருவத்திலேயே திருமணம் செய்து விடுகின்றனர்.

சங்க காலத்தில் பன்னிரண்டு வயதே பெண்களுக்கு மணப்பருவத்திற்குரிய வயதாகக் கருதப்பட்டது. சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகி திருமணத்தில் கண்ணகியின் வயது பன்னிரண்டு. இதனை ‘ஈர் ஆறு ஆண்டு அகவையாள்“ என்னும் பாடல் அடி மூலம் அறிந்து கொள்ளலாம். ஆணின் திருமண வயது சட்டப்படி இருபத்தொன்று. ஆனால் ஓர் ஆண் இருபத்தைந்து வயதில் திருமணம் செய்து கொள்வதுதான் சிறந்தது. சங்க காலத்தில் ஆணின் திருமண வயது பதினாறாகக் கருதப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகி திருமணத்தில் கோவலனின் திருமண வயது பதினாறு. இதனை ‘ஈர் எட்டு ஆண்டு அகவையான்“ என்னும் சிலப்பதிகாரப் பாடல் அடி மூலம் அறிந்து கொள்ளலாம்.

திருமண உறவுமுறை

இரத்தக் கலப்பாலும் பெற்றோர்களின் வழியாலும் மண உறவினாலும் ஒரே இடத்தில் வாழும் தன்மையாலும் உறவு முறை அமைகிறது. சொந்தத்தில் திருமணம் செய்தால் பிறக்கும் குழந்தை ஊனமாகப் பிறக்கும் என்று அறிவியல் குறிப்பிடுகிறது. ஆகவே சொந்தத்தில் திருமணம் செய்வதைப் பெரும்பான்மையானோர் தவிர்க்கின்றனர். ஒருசிலர் மாமன் மகளைத் திருமணம் செய்கின்றனர். ஒருசிலர் அண்ணியினுடைய தங்கையைத் திருமணம் செய்கின்றனர். பெரும்பாலும் ஆடி மாதத்தில் திருமணம் நடைபெறுவதில்லை.

திருமண அழைப்பிதழ்

திருமண அழைப்பிதழ்கள் அவரவர் விருப்பத்திற்கேற்றபடி தேர்ந்தெடுக்கப்பட்டு அச்சிடப்படுகின்றன. ஒருசிலர் ஆங்கிலத்தில் அச்சடிக்கின்றனர். ஒரு சிலர் தமிழில் அச்சடிக்கின்றனர். ஒருசிலர் ஆங்கிலத்திலும் தமிழிலும் அச்சடிக்கின்றனர். ஒருசிலர் ஆங்கிலப் பத்திரிகை தனியாகவும் தமிழ்ப் பத்திரிகை தனியாகவும் அச்சிடுகின்றனர்.

ஒருசிலர் திருமணப்பத்திரிகையின் மேற்பகுதியின் நடுவில் அவர்களது மதத்தின் அடையாளச் சின்னத்தை அச்சிடுகின்றனர். கிறித்தவர்கள் என்றால் சிலுவை அடையாளத்தையும் இஸ்லாமியர் என்றால் பிறை அடையாளத்தையும் இந்துக்கள் என்றால் ‘ஓம்“ என்னும் அடையாளத்தையும் அச்சிடுகின்றனர். அடையாளம் மட்டுமல்லாமல் அவரவர் மதத்தின் சிறந்த வாசகங்களையும் அச்சிடுகின்றனர். கிறித்தவர்கள், ‘இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது“, ‘ஆராய்ந்து முடியாத பொரிய காரியங்களையும் எண்ணிமுடியாத அதிசயங்களையும் கர்த்தர் செய்கிறார்“ போன்ற வாசகங்களையும், இந்துக்கள் ‘அன்பே கடவுள்“, ‘அன்பே சிவன்“ போன்ற வாசகங்களையும், இஸ்லாமியர் ‘அஸ்ஸலாமு அலைக்கும்“ போன்ற வாசகங்களையும் அச்சிடுகின்றனர். பிறகு திருமண அழைப்பிதழ் என்ற தலைப்பையும் அச்சிடுகின்றனர்.

மணமக்களுடைய பெயரைக் குறிப்பிடுவதற்குமுன் அவர்கள் யாருடைய பெயரன் பேர்த்தி என்பதையும் யாருடைய பிள்ளைகள் என்பதையும் குறிப்பிடுகின்றனர். மணமக்களுடைய பெயாரின் பின் அவர்கள் படித்த பட்டத்தையும் குறிப்பிடுகின்றனர். எங்குத் திருமணம் நடைபெற உள்ளது என்பதையும் திருமணம் நடைபெறும் நேரத்தையும் குறிப்பிடுகின்றனர். பின்னர் மணவிருந்து நடைபெறும் இடத்தினையும் அனைவரும் வந்து மணவிருந்தில் பங்குபெறுமாறும் அழைக்கப்படுகின்றனர். இறுதியில் மணமகன் வீட்டில் அச்சடிக்கும் பத்திரிகையில் மணமகனின் பெற்றோர் பெயரும் மணமகள் வீட்டில் அச்சடிக்கும் பத்திரிகையில் மணமகளின் பெற்றோர் பெயரும் அச்சிடப்படுகிறது. ஒரு சில மணமக்கள் இறுதியில்

தங்களது பெயரையே அச்சாக்கம் செய்கின்றனர். இறுதியில் தங்கள் நல்வரவை அன்புடன் எதிர்பார்க்கும் என அச்சிடப்பட்டு அண்ணன், தம்பி, அக்கா, பொரியப்பா, சித்தப்பா, தாய்மாமன் முதலியவர்களின் பெயர்களைக் குறிப்பிடுகின்றனர்.

அச்சிடப்பட்ட பத்திரிகையை அவரவர் முறைப்படி உற்றார், உறவினர், சுற்றத்தார், நண்பர் என அனைவருக்கும் கொடுக்கின்றனர். கிறித்தவர்கள் தங்களது மதபோதகாரிடம் சென்று பத்திரிகையைக் கொடுத்துப் போதகர் ஜெபம் ஏறெடுத்து ஆசீர்வதித்த பின்னர் அனைவருக்கும் கொடுக்கின்றனர். இந்துக்கள் பத்திரிகையில் மஞ்சள், குங்குமம் போன்ற மங்கலகரமான பொருள்களைத் தடவி பூசாரியின் கையில் கொடுத்துப் பூசை செய்த பின்னர் அனைவருக்கும் கொடுக்கின்றனர். இஸ்லாமியரும் மதக்குருக்களிடம் கொடுத்து ஆசி பெற்ற பின்னரே அனைவருக்கும் கொடுக்கின்றனர்.

திருமண அழைப்பிதழ் கொடுக்க பெரும்பாலும் குடும்பத்தின் தலைவரே செல்வார். பண்டைக் காலத்தில் வெற்றிலை,பாக்கு வைத்துப் பத்திரிகையைக் கொடுத்தனர். இன்றைய காலகட்டத்தில் ஒருசிலர் மட்டுமே வெற்றிலை பாக்கு வைத்து அழைப்பிதழைக் கொடுக்கின்றனர்.

வரதட்சணை

பெண்ணின் தகப்பன் மாப்பிள்ளைக்கு அல்லது மாப்பிள்ளையின் தந்தைக்குப் பெண்ணை மணப்பதற்குக் கொடுக்கும் பணம் அல்லது பொருள் 'வரதட்சணை" எனப்படும். பெரும்பாலான சமூகங்களில் பெண்ணுக்குப் பாரிசம் அளிப்பது வழக்கம். பெண்ணின் குடும்பத்திற்கு நாணயம், ஆடை, அணிகலன், பாத்திரங்கள், கால்நடைகள் முதலியவற்றைத் தனித்தோ அல்லது ஒவ்வொன்றிலும் இவ்வளவென்றோ கொடுப்பது வழக்கம்.

"மணமகன் வீட்டார் மணமகள் வீட்டாருக்குப் பணமோ பொருளோ கொடுப்பதும் அல்லது வேறுவகையான செல்வம் கொடுப்பதும் 'மணப்பெண் பணம்" எனப்படும். ஏறக்குறைய 60 விழுக்காடு சமுதாயங்களிலும் 'மணப்பெண் பணம்" கொடுக்கும் முறை உள்ளது. இம்முறை ஆப்பிரிக்கா முழுவதும் காணப்படுகிறது." 16

திருமணக் கொண்டாட்டம்

பண்டைக் காலத்தில் திருமணம் ஒரு திருவிழா நடப்பதைப் போன்று நடைபெற்றது. தொலைவில் இருக்கின்ற உறவினர் ஒரு வாரத்திற்கு முன்னதாகவே குடும்பமாக மணமக்களின் வீடுகளில் வந்து தங்குவார்கள். பொரியோர்கள் திருமண ஏற்பாடுகளைச் செய்வார்கள். சிறுவர்கள் ஒன்றுகூடி மகிழ்ச்சி வெள்ளத்தில்

மிதப்பார்கள். குடும்பமே கொண்டாட்டமாகக் காணப்படும். வீடுகளில் பந்தல் போட்டுத் திருமணத்தை நடத்துவார்கள். விளவங்கோடு வட்டார மக்களிடையே திருமணம் நடைபெறும் வீட்டையும், பந்தலையும், மணவறையையும் பல்வேறு வகைகளில் அலங்காரம் செய்யும் வழக்கம் காணப்படுகிறது. பந்தலின் உட்பகுதி வண்ணத் துணிகளால் கட்டப்பட்டிருக்கும். அதன்மேல் பல வண்ணத் தாள்களால் மலர்கள் செய்து தொங்கவிடப்பட்டிருக்கும். பந்தலுக்குக் கீழ் மணமேடை அமைக்கப்படும். அதை மலர்களாலும், வண்ணக் காகிதத்தாலும், துணிகளாலும், வண்ண வண்ண மின்சார விளக்குகளாலும் அழகுபடுத்துகின்றனர். திருமணம் நடைபெறும் வீட்டையும் சுத்தப்படுத்தி அழகுபடுத்துவர். வீட்டின் சுவர்களிலும் தரையிலும் பூக்கள் வரைந்து அழகுபடுத்துவர்.

ஆனால் இன்றைய நிலை நேர்மாறாகக் காணப்படுகிறது. திருமணம் நடைபெறும் நேரத்தில்தான் உறவினர்கள் வருகின்றார்கள். ஒரு குடும்பத்திற்கு ஒருவர் மட்டும் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் நிலை இன்று காணப்படுகிறது. திருமண மண்டபங்களில் வைத்துத் திருமணத்தை நடத்துகிறார்கள். கால வேகத்தில் மக்களுக்கு நிற்கவே நிலையில்லாமல் போய்விடுகிறது.

தாலி

திருமணத்தின் முக்கிய ஒன்றாகக் காணப்படுவது திருமாங்கல்யம். திருமணத்தன்று மணமகன், மணமகள் கழுத்தில் கட்டும் மங்கல அணியே திருமாங்கல்யம். இதனைத் ‘தாலி“ என்றும் குறிப்பிடுவர். தமிழர் பண்பாட்டில் தாலிகட்டும் சடங்கு மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. மாங்கல்யம் பிரணவ ரூபமுடையத் அப்பிரணவம் ஓங்கார ரூபமுடையது. இந்த மாங்கல்யம் அல்லது தாலி பலவகைப்படும். பிள்ளையார் தாலி, குண்டுத்தாலி, பார்ப்பனத் தாலி, சிறுதாலி, இரட்டைத்தாலி எனப் பலவகைப்படுகின்றன. ஒவ்வொரு சமுதாயத்திற்கும், மதத்திற்கும் தாலி வேறுபடுகின்றது. தாலியினை மக்கள் புனிதமாகக் கருதுகின்றனர். ஓர் ஆணும் பெண்ணும் திருமணம் செய்துகொண்டனர் என்பதன் அடையாளமாகத் தாலி காணப்படுகின்றது. தாலி மஞ்சள் கயிற்றிலும் தங்கச் சங்கிலியிலும் இணைந்து காணப்படுகின்றது. மணமகன் மணமகளின் கழுத்தில் மஞ்சள் கயிற்றினாலான தாலியை அணியும் போது மூன்று முடிச்சு போட்டுத் தாலியைக் கட்டுகிறான். “மூன்று முடிச்சுடன் அணிவிப்பது அப்புனித தாலி மங்கல நாளில் பத்திரமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். மூன்று முடிச்சுகளுக்குள்ளும் ஒரு தத்துவம் அடங்கியிருக்கின்றது. முதல் முடிச்சு பிரம்மாவின் மந்திரத்தையும், இரண்டாவது

முடிச்சு விஷ்ணுவின் மந்திரத்தையும், மூன்றாவது முடிச்சு சிவ மந்திரத்தையும் குறிக்கும்” என்கிறார் சண்முகசுந்தரம். 17

இவ்வாறு திருமணத்தில் பொது நிலையில் பல்வேறு சடங்குகள் காணப்படுகின்றன. இந்தச் சடங்குகளுக்கிடையில் ஏதாவது இடையூறு ஏற்பட்டால் அதனைக் கெட்ட சகுனமாகக் கருதினர். திருமண முறைகள் சமூகத்திற்குச் சமூகம் வேறுபட்டாலும் மதத்திற்கு மதம் வேறுபட்டாலும் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் புரிந்து அன்பில் திளைத்து வாழ்வதே திருமணத்தின் நோக்கமாகும். இனி, கன்னியாகுமாரி மாவட்டத்தின் விளவங்கோடு வட்டத்தில் காணப்படும் திருமணச் சடங்குகளைக் காண்போம்.

திருமணச் சடங்குகள் இனத்திற்கு இனம், சமயத்திற்குச் சமயம் வேறுபடுகின்றன.

1. இந்து மக்களின் திருமணச் சடங்கு
2. கிறித்தவ மக்களின் திருமணச் சடங்கு
3. இஸ்லாமிய மக்களின் திருமணச் சடங்கு

1. இந்து மக்களின் திருமணச் சடங்கு

விளவங்கோடு வட்டாரத்தில் இந்து சமயம் சார்ந்த திருமணச்சடங்கு மூன்று வேளை திருமணச் சடங்காக நடைபெறும். திருமணத்திற்கு முதல் நாளில் மணமகன் வீட்டிலும் மணமகள் வீட்டிலும் ‘மாற்றுவாங்குதல்“ என்னும் நிகழ்ச்சி நடைபெறும். முன்னிரவு வேளையில் இந்த நிகழ்ச்சி திருமணத்திற்காகப் போடப்பட்ட பந்தலில் நடைபெறும். அந்த ஊருக்குத் துணி வெளுக்கும் பணியைச் செய்யும் வண்ணார் குலத்தவர் மணமகன் அல்லது மணமகளுக்கு வெளுத்த துணியைக் கொண்டு வந்து கொடுப்பார். அவர் கொடுக்கும் துணியை வாங்குவதற்காக மணமகன் அல்லது மணமகளின் அண்ணி உறவுமுறை கொண்டவர் அல்லது மாமி உறவு முறை கொண்டவர் ஒரு தாம்பாளத்தில் அரிசியையும் ஏற்றிய கைவிளக்கினையும் கொண்டு வருவார். அதே உறவு முறை சார்ந்த பிற பெண்கள் அவருக்குப் பின்னால் குரவை இட்டபடி வருவார்கள். தாம்பாளத்தில் இருக்கும் அரிசியை வண்ணாரின் வேறு துணியில் கொட்டி விட்டு வெளுத்த துணியை வாங்கியபடி அவர்கள் செல்வார்கள். அவ்வாறு செல்லும் போது குரவை இட்டபடி செல்வார்கள். மணமகன் அல்லது மணமகளுக்கு அந்த வெளுத்த துணி அணிந்து கொள்வதற்காக வழங்கப்படும். இந்த மாற்று வாங்கும் சடங்கு நடைபெற்றதும் விருந்து ஏற்பாடு செய்யப்படும்.

திருமண விழா

விளவங்கோடு வட்டாரத்தில் திருமணச் சடங்கானது பெண் வீட்டிலேயே நடைபெறும். மணமகன் வீடும் மணமகள் வீடும் வெவ்வேறு ஊர்களில் இருந்தால் மணமகன் வீட்டைச் சார்ந்தவர்கள் தங்கள் உறவினர்களிடம் அடுத்த நாள் காலையில் நடைபெறும் திருமணத்திற்கு இங்கிருந்து எத்தனை மணிக்குப் புறப்பட வேண்டும் என்பதைத் தொரிவிப்பார்கள். விருந்தின் நிறைவில் வெற்றிலை அனைவருக்கும் வழங்கப்படும். அதைப் பெற்றுக்கொண்டு அனைவரும் தங்கள் வீட்டிற்குத் திரும்புவார்கள். தொலைவிலிருந்து வந்த உறவினர்கள் அங்கேயே தங்கிக்கொள்வார்கள்.

மணப்பெண்ணின் வீட்டில் அடுத்த நாள் விருந்திற்கான காய்கறி வெட்டுதல், சமைத்தல் முதலான வேலைகளை இரவிலேயே தொடங்கிவிடுவார்கள். மணமகன் வீடு என்றால் அனைவரும் ஓய்வெடுப்பார்கள்.

ஆலங்கால் நாட்டுதல்

ஆலமரம் பாரம்பாரியத்தின் அடையாளமாகக் கருதப்படுகிறது. விழுதுகளின் துணையுடன் பல்லாயிரமாண்டுகளாக அது வாழ்வதாக நம்பப்படுகிறது. அந்த ஆலமரத்தைப்போல் இன்று திருமணம் செய்ய இருக்கும் மணமக்களின் குடும்பமும் வளரவேண்டும் என்பதன் அடையாளமாக ஆலமரத்தின் மிகச் சிறிய கிளையொன்று வெட்டிக் கொண்டு வரப்பட்டு வீட்டின் முற்றத்தில் நடப்படுகிறது. இந்த ஆலங்கால் நாட்டும் நிகழ்வினை ஊர்ப் பொரியவர்கள் முன்னின்று நடத்தி வைப்பார்கள்.

மாமன் கல்யாணம்

திருமண நாளன்று அதிகாலையில் மணமகன் வீட்டில் மணமகனுக்குப் புதுத்துணி வழங்கப்படும். குளித்து முடித்துப் புதுத்துணியை அணிந்த மணமகன் மணமகள் வீட்டிற்குப் புறப்படுவார். அவ்வாறு புறப்படுவதற்கு முன் மணமகனின் தந்தை அல்லது மணமகன் உறவினாரில் பொரியவர் முன்பே ஏற்பாடு செய்து வாங்கி வைக்கப்பட்டிருக்கும் மணமாலையை மணமகனின் கழுத்தில் அணிவிப்பார். இவ்வாறு அணிவிக்கும் நிகழ்ச்சி அவர்களது குடும்பக்கோவிலில் அல்லது வீட்டிலிருக்கும் பூசை அறையில் நடைபெறும். மணமகனின் தாயின் உடன்பிறந்த சகோதரர்கள் மாமன் கல்யாணம் என்னும் நிகழ்விற்காக அழைக்கப்படுவார்கள். அவர்களை நாற்காலியில் அமரச்செய்து அவர்களின் கைகளில் மஞ்சள் கயிற்றாலான காப்புக் கட்டப்படும்.

மணமகனின் தாயார் ஒரு பெட்டியில் அரிசி, தேங்காய், வேட்டி, சட்டை முதலானவற்றை வைத்து இடுப்பில் சுமந்தபடி தனது சகோதரனின் காலடியில் வைப்பாள். அப்போது மணமகன் தனது தாய் மாமன்களின் காலில் விழுந்து வணங்குவான். தாய் மாமன்கள் தங்கள் தகுதிக்கேற்பப் பணமாகவோ நகையாகவோ தங்கள் மருமகனுக்கு வழங்குவர். அதன் பின்னர் மணமகனின் தாயார் அந்தப் பெட்டியில் கொண்டு வந்த பொருட்களை மாமன்களுக்கு வழங்கிவிட்டுத் திரும்பிச் செல்வாள்.

மாமன் கல்யாணம் என்ற நிகழ்வு நிறைவு பெற்றபின் அனைவரும் திருமணத்திற்காக மணமகள் வீட்டிற்குப் புறப்படுவார்கள். மணமகன் செல்வதற்கென்று மகிழுந்து ஏற்பாடு செய்து அலங்காரிக்கப்பட்டிருக்கும். அந்த மகிழுந்தில் மணமகனுடன் தோழனாக மணமகனின் சகோதாரியின் கணவனும் சகோதாரியும் உடன் செல்வர். மற்றவர்களும் பயணத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட வாகனத்தில் ஏறி மணமகனின் மகிழுந்தைத் தொடர்ந்து செல்வார்கள்.

எதிர்மாலை போடுதல்

மணமகளின் வீட்டினை மணமகன் அடைந்ததும் மணமகன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார். மேள, தாளம் முழங்க உறவினர் சூழ்ந்துவரச் செல்லும் மணமகனை பந்தலில் நிறுத்துவார்கள். இந்த மணமகன் ஊர்வலத்தின் போது மணமகனுக்குக் குடைபிடிக்கும் பணியினை ஊர்க் குடிமகன் என்னும் நாவிதர் பிடிப்பார். மேளம் முழங்க மணமகன் பந்தலின்முன் நிற்பார். மணமகனுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட பூமாலை போல மணமகள் வீட்டில் மணமகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். அந்த மாலையைத் தாம்பாளத்தில் வைத்தபடி மணமகளின் சகோதரன், மணமகனுக்குக் கொண்டு வருவான். மணமகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்த மாலையை மணமகனின் கழுத்தில் மணமகளின் சகோதரன் அணிவிப்பான். மணமகனின் கழுத்தில் முன்பே அணியப்பட்டிருந்த மாலையை மணமகளின் சகோதரன் கழற்றி எடுத்துத் தட்டில் வைத்துக் கொள்வான். மணமகனுடன் ஊர்வலத்தில் வந்தவர்கள் மீது பன்னீர் தெளிக்கப்படும். மணமகனின் நெற்றியில் சந்தனத்தால் மணமகனின் சகோதரன் பொட்டு வைப்பான். பின்பு மணமகனின் கையைப்பிடித்து அழைத்துக் கொண்டுபோய் மணவறைக்கு அருகில் போடப்பட்டிருக்கும் நாற்காலியில் அமரவைப்பான் மணமகளின் சகோதரன். மணமகனின் சகோதாரி தன்னுடைய கையில் ‘பெட்டகப்பெட்டி“ என்னும் ஒரு பெட்டியைச் சுமந்து கொண்டு வருவாள். மணமகனுக்கு முன்னால் போடப்பட்ட

மேசையின் மேல் அந்தப் பெட்டி வைக்கப்படும். அந்தப் பெட்டியில் மணமகளுக்கான முகூர்த்தப் புடவையும் வேறு அலங்காரப் பொருட்களும் இருக்கும்.

மணமகளுக்கென்று புதிய குத்து விளக்கு வாங்கப்பட்டிருக்கும். அந்தக் குத்துவிளக்கில் எண்ணெய் ஊற்றி விளக்கு ஏற்றப்படும். அதனை மணமகளின் சகோதரன் எடுத்துக்கொண்டு வந்து மணமகனின் முன்னால் வைக்கப்பட்டிருக்கும் மேசையின் மீது வைப்பான். மணமகனின் சகோதாரி மேசையிலிருக்கும் பெட்டகப்பெட்டியை எடுத்துக் கொண்டுபோய் மணமகளிடம் கொடுப்பாள்.

மணமகளுக்கு மாமன் கல்யாணம்

மணமகளது தாயின் உடன் பிறந்த சகோதரர்கள் மணவறைக்கு அழைக்கப்படுவார்கள். அவர்களுக்கு மணமகன் வீட்டில் நடைபெற்ற சடங்கினைப் போல் இங்கேயும் நடைபெறும். மணப்பெண்ணுக்கு மாமன்கள் பணமாகவோ நகையாகவோ அன்பளிப்பை வழங்குவார்கள். மணப்பெண் வீட்டிற்குள் திரும்பிப்போய் தான் அணிந்திருக்கும் சேலையை மாற்றி மணமகனின் சகோதாரி கொண்டுவந்த பட்டுச் சேலையை உடுத்திக் கொள்வாள். அந்தச் சேலையை மணமகனின் சகோதாரி உடுத்திவிப்பதும் உண்டு. அதன்பின்னர் மாப்பிள்ளையின் கழுத்திலிருந்து மாற்றிக் கொண்டுவரப்பட்ட மாலையை மணமகளின் தந்தையார் அல்லது பொரியவர்கள் எடுத்துக் கொடுக்க மணமகள் அணிந்து கொள்வாள். இந்தச் செயல்கள் மணமகள் வீட்டினுள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது மணமகனை மணவறைக்கு அழைத்து வந்து அமர வைப்பார்கள். அவ்வாறு அழைத்து வரப்படும்போது மணமகனின் சகோதரன் மேசையில் வைக்கப்பட்டிருந்த குத்து விளக்கினை எடுத்து வந்து மணவறையில் வைப்பார். ஒப்பனை முடிக்கப் பெற்ற மணமகளை மணமகளின் அண்ணி அல்லது மாமி உறவினைக் கொண்ட பெண் மணவறைக்கு அழைத்து வருவார். திருமணச் சடங்கினை நிகழ்த்துவதற்கென்று ஏற்பாடு செய்யப்பட்டவர் திருமணச் சடங்கினை நிகழ்த்துவார்.

மணவறையில் வாழையிலையில் நெல், அரிசி, வாழைப்பழம், வெற்றிலை பாக்கு ஆகியவற்றுடன் வைக்கப்பட்டிருக்கும் சாணிப் பிள்ளையாரை மணமகளும் மணமகனும் தொட்டு வணங்குவார்கள். ஒரு தாம்பாளத்தட்டில் வெற்றிலையைப் பரப்பி அதன் மேல் தங்கத்தால் செய்யப்பட்ட தாலிச் சரட்டினை மணமகனின் தந்தையார் எடுத்து வைப்பார். திருமணச் சடங்கினை நிகழ்த்துபவர் அந்தத் தட்டினை மணமகனின் சகோதரனிடம் கொடுத்து அனைவாரின் நல்லாசியினைப் பெற்று வருமாறு அனுப்பி வைப்பார். நல்லாசியுடன் தாலி கொண்டுவரப்பட்டபின் மணமகனின் தந்தை

அல்லது குடும்பத்தில் பொரியவர் தாலிச் சரட்டினை எடுத்து மணமகனின் கையில் கொடுப்பார். தாலிச் சரட்டின் பின்பகுதியில் பெரும்பாலும் கொக்கி இருக்கும். அந்தச் சரட்டினை மணமகன் மணமகளின் கழுத்தில் கொக்கி போட்டு அணிவிப்பான். அவ்வாறு அணிவிக்கும்போது மணமகனும் மணமகளும் புதியவர்கள் என்பதால் கொக்கியைச் சாரியாக மாட்ட இயலாது. மணமக்களுக்குப் பின்னால் நிற்கும் மணமகனின் சகோதாரி அந்தக் கொக்கியைச் சாரியாக மாட்டித் தாலிச் சரட்டினை மார்பில் இழுத்து விடுவார். இவ்வாறு தாலிச் சரட்டினைக் கட்டிவிடும் மணமகனின் சகோதாரியைப் ‘பொலம்பூட்டுக்காரி“ என்பார்கள். இதனைப் பேச்சு வழக்கில் ‘பொய்ம் பூட்டுக்காரி“ என்றும் வழங்குகின்றனர். பொலம் என்னும் சொல்லுக்குப் பொன் அல்லது தங்கம் என்று பொருள். தங்கத்தால் ஆன தாலிச் சரட்டினைப் பூட்டிவிடும் செயலைச் செய்ததால் மணமகனின் சகோதாரியைப் பொலம்பூட்டுக்காரி என்று கூறுகின்றனர். விளவங்கோடு வட்டாரத்தில் நாடார் சமூக இந்துக்களிடையே இவ்வாறு தங்கத்தாலான சரடுதான் அணிவிக்கப்படுகிறது. வேறு சில சாதியினாரிடம் மஞ்சள் கயிற்றில் மூன்று முடிச்சு போடும் வழக்கம் உள்ளது.

அய்யாவழித் திருமணம்

கன்னியாகுமாரி மாவட்டத்தின் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் சாமிதோப்பு என்னும் பகுதியில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றியவர் முடிசூடும் பெருமாள் என்னும் இயற்பெயரைக் கொண்ட முத்துக்குட்டி சுவாமிகள். இவரை அய்யா வைகுண்டர் என்று போற்றுகின்றனர். இவர் ஒரு திருமண முறையை ஏற்படுத்தியுள்ளார். அந்த வகையில் திருமணம் நடைபெறும் போது மணவறையில் அமர்ந்திருக்கும் மணமகன் தலையில் தலைப்பாகை அணிந்து கொள்வான். அய்யாவழித் திருமணத்தினை நடத்துபவரும் தலையில் தலைப்பாகை அணிந்து கொள்வார். தாலிச் சரட்டினை எடுத்துக் கொடுப்பவரும் தலையில் தலைப்பாகை அணிந்திருப்பார். இந்த அய்யாவழித் திருமணத்தின்போது மணமகன் மணமகள் ஆகியோரின் நெற்றியில் திருமண் என்னும் நாமம் கீழிருந்து மேலாகப் பூசப்படும். மணவறைக்கு அருகில் நிற்பவர்கள் அனைவருக்கும் இந்தத் திருமண் என்னும் நாமத்தைத் திருமணத்தை நடத்துபவர் பூசுவார்.

மௌனி கல்யாண மணவோலை வாழ்த்தலுக்கு

சிவனே குருவான திருமேனி முன்னடவாய்

அய்யாவும் நாரணரும் அம்மை உமையவளும்

தெய்வார் தமக்கிரங்கி திருமுகூர்த்தம் செய்யவென்று

அண்டரோடு தேவர் அறியவே ஓலையிட்டு

கொண்டாடி இன்பம் குளிர்ந்த நதி பாலதுபோல்

சீரான மக்களென்றும் தெய்வச் சான்றோர்களுக்கு

நாராயணர் தாமும் நல்ல முகூர்த்தமிட்டுக்

கன்னி கலியாணம் கைபிடிக்க வேணுமென்று

மன்னனுக்கு ஏற்ற மதிமந்திரியும் தானறிய

இவன் இவளாம் என்று இனங்குறித்துப் பெண்பேசி

அவனி அறிய அலங்காரமிட்டனரே........

............................................................

மாப்பிள்ளையும் பெண்ணையும் வருவித்துப் பந்தலிலே

பரம ரகசியமாய்ப் பலகை தனிலே இருத்தி

அரகரா என்று அம்மை உமைதான் எழுந்து

சிவசிவா என்று திருச் சரடு சேர்த்தனரே 18

என்னும் கல்யாணப்பட்டைப் பாடுவது வழக்கம்.

அய்யாவழித் திருமணத் தாலியில் தங்கத்தால் அந்தத் திருமண் பூசப்பட்டிருக்கும். அய்யா வழித் திருமண முறையில் மாப்பிள்ளையும் பெண்ணும் மணவறையை ஐந்து முறை சுற்றி வருவார்கள். மற்ற இந்துத் திருமணமுறையில் மூன்று முறை சுற்றி வருவார்கள்.

மாப்பிள்ளையும் பெண்ணும் மணவறையைச் சுற்றிவருவதற்கு முன்பாக மணமகளின் தந்தையார் மணமகளின் வலதுகையை மணமகனின் கையில் பிடித்துக் கொடுப்பார். இந்த நிகழ்வினைக் கைப்பிடித்துக் கொடுத்தல் என அழைக்கின்றனர்.

மணமகனும் மணமகளும் மணவறையைச் சுற்றி வரும்போது மணமகனின் சகோதரன் குத்துவிளக்கினைக் கையில் தாங்கியபடி அவர்களின் முன்னால் நடந்து செல்வான். மூன்று முறை அல்லது ஐந்து முறை மணவறையைச் சுற்றி முடித்தபின் மீண்டும் மணமகனும் மணமகளும் கையைப் பிடித்த படியே மணவறையில் உட்காருவார்கள். மணமகளின் தந்தையார் வந்து மணமகன், மணமகள் ஆகியோரின்

கைகளைப் பிரித்து விடுவார். அதன்பிறகு ஒரு கிண்ணத்தில் எண்ணெயை வைத்து அந்த எண்ணெயை மணமகன் தனது சுட்டு விரலால் தொட்டு மணமகளின் கன்னத்தில் மூன்று முறை ஒட்டுவான். அதைப் போல மணமகளும் மணமகனின் கன்னத்தில் மூன்று முறை ஒட்டுவாள்.

பாலும் பழமும் கொடுத்தல்

மணமகளின் சகோதரன் ஒரு தட்டில் பால் கலந்த சோற்றினையும் பழத்தினையும் எடுத்துக் கொண்டு வந்து மணமகனுக்குச் சிறிது சிறிதாக ஊட்டுவான். அதன் பின்னர் வெற்றிலை பாக்கு, சுண்ணாம்பினை மணமகனின் வாயில் கொடுப்பான்.

குத்துவிளக்கினைத் தூக்கிவந்த மாப்பிள்ளையின் சகோதரனுக்கு மணப்பெண் வீட்டிலிருந்து பணமாகவோ தங்க நகையாகவோ அன்பளிப்பு வழங்கப்படும். அதைப்போன்று பொலம்பூட்டுக்காரியாக வந்த மணமகனின் சகோதாரிக்கும் பணமாகவோ நகையாகவோ அன்பளிப்பு மணப்பெண் வீட்டாரால் வழங்கப்படும்.

அனந்தரம் செய்தல்

மணமகனின் உறவினர்களில் சகோதரன் உறவு நிலையில் உள்ளவர்களும் சித்தப்பா, பொரியப்பா உறவு நிலையில் உள்ளவர்களும் மணமக்களுக்கு அனந்தரம் செய்வார்கள். அவ்வாறு செய்வதற்காக ஒரு தட்டில் ஆலமரத்தின் இலையைப் பிய்த்துப் போட்டிருப்பார்கள். அத்துடன் பாலினையும் கலந்து ஊற்றியிருப்பார்கள். அனந்தரம் செய்பவர்கள் ஒவ்வொருவராக வந்து தட்டிலுள்ள ஆலம் இலையை எடுத்துப் பாலில் நனைத்து மணமகன், மணமகள் ஆகியோரின் தலையைச் சுற்றி மீண்டும் அந்தத் தட்டிலேயே போடுவார்கள். முன்பு குறிப்பிட்ட உறவின் முறையைச் சார்ந்தவர்கள் அனைவரும் அனந்தரம் செய்தபிறகு மணமகனின் தந்தையார் வந்து அனந்தரம் செய்வார். அனந்தரம் செய்வது என்றால் மணமக்களை நீடூழி வாழ்க என்று வாழ்த்துவது ஆகும். அதன் பிறகு மணமக்களை வாழ்த்திப் பேசுவது, வாழ்த்திப் பாடுவது முதலான நிகழ்வுகள் நடைபெறும். மணமகளின் தந்தையார் மணமகளின் கையை மணமகனின் கையில் வைத்து இரண்டு கைகளையும் சேர்த்துப் பிடித்தபடி ஆலம் இலையில் பாலினை எடுத்து உட்குழிந்திருக்கும் கையில் மூன்று முறை ஊற்றுவார். அவ்வாறு ஊற்றும்போது - பாலா பாலா மனம்போல என்று கூறுவார். இதைப் போலவே மணமகளின் கையின் மேல் மணமகனின் கையை வைத்து இரண்டு கைகளையும் சேர்த்துப் பிடித்தபடி ஆலம் இலையில் பாலினை

எடுத்து உட்குழிந்திருக்கும் கையில் மூன்று முறை ஊற்றுவார். அவ்வாறு ஊற்றும்போதும் - பாலா பாலா மனம்போல என்று கூறுவார்.

மணமகனின் சகோதரன் குத்து விளக்கினைக் கையில் பிடித்தபடி தயாராக நிற்பான். மணமகளின் தந்தையார் மீண்டும் மணமகளின் கையை மணமகனின் கையில் பிடித்துக் கொடுப்பார். மணமகன் மணமகளை அழைத்துக் கொண்டு மணமகள் வீட்டிற்கும் செல்வான். உடனே திருமண விருந்து நடைபெறும்.

மாமியார் வீடு காணுதல்

விருந்துக்குப் பிறகு நல்ல நேரம் பார்த்து மணமகன், மணமகள், மணமகனின் சகோதாரி, சகோதாரியின் கணவன் ஆகியோரை மகிழுந்தில் மணமகன் வீட்டிற்கு அனுப்பி வைப்பார்கள். மணமகனின் தாயார் மணமக்களை வரவேற்று வீட்டிற்குள் அழைத்துச் செல்வாள். மணமக்களுடன் கொண்டு வரப்பட்ட குத்து விளக்கினை மணமகள் ஏற்றி வைப்பாள். மணமக்களுக்காக ஒதுக்கப்பட்ட அறையில் முகூர்த்தப் பாய் விரிக்கப்பட்டிருக்கும். அதில் மணமகள் அமர்த்தப்படுவாள்.

மணமகளுக்குச் செய்யப்படும் சீர்வாரிசைப் பொருட்களுடன் மாலை வேளையில் மணமகளின் உறவினர் மணமகன் வீட்டிற்கு வருவார்கள். இவ்வாறு வரும்போது கைமுறுக்கு, அச்சுமுறுக்கு, அதிரசம், பலவகையான வாழைப் பழங்கள் முதலானவற்றைக் கொண்டு வருவார்கள். இவற்றை மணமக்கள் அறையில் கொண்டுபோய் வைப்பார்கள். இவ்வாறு அவர்கள் வருவதை மாமியார் வீடு காணுதல் என்று குறிப்பிடுவார்கள். அனைவருக்கும் முன்பே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்து வழங்கப்படும்.

சுருள் பணம்

மணப்பெண்ணின் வீட்டார் விருந்து முடிந்ததும் மணமகனுக்கு வெற்றிலையில் பணத்தை வைத்துச் சுருட்டிக் கொடுப்பார்கள். இதனைச் சுருள் பணம் என்று குறிப்பிடுவார்கள். மணமகனுக்குச் சகோதரன் உறவுமுறையில் உள்ள அனைவருக்கும் இந்தச் சுருள் பணம் பெண் வீ£ட்டாரால் வழங்கப்படுகிறது. அன்றைக்கே ஏழாம் நாள் சடங்கினை நிகழ்த்துவது குறித்துப் பேசி முடிப்பார்கள். பெரும்பாலும் திருமணமான ஏழாம் நாள் நடக்க வேண்டிய இந்தச் சடங்கு அடுத்த நாளே நடத்தப்படுகிறது.

மணமக்களை வாழ விடுதல்

மணமகள் வீட்டிலுள்ள அண்ணி உறவுமுறைப் பெண்கள் வந்து மணமகன் வீட்டில் எடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆனந்தி சேலை என்னும் சேலையை மணப்பெண்ணுக்கு அணிவிப்பார்கள். அதன்பிறகு மணமக்களைத் தனி அறையில் அழைத்துச் சென்று கட்டிலில் அல்லது முகூர்த்தப் பாயில் அமரவைத்துவிட்டு வந்துவிடுவார்கள். இந்த நிகழ்வு இரவு நேரத்தில் நிகழ்வதால் இதனைத் தமிழகப் பகுதிகளில் முதலிரவு என்று குறிப்பிடுகிறார்கள். கன்னியாகுமாரி மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மாப்பிள்ளையையும் பெண்ணையும் வாழவிடுதல் என்று குறிப்பிடுகிறார்கள்.

ஏழு கழித்தல்

அடுத்த நாள் காலையில் மணமகளின் உறவினர்கள் மணமகனின் வீட்டிற்கு வந்து மணமக்களைத் தங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்வார்கள். திருமணத்தின் ஏழாம் நாளன்று ஏழு கழித்தல் என்னும் சடங்கு பெண் வீட்டில் நடைபெறுகிறது. பெரும்பாலும் மதிய வேளையில் நடைபெறும் இந்தச் சடங்கிற்கு மணமகனின் நெருங்கிய உறவினர்கள் அனைவரும் அழைக்கப்படுகிறார்கள். எல்லோரும் பங்கேற்கும் திருமண நிகழ்வில் பருப்பு, சாம்பார், ரசம், மோர், பழம், பாயாசத்துடன் சைவ விருந்து படைக்கப்படுகிறது. ஏழு கழித்தலின் போது அசைவ உணவு வழங்கப்படுகிறது. ஏழு கழித்த அன்று மாலையில் மணமக்களை மீண்டும் மணமகன் வீட்டிற்கு அனுப்பி வைப்பார்கள். அவ்வாறு அனுப்பி வைக்கும்போது கைமுறுக்கு என்னும் சுற்று முறுக்கு, அச்சுமுறுக்கு, முந்திரிக் கொத்து, ஆகியவற்றுடன் அரிசி, பருப்பு, காய்கறி முதலானவற்றைக் கொடுத்து அனுப்புகிறார்கள். தற்காலத்தில் ஏழு கழித்தல் என்னும் நிகழ்வு திருமணத்திற்கு அடுத்த நாளே நடைபெறுகிறது.

மறு வீடு காணுதல்

திருமணமான நாளிலிருந்து பதினைந்தாம் நாள் மணமகன் வீட்டில் மறு வீடு காணுதல் என்னும் நிகழ்வு நடைபெறுகிறது. மணமகளின் உறவினர் அனைவரும் இந்த மறு வீடு நிகழ்விற்கு வந்து விருந்து உண்டு செல்கின்றனர். இந்தப் பதினைந்தாம் நாள் நடக்கக் கூடிய சடங்கு தற்காலத்தில் மூன்றாம் நாள், ஐந்தாம் நாள், என ஒற்றைப்படை நாட்களில் நடைபெறுகிறது. இந்தப் பதினைந்து நாளும் மணமகனின் உறவினரும் மணமகளின் உறவினரும் பெரும்பாலும் திருமண வீடுகளிலேயே தங்கியிருப்பார்கள். தற்காலத்தில் இந்த நிலை மாறி உள்ளது. போக்குவரத்து வசதியின் காரணமாக அவரவர் வீடுகளுக்குச் சென்று அவ்வப்போது வந்து செல்கின்றனர்.

படிகொடுத்தல்

விளவங்கோடு பகுதியில் கொல்லம் ஆண்டு பின்பற்றப்படுகிறது. கொல்லம் ஆண்டு பிறக்கின்ற முதல் நாளை மாதப் பிறப்பு என்கின்றனர். இந்த மாதப்பிறப்பிற்கு முந்தைய நாள் அல்லது ஒருவாரத்திற்கு முன் பெண் வீட்டிலிருந்து அரிசி, காய்கறி, கோழி முதலான பொருட்களைக் கொண்டு வந்து கொடுக்கின்றனர். தற்காலத்தில் கொண்டு வர இயலவில்லையென்றால் அதற்கான பணத்தைக் கொடுக்கிறார்கள். இதைப் போன்றே தீபாவளிக்கும் படி கொடுக்கிறார்கள்.

பொங்கல் பானை

பொங்கலின் போது மணப்பெண் வீட்டிலிருந்து முன்பு கொடுத்த படிபொருட்களுடன் பொரிய வெண்கலப் பானையையும் வழங்குகிறார்கள். இந்நிகழ்வினைப் பொங்கல்பானை கொடுத்தல் என்று குறிப்பிடுகிறார்கள். இந்தப் படிகொடுத்தல் நிகழ்வு அவரவர் வசதிக்கேற்பத் தொடர்ச்சியாக நடைபெறுகிறது. ஓர் ஆண்டிற்குள் வழங்குவது கட்டாயமாகக் கருதப்படுகிறது.

2. கிறித்தவத் திருமணச் சடங்கு

கிறித்தவத் திருமண முறையில் பலவகைத் திருமணங்கள் காணப்படுகின்றன. உரோமன் கத்தோலிக்கத் திருமணமுறை, தென்னிந்தியத் திருச்சபை மக்களின் திருமண முறை, பெந்தேகோஸ்தே சபை மக்களின் திருமண முறை, அசம்பளிஸ் ஆப் காட் சபை மக்களின் திருமண முறை என்பவை. சட்டங்கள், தனி மனித நலனையும் சமுதாய நலனையும் பாதுகாக்கும் பொருட்டே உருவாக்கப்பட்டவை. திருச்சபைச் சட்டங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. திருச்சபையின் திருமணச் சட்டங்கள், திருமணத்தின் நோக்கம், பண்பு இவற்றை வரையறுத்துத் தருவதோடு மட்டுமன்றி, திருமணம் என்னும் அமைப்பினையே பாதுகாக்கிறது. திருவிவிலியத்தை அடிப்படையாகக் கொண்ட, திருச்சபையின் போதனைகளில் வேரூன்றிய திருச்சபையின் திருமணச் சட்டங்கள் தனித்தன்மை வாய்ந்தவையாகத் திகழ்கின்றன.

ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை மக்களின் திருமண முறை

ஓர் ஆணும் ஒரு பெண்ணும் அன்பில் ஒன்றித்து வாழும் சமூக அமைப்பே குடும்பம் ஆகும். இல்லறம் இறைவன் ஏற்படுத்திய நல்லறம் மணமக்கள் இறைவனைச் சந்திக்கின்றனர். இறைவனும் அவர்கள் நடுவில் பிரசன்னமாயிருந்து, திருமண உறவில் அவர்களை இணைத்து வைக்கிறார். அவரே அவர்களை

ஆசீர்வதித்து வரங்களாலும் அருட்கொடைகளாலும் நிரப்புகின்றார் என்று கத்தோலிக்கக் கிறித்தவர்கள் நம்புகின்றனர்.

திருமணத்தின் இரு பண்புகள்

ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் இல்லறத்தில் ஒருமைப்பண்பு, முறிவுபடாப்பண்பு என்னும் இரு மூலக்கூறுகள் இருத்தல் அவசியம். ஒருமைப்பண்பு என்பது ஒருவனுக்கு ஒருத்தி என்பதாகும். இறைவன் வகுத்த நியதியும் இதுவே. மணமக்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் ஒருவரை ஒருவர் உறவில் பிரியாமல் வாழ்வது, 'முறிவுபடாத்தன்மை என்னும் பண்பைக் குறிக்கிறது.

வாழ்க்கைத்துணையைத் தேர்ந்தெடுத்தல்

வாழ்க்கைத் துணைத் தேர்வின்போது உருவம், உயரம், நிறம் எனும் உடற்பண்புகளிலும், சாதி, படிப்பு, பணவசதி, சமயம் என்னும் சமூக நிலைகளைப்பற்றியும் பெற்றோர் அதிக அக்கறை கொள்கின்றனர். அவற்றைவிட, ஆளுமைக்குரிய முக்கியத்துவம் வாய்ந்த உணர்ச்சிகள், விருப்பு, வெறுப்புகள், எதிர்பார்ப்புகள், கருத்துகள், மதிப்பீடுகள், நம்பிக்கைகள், பண்புகள், பழக்கவழக்கங்கள், பழகும் முறைகளில் மிகவும் கவனம் செலுத்தும்போது மனமொத்த இல்வாழ்வுக்கு இவை உதவுகின்றன.

ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை மக்கள் தென்னிந்தியத் திருச்சபை மக்களைத் திருமணம் செய்ய விரும்புவதில்லை. ரோமன் கத்தோலிக்கத் திருமணத்தில் பெண்ணின் ஞானப்பெற்றோர் மற்றும் மணமகனின் ஞானப்பெற்றோர் கலந்து கொள்வார்கள். திருமணத்திற்கு முன் மணமகனும் மணமகளும் திருமணத் தயாரிப்பு வகுப்பில் பங்கு கொள்ள வேண்டும்.

திருமணத்தயாரிப்புப் பயிற்சி வகுப்பு

திருமணம் நிச்சயிக்கப்பட்டு அறிக்கை வாசிப்பதற்கு முன் மணமகன் மற்றும் மணமகள் இரு நாட்கள் திருமணத்தயாரிப்புப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள வேண்டும். இரு நாட்கள் முழு நேரப் பயிற்சி வகுப்பு நடைபெறும். பேராயத்தின் கீழ் உள்ள வட்டாரத்தின் தலைமையகத்தில் வாரத்தின் இரு நாட்கள் சனி மற்றும் ஞாயிறு நடக்கும். ஒரு சில வட்டாரத்தில் வெள்ளி மற்றும் சனி ஆகிய இரு நாட்களும் நடக்கும். இந்த வகுப்பில் சான்றிதழ் கொடுப்பார்கள். அந்தச் சான்றிதழைக் கொடுத்தால்தான் திருச்சபையில் திருமணம் நடத்துவார்கள். இல்லையென்றால் திருமணம் நடத்தமாட்டார்கள். ஒரு நாளைக்கு எட்டு வகுப்பு எனப்

பதினாறு வகுப்புகள் நடைபெறும். இந்த வகுப்பில் உரையாடல், குடும்ப அன்பு, குடும்ப உறவு, பாலுறவு, குழந்தைப்பேறு இவ்வாறு வாழ்க்கை நெறிமுறைகள் குறித்த பாடங்கள் நடைபெறும். இந்த வகுப்பில் கலந்து கொண்ட மாணவர்களிடம் அவர்கள் என்ன பயின்றார்கள் என்பதைப் பாரிசோதிக்க பங்குத் தந்தை சில கேள்விகள் கேட்பார். அதில் சாரியாகப் பதில் சொல்பவர்களுக்கு மட்டுமே விண்ணப்பம் கொடுத்துத் திருமண அறிக்கை தயாரிப்பார்கள்.

ஓலை வாசித்தல்

திருமணத்திற்கு முன் மூன்று வாரங்களுக்கு முன்னரே ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் திருச்சபையில் திருமண அறிக்கை வாசிப்பார்கள். இதனை ஓலை வாசித்தல் என்பர். பங்குத்தந்தை திருமண அறிவிப்பை வாசிப்பார். ............. திருச்சபையைச் சார்ந்த .........இன்னாருடைய மகன் .........ம், ............... திருச்சபையைச் சார்ந்த .......... இன்னாருடைய மகள் ...........ரும் ஒருவரை ஒருவர் விவாகம் செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள். இந்த விவாகம் நடைபெறத் தடை ஏதாவது இருந்தால் முதல் அறிவிப்புத் தேதிக்குப்பின் பதினைந்து நாட்களுக்குள்ளும் இரண்டாம் அறிவிப்புத் தேதிக்குப்பின் பத்து நாட்களுக்குள்ளும் மூன்றாம் அறிவிப்புத் தேதிக்குப்பின் மூன்று நாட்களுக்குள்ளும் போதகருக்கு எழுத்து மூலம் தொரிவிக்க வேண்டும் என்று பங்குத் தந்தை அறிவிப்பார். யாராவது தடை தொரிவித்தால் அதனை விசாரித்துத் தகுந்த தடையாக இருந்தால் திருமணத்தை நடத்த மாட்டார். இல்லையென்றால் நியமிக்கப்பட்டபடி திருமணம் நடைபெறும். ஒரு சிலர் அவசரத் திருமணம் நடத்துவார்கள். திருமணத்திற்கு ஒருவாரம் இருக்கும் போது திருமண அறிக்கை தயாரிக்கும் சூழல் ஏற்படும். அச்சமயங்களில் சிறப்பு அறிக்கை வாசித்துத் திருமணம் நடத்துவார்கள். சிறப்பு அறிக்கை வாசிப்பதற்குப் பேராயாரிடம் சென்று மன்னிப்புக் கோரி அபராதத் தொகையைக் கட்டி அனுமதி வாங்கவேண்டும். பேராயர் அவசரத் திருமணத்தின் காரணம் என்ன என்று வினவி, தகுந்த காரணம் இருந்தால் மன்னித்து அனுமதி வழங்குவார்.

திருமண உறுதி மொழி

ஓர் ஆணையும் ஒரு பெண்ணையும் திருமணத்தில் இணைப்பவர் இறைவன் என்ற நம்பிக்கை கத்தோலிக்கக் கிறித்தவ மக்களிடையே காணப்படுகிறது. திருமணத்திற்கு அடையாளமாக அணியும் தாலியினைப் பங்குத்தந்தை செபம் செய்து மணமகனுடைய கையில் கொடுக்க மணமகன் மணமகளுடைய கழுத்தில் அணிவான். தாலியை அணியும் முன் பங்குத்தந்தை இருவாரிடமும் ஒப்புதல் கேட்பார். யாருடைய

கட்டாயமுமில்லாமல் இத்திருமணத்திற்குச் சம்மதிக்கிறீர்களா? என்று கேட்கிற கேள்விக்கு ஆம் என்று பதில் கூறினால்தான் பங்குத்தந்தை திருமணத்தை நடத்தி வைப்பார். மணமகன் மணமகள் கழுத்தில் தாலியை அணிவித்தவுடன் பங்குத்தந்தை "கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருப்பானாக" என்று கூறுவார்.

விளவங்கோடு வட்டாரத்தில் கத்தோலிக்கத் திருச்சபையில் இரு இனத்தினர் காணப்படுகின்றனர். நாடார் இனத்தில் மணமகள் கழுத்தில் அணியக்கூடிய தாலி மணமகன் இல்லத்திலிருந்து கொண்டு வருவான். ஆனால் முக்குவர் என்று கூறப்படும் மீனவர் இனத்தில் உள்ளவர்கள் மணமகள் கழுத்தில் அணியக்கூடிய தாலி மணமகள் வீட்டிலே வாங்குவார்கள். மணமகன் தாலியைக் கட்டுவான்.

திருமணம் முடிந்தவுடன் நாடார் இனத்தில் உள்ள மணப்பெண் மணமகன் இல்லத்திற்குச் செல்வாள். ஆனால் முக்குவர் இனத்தில் உள்ள மணப்பெண் அவளது இல்லத்திலேயே கணவனுடன் தங்கியிருப்பாள். ஏனென்றால் புதிதாக ஓர் இல்லத்திற்குச் செல்லும்போது பெண்ணிற்கு அச்சம், சங்கடம் இருக்கும். தனது கணவன் மற்றும் அவரது உறவினர் எப்படிப்பட்டவர்கள் என்று தொரியாது. ஒரு புதிய ஆணோடே எந்தவொரு பழக்கமும் இல்லாமல் அவன் வீட்டிற்கு போவதற்குச் சற்றுப் பயமாக இருக்கும். ஆகவே அவள் தனது இல்லத்திலேயே கணவனுடன் பழகிய பின்னர்க் கணவனின் மன நிலையைப் புரிந்து கொண்டு கணவனுடன் அன்னியோன்யமாகி மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு நாட்கள் கழித்துக் கணவன் இல்லத்திற்குச் செல்வாள். அவர்களை அழைத்துச் செல்ல கணவன் வீட்டிலிருந்து உறவினர் வருவார்கள்.

சீர்திருத்தக் கிறித்தவர்களின் திருமண முறை

பெண் தேடல்

ஒரு பெண் திருமண வயதை எட்டியதும் பெண்ணின் பெற்றோர், உறவினர் மற்றும் நண்பர்களிடம் "நல்ல பையன் இருந்தால் சொல்லுங்கள்" என்று கூறுவார்கள். அதுமட்டுமல்லாமல் தரகர்களிடமும் சொல்லுவார்கள். ஒரு சில பெண்களின் பெற்றோர் மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிக்கும்முன் அந்தப் பெண்களைப் பற்றித் தொரிந்த தரகர்கள் அவர்களுக்கு ஏற்ற மாப்பிள்ளையைக் கொண்டு வருவார்கள். முக்கியமாகப் பெண்வீட்டின் செல்வாக்குக்கு ஏற்ற விதத்தில்தான் மாப்பிள்ளை தேடுவார்கள். அதுமட்டுமல்லாமல் பெண் மருத்துவராக இருந்தால் மருத்துவ மாப்பிள்ளை பார்ப்பார்கள். பெண் பொறியாளராக இருந்தால் பொறியாளராயிருக்கிற மாப்பிள்ளை பார்ப்பார்கள். பெண்ணின் படிப்பிற்கு ஏற்ற மாப்பிள்ளை பார்ப்பார்கள்.

அதுமட்டுமல்லாமல் பெண்ணின் உயரத்திற்கும் வயதிற்கும் ஏற்ற மாப்பிள்ளையைத் தேடுவார்கள்.

பெண் பார்த்தல்

ஒரு சில குடும்பங்களில் முதன்முதலில் பெண்ணைப் பார்ப்பதற்குப் பெண்ணின் வீட்டிற்குச் செல்ல மாட்டார்கள். பெண் ஓய்வுநாளில் ஆலயத்திற்குச் செல்லும்போது வழியில் நின்று பார்ப்பார்கள். பெண்ணைப் பிடித்துவிட்டால் அதன்பிறகு பையனின் பெற்றோர் பையனையும் அழைத்துக்கொண்டு பெண் வீட்டிற்குச் செல்வார்கள். மாப்பிள்ளை வீட்டார் ஒரு நல்ல நாளில் பெண் பார்க்கப் பொரியோர் மூலம் சொல்லி அனுப்புவது முன்னாளைய வழக்கம். இது சங்க காலத்திலேயே இருந்த மரபாகும்.

வரவேற்பறையில் அனைவரும் உட்கார்ந்திருப்பார்கள். பெண் தட்டில் காப்பியை எடுத்துக் கொண்டு குனிந்த தலை நிமிராமல் அனைவருக்கும் கொடுத்துவிட்டு உள்ளே சென்று விடுவாள். அவள் சாரியாகப் பையனைப் பார்ப்பதில்லை.

ஒரு சில காலகட்டத்திற்குமுன் தனக்கு வரப்போகும் கணவன் எப்படி இருப்பார் என்று பெண் பார்ப்பதில்லை. திருமணம் முடிந்தபிறகுதான் பார்ப்பார்கள். ஏனென்றால் பெண்கள் ஆண்களை நேரடியாகப் பார்ப்பதற்கே வெட்கப்படும் காலம் அது.

பெண் பார்க்கச் செல்லும் போது கையில் பூத்தட்டு மற்றும் பழத்தட்டுடன் செல்வார்கள். பெண்ணைப் பிடித்துவிட்டால் ஒரு சில குடும்பங்களில் பெண்ணின் தலையில் பையனின் அம்மா பூ வைக்கும் வழக்கமும் உண்டு. ஒரு சில குடும்பங்களில் பெண்ணைப் பார்த்தவுடனே பெண்ணின் கையில் மோதிரம் அல்லது காப்பினைப் பையனின் அம்மா அணிவிப்பார்கள். பின்னர் ஆண் வீட்டார் தங்களுடைய வீட்டிற்கு வருமாறு அழைப்பார்கள். பெண்ணின் உறவுமுறையில் உள்ள ஆண்கள் ஐந்து பேர் அல்லது ஏழு பேர் அல்லது ஒன்பது பேர் சேர்ந்து பையன் வீட்டிற்குச் செல்வார்கள். பையனின் வீடு, குடும்பம் பிடித்திருந்தால் முறைப்படி திருமணத்திற்கான கொடுக்கல் வாங்கல் பற்றிப் பேசுவார்கள். கையில் ரொக்கப் பணமும் பெண்ணிற்கு எத்தனை பவுன் (சவரன்) ஆபரணம் போடுவார்கள் என்பதைப் பற்றியும் பேசுவார்கள். அதற்கு உடன்பாடு இருந்தால் மண உறுதிப்பாடு (நிச்சயதார்த்தம்) நடத்தும் நாளைக் குறிப்பிடுவார்கள். நிச்சயதார்த்தம் என்பதை ‘எங்கேஜ்மென்று“ என்றும் நிச்சயத்தாம்பூலம் என்றும் கூறுவார்கள். எங்கேஜ்மென்று என்பதற்குத் திருமண ஒப்பந்தம் என்று பொருள்.

திருமண நிச்சயதாம்பூலம்

இரு வீட்டில் உள்ளவர்களுக்கும் பிடித்திருந்தால் மண உறுதிப்பாடு அதாவது மண ஒப்பந்தம் நடத்துவர். மண ஒப்பந்தத்திற்கான நாளை குறிப்பிடுவர். மண உறுதிப்பாடு பெரும்பாலும் மணமகளின் இல்லத்தில் நடத்துவர். ஒருசிலர் திருமண மண்டபங்களிலும் நடத்துகின்றனர். மணமக்களின் நெருங்கிய உறவினர்கள் மட்டுமே கலந்து கொள்வர். மணமகனின் பெற்றோர் மற்றும் உறவினர் கையில் பூத்தட்டு, பழத்தட்டு ஏந்தி மணமகள் இல்லத்திற்குச் செல்வர். பூ, மற்றும் பழத்துடன் பெண்ணிற்கு அணிவிப்பதற்காகக் காப்பு அல்லது மோதிரம் எடுத்துச் செல்வர். ஒரு சிலர் காப்பு மற்றும் மோதிரம் இரண்டையும் எடுத்துச் செல்வர். மணமகளின் இல்லத்திற்குச் சென்றவுடன் ஒரு பக்கத்தில் மணமகன் மற்றும் அவரது பெற்றோர் அமர்வர். மறுபக்கத்தில் மணமகள் மற்றும் அவளது பெற்றோர் அமர்வர். சபைப் போதகர் ஜெபம் செய்து மணமகன் கொண்டுவந்த பொருட்களை ஆசீர்வதிப்பார். பின்னர் மணமகன், மணமகளுக்காகக் கொண்டு வந்த நிச்சயாம்பலப் புடவையை மணமகள் கையில் கொடுப்பார். மணமகள் மகிழ்ச்சியுடன் வாங்கிவிட்டுப் புடவை மாற்றச் சென்றுவிடுவாள். புடவையைச் சீலை அல்லது சாரி என்றே விளவங்கோடு வட்டார மக்கள் கூறுவர். மணமகனின் சகோதரன் மணமகளுக்கு அணிவதற்குக் கொண்டுவரப்பட்ட காப்பு மற்றும் மோதிரத்தை நிகழ்வில் கலந்து கொள்ள வந்திருக்கும் அனைவாரிடமும் எடுத்துச் சென்று ஆசீர்வாதம் வாங்குவார்.

அதைப்போல் மணமகளின் சகோதரனும் மணமகனுக்கு அணிவதற்காக வைக்கப்பட்டிருக்கும் செயின் மற்றும் மோதிரத்தை அனைவாரிடமும் எடுத்துச் சென்று ஆசீர்வாதம் வாங்குவார். அதற்குள் மணமகள் மணமகன் வழங்கிய சேலையைக் கட்டிக்கொண்டு வருவாள். சபைப்போதகர் பாடல் பாடி, வேதத்திலிருந்து ஒரு பகுதியை வாசித்துச் செபம் ஏறெடுப்பார்.

“நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது. அவாரிடத்தில் யாதொரு மாறுதலும் வேற்றுமையின் நிழலுமில்லை.

என் எஜமானாயிருக்கிற ஆபிரகாமுக்குத் தேவனாயிருக்கிற கர்த்தாவே, இன்றைக்கு நீர் எனக்குக் காரியம் சித்திக்கப் பண்ணி என் எஜமானாகிய ஆபிரகாமுக்குத் தயை செய்தருளும்.

அப்பொழுது அந்த மனிதன் தலைகுனிந்து, கர்த்தரைப் பணிந்துகொண்டு, என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாயிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அவர்

தம்முடைய கிருபையையும், தம்முடைய உண்மையையும் என் எஜமானைவிட்டு நீக்கவில்லை. நான் பிரயாணம் பண்ணி வருகையில், கர்த்தர் என் எஜமானுடைய சகோதரர் வீட்டுக்கு என்னை அழைத்துக் கொண்டு வந்தார் என்றான்.

அப்பொழுது கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே, உள்ளே வாரும், நீர் வெளியே நிற்பானேன்? உமக்கு வீடும், ஒட்டகங்களுக்கு இடமும் ஆயத்தம் பண்ணியிருக்கிறேன் என்றான். அப்பொழுது ஆபிரகாமின் ஊழியக்காரன், தலைகுனிந்து, கர்த்தரைப் பணிந்து கொண்டு, நான் என் எஜமானுடைய சகோதரன் குமாரத்தியை அவர் குமாரனுக்குக் கொள்ள என்னை நேர்வழியாய் நடத்திவந்த என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாயிருக்கிற கர்த்தரை ஸ்தோத்தாரித்தேன்.

இப்பொழுது நீங்களும் என் எஜமானுக்குத் தயையும் உண்மையும் உடையவர்களாய் நடக்க மனதுள்ளவர்களானால், எனக்குச் சொல்லுங்கள்: இல்லையென்றால் அதையும் எனக்குச் சொல்லுங்கள். அப்பொழுது நான் வலதுபுறத்தையாகிலும், இடதுபுறத்தையாகிலும் நோக்கிப் போவேன் என்றான்.

அப்பொழுது லாபானும்,பெத்துவேலும் பிரதியுத்திரமாக: இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது. உமக்கு நாங்கள் நலம் பொலம் ஒன்றும் சொல்லக்கூடாது.

இதோ, ரெபேக்காள் உமக்கு முன்பாக இருக்கிறாள். கர்த்தர் சொன்னபடியே அவள் உமது எஜமானுடைய குமாரனுக்கு மனைவியாகும்படிக்கு அவளை அழைத்துக் கொண்டுபோம் என்றார்கள். குணசாலியான ஸ்திரியைக் கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது.

பின்பு அந்த ஊழியக்காரன் வெள்ளியுடமைகளையும், பொன்னுடைமைகளையும், வஸ்திரங்களையும் எடுத்து ரெபேக்காளுக்குக் கொடுத்ததுமின்றி, அவளுடைய சகோதரனுக்கும், தாய்க்கும் சில உச்சிதங்களையும் கொடுத்தான்.

நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன். நீதியும், நியாயமும், கிருபையும், உருக்க இரக்கமுமாய் உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன். உண்மையாய் உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன். நீ கர்த்தரை அறிந்துகொள்ளுவாய். கர்த்தாவே, இரட்சியும் கர்த்தாவே, காரியத்தை வாய்க்கப்பண்ணும்.”19

பின்னர்ச் செயினை (தங்க சங்கிலியை) ஆசீர்வதித்து மணமகளின் கையில் கொடுப்பார். மணமகள் போதகாரின் கையிலிருந்து வாங்கி மணமகனின் கழுத்தில்

அணிவிப்பாள். அதைப்போல் காப்பு அல்லது மோதிரத்தைப் போதகர் ஆசீர்வதித்து மணமகனின் கையில் கொடுப்பார். மணமகன் அதனை மணமகளின் கையைப்பிடித்து அணிவிப்பார். காப்பு என்றால் கையிலும் மோதிரம் என்றால் விரலிலும் அணிவார். பின்னர்க் கொண்டுவந்த பொருட்களை மாறி மாறிக் கொடுப்பார்கள். குறிப்பாகப் பெண்வீட்டார் மணமகனுக்கு வரதட்சணையாகப் பணம் கொடுப்பார்கள். பின்னர்ப் பெற்றோரின் ஒப்பந்தம் நடைபெறும். அதன் பின்னர் மணமக்களை இணைந்து அமர வைப்பர். இறுதியாகப் போதகர் இருவர் நெற்றியிலும் சிலுவை அடையாளத்தை வரைந்து ஆசீர்வதிப்பார். பின் அனைவருக்கும் விருந்து பாரிமாறப்படும்.

திருமண நிகழ்வு

பெரும்பாலும் நிச்சயதார்த்தம் முடிந்து மூன்று மாதங்களுக்குள் திருமணம் நடைபெறும். திருமணம் நடைபெறுவதற்கு முன் மூன்று வாரங்கள் திருச்சபையில் திருமண அறிக்கை வாசிக்கப்படும். திருமணத்திற்குத் தடை ஏதும் காணப்படுமென்றால் திருச்சபை மக்கள் எழுத்து மூலமாகச் சேகரத்துப் போதகருக்குத் தொரிவிக்க வேண்டும். திருமண அறிக்கை வாசிக்கப்பட்ட பின்னர் மணமகள் வீட்டிற்கு வெளியில் போவதைத் தவிர்த்து வீட்டினுள் தங்கியிருப்பாள். சிலர் தங்கள் உறவினர்களையும் நண்பர்களையும் அழைப்பதற்கு அழைப்பிதழ் அச்சிடுகின்றனர். அழைப்பிதழ் தாய் மொழியாகிய தமிழ் மொழியில் மட்டுமே அச்சிடப்படுகிறது. அழைப்பிதழைப் ‘பத்திரிகை“ என்றே வழங்குகின்றனர். சிலர் உறவினர்களுக்குப் பத்திரிகை வழங்கும் பொழுது வெற்றிலை, பாக்குடன் கொடுக்கின்றனர். சிலர் அழைப்பிதழை மட்டும் தனியாகக் கொடுக்கின்றனர். அழைப்பிதழின் நான்கு மூலைகளிலும் சிலர் மங்கலப் பொருளான மஞ்சளைத் தடவிக் கொடுக்கின்றனர்.

திருமண அழைப்பிதழ் சுற்றத்தார், நண்பர்கள், உறவினர்களுக்குக் கொடுப்பர். திருமண அழைப்பிதழைப் பெண்ணின் தந்தை அல்லது அண்ணன் தம்பி கொடுப்பார்கள். ஆண் வீட்டில் மணமகன் அல்லது மணமகனின் தந்தை அல்லது சகோதரர்கள் கொடுப்பார்கள்.

திருமணப் புடவை

பெரும்பாலும் தென்னிந்தியத் திருச்சபைக் கிறித்தவத் திருமணத்தில் கல்யாணச்சீலை சந்தன நிறத்தில்தான் எடுப்பார்கள். புடவை எடுக்க ஒரு சில குடும்பங்களில் மணப்பெண்ணையும் அழைத்துச் செல்வர். மணமகனின் சகோதாரிகளுக்கும் மணமகனின் கொழுந்தியாருக்கும் மணமகள் வரவேற்பு நேரத்தில்

அணிவதற்கும் பட்டுப் புடவைகள் எடுப்பார்கள். அறிமுகமான தட்டானிடம் (பொற்கொல்லனிடம்) தாலி செயின் செய்யும்படி கொடுப்பார்கள். தாலி செயினின் நீளம் ஐந்து பிடி, ஏழு பிடி எனப் பிடிக் கணக்கில் செய்வர். தாலி செயின் ஐந்து பவுன் அல்லது ஏழு பவுன் அல்லது ஒன்பது பவுன் அல்லது பதினொன்று பவுன் என அவரவர் நிலைமைக்கேற்றபடி செய்வர். அதிகமான பவுனில் தாலி செய்வதைக் கௌரவமாகக் கருதுகின்றனர்.

இன்னும் மணப்பெண்ணிற்குத் தேவையான செருப்பு, நெற்று, £த், பவுடர், சீப்பு, கொண்டைவலை, உள்ளாடை, கைக்குட்டை என அனைத்துப் பொருட்களையும் வாங்குவர்.

திருமண வரவேற்பு

திருமணத்திற்கு முந்தைய நாள் மாலை நான்கு அல்லது ஐந்து மணிமுதல் மணப்பெண்ணின் வீட்டிலோ அல்லது திருமண மண்டபத்திலோ வரவேற்பு நடைபெறும். மணப்பெண் மணக்கோலத்தில் காணப்படுவாள். முகூர்த்தத்திற்கு வர இயலாதவர்கள் வரவேற்பில் கலந்து கொண்டு மணமகளை வாழ்த்திச் செல்வார்கள். இரவு ஒன்பது அல்லது பத்து மணி வரை வரவேற்பு நடைபெறும்.

காய்கறி வெட்டுதல்

திருமணத்திற்கு முந்தைய நாள் இரவில் காய்கறி வெட்டும் முறை நடைபெறும். மறுநாள் விருந்திற்குத் தேவையான காய்கறிகளைப் போதகர் செபம்பண்ணி ஆசீர்வதித்து ஒரு சில காய்களை இரண்டாக வெட்டிக் கொடுப்பார். அதன் பின்னர்ச் சுற்றத்தார் உறவினர்கள் சேர்ந்து காய்களை வெட்டுவார்கள். தேங்காய் திருவுவார்கள். உள்ளியைக் (சின்ன வெங்காயம்) குவித்து வைத்திருப்பார்கள். சிறுவர்கள் அதனைச் சுற்றி அமர்ந்து கொண்டு உள்ளியை உரிப்பார்கள்.

மணமகன் பெண் இல்லம் புறப்படுதல்

திருமண நாளன்று காலையில் மணமகன் பூமாலை அணிந்துகொண்டு தனது இல்லத்திலிருந்து போதகருடைய ஆசீர்வாதத்தோடும் மேளதாளத்தோடும் மணமகள் இல்லத்திற்குப் புறப்படுவார் அநேக உறவினர்களுடனும் சுற்றத்தாருடனும் நண்பர்களுடனும் செல்வார் அலங்காரிக்கப்பட்ட மகிழுந்தில் செல்வார். முதலில் மணமகனுடைய வாகனம் செல்ல அதனைத் தொடர்ந்து மேளவாத்திய வாகனமும் பின்னர்ப் பல வாகனங்கள் ஒன்றன்பின் ஒன்றாகச் செல்லும்.

பெண் இல்லத்தில் மணமகன்

திருமண நாளன்று மணமகன் மேளதாளத்துடன் மணக்கோலம் பூண்டு மணப்பெண்ணின் இல்லத்திற்கு உற்றார் உறவினருடன் செல்வார். மணமகளின் அண்ணன் அல்லது தம்பி மணமகனை எதிர்கொண்டு வரவேற்பார். தட்டில் எடுத்துச் சென்ற மலர்மாலையை மணமகன் கழுத்தில் அணிந்துவிட்டு மணமகன் அணிந்து வந்த மாலையைக் கழற்றி மணமகளுக்கு எடுத்துச் செல்வார். மணமகன் கையில் கொண்டு வந்த பூச்செண்டை வாங்கி விட்டு, தான் வைத்திருந்த செண்டை மணமகன் கையில் கொடுப்பார். பின்னர் மணமகனின் நெற்றியில் சந்தனம் வைத்து, பன்னீர் தெளித்து மணமகனின் கையைப் பிடித்து மணவறைக்கு அழைத்துச் செல்வார். இந்நிகழ்வை “எதிர்மாலை சந்தனம்” என்பர்.

எதிர்மாலை சந்தனம்

மணமகள் இல்லத்திற்குள் அல்லது திருமண மண்டபத்திற்குள் வருமுன் மணமகளின் சகோதரர்கள் தாங்கள் வாங்கி வைத்திருந்த பூமாலை, பூச்செண்டு, பன்னீர், சந்தனத்துடன் மணமகனை எதிர்கொண்டு சென்று பூமாலையை மணமகனின் கழுத்தில் அணிவித்துவிட்டு மணமகன் கழுத்தில் அணிந்திருந்த மாலையை மணமகளுக்கு அணிவதற்காகக் கழற்றி வருவர். அதே போல் மணமகன் கையில் கொண்டு வந்த பூச்செண்டை வாங்கிவிட்டு, தாங்கள் வைத்திருந்த பூச்செண்டை மணமகனின் கையில் கொடுப்பர். மணமகனின் நெற்றியில் சந்தனத்தை வைத்து மணமகனின் கையைப் பிடித்து உள்ளே அழைத்துச் செல்வர்.

பெண் திருமண ஆடை உடுத்தல்

மணமகன் மணவறையில் அமர்ந்திருக்க மணமகனின் சகோதாரிகள் திருமணப் புடவையை மணமகளுக்கு உடுத்திக் கொடுப்பதற்காக மணமகளின் அறைக்குள் செல்வர். அக்காலத்தில் மணப்பெண்ணிற்கு உடற்குறைபாடு உள்ளதா என்பதை அறிவதற்காக மணமகனின் சகோதாரிகள் மணப்பெண்ணிற்குத் திருமணப் புடவை உடுத்திக் கொடுப்பார்கள். ஆடை உடுத்திக் கொடுப்பது மட்டுமல்லாமல் மணமகளை அலங்காரமும் செய்வார்கள்.

பின்னர் மணமகள் ஆடை அலங்காரம் செய்யும் வரை மணமகன் மணவறையில் அமர்ந்திருப்பார். அதன்பின் போதகர் செபம் செய்து முடித்தபின் ஆலயத்திற்குச் செல்வர். முதலில் மேளதாளக் குழுவினர் செல்வர். அதன்பின் மணமகன் செல்வார். மணமகனைத் தொடர்ந்து மணமகனுடைய உறவினர்

செல்வார்கள். அதன்பின் மணமகள் செல்வாள். மணமகளின்பின் மணமகளுடைய உறவினர் செல்வார்கள். ஆலயத்தில் மணியோசை எழுப்பப்படும். முதலில் முதலாம் மணி அடிக்கப்படும். மணமக்கள் வந்த உடன் இரண்டாம் மணி அடிக்கப்படும். "ஏதேனில் ஆதி மணம் உண்டான நாளிலே"..... என்னும் பாடல் பாடப்படும்போது மணமக்கள் ஆலயத்தின் முன்பகுதிக்குச் செல்வர்.

திருமண ஆராதனை முறை

(சபையார் எழுந்து நின்று பாடலாம்)

ஏதேனில் ஆதி மணம்
உண்டான நாளிலே
பிறந்த ஆசீர்வாதம்
மாறாதிருக்குமே
இப்போதும் பக்தியுள்ளோர்
விவாகம் தூய்மையாம்
மூவர் பிரசன்னமாவார்
மும்முறை வாழ்த்துண்டாம்
ஆதாமுக்கு ஏவாளைக்
கொடுத்த பிதாவே,
இம்மாப்பிள்ளைக்குப் பெண்ணைக்
கொடுக்க வாருமே,
இரு தன்மையும் சேர்ந்த
கன்னியின் மைந்தனே
இவர்கள் இரு கையும்
இணைக்க வாருமே,
மெய் மணவாளனான
தேவ குமாரர்க்கே
சபையாம் மனையாளை

ஜோடிக்கும் ஆவியே,

நீரும் இந்நாளில் வந்து

இவ்விரு பேரையும்

இணைந்து அன்பாய் வாழ்த்தி,

மெய்ப் பாக்கியம் ஈந்திடும் - ஆமென். 20

குரு

“பிரியமானவர்களே! இந்த மாப்பிள்ளையையும் பெண்ணையும் திருமணத்தில் இணைப்பதற்காகக் கடவுள் முன்னிலையில் நாம் கூடி வந்திருக்கிறோம். திருமண வாழ்க்கை கடவுளால் நியமிக்கப்பட்டது. எல்லா மனிதரும் இதை மேன்மையானதாகக் கொள்ள வேண்டுமென்று திருமறை கட்டளையிடுகிறது நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து கலிலேயாவில் கானா ஊரில் தம்முடைய பிரசன்னத்தால் இதை ஆசீர்வதித்தார்.

திருமண வாழ்க்கையைக் குறித்து நமது ஆண்டவர் சொல்லுவதைக் கேளுங்கள்

சிருஷ்டிப்பு முதல் கடவுள் அவர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். இதினிமித்தம் ஒருவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான். இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். ஆகவே இனி அவர்கள் இருவரல்லர். ஒரே மாம்சமாயிருக்கிறார்கள், இப்படியிருக்க, கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருப்பானாக?

ஆகையால் திருமணத்தை ஒருவரும் அற்பமாய் எண்ணி யோசனையின்றிச் செய்யாமல், கருத்தோடும், ஜெபத்தோடும், திருமணம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நோக்கங்களைச் சிந்தித்து அதைச் செய்வது அவசியம்.

கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் இன்பத்திலும், துன்பத்திலும், தங்கள் வாழ்நாள் முழுவதும் தோழமையும், உதவியும், ஆதரவும் அளிக்கவும், கடவுள் தாமே படைத்து, கிறிஸ்துவில் மீட்டுக் கொண்ட சுபாவ உணர்ச்சிகளை அவரே தூய்மைப்படுத்தி வழி நடத்தவும், குடும்பங்களில் பிள்ளைகள் பிறந்து, கடவுளுக்கு மகிமையாக நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைப்பற்றிய அறிவில் வளர்க்கப்படவும், இவ்விதமாய்த் திருமணத்தை மேன்மையுள்ளதாகக் கருதுவதால்,

மனுக்குலம் உறுதியான அடிப்படைகளில் நிற்கவுமே, திருமணம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

குரு: இவ்விருவரும் இந்தத் தூய நிலைமையில் ஒன்றாக்கப்படுவதற்காக இங்கே வந்திருக்கிறார்கள். ஆனால் உங்களில் யாருக்காவது திருச்சபையின் நியமப்படியும், தேசச் சட்டப்படியும், இவ்விருவருக்கும் திருமணம் நடத்தக் கூடாதென்று நியாயமான தடை ஏதாவது தொரியுமானால் அதை இப்பொழுதே தொரிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் இனி இதைக்குறித்து ஒருக்காலும் ஒன்றும் சொல்லக்கூடாது.

(தடையொன்றும் சொல்லப்படவில்லையானால் குரு திருமணம் செய்ய வந்திருக்கும் இருவருக்கும் சொல்லுவது)

நீங்கள் இருவரும் திருமணத்தில் ஒன்றாய் இணைக்கப்படக் கூடாதபடி உங்களில் இருவாரில் யாருக்காவது ஏதாவது காரணமிருந்தால், அதை இப்பொழுதே தொரிவிக்கக் கடவுள் முன்னிலையில் உங்கள் இருவருக்கும் கட்டளையிடுகிறேன். ஆமென்.

ஜெபம்

குரு: சர்வ வல்லமையும் மிகுந்த இரக்கமுமுள்ள பிதாவே, உம்முடைய உதவியின்றி நாங்கள் யாதொன்றையும் தகுந்த முறையில் செய்யத் திராணியற்றவர்கள். இவ்விருவரையும் உமது பராமாரிப்பின்படி இங்கே அழைத்து வந்தீர். ஆதலால் இவர்கள் கொடுக்கப்போகும் வாக்குறுதிகளை உண்மையாய்ப் பாதுகாக்கவும், உம் பேரருளை இவர்களில் பெருகச் செய்ய வேண்டுமென்று எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மூலம் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.” 21

மணமகனின் அருகில் தோழமையாக மணமகனின் அத்தான் அமர்ந்திருப்பார். மணமகளின் அருகில் தோழமையாக மணமகளின் அண்ணி அமர்ந்திருப்பார்.

(சபையார் உட்கார்ந்து பாடலாம்)

லோகம் ஆளும் ஆண்டவர்

ஆணும் பெண்ணும் செய்தனர்

இருபேரும் வாழவே

ஆசீர்வாதம் தந்தாரே

ஆதலால் விவாகமே

மேன்மையுள்ளதாயிற்றே

இந்த நன்மைக்காகவும்

ஸ்தோத்திரம் உண்டாகவும்

தேவ வாக்குக்கேற்றதாய்

விசுவாசமுள்ளோராய்

நடப்போர்க்கு நன்மையே

தவறாதளிப்பாரே

இந்த இரு பேரையும்

கர்த்தரே கடாட்சியும்

இவரால் புகழ்ச்சியே

தேவா£ர்க்குண்டாகவே - ஆமென் 22

குரு மாப்பிள்ளையைப் பார்த்து

.............................. நீர் ..........................ஐ உம் மனைவியாக ஏற்றுக்கொண்டு அவரை மாத்திரம் பற்றிக் கொள்ளுவீரா?

மாப்பிள்ளை விடை : ஆம்

குரு பெண்ணைப் பார்த்து:

............................. நீர் ......................... ஐ உம் கணவராக ஏற்றுக்கொண்டு, அவரை மாத்திரம் பற்றிக் கொள்ளுவீரா?

பெண் விடை: ஆம்

(பெற்றோராலோ, போஷகராலோ பெண் திருமணத்துக்காகக் கொடுக்கப்பட்டால் குரு சொல்லுவது):

இந்தப் பெண்ணைத் திருமணத்திற்காகக் கொடுக்கிறவர் யார்?

(தகப்பனார் அல்லது போஷகர் பெண்ணின் வலது கையை மாப்பிள்ளையின் வலது கையில் கொடுப்பார். கைகளைக் கோத்தபின் குரு சொல்ல, அவருக்குப் பின் மாப்பிள்ளை சொல்லுவது:)

“.......................... ஆகிய நான் .................... ஆகிய உம்மை என் மனைவியாக ஏற்றுக்கொண்டு, இன்று முதல் நன்மையிலும், தீமையிலும், வாழ்விலும், தாழ்விலும், சுகத்திலும் சுகவீனத்திலும் மரணம் நம்மைப் பிரிக்கும்வரை, கடவுளுடைய தூய நியமப்படி, உம்மை நேசிக்கவும், காப்பாற்றவும் வாக்குக் கொடுக்கிறேன்.

(அவர்கள் இன்னும் கைகளைக் கோத்துக் கொண்டிருக்க குரு சொல்ல, அவருக்குப்பின் பெண் சொல்லுவது:)

.......................... ஆகிய நான் .................... ஆகிய உம்மை என் கணவராக ஏற்றுக்கொண்டு, இன்று முதல் நன்மையிலும், தீமையிலும், வாழ்விலும், தாழ்விலும், சுகத்திலும் சுகவீனத்திலும் மரணம் நம்மைப் பிரிக்கும்வரை, கடவுளுடைய தூய நியமப்படி, உம்மை நேசிக்கவும், காப்பாற்றவும் உமக்குக் கீழ்ப்படியவும் வாக்குக் கொடுக்கிறேன்.

குரு: இவ்வாக்குறுதியைக் கடவுள் கேட்டார், நாங்களும் கேட்டோம்.” 23

திருமாங்கல்யத்தைக் குருவானவர் கையில் எடுத்துக்கொண்டு புதிதாகத் திருமணத்தில் இணைய இருக்கும் மணமக்களுக்காக இறைவனிடம் வேண்டுதல் செய்வார்.

பாடகர் குழுவினர் ஜெப நிலையில் பின்வரும் பாடலைப் பாடுவர்

புத்திக்கெட்டாத அன்பின் வாரி பாரும்
உம் பாதம் அண்டினோமே தேவா£ர்
விவாகத்தால் இணைக்கும் இரு பேரும்
ஒன்றாக வாழும் அன்பை ஈகுவீர்
ஆ! ஜீவ ஊற்றே இவாரில் உம் நேசம்
நல் நம்பிக்கையும் நோவு சாவிலும்
உம்போரில் சாரும் ஊக்க விசுவாசம்
குன்றாத தீரமும் தந்தருளும்
பூலோகத் துன்பம் இன்பமாக மாற்றி
மெய்ச் சமாதானம் தந்து தேற்றுவீர்
வாழ்நாளின் ஈற்றில் மோட்சக் கரையேற்றி

நிறைந்த ஜீவன் அன்பும் நல்குவீர் - ஆமென் 24

(திருமாங்கல்யத்தை அல்லது மோதிரத்தை அல்லது மோதிரங்களை ஆசீர்வதித்துக் குரு ஏறெடுக்கும் ஜெபம்)

“இரக்கமுள்ள ஆண்டவரே, இந்தத் திருமாங்கல்யத்தை (மோதிரத்தை.'.ங்களை) அளிப்பவரும், இதை அணிந்து கொள்ளுபவரும் ஒருவருக்கொருவர் உண்மையாயிருக்கவும், தங்கள் ஆயுசு முழுவதும் அன்பில் நிலைத்திருக்கவும் இதையும் இவர்களையும் நீர் ஆசீர்வதிக்க வேண்டுமென்று ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

(திருமாங்கல்யத்தை (மோதிரத்தை.'.ங்களை) அணிந்தபின் அதைப் பிடித்துக் கொண்டே குரு சொல்ல, அவருக்குப் பின்னால் மாப்பிள்ளை சொல்லுவது:)

உறுதியான நம்பிக்கைக்கும், நிலையான அன்பிற்கும் அடையாளமாக இந்தத் திருமாங்கல்யத்தை (மோதிரத்தை) உமக்கு அணிகிறேன். என்னுடைய சா£ரத்தால் உம்மைக் கனப்படுத்துகிறேன். என் உலகச் சம்பத்து அனைத்தையும் உம்மோடு பகிர்ந்து கொள்ளுகிறேன்.

பெண் சொல்லுவது

உறுதியான நம்பிக்கைக்கும், நிலையான அன்பிற்கும் அடையாளமாக இந்தத் திருமாங்கல்யத்தை ஏற்றுக்கொள்ளுகிறேன். என்னுடைய சா£ரத்தால் உம்மை கனப்படுத்துகிறேன். என் உலகச் சம்பத்து அனைத்தையும் உம்மோடு பகிர்ந்து கொள்ளுகிறேன்.

குரு செய்யும் அறிக்கை

.......................... உம் .............................. உம் கடவுளுக்கு முன்பாகவும், இந்தச் சபைக்கு முன்பாகவும் ஒருவருக்கொருவர் தங்கள் வாக்குறுதியைத் தொரிவித்திருக்கிற படியால் இவர்கள் கடவுளுடைய நியமப்படியும், நாட்டின் சட்டப்படியும், கணவனும், மனைவியுமாயிருக்கிறார்களென்று பிதா, குமாரன், பாரிசுத்த ஆவியின் நாமத்தினாலே தொரிவிக்கிறேன். ஆமென்.

ஆகையால், கடவுள் இணைத்தவர்களை மனிதன் பிரிக்காதிருப்பானாக.”25

கர்த்தாவே இரண்டு பேரையும்

அன்பாகக் காத்து இரட்சியும்

இவர்களால் புகழ்ச்சியே

உமக்குண்டாவதாகவே, ஆமென். 26

ஜெபம்

மகா இரக்கமும், கிருபையுமுள்ள கடவுளே, பரலோகத்திலும், பூலோகத்திலுமுள்ள முழு குடும்பத்துக்கும் நாம காரணராயிருக்கிற எங்கள் பிதாவே, இப்பொழுதும் உமது நாமத்திலே நாங்கள் ஆசீர்வதிக்கிற .................... என்னும் இவர்கள் மேல் உமது ஆசீர்வாதத்தை அனுப்பியருளும். இவர்கள் உண்மையாய் இசைந்து வாழ்ந்து தங்களுக்குள் செய்துகொண்ட உடன்படிக்கையையும், வாக்குறுதியையும் திட்டமாய்ப் பாதுகாத்து, உமது நியமங்களின்படி நடக்க அருள் புரிவீராக. எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

பிதாவாகிய கடவுள், குமாரனாகிய கடவுள், பாரிசுத்த ஆவியாகிய கடவுள் உங்களை ஆசீர்வதித்துப் பராமாரித்துப் பாதுகாப்பாராக. ஆண்டவர் உங்களை இரக்கமாய்க் கண்ணோக்கி, நீங்கள் இவ்வாழ்க்கையில் சேர்ந்து வாழ்வதனால் மறுமையில் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள உங்களைச் சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களாலும், கிருபையாலும் நிரப்புவாராக. ஆமென்.

அருளுரை

கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்.

உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய் உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்.

உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக்கொடியைப் போல் இருப்பாள் உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள்.

இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான்.

கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார் நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய்.

நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும், இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய்.

பிதாவுக்கும், குமாரனுக்கும், பாரிசுத்த ஆவிக்கும் மகிமையுண்டாவதாக.

ஆதியிலும், இப்பொழுதும், எப்பொழுதுமான சதாகாலங்களிலும் மகிமையுண்டாவதாக ஆமென்.

ஜெபம்

குரு: சர்வவல்லவரே நித்திய பிதாவே, திருமணமாகிய நியமத்தை மனுக்குடும்பத்திற்குக் கொடுத்து, உம்முடைய ஆசீர்வாதங்களால் அதைத் தூய்மைப் படுத்துகிறவரே, கணவனும், மனைவியுமாய் இப்பொழுது சேர்த்திணைக்கப்பட்டிருக்கும் உமது அடியார்களான .....................யையும் ........................யையும் ஆசீர்வதியும். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, ஒருவர் மகிழ்ச்சியை ஒருவர் பகிர்ந்து, தங்கள் வீட்டின் கடமைகளைச் சேர்ந்து நிறைவேற்றி, அன்பிலும், உம்முடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதிலும் இவர்கள் எப்பொழுதும் ஒருவருக்கொருவர் உண்மையுள்ளவர்களாயிருக்க இவர்களுக்கு அருளவேண்டுமென்று எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

ஆண்டவரும், மீட்பருமான இயேசுகிறிஸ்துவே, நாசரேத்தில் குடும்ப வாழ்க்கையில் பங்கு கொண்டவரே, இந்த உமது அடியாருடைய வீட்டில் ஆண்டவரும், அரசனுமாய் ஆட்சி புரியும். நீர் மனிதருக்குச் சேவைசெய்தபடியே இவர்களும் பிறருக்குச் சேவைபுரிய அருள் தாரும். சொல்லாலும், செயலாலும் இவர்கள் அயலகத்தாருக்கு, உம்முடைய மீட்பின் அன்புக்குச் சாட்சிகளாயிருக்க அருள்புரியும். பிதாவோடும், பாரிசுத்த ஆவியோடும் ஒரே கடவுளாய் என்றென்றைக்கும் ஜீவித்து அரசாளுகிற உமது பாரிசுத்த நாமத்திலே வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

(பெண், பிள்ளை பெறும் பருவத்தைக் கடந்தவராயிருந்தால் கீழ்வரும் ஜெபத்தை விட்டுவிடவும்)

இரக்கமுள்ள ஆண்டவரே கிருபையின் ஈவால் மனுக்குலத்தை விருத்தியடையச் செய்கிற பரமபிதாவே, இந்த உமது அடியார் புத்திரபாக்கியம்பெற்று, உமக்குத் துதியும், கனமும் உண்டாக, அந்தப் பிள்ளைகள் கிறிஸ்து மார்க்கத்துக்கேற்ற சன்மார்க்கராய் வளருவதைக் கண்டு களிகூருமளவும் தேவ அன்பும், அபிமானமுள்ளோராய் ஒருமித்துவாழ, இவ்விருவருக்கும் உமது

ஆசீர்வாதத்தை அருளவேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

சர்வ வல்லமையுள்ள ஆண்டவரே, நித்திய கடவுளே எங்கள் உள்ளங்களையும், சா£ரங்களையும் உமது கட்டளைகளின் வழியிலும், உமது கற்பனைகளுக்கடுத்த வேலையிலும் திருப்பிப் பாரிசுத்தப்படுத்தி வழிநடத்த வேண்டுமென்று உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம். இங்கும் எல்லாக்காலத்தும் நாங்கள் சா£ரத்திலும், ஆத்துமாவிலும் பாதுகாக்கப்பட உமது வல்லமையான ஆதரவைத் தாரும். எங்கள் ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

ஆசீர்வாதம் கூறல்

“நம்முடைய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் கிருபையும், கடவுளின் அன்பும், பாரிசுத்த ஆவியின் ஐக்கியமும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.” 27

(பாட்டுப் பாடும்பொழுது பதிவேட்டில் கையொப்பம் இடலாம்)

மங்கள வாழ்த்து கீதம்

வான தூத சேனை போற்றும் யெகோவா

மங்களம் இதோங்க ஆசி கூறுமே

ஞான மண வாளனேசு நாதனே

நாமம் வாழ்த்திப் பாடுவோம் எந்நாளுமே

வாழ்த்...திப்பாடுவோம்

நம் ராஜனேசை யென்றுமே

வாழ்த்...திப்பாடுவோம்

இம்மன்ற லென்றும் ஓங்கவே

தூதசேனை கீதம் பாட ஏதேனில்

ஆதாமோடு ஏவை மாதை ஒன்றாக்கி

ஆதிமன்றல் நாட்டி ஆசி கூறினாய்

ஈது மன்றலர்க்கும் ஆசி கூறுவாய் - வாழ்

மணவாளன் ................ நாடிடும்

மணவாளி .................. கூடியே

துங்கனேசு பாதம் போற்று எந்நாளும்

சுப மங்களமாய் வாழ்க! வாழ்கவே - வாழ்

சேயர் பாக்ய தானம் பெற்று பாரிலே

சீரும் செல்வம் தேவ பக்தி மேவியே

மாயமற்ற அன்போடிவர் நாளுமே

மலர் பாதம் போற்றி நீடு காலமாய் - வாழ்

வாழ்க! பெற்றோருற்றோர் பந்து நேசமும்

வாழ்க! தம்பதிகள் நீடு காலமாய்

வாழ்க! குரு சபையோரும் எந்நாளும்

வாழ்க! தயவோடு ஷேமமாய் வாழ்க!! - வாழ் 28

திருமணம் முடிந்தபின் பெண் இல்லத்தில் மணமக்கள்

ஆலயத்தில் திருமணம் முடிந்த பின்னர் மணமக்கள் பெண் இல்லத்திற்கு வருவார்கள். போதகர் செபம் செய்து ஆசீர்வதித்த பின்னர்ச் சிறுமிகள் சேர்ந்து மலர்சொரி பாடல் பாடி மலர்தூவி மணமக்களை வாழ்த்துவார்கள். பின்னர் உற்றார் உறவினர்கள் அன்பளிப்பு வழங்கி வாழ்த்துவார்கள். பின்னர் மணவிருந்து நடைபெறும். திருமண நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை உணவு பாரிமாறப்படும். மணமகளின் தாய் மணமக்களுக்குப் பாலும் பழமும் கொடுப்பார்கள்.

மொய் எழுதுதல் என்பதற்குச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியில் திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் அளிக்கப்படும் நன்கொடையை ஒரு புத்தகத்தில் பதிவு செய்தல் என்ற பொருள் கூறப்பட்டுள்ளது. இம்மரபானது உறவினர் நண்பர்கள் குடும்பங்களுக்கிடையே உள்ள நல்லுறவை விளக்கும் ஒரு சமூகப் பண்பாட்டு முக்கியத்துவம் உடைய வழக்காறாகத் தமிழகத்தில் நெடுங்காலமாக இருந்து வருகிறது. சமுதாய நெருக்கத்தை வெளிப்படுத்துவதோடு மட்டுமன்றிச் சிறு துளி பெருவெள்ளமாகச் சேரக்கூடிய மொய்ப்பணம் ஒருவர் தாம் நடத்தும்விழா செலவிற்கும் விருந்துக்கும் சற்றே ஈடுகட்டும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதை நமது அன்றாட வாழ்க்கை அனுபவத்தில் காணக்கூடும். ஆகவே தான், மொய் என்பது ஒரு வட்டியில்லாத கடன் என்று

சொல்லப்படுகிறது. இவ்வாறாக மொய்ப்பணம் திரும்பத் திரும்பத் தொடர்ந்து பதிலுக்குப் பதில் கொடுத்து வாங்கக் கூடிய பொருளாதார நிதியுதவி நிறுவனமாகத் தமிழகத்தில் இருந்துவருவதால் இம்மொய்யைச் சமூகப் பொருளாதார முக்கியத்துவம் உடைய வழக்காற்றுச் செயல் என்று விளக்கம் கூறலாம்.

விளவங்கோடு வட்டாரத்தில் நடைபெறும் திருமணத்தில் மாப்பிள்ளையின் வீட்டில் நடைபெறும் விருந்தில் மாப்பிள்ளையின் உறவினரோ அல்லது நண்பர்களோ ஒரு குறிப்பேட்டில் மொய் எழுதுவதற்குப் பந்தலின் ஒரு பகுதியில் உட்காருகின்றனர். பெண்ணின் வீட்டில் நடைபெறும் விருந்தில் பெண்ணின் உறவினரோ அல்லது குடும்ப நண்பர்களோ மொய் எழுதுகின்றனர். மொய்கொடுக்க வந்திருப்பவர் பெயரையும் அவர் எவ்வளவு மொய் கொடுக்கிறார் என்பதையும் மொய் எழுதுகின்றவர் குறிப்பேட்டில் எழுதுகின்றார். மாப்பிள்ளையின் உறவினாரில் சிலர் மாப்பிள்ளையின் தந்தையிடமோ அல்லது தாயிடமோ கொடுக்கின்றனர். சிலர் பாரிசுப் பொருளாகப் பாத்திரங்கள், கடிகாரங்கள், அலங்காரப் பொருட்கள் போன்றவற்றைப் பாரிசளிக்கின்றனர்.

பெண் மாப்பிள்ளை வீடு புறப்படுதல்

இரு வீட்டாரும் உணவு உண்டபின் மணமகள் மணமகனுடன் மகிழுந்தில் மணமகன் இல்லத்திற்குச் செல்வாள். மணமகனின் தாய் மருமகளை வரவேற்கும் விதமாக மருமகளின் விரலில் மோதிரமோ அல்லது கையில் காப்போ அணிவிப்பார்கள்.

பெண் வீட்டார் வீடுகாண வருதல்

திருமண நாளன்று மாலையில் பெண் வீட்டார் மணமகனின் வீட்டைப் பார்ப்பதற்காக வருவார்கள். வரும்போது மணமக்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கி வருவார்கள். கட்டில், மெத்தை, அலமாரி, அரவை இயந்திரம், கலவை இயந்திரம், சலவை இயந்திரம், குளிர்சாதனப்பெட்டி, மகிழுந்து எனப் பலபொருட்களைத் தங்களுடைய தகுதிக்குத் தக்கவாறு மணமகன் இல்லத்திற்கு எடுத்துச் செல்வர். அப்போது மணமகன் இல்லத்தில் விருந்து அளிப்பர். அதன் பின்னர் மூன்றாம் நாள் அல்லது ஐந்தாம் நாள் மணமகளின் வீட்டிற்கு விருந்திற்கு வருவர். அப்போது பெண்வீட்டார் புதுமணத்தம்பதிகளுக்குப் புத்தாடை வாங்கிக் கொடுப்பர். மாப்பிள்ளையின் வீட்டிலிருந்து கொண்டுவந்த பண்டங்களைச் சுற்றியுள்ள அனைத்து வீடுகளுக்கும் கொடுத்து மகிழ்வர்.

திருமணத்திற்குப் பின் நடைபெறும் சடங்குகள்

ஒரு கப்பல் கட்டச் சின்னச் சின்ன ஆணிகளும், நட்டுகளும் துணை நிற்பது போல் திருமணப் பந்தத்தால் இணைக்கப்பட்ட மணமக்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரிய முடியாத அளவு அவர்களுடைய பந்தத்தை அணு அணுவாகப் பலப்படுத்துவதாக திருமணத்திற்குப் பின் நிகழும் சடங்குகள் உதவுகின்றன. திருமணத்திற்குப் பிறகு மணமக்கள் முதலில் மணமகனின் திருச்சபைக்குச் செல்கின்றனர். திருமணத்தில் இறைவன் தங்களை இணைத்ததனால் இறைவனுக்கு நன்றிக் காணிக்கை படைக்கின்றனர். திருச்சபைக்குச் செல்லும்முன் அவர்கள் வேறு எங்கும் செல்வது இல்லை. அதன்பின்னர் அடுத்த ஓய்வு நாளில் அதாவது ஞாயிற்றுக்கிழமையில் மணப்பெண்ணின் திருச்சபைக்குச் சென்று நன்றிக் காணிக்கை செலுத்துகின்றனர். பின்னர் உறவினர் வீடுகளுக்கு விருந்திற்காகச் செல்கின்றனர்.

விளவங்கோடு வட்டார மக்களிடம் திருமணம் முடிந்து ஒரு வருடம் வரையிலும் மணமகனின் குடும்பத்தில் ஒருவரும் இறக்கவில்லை என்றால் அந்தப் பெண் வந்த நேரம் நல்ல நேரம் என்ற நம்பிக்கை காணப்படுகிறது. திருமணம் முடிந்த ஒரு வருடத்திற்குள் யாராவது இறந்துவிட்டால் மணப்பெண் வந்த நேரம் சாரியில்லை என்று குறை கூறி ஏசுகின்றனர். ஆனால் பெண் வீட்டில் யாராவது இறந்துவிட்டால் அதற்காக மாப்பிள்ளையைக் குறை கூறுவது இல்லை.

மறுமணம்

விளவங்கோடு வட்டாரத்தில் வாழும் கிறித்தவப் பெண், கணவன் உயிருடன் இருக்கும் பொழுதே இன்னொருவரைத் திருமணம் செய்தல் கிறித்தவ முறைக்கு அப்பாற்பட்டதாகும். எனினும் ஒரு சில தம்பதியர் கருத்துவேறுபாடு காரணமாகச் சட்டப்படி விவாகரத்துச் செய்துவிட்டு மறுமணம் செய்கின்றனர். கணவன் இறந்துவிட்டால் கணவனை இழந்த பெண் வேறு திருமணம் செய்யலாம். ஆனால் சில பெண்கள் கணவன் இறந்துவிட்டால் மறுமணம் செய்து கொள்ளாமல் வாழ்கின்றனர். சில பெண்கள் முதல் கணவன் இறந்த உடன் மறுமணம் செய்து கொள்கின்றனர். இரண்டாவது கணவன் இறந்துவிட்டால் மூன்றாவது முறையும் திருமணம் செய்து கொள்கின்றார்கள்.

கணவன் இறந்துவிட்டால் அந்தப் பெண் கணவனின் சகோதரனைத் திருமணம் செய்யும் வழக்கம் காணப்படுகிறது. அப்படி, கணவனின் சகோதரனைத் திருமணம் செய்து கொள்ள விருப்பம் இல்லை என்றால் அந்தப் பெண்ணைப் பெற்றோரிடம் அனுப்பி விடுகின்றனர். தற்காலத்தில் பெரும்பாலும் கணவன் இறந்த பெண்கள் மறுமணம் செய்து கொள்கின்றனர். மனைவி இறந்து விட்டால் கணவன்,

மனைவியின் தங்கையைத் திருமணம் செய்து கொள்ளும் வழக்கம் காணப்படுகிறது. இருவருக்கும் விருப்பம் இருந்தால் மட்டுமே இத்தகைய திருமணங்கள் நடைபெறுகின்றன. உறவில் இல்லாமல் வேறு பெண்ணை மறுமணம் செய்யும் வழக்கமும் காணப்படுகிறது.

மணமுறிவு (விவாகரத்து)

விளவங்கோடு வட்டத்தில் வாழும் கிறித்தவர்களிடையே விவாகரத்தும் காணப்படுகிறது. கருத்து வேறுபட்ட கணவன் மனைவி சேர்ந்து வாழ முடியாத கட்டத்தில் பெற்றோர் இருவரையும் சமாதானப்படுத்தி வாழ வைக்கின்றனர். அதன் பின்னரும் அவர்களிடம் பூசல் ஏற்பட்டால் குடும்பத்தில் உள்ள பொரியவர்கள் வந்து இருவரையும் சமாதானப்படுத்தி வைக்கின்றனர். மீண்டும் பிரச்சனை ஏற்பட்டால் சபைப்போதகருக்குத் தொரிவித்து, சமாதானம் செய்து வைக்கின்றனர். மீண்டும் பிரச்சனை ஏற்பட்டால் மகளிர் காவல் நிலையம் மூலம் இருவரும் சட்டப்படி பிரிகின்றனர். சில விவாகரத்துகளே இப்பொழுது நீதிமன்றம் வரை செல்கின்றன. விவாகரத்துக்கு முக்கியக் காரணம் கணவன் மனைவியின் ஒழுக்கமின்மையே ஆகும். வரதட்சணைக் கொடுமையின் காரணமாகவும் விவாகரத்துகள் நிகழ்கின்றன. தற்காலத்தில் பெண்ணை அடிமையாக நடத்துவதன் மூலமும் விவாகரத்துகள் நிகழ்கின்றன. விவாகரத்தின்போது கணவன் மனைவியின் வீட்டிலிருந்து வாங்கின ரொக்கப் பணம், சீர்வாரிசை முதலியவற்றை மனைவியிடம் திரும்பக் கொடுக்க வேண்டும். அவர்களுக்குக் குழந்தையிருந்தால் ஒரு குறிப்பிட்ட தொகையை அந்தக் குழந்தையின் செலவுக்குக் கொடுக்க வேண்டும். ஜீவனாம்சம் கொடுக்க கூடிய நிலையும் கணவனுக்கு ஏற்படும்.

3. இஸ்லாமியத் திருமணச் சடங்கு

ஆண், பெண் ஆகிய இருவாரில் எவராயினும் சாரி தங்கள் கற்பைக் காத்திட ஒரே வழி திருமணமாகும். ஆடை இல்லாத மனிதன் அரை மனிதன் என்பது முதுமொழி. மறைக்கப்பட வேண்டிய உறுப்புகளை மூடி மறைக்க ஆடை அணிவது கண்ணியத்திற்குரிய செயலாகும். ஆடை, ஆண் பெண்ணின் மானத்தைக் காக்க உதவுவது போன்று திருமணம் இருபாலாரின் கற்பைக் காக்க உதவுகிறது. ஆண் ஒரு பெண்ணின் கற்பைக் காக்கும் ஆடை எனவும், பெண் ஓர் ஆணின் கற்பைக் காக்கும் ஆடை எனவும் அல்லாஹ் நமக்குத் தெளிவுபடுத்துகிறான்.

அண்ணல் நபி அவர்கள் "திருமணம் என் வழிமுறை அதனை விட்டவன் என்னைச் சேர்ந்தவனல்லன்" என்று கூறியுள்ளார். திருமணம் இல்லாவிட்டால் உலகில்

மனித உற்பத்தி இருக்காது. மனிதர்களிடையே நெறியான வாழ்க்கையும் இராது. விபச்சாரம் மலிந்து விடும்.

பலதார மணம்

பலதார மணம் என்பது இரண்டு வகைப்படும். முதலாவது வகை ஓர் ஆண் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணந்து கொள்வது. இரண்டாவது வகை ஒரு பெண் ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்களை மணந்து கொள்வது. "ஒரு முஸ்லிம் ஆடவன் நான்கு பெண்களைத் திருமணம் செய்து கொள்ள இஸ்லாம் அனுமதி வழங்குகிறது. எனினும் ஒரே நேரத்தில் நான்கு பெண்களுக்கும் அதிகமானோரை மணந்து கொள்ள எத்துணைப் பொரிய செல்வந்தனுக்கும் அனுமதி இல்லை".29 இஸ்லாத்தில் ஒருவன் ஒரே நேரத்தில் நான்கு பெண்களை மணந்து கொள்ள மார்க்கம் அனுமதித்தபோதும், அவ்வாறு மணந்து கொள்பவர் கோடியில் ஒருவராகவே காணப்படுவது கண்கூடாகும்.

இரண்டு மனைவிகளையுடைய முஸ்லிம்களைக் காண்பதே இன்று அரியதாய் இருக்கையில் நான்கு மனைவிகள் என்பது கற்பனைக்கு எட்டாத ஒன்றாகக் காணப்படுகிறது.

விளவங்கோடு வட்டத்தில் சில கிராமங்களில் மட்டுமே இஸ்லாமியர் வாழ்கின்றனர். மார்த்தாண்டம், இரவிபுதூர்கடை, சாமியார்மடம், தேங்காப்பட்டணம், நம்பாளி போன்ற கிராமப்பகுதிகளில் மட்டுமே இஸ்லாமியர்கள் வாழ்கின்றனர். இறைவன் ஒருவரே அல்லாவைத் தவிரப் பிற தெய்வங்கள் இல்லை என்பதில் அவர்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டவர்கள். அவர்கள் வேதமான திருக்குரானில் அல்லாஹ் திருமணத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார். நீங்கள் சிந்தித்து நல்லுணர்வு பெறுவதற்காக நாம் ஒவ்வொரு பொருளையும் ஜோடி ஜோடியாகப் படைத்தோம் என்று திருக்குரானில் கூறப்பட்டுள்ளது. ஆணும் பெண்ணும் இல்லற வாழ்வில் ஈடுபடவேண்டும் என்பது இஸ்லாமியர்களுக்கு நபிகள் நாயகம் அறிவுறுத்தும் ஒழுக்கம் ஆகும். திருமணத்தை வெளிப்படையாகவும் பலர் முன்னிலையில் நடத்தவேண்டும். அதே நேரத்தில் எளிமையாகவும் நடத்தவேண்டும். பள்ளி வாசல்களில் நடத்துமாறு நபிகள் நாயகம் மொழிந்துள்ளார். ஆடம்பரம் இல்லாமல் எளிமையாகச் செய்யப்படும் திருமணமே சிறந்த திருமணமாக நபிகள் நாயகம் மொழிகின்றார். திருமணம் ஒரு புனிதமான சமூக ஒப்பந்தம்.

இஸ்லாமியர்கள் கலப்புத் திருமணத்தை அனுமதிப்பதில்லை. இஸ்லாமிய சமயத்திலுள்ள ஆண் வேற்று மதத்திலுள்ள பெண்ணைத் திருமணம் பண்ண

விரும்பினால் அப்பெண் முஸ்லீமாக மாற வேண்டும். அதே போல் இஸ்லாமிய சமயத்திலுள்ள பெண் வேறு மதத்திலுள்ள ஆண்மகனைத் திருமணம் செய்ய விரும்பினால் அந்த ஆண்மகன் முஸ்லீமாக மாற வேண்டும். அவ்வாறு மாறினால் கலப்புத் திருமணத்திற்கு அனுமதி உண்டு. இஸ்லாமியர்கள் கடைப்பிடிக்கும் நோன்பு நாட்களில் அதாவது ரமலான் மாதத்தில் திருமணம் நடத்த விரும்பமாட்டார்கள். ஆனால் ரமலான் மாதத்தில் திருமணம் நடத்திடத் தடை இல்லை. அதிகப்படியான இரவு வணக்கங்களுக்காகவும் நோன்பு நேரம் பேணுதலுக்காகவும் ரமலான் மாதத்தில் திருமணங்கள் அதிகமாக நடத்தப்படுவதில்லை.

பெண் தேடல்

இஸ்லாமியர்களும் பருவம் அடைந்த ஆணிற்குத் திருமணம் செய்ய உறவின் முறையாரிடத்திலும் நண்பர்களிடத்திலும் சுற்றத்தார்களிடத்திலும் புரோகிதர்களிடத்திலும் கூறுவார்கள். இஸ்லாமிய மார்க்கத்தில் சாதிப் பிரிவுகள், ஏற்றத் தாழ்வுகள் இல்லை. நபிகள் நாயகம் வாழ்ந்த வாழ்க்கை முறையும் திருக்குர் ஆனின் வழிகாட்டுதல்களும் இணைந்ததுதான் இஸ்லாம். நபிகள் நாயகம் அவர்கள் சில செயல்களை வெவ்வேறு நேரங்களில் வெவ்வேறு விதமாகச் செய்ததுண்டு. அவ்வாறு அவர்கள் செய்தவற்றில் ஒன்று கூட விடுபட்டுவிடக்கூடாதென்பதற்காக, நான்கு இமாம்கள் நான்கு விதமான சட்டக் கூடுகள் அமைத்து வழிமுறையாக ஆக்கி வைத்துள்ளார்கள். ஒரு முஸ்லீம் இதில் எதை வேண்டுமானாலும் பின்பற்றலாம். ஹாயி, ஹனபி, ஹம்புலி, மாலிக்கி என அமைக்கப்படும் இந்த நான்கும் உயர்வோ, தாழ்வோ உடைய சாதிப்பிரிவுகள் இல்லை. வெவ்வேறு பிரிவுகளின் சட்டங்களின் அடிப்படையில் வாழ்பவர்களும் மற்றச் சட்டங்களை மறுப்பதில்லை என்பதோடு சில வேளைகளில் மற்றச் சட்டங்களின் படி நடக்கவும் செய்கின்றனர். திருமண விஷயத்தில் இந்த நான்கு பிரிவுகளும் பிரிவுகளாகப் பார்க்கப்படுவதில்லை. ஒரு முஸ்லீம் மற்றொரு முஸ்லீம் பெண்ணை மணமுடிக்கிறான்.

பிற சமயங்களில் ஒரு மருத்துவர் மற்றொரு மருத்துவரை மணப்பதுபோலவும் ஒரு பொறியாளர் மற்றொரு பொறியாளரை மணப்பது போலவும் ஒரு பணக்காரர் மற்றொரு பணக்காரரை மணப்பது போலவும் முஸ்லீம் திருமணங்களிலும் நடப்பதுண்டு. அதே போல அதிகமான இறையச்சத்தோடு வாழ்பவர்கள் அதிகமான இறையச்சத்தோடு வாழ்பவர்களுடன் சம்மந்தம் வைப்பதை விரும்புவார்கள். ஆண்

வீட்டாரின் பொருளாதார நிலைக்கேற்பவும் கல்வித் தகுதிக்கு ஏற்பவும் உள்ள பெண்ணைப் புரோகிதர்கள் கூறுவார்கள்.

பேசி முடிவு செய்தல்

திருமணத்திற்கு முன் கட்டாயம் தான் மணக்கப்போகும் பெண்ணைப் பார்க்க வேண்டும். இது கட்டாயச் சட்டமாக இஸ்லாம் மதத்தில் கூறப்பட்டுள்ளது.

நிக்காஹ் எனும் திருமண ஒப்பந்தம்

திருமண ஒப்பந்தத்தில் மணமகள், மணமகன், மணமகளது பொறுப்பாளர் (தந்தை, சிறியதந்தை, பொரியதந்தை, சகோதரர்கள்....), இரண்டு சாட்சிகள் எனச் சிலர் கலந்து கொண்டு ஒப்பந்தம் செய்கின்றனர். மஹர் - குறைந்தபட்சம் ஏதாவது ஒரு பொருளின் விலை கொடுத்தல் வேண்டும். அதிகபட்சம் எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கலாம். எல்லையில்லாமல் கொடுக்கலாம். பயன் தரும் காரியங்கள் கற்பித்தல் போன்றனவும் மஹர் தருவதுண்டு.

மணமகளின் சம்மதம்

இன்ன மஹருக்கு எனது மகளை உங்களுக்குத் திருமணம் செய்து தருகிறேன் உங்களுக்குச் சம்மதமா? என்று பொறுப்பாளர் கேட்பார். அதற்கு மணமகன் ஆம் சம்மதம் என்று தொரிவித்தால் திருமண ஒப்பந்தப் படிவத்தில் கையொப்பம் இடுவார்கள்.

“பாரகல்லாஹு லக வ பாரக அலைக்க வ ஜமஅ பைனகுமா ∴பீஹைர்” அல்லாஹ் உனக்கு அகத்திலும் புறத்திலும் அருள் புரிவானாக! உங்கள் இருவரையும் நற்காரியங்களில் ஒன்று சேர்ப்பானாக!

அல்லாஹு உங்களுக்கு அபிவிருத்தி செய்தருள்வானாக! உங்கள் இருவருக்கும் செழுமை சேர்ப்பானாக! நன்மையான காரியங்கள் அனைத்திலும் உங்கள் இருவரையும் இணைத்து வைப்பானாக!“ என்று மணமகனும் மணமகளின் பொறுப்பாளரும் ஒப்பந்தம் செய்து கொள்வார்கள்.” 30

வலீமா விருந்து

வலீமா விருந்திற்கான செலவு முழுவதும் மணமகன் செய்வான். வலீமா விருந்து என்பது திருமண விருந்தாகும். இந்த விருந்தில் ஓர் ஆட்டை அறுத்து விருந்து வைப்பார்கள். இதனை வலீமா விருந்து என்பர். நபி அவர்களின் திருமணத்தில் இரு முத்துக்கள் அளவுள்ள பார்லியில் தயாரிக்கப்பட்டதை வலீமா

விருந்தாகக் கொடுத்தார்கள். எந்த வலீமாவில் பணக்காரர்கள் மட்டுமே அழைக்கப்பட்டு, ஏழை எளியவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்களோ அந்த வலீமாவின் உணவே மிக மோசமான உணவாகும். எவர் ‘வலீமா“ விருந்திற்கான அழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லையோ? அவர், அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் மாறுசெய்தவராவர் என்று நபிகள் நாயகம் மொழிந்துள்ளார். திருமணம் என்ற மகிழ்ச்சியான நிகழ்ச்சிக்காக, திருமண ஒப்பந்தம் முடிந்த பின்னர் அல்லது உடலுறவு கொண்ட பின்னர் மணமகன் தன் சக்திக்கேற்ப வலீமா விருந்து கொடுப்பது அவசியமாகும்.

திருமண வயது

ஓர் ஆணோ அல்லது பெண்ணோ பருவம் அடைந்து விடுவது திருமணத்திற்குரிய தகுதியாகி விடுகிறது. ஆனாலும் உடல் £தியாகவும் மன £தியாகவும் பக்குவம் அடைந்தபின் திருமணம் நடத்தப்படுகிறது.

திருமண அறிவிப்பு

ஜமாத்- திருமணம் நடைபெறுவது குறித்த செய்தியை மணமகனுடைய வீட்டிலிருந்து ஒருவரும், மணமகளுடைய வீட்டிலிருந்து ஒருவரும் ஊரில் உள்ள அனைத்து வீடுகளிலும் சொல்ல வேண்டும். குறிப்பாகப் பகைவாரிடமும் கூற வேண்டும். அதுமட்டுமல்லாமல் ஊரில் உள்ள அறிவிப்புப் பலகையில் ஒரு வாரத்திற்குமுன் எழுதப்பட்டிருக்க வேண்டும். திருமணம் நடைபெறுவதற்கு முன் யாராவது இறந்தால் திருமணம் தடைபடாது. திருமணத்தின் போது மணமக்கள் பிறாரின் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்க மாட்டார்கள்.

சீதனம்

சீதனம் சீர்வாரிசை வாங்க இஸ்லாத்தில் அனுமதியில்லை. நபி தனது மகளைத் திருமணம் செய்து கொடுத்து மருமகன் வீட்டிற்கு எந்தச் சீர்வாரிசைகளையும் சீதனங்களையும் கொடுத்ததாக ஆதாரங்கள் கிடையாது. வரதட்சணை வாங்க இஸ்லாத்தில் அனுமதி இல்லை.

மணமக்களை வாழ்த்துதல்

மக்கள் திருமண நிகழ்வில் கலந்து கொள்வதோடு மணமக்களை மனதார வாழ்த்துகின்றனர்.

“.... பாரகல்லாஹுலக வபாரக

அலைக வஜமஅ பைனகுமா பீ கைர்....

அல்லாஹ் உங்கள் இருவருக்கும் பரக்கத் செய்வானாக! உங்கள் இருவருக்காக மற்றப் பொருள்களிலும் பரக்கத் செய்வானாக! உங்கள் இருவரையும் நல்லவற்றில் ஒன்றிணைப்பானாக! என்று கூறி வாழ்த்துவார்கள். பரக்கத் என்னும் அரபுச் சொல்லுக்குப் 'புலனுக்கெட்டாத இறை அருள்" என்பது பொருள். " 31

திருக்குரானில் திருமணத்தின் முக்கியத்துவம்

ஓ மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள் அவன் உங்கள் அனைவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான். அவாரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான். இவ்விருவாரிலிருந்து அனேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான். ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள். அவனைக் கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தத்தமது உரிமைகளைக் கேட்டுக் கொள்கிறீர்கள்) மேலும் (உங்கள்) இரத்த பந்தங்களையும் ஆதாரியுங்கள், நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கண்காணிக்கிறான். இந்த வசனம் எல்லாத் திருமண குத்பாவிலும் (பிரசங்கத்திலும்) ஓதப்படும் இறைவசனமாகும். திருமணம் செய்வது மட்டுமல்லாமல் பிறருக்கும் திருமணம் செய்து வைக்குமாறு அல்லாஹ் வலியுறுத்துகிறான்.

உங்களில் வாழ்க்கைத் துணையில்லாதவர்களுக்கும் (ஆண், பெண்களுக்கும்) அவ்வாறே (வாழ்க்கைத்துணையற்ற நற்குணமுள்ள ஸாலிஹான உங்கள் (ஆண், பெண்) அடிமைகளுக்கும் திருமணம் செய்து வையுங்கள். அவர்கள் ஏழைகளாக இருந்தால், தன் நல்லருளைக் கொண்டு அல்லாஹ் அவர்களைச் சீமான்களாக்கி வைப்பான். மேலும் அல்லாஹ் (வாரி வழங்குவதில்) விசாலமானவன்.

ரசூல் (ஸல்) அவர்களின் அறிவுரை

'திருமணம்" எனது வழிமுறை (சுன்னத்) ஆகும். இதனை எவரொருவர் புறக்கணிக்கிறாரோ அவர் என்னைச் சார்ந்தவரல்ல. ரசூல் அவர்கள் இஸ்லாமியர்களைத் திருமணம் புரியும்படி கட்டளையிட்டதுடன், திருமணம் புரியாதிருப்போரையும் கடுமையாகக் கண்டித்தார்கள்.

நபி அவர்களின் அறிவுரை

“எவருக்குத் திருமணப் பருவம் வந்துவிட்டதோ அவர் திருமணம் செய்து கொள்ளட்டும். அது அவரது கண்களுக்கும், வெட்க ஸ்தலத்திற்கும் அரணாகும். எவருக்குத் திருமணம் செய்ய வசதிப்படவில்லையோ அவர் நோன்பு நோற்கட்டும்.” 32

விளவங்கோடு வட்டத்தில் வாழும் இஸ்லாமியர்கள் பெண் வீட்டிலிருந்து வரதட்சணை வாங்குவதில்லை. திருமணத்தின் போது பெண் வீட்டாருக்கு எந்த வகையிலும் சிரமத்தைக் கொடுக்கக்கூடாது என்பது இஸ்லாம் மார்க்கத்தின் சட்டமாகும். அதற்குப் பதிலாக மணமகன் மணமகளுக்கு வேண்டிய செலவுகளைச் செய்தல் அவசியம். அதனால் திருமண விருந்தை மணமகனே ஏற்க வேண்டும். இதற்கு ‘வலிமா“ என்று பெயர். திருமணத்தில் மஹர்தருதல், வலீமாவிருந்து, மனைவிக்குரிய உணவு, உடை, இருப்பிடத்திற்கான செலவுகள், மணமகன் கொடுத்தல் அவசியம் என நபி அவர்கள் மொழிந்தார்.

ஒருவர் ஒரு பெண்ணை மணம் முடிக்கப் பேசிக் கொண்டிருக்கையில் மற்றொருவர் அப்பெண்ணை மணம் முடிக்கப் (நிச்சயம்) பேசக்கூடாது. ஒருவர் தாம் மணமுடிக்க நாடியிருக்கின்ற பெண்ணைத் தனிமையில் சந்திப்பதும் சாரியல்ல.

நபி (ஸல்) அவர்களின் எச்சாரிக்கை

மார்க்கத்திலும், குணத்திலும் சிறந்த நீங்கள் விரும்பும் மனிதர் உங்களிடம் பெண் கேட்டு வந்தால் அவருக்குத் திருமணம் செய்து வையுங்கள். அவ்வாறு நீங்கள் செய்யவில்லையானால், பூமியில் கடுமையான குழப்பமும், ஒழுக்கமின்மையும், அமைதியின்மையும் ஏற்படும்.

அல்லாஹுவின் வரையறை

(அல்லாஹ்வுக்கு) இணை வைக்கும் பெண்களை அவர்கள் இறை நம்பிக்கை (ஈமான்) கொள்ளும் வரை நீங்கள் திருமணம் செய்யாதீர்கள். இணை வைக்கும் ஒரு பெண் உங்களைக் கவரக் கூடியவளாக இருந்த போதிலும், அவளைவிட இறை நம்பிக்கையுடைய (மு.ஃ.மினான) ஓர் அடிமைப்பெண் நிச்சயமாக மேலானவள் ஆவாள். அவ்வாறே இணை வைக்கும் ஆண்களுக்கு அவர்கள் இறை நம்பிக்கை (ஈமான்) கொள்ளும் வரை (மு.ஃ.மினான பெண்களை) நீங்கள் திருமணம் செய்து வைக்காதீர்கள். இணை வைப்பவன் உங்களுக்குக் கவர்ச்சியூட்டுபவனாக இருந்த போதிலும் ஒரு மு.ஃ.மினான அடிமை அவனை விட மேலானவன்.

யாரைத் திருமணம் செய்தல் வேண்டும்

பெண்களை அவர்களின் அழகுக்காக மணம் முடிக்காதீர்கள். அவர்களின் அழகு அவர்களை அழித்து விடலாம். அவர்களின் செல்வத்திற்காக மணம் முடிக்காதீர்கள். அவர்களின் செல்வம் அவர்களைத் தடுமாறித் தவறச் செய்து விடலாம். அவர்களின் நல்லொழுக்கத்திற்காக மணம் முடியுங்கள். நல்லொழுக்கமுள்ள அழகற்ற அடிமைப்பெண் (தீய ஒழுக்கமுள்ள) அழகிய பெண்ணைவிட மேலானவள்.

பெண்பார்த்து நிச்சயித்து மணம் முடித்தல் அவசியம்

விளவங்கோடு வட்டாரத்தில் மட்டுமல்லாமல் அனைத்து இஸ்லாமியரும் திருமணத்திற்கு முன் பெண்ணைப் பார்த்து நிச்சயம் செய்தபின் திருமணம் செய்யவேண்டும்.

விளவங்கோடு வட்டார இஸ்லாமியத் திருமணத்தில் மணமகன் மணமகள் தவிர மணமகளுக்காக ஒரு பொறுப்பாளர் காணப்படுகிறார். அவரை வலீ என்பார்கள். கட்டாயம் அந்தப் பொறுப்பாளாரின் அனுமதி பெற்றுத் திருமணம் நடத்தப்படுகிறது. எந்த ஒரு பெண் தன் பொறுப்பாளர் வலீ அவர்களின் அனுமதியின்றித் திருமணச் சம்மதம் தொரிவிக்கிறாளோ அந்தத் திருமணம் செல்லாது. அதுமட்டுமல்லாமல் ஒரு மணப்பெண்ணை மற்றொரு பெண் வலீயாக இருந்து மணம் செய்விக்கக் கூடாது. இதனை விளவங்கோடு வட்டார மக்கள் பின்பற்றி வருகின்றனர்.

விளவங்கோடு வட்டார இஸ்லாமியத் திருமணத்தில் இரு நீதமுள்ள சாட்சிகள் காணப்படவேண்டும். சாட்சிகள் இல்லையென்றால் அந்தத் திருமணம் செல்லாத் திருமணமாகிவிடுகிறது. மணமகளின் முழுமையான சம்மதம் இருந்தால் மட்டுமே திருமணம் நடத்தப் படுகிறது. மணமகளுக்கு விருப்பமில்லாத பட்சத்தில் அத்திருமணம் நடைபெறாமல் தடைபெறுகிறது.

மணமகளின் உரிமையான ‘மஹர்“ தொகையை மணமகன் மணமகளுக்கு அளித்தால் மட்டுமே திருமணம் நடத்தப்படுகிறது. மஹர் என்பது திருமணக்கொடை ஆகும். இதனை மகிழ்வோடு கொடுக்க வேண்டும் என நபி அவர்கள் வாழ்ந்த காலத்தில் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. மணம் முடிக்கும் மணப்பெண்ணுக்குரிய மஹர் தொகையை முறைப்படி கொடுத்து விடுங்கள். அதுமட்டுமல்லாமல் மணப்பெண்ணிற்குக் கொடுத்த மஹாரிலிருந்து எதனையும் திருப்ப எடுத்தல் கூடாது எனத் திருக்குரானில் கூறப்பட்டுள்ளது.

மணம் முடிக்கும் பெண்ணுக்கு, ஒரு பொற்குவியலையே மஹ்ராகக் கொடுத்த போதிலும், அதிலிருந்து எதனையும் திருப்பி எடுத்துக் கொள்ளாதீர்கள்.

மஹ்ர் என்ன வேண்டும் என்பதைக் கேட்க மணப்பெண்ணிற்கு உரிமை உள்ளது. பொற்குவியலைக் கூட தனக்கு மஹ்ராகக் கேட்க உரிமையுண்டு. ஒரு பெண் அழகு, செல்வச் செழிப்பு, குடும்ப கௌரவம், மார்க்கப்பற்று என்ற நான்கு விஷயங்களுக்காக மணமுடிக்கப்படுகிறாள். இந்த நான்கிலும் சிறந்தது மார்க்கப்பற்றுள்ள பெண்ணைத் திருமணம் செய்வதாகும்.

திருமணத்தின் குறிக்கோள்

திருமணத்தில் இணையும் ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் தங்களது இயற்கையான உடல் தாகங்களைச் செம்மையாகப் பகிர்ந்து கொள்வது இஸ்லாமியத் திருமணத்தின் முக்கியக் குறிக்கோளாகும். பசிக்கு உணவு, தாகத்திற்குத் தண்ணீர், உடலுக்கு மற்றொரு துணை தேவை என்பது இயற்கையின் நீதியாகும். எனவே பசி, தாகம், மோகத்தை அடக்குவது இயற்கையின் நியதிக்கு அப்பாற்பட்டதாகும். மோகத்தை அடக்கினால் மோட்சம் அடையலாம் என்பது தவறான சிந்தனையாகும். மோகத்தை அடக்கினால் சந்ததி எவ்வாறு உருவாகும். இஸ்லாம் மார்க்கம் மோகத்தைத் திருமண வழியில் தீர்த்து அத்துடனே மோட்சத்தை அடைய முடியும் என்பதைக் கூறும் ஒரே மார்க்கமாகும். ஆணும் பெண்ணும் ஒருவர்மீது ஒருவர் உண்மையான அன்பைப் பொழிய வேண்டும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்க வேண்டும். இல்வாழ்க்கை என்பது இரு சக்கர வாகனம் போன்றது. இரு சக்கர வாகனம் சீராகச் செல்ல அதில் உள்ள இரு சக்கரங்களும் சமமாக இருக்க வேண்டும். கணவன் மனைவி எப்படி இருக்க வேண்டும் என்பதை அழகிய உவமை மூலம் திருக்குரான் எடுத்துக் கூறுகிறது.

‘அவர்கள் (பெண்கள்) உங்களுக்கு ஆடையாகவும், நீங்கள் (ஆண்கள்) அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கின்றீர்கள். இந்தத் திருவசனத்தில் பல்வேறு பொருள் நிறைந்த கருத்துகள் பொதிந்து கிடக்கின்றன. ஆடை, மனிதனின் மானத்தைப் பாதுகாக்கிறது மனிதனுக்கு அழகைக் கொடுக்கிறது மனிதனுக்கு மாரியாதையை அளிக்கின்றது இதனால்தான் அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும் நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கிறீர்கள் என்று திருக்குரான் கூறுகிறது. ஆண் - பெண் இருவருக்கிடையே உருவாகும் அன்பையும், பாசத்தையும் அதிகாரிக்கவும், வலுப்படுத்தவும் ஏற்ற வழி திருமணத்தைத் தவிர வேறெதுவும் இல்லை.

ஷிஹார் திருமணம்

ஷிஹார் திருமணம் என்பது ஒரு வீட்டிலுள்ள பெண்ணை மற்றொரு வீட்டிலுள்ள பையனுக்கு மணமுடித்துக் கொடுத்து அந்த மணமகன் வீட்டிலுள்ள பெண்ணை இந்த வீட்டிலுள்ளவர் திருமணம் செய்வதாகும். அதாவது பெண்கொடுத்துப் பெண் எடுத்தல் ஆகும். திருமணக்கொடை மஹர் குறிப்பிடாமல் திருமணம் செய்வதாகும். இவ்விதத் திருமணத்தைச் செய்ய இஸ்லாம் தடுக்கிறது.

நிக்காஹ் குத்பா

இவ்வுலகம் இன்பமானது. இன்பங்களில் சிறந்த இன்பம் நல்ல ஒழுக்கமுள்ள மனைவியை அடைவதாகும்.

மறுமணம்

கணவனை இழந்தபின் மறுமணம் செய்ய இஸ்லாமிய மார்க்கத்தில் சட்டம் உண்டு. ஆனால் அந்தப் பெண் விரும்பினால் மட்டுமே மறுமணம் செய்யலாம். மறுமணத்திற்கு இஸ்லாம் மார்க்கம் ஏன் இடமளிக்கிறது என்றால் அந்தப் பெண் தவறான வாழ்க்கைக்குச் சென்று விடக்கூடாது என்பதற்காக மறுமணத்திற்கு இஸ்லாம் சமயம் இடமளிக்கிறது. ஒரு சில பெண்கள் எனக்குப் பத்து அல்லது பன்னிரண்டு வயதில் பையன் இருக்கிறான். அதனால் நான் மறுமணம் செய்ய விரும்பவில்லை என்று அந்தப் பெண் கூறினால் மறுமணத்தைக் கட்டாயப்படுத்தமாட்டார்கள்.

விதவைகளுக்கு உதவவும் பாதுகாக்கவும் ஏற்ற வழி அவர்களைத் திருமணம் செய்வதேயாகும். கணவன் சாரியாக அமையப் பெறாத பெண்கள் மொத்த குடும்ப பாரத்தையும் தனியாகவே சுமக்கின்றனர். “வரதட்சணைக் கொடுமை நிறைய பெண்களை முதிர் கன்னிகளாக நிற்கச் செய்கிறது.” 33 இஸ்லாம், கணவன் மனைவி இருவரையும் ஒருவரையொருவர் நிறைவு செய்யக் கூடியவர்களாகக் கருதுகிறது.

தலாக்

கணவனும் மனைவியும் இனி ஒற்றுமையுடன் நல்வாழ்வு வாழ முடியாது என்ற நிலை உருவான பின்னரே, இருவரும் ஒருவரையொருவர் பிரிந்து போக அல்லாஹ் அனுமதி வழங்குகின்றான். அதுதான் தலாக் (மணவிடுதலை) என்னும் ஒரே வழி ஆகும். தலாக் கூறுமாறு ஒருவனை இஸ்லாம் நிர்ப்பந்திக்கவுமில்லை. கட்டளையிடவுமில்லை. அவனுக்கு மார்க்கத்தில் இப்படியொரு வழி இருக்கிறது.

சின்னஞ்சிறு காரணங்களையெல்லாம் வைத்து ஒருவன் தன் மனைவியைத் தலாக் சொல்ல முனையக் கூடாது.

இயல் தொகுப்பு

பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் திருமணம் என்பது இயல்பான நிகழ்வாக விளங்கியுள்ளது. அந்த இயல்பான நிகழ்வானது சமுதாயத்தில் சில குழப்பங்களுக்காட்பட்ட பின்னர் திருமணமுறையை மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே பண்டைத்தமிழர் வகுத்துள்ளனர். பல்வேறு திருமண முறைமைகளை உலகத்தின் பல்வேறு பிரிவினர் பின்பற்றினாலும் பண்டைத்தமிழர் களவு, கற்பு என்னும் இரண்டையும் உள்ளடக்கிய காதல் திருமணத்தையே பொரிதும் போற்றியுள்ளனர். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய தமிழர் திருமண முறையானது இருபதாம் நூற்றாண்டு வரை சிற்சில மாறுதல்களைப் பெற்று தற்காலத்திலும் பண்பாட்டை வெளிப்படுத்தும் திருமணமுறையாக கன்னியாகுமாரி மாவட்டத்தின் விளவங்கோடு வட்டத்தில் காணப்படுகிறது. மாற்றுவாங்குதல் என்னும் நிகழ்வுடன் தொடங்கும் திருமணம் மணமக்களை வாழவிடும் நிகழ்வுடன் நிறைவடைகிறது. கிறித்தவர்களும் இஸ்லாமியர்களும் பின்பற்றும் திருமணமுறையில் மதத்தின் தாக்கம் மிகுந்திருந்தாலும் அவற்றிலும் பண்டைத்தமிழ் மக்களின் திருமணச் சாயல் விளங்குவதைக் காணமுடிகிறது.

சான்றெண் விளக்கம்

1. டாக்டர் சு. சண்முகசுந்தரம், தமிழில் நாட்டுப்புறப்பாடல்கள் : ப.13

2. சரவண ஆறுமுக முதலியார், தமிழர் திருமண முறைகள், மதுரைத் தமிழ்ச்சங்க மலர் : ப.105

3. நுஉெலஉடழியநனையை டீசவைவயஎைஉய, ஏழட. 4 : ி. 928

4. க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் : ப. 33

5. த. அருள் பத்மராசன், இன்னாசியின் படைப்புலகம் : ப. 129

6. செ. தங்கமணி, கன்னியாகுமாரி மாவட்டம் அரசியல் - சமூக வரலாறு : ப. 146

7. அரு. மருததுரை, நாட்டுப்புறப் பண்பாட்டுக் கூறுகள் : ப. 45

8. டுநழ ஆயசமரஅ, வுாந நுளழடரவழைெ ழக ஆயசசயைபந : ி. 40

9. ஊ.டே. ளுாயமெயச சுயழ, ளுழஉழைடழபல : ீ. 384

10. தொல்காப்பியம் : கற்பியல் : 1

11. தொல்காப்பியம் : கற்பியல் : 2

12. ஆறு. திருநாகலிங்கம், சமூக அமைப்பில் திருமணங்கள், நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை, தொகுதி 2 : ப. 594

13. ந. சுப்பு ரெட்டியார், இல்லற நெறி : ப. 4

14. தொல்காப்பியம் : கற்பியல் : 25

15. ச. அகத்தியலிங்கம், ஆறு. இராமநாதன், (ப.ஆ.), நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை, தொகுதி 2 : ப. 594

16. சீ. பக்தவத்சல பாரதி, மு.நூ. : ப. 406

17. பி.என். சண்முகசுந்தரம், திருமண வாழ்த்து : ப. 13

18. முகிலை இராசபாண்டியன், ஆலங்கால் : ப.122

19. யோ. ஜேக்கப், திருவசனமாலை : பக். 35-36

20. கிறித்தவ பாமாலை கீர்த்தனைகள் : 216

21. யோ. ஜேக்கப், திருவசனமாலை : பக். 104-105

22. கிறித்தவ பாமாலை கீர்த்தனைகள் : 217

23. யோ. ஜேக்கப், திருவசனமாலை : பக். 106-107

24. கிறித்தவ பாமாலை கீர்த்தனைகள் : 218

25. யோ. ஜேக்கப், திருவசனமாலை : பக். 107-108

26. கிறித்தவ பாமாலை கீர்த்தனைகள் : 219

27. யோ. ஜேக்கப், திருவசனமாலை : பக். 109-110

28. கிறித்தவ பாமாலை கீர்த்தனைகள் : 222

29. பாண்டிச்சேரி எஸ். முஹம்மது பஷீர், இஸ்லாத்தில் கணவன் மனைவி கடமைகளும் குழந்தை வளர்ப்பும் : ப.11

30. தகவலாளி

31. தகவலாளி

32. தகவலாளி

33. பே. சாந்தி, மேலப்பாளையம் முஸ்லீம்கள் : ப. 37

இயல் - 7

இறப்புச் சடங்கு

“உறங்குவது போலும் சாக்காடு உறங்கி

விழிப்பது போலும் பிறப்பு” 1

என்று திருக்குறளில் பிறப்பு இறப்பினைப் பற்றிக் கூறுகிறார் திருவள்ளுவர். “இறந்தவர்களின் ஆன்மா துன்பமின்றித் துறக்கம் எய்தவும், இருப்போர் துன்பமின்றி வாழவும் பல சடங்குகள் ஏற்பட்டுள்ளன.” 2 “இறப்பு இவ்வுலகத்து உயிர்கள் அனைத்திற்கும் பொதுவானதாகும். வாழ்க்கையின் இறுதி நிகழ்ச்சி மரணம் ஆகும். இது இயற்கையாகவோ செயற்கையாகவோ நிகழும் செயலாகும்.” 3 மனிதன் இவ்வுலக வாழ்வை இழந்ததும் இறந்தவருக்காகப் பல்வேறு சடங்குகள் நடத்தப்படுகின்றன. மரணம் குறித்த சடங்குகள் இனம், மதம், காலம் இவற்றிற்கேற்ப ஒன்றுபட்டும் வேறுபட்டும் காணப்படுகின்றன.

குழந்தையைத் தாலாட்டி வரவேற்கும் தாய்க்குலம் இறப்பின்போது ஒப்பாரி பாடி வழியனுப்புகிறது. ஆங்கிலத்தில் அழுகைப் பாடலைக் குறிக்க நான்கு சொற்கள் ஆளப்பெறுகின்றன. நுடநபல, னுசைபந, டுயஅநவெயவழைெ, ஆழரசநெைப என்பவை அவை. இந்நான்கனுள்ளும் ஒப்பாரிக்கு நேர்ச் சொல் டுயஅநவெயவழைெ எனக்கொள்ளலாம். “ஒப்பாரி என்பதற்கு ஒப்புச் சொல்லியழுவது என்பதாகும்.” 4

“தமிழில் ஒப்பாரியைப் பிலாக்கணம், பிணக்கானம், கையறு நிலை, புலம்பல், இரங்கற்பா, சாவுப்பாட்டு, இழவுப்பாட்டு, அழுகைப்பாட்டு என்று பலவகையாகச் சொல்லிக் கொள்வர்.” 5 இறந்தவருடைய முந்தைய நிலைகளைச் சொல்லியழுவது- அவர் இறந்ததால் ஏற்பட்டுள்ள துன்பங்களைச் சொல்லியழுவது - அவர்க்கும் தமக்குமுள்ள உறவை நினைத்து அழுவது என்றெல்லாம் பொருள் கொள்ளலாம். ஒப்பாரி என்பது பெரும்பாலும் பெண்களால் பாடப்பெறுவதாகும். ஒப்பாரிப் பாடல்கள் ஆண்களுக்குத் தொரியுமாயினும் இழவு வீடுகளில் ஆண்கள் ஒப்பாரி வைத்தல் மரபன்று.

சிலர் குழந்தைப் பருவத்தில் இறந்து விடுகின்றனர். “சிலர் குழந்தையிலேயே இறக்காமல் நல்ல பருவம் வந்த திருமணப்பருவத்தில் மடிந்து விடுவதுண்டு. இது கொடுமையிலும் கொடுமையான சாவு. மற்றச் சாவுகளில் வரும் சொற்கள், துக்க வெளிப்பாடுகள் இதில் வெளியாக இயலாத அளவுக்கு மனிதனை நிலைகுலையச் செய்து விடும். கையொடிந்தது போன்ற உணர்வு பெற்றவர்களுக்கு ஏற்படும். குழந்தைப் பருவத்தில் இறந்த பொழுதே பொறுக்காத தாய்மை உள்ளம் வளர்ந்த பின் பறிகொடுத்தால் கேட்குமா?” 6

இறப்பிலேயே மிகக் கொடுமையானது திருமணமானவுடனேயே கணவன் இறந்துபோவது ஆகும். இளம் மனைவியை ஏங்க விட்டு அவளை விதவையாக்கி இறந்து போகும் கொடிய துன்பத்தைவிட வேறெந்தத் துன்பமும் உலகில் இல்லை. கணவன் இறந்தவுடன் விதவை என்ற பெயரில் சமுதாயக் கட்டுப்பாட்டிற்கெல்லாம் அவள் உட்பட்டு அணு அணுவாகச் செத்துப் போகின்றாள். “வாழ்க்கை இன்பங்களைக் கணவனோடு பகிர்ந்து வாழாத பெண்கள் தங்கள் கணவன் இறந்தவுடன் வைக்கும் ஒப்பாரி ஏனைய அழுகை ஒலிகளை விட அவலச் சுவை மிகுந்ததாகும்.” 7

அடுத்தபடியாகத் தாய் இறந்து போவது ஆகும். தாய்ப்பாசம் உலகில் ஈடு இணையற்ற உணர்ச்சியின் வடிவமானது. அந்தத் தாய் அனைவரையும் தவிக்க விட்டு இறந்தவுடன், அவளின் இழப்பைத் தாங்கமுடியாமல் குழந்தைகள் அழுது புலம்புகின்றனர். தாயின் அருமை பெருமைகளையெல்லாம் சொல்லிச் சொல்லி அழுகின்றனர்.

அடுத்ததாகக் குழந்தை இறந்துவிடின் தாய் அடையும் துன்பம் பொறுக்க முடியாததாக அமையும். கருவில் இருக்கும் பொழுதும், பிறந்த பிறகும் குழந்தையைப் பற்றிப் பலவிதமாகக் கற்பனை செய்பவள் தாய். வருங்காலத்தில் தன்னைக் காப்பாற்றும் என்றெல்லாம் கவலையற்று வாழ்ந்த தாயை ஏமாற்றி விட்டுக் குழந்தை போய்விட்டதென்றால், தாயின் துன்பத்திற்கு எல்லையில்லை.

‘வாழ்வரசி“

கணவன் இருக்கும்பொழுது இறந்தவளைச் சுமங்கலியாய்ச் சென்றாள் என்பார்கள். இச்சாவினையே திருமணமான பெண்கள் அனைவரும் விரும்புவார்கள். கணவனுடன் வாழ்ந்த காலத்தில் மனைவி எத்தகைய தோற்றமளித்தாளோ அத்தகைய மங்கலத் தோற்றத்துடனேயே அவள் இறந்த பின்பும் இடுகாட்டுக்கு

எடுத்துச் சென்று புதைப்பர். இச்சாவினைப் பெற்ற பெண்ணைப் பெண்கள் ‘வாழ்வரசி“ என்று பாராட்டுவர்.

இறந்தவர்கள் இன்னுமொரு உலகில் இடம்பெறத் தகுதி பெறவும், அவர்கள் ஆன்மா இவ்வுலகப் பாரத்தை விட்டு, சாந்தி பெற்று மறு உலகில் அடி எடுத்து வைக்கவும், இறப்பால் இன்னலுற்ற மக்கள் துக்கம் நீங்கித் தங்கள் அன்றாடக் கடமைகளில் ஈடுபட மனப்பக்குவம் பெறவும் இச்சடங்குகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. இறந்தவர்களின் ஆவி மயானத்திலிருந்து திரும்பி வரக்கூடாது என்பதற்காக அவற்றைத் திருப்திப்படுத்தும் நோக்கில் செய்யப்படும் சடங்குகளே இறப்புச் சடங்குகளாகும். “பொதுவாக இறப்பு என்பது ஒரு முடிந்த முடிவன்று அது இவ்வுலகிலிருந்து அல்லது குறிப்பிட்ட ஒரு நிலையிலிருந்து வேறொரு நிலைக்குச் செல்லுதல் ஆகும் என்பர்.” 8

கணவனை இழந்த பெண்களுக்குச் சமூகம் விதித்த கட்டுப்பாடுகள்

1. கணவன் இறப்பின் உயிர் துறத்தல் அல்லது கைம்மை கொள்ளல்.
2. கூந்தல் களைதல்
3. மங்கல அணி, வளை முதலிய அணிகலன்களை நீக்குதல்
4. மங்கல நிகழ்ச்சிகளில் பங்கு பெறாமை
5. மலரணிதல் முதலிய ஒப்பனையைத் தவிர்த்தல்
6. மறுமண உரிமை இல்லாமை

போன்றவையாகும். ஈமச்சடங்குகளின் நோக்கம், இறந்தோரை இறப்போரினின்றும் பிரித்து, முன்னால் இறந்து போன மூதாதையருடன் சேர்ப்பதாகும் என்று கூறப்படுகிறது. இறந்தவாரின் உடலைச் ‘சவம்“ என்றும் ‘பிணம்“ என்றும் குறிப்பிடுகின்றனர்.

இறுதிச் சடங்குகள்

இறந்தது முதல் இறந்தவரை எரிப்பது வரை நிகழும் நிகழ்ச்சிகளைப் பற்றிப் பட்டினத்துப் பிள்ளையார் பாடிய பாடலொன்றினை அவர் தம் நூலில் காணலாம்.

ஒருவர் இறந்ததும் முதலில் கண்களையும், வாயையும் அடைக்கின்றனர். அடுத்துக் கால் பெருவிரல் இரண்டையும் சேர்த்துத் துணியால் கட்டுகின்றனர். கைகள் இரண்டையும் உடலின் மீது சேர்த்து வைக்கின்றனர். உயிர் பிரிந்ததும் இறந்தவாரின்

உடல் விறைத்துக் கை கால்கள் ஒழுங்கில்லாமல் விரிவடையும். இதனை ஒழுங்குபடுத்தும் பொருட்டே கால் பெருவிரல் இரண்டையும் சேர்த்துக் கட்டுகின்றனர். ஒருவர் இறந்தவுடன் கட்டிலிலோ அல்லது பலகையிலோ படுக்க வைக்கின்றனர். இறந்தவாரின் உடலைத் தெற்கு வடக்காகக் கிடத்துகின்றனர். வடதிசையினைப் புண்ணிய திசை என்றும் தென் திசையினை எமனுக்குரிய திசை என்றும் கூறுவர். ஆகவேதான் இறந்தவர்களைத் தெற்கு வடக்காகக் கிடத்துகின்றனர். பின்னர்த் தலைமாட்டிலும் கால்மாட்டிலும் மெழுகு வர்த்தி, ஊதுபத்தி, தீபவிளக்கு போன்றவற்றைக் கொளுத்தி வைக்கின்றனர்.

ஒப்பாரிப் பாடல்கள்

இறந்தவர்களை நினைத்து அவர்கள் மீது பாடப்படும் பாடல்களே ஒப்பாரிப் பாடல்கள் எனப்படும். “இழப்பின் துன்பத்தை அழுது வெளியிட்டு மனச்சுமையைக் குறைக்க உறவினர்களுடன் சேர்ந்தழுது புலம்புதலே ஒப்பாரிப் பாடல்கள் தோன்றக் காரணம் எனலாம்.” 9 இழவு காரணமாக உண்டாகும் அழுகை ஒப்பாரிப்பாடல் எனத் தொல்காப்பியர் ஒப்பாரியைக் குறிப்பிடுகின்றார்.

கழிந்தோர் தேஎத்துக் கழிபடர் உறீஇ

இழிந்தோர் புலம்பிய கையறு நிலையும் 10

என்ற சூத்திரத்தால் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே மகளிர் ஒப்பாரிபாடி அழும் வழக்கம் இருந்தது புலப்படுகிறது. ஆசியஜோதி, பெருங்கதை, கம்பராமாயணம், பட்டினத்தார் பாடல் போன்றவற்றில் ஒப்பாரியின் வடிவங்களைக் காணமுடிகின்றது.

பாடலோடு தொடங்கும் மனிதனின் வாழ்க்கை, பாடலோடுதான் முடிகிறது. ‘ஆரம்பமாவது மண்ணுக்குள்ளே, அவன் ஆடி அடங்குவதும் மண்ணுக்குள்ளே“ என்பார்கள். இதுபோலவே “ஆரம்பமாவதும் பாட்டிலேதான், அவன் ஆடி அடங்குவதும் பாட்டிலேதான்” 11 என்பார்கள்.

ஒப்பாரியின் சொற்கள் எல்லாம் சோகச் சுமையுடன் விளங்குவன. இறந்தவர்களுக்காக ஒப்பாரி, மாரடி, கழலடி, கருமாதி போன்ற பாடல்களைப் பாடி வருகின்றனர்.

மகள் சாவிற்குத் தாய் பாடுவது, தந்தை சாவிற்கு மகள் பாடுவது, மாமனார் மாமியார் சாவிற்கு மருமகள் பாடுவது, கணவன் சாவிற்கு மனைவி பாடுவது,

சகோதரன் சாவிற்குச் சகோதாரி பாடுவது என்று ஒப்பாரிப் பாடல்களைப் பல்வேறு வகையாக உறவுமுறைகளின் அடிப்படையில் பாடுவது விளவங்கோடு மக்களிடையே காணப்படுகிறது. இறந்தவர்களுடைய உடலின் அருகில் பெண்கள் அமர்ந்து ஒப்பாரி வைத்துக் கொண்டிருப்பர். உறவினர்கள் வரும்பொழுது அழுகை அதிகாரிக்கிறது. பெண்கள் இறந்தவாரின் உடலைச் சுற்றி அமர்ந்து கொண்டு கைகளை இரண்டு பக்கம் இருப்பவர்களின் தோள் மீதும் போட்டுக் கொண்டு ஒப்பாரி வைக்கின்றனர். விளவங்கோடு வட்டார மக்கள் பாடும் ஒப்பாரிப் பாடல்கள் வாழ்வில் ஏற்படும் ஏமாற்ற உணர்வினை வெளிப்படுத்துவனவாகவும் சோகச் சுமையினை ஏற்படுத்துவனவாகவும் இருக்கின்றன. ஒப்பாரியின் சொற்கள் எல்லாம் சோகச் சுமையுடன் விளங்குகின்றன.

இறந்தவாரின் குடும்பத்தினரும் உறவினரும் இறந்தவாரின் பிரிவால் ஏற்படும் துன்பத்தினால் துக்கம் தாங்காமல் அழுகிறார்கள். இறந்தவர் இன்னும் சிறிது காலம் வாழ்ந்தால் தங்களுக்கு எவ்வாறு உதவியாக இருக்கும் என்பதைப்பற்றியும், அவரது இழப்பால் தாங்கள் அடையப் போகும் துன்பத்தைப் பற்றியும் தங்களின் மனக்குறையையும், இறந்தவாரின் பெருமைகளையும் பாடல் வடிவில் பெண்கள் சொல்லிச் சொல்லி அழுவார்கள். இறந்தவாரின் மிக நெருங்கிய உறவினர்களுக்கு அவர்களுடைய உறவினர்களும், நண்பர்களும் ஆறுதல் கூறுகின்றனர். திருமண வீட்டிற்குப் போவதைவிட, இறந்தவாரின் வீட்டிற்குச் சென்று துக்கம் விசாரிப்பது மிக முக்கியமான தவிர்க்க முடியாத கட்டாயமான சமூகக் கடமையாகக் கருதப்படுகிறது. அவ்வாறு போகத் தவறுவது பொரியதொரு குற்றமாகக் கூட நினைக்கப்படும்.

இறப்பின் போது அளிக்கப்படும் கோடி ஆடைகள் உயிர் வாழ்ந்து கொண்டிருப்போருக்கான பிணைப்பைப் பலப்படுத்துகிறது. “வியென்னாரின் ஆய்வு (ஙுநலைநெச) ட்ரோ பிரியாண்ட் மக்களிடையேயும் ஹோப்பி மக்களிடையேயும் ஒருவர் இறந்துவிட்டால் அவரது நெருங்கிய உறவினர்கள் பிணத்தை மூட, தரமான கோடிகளை அளிக்க வேண்டும் என்ற வழக்கம் இருப்பதைத் தொரிவிக்கிறது” 12 என்று ஆ. செல்லபெருமாள் கூறுகின்றார்.

மனிதனது வாழ்க்கையில் முக்கியமாகப் பறை கொட்டும் சடங்குகள் இருமுறை நிகழ்கின்றன. ஒன்று மணப்பறை மற்றொன்று பிணப்பறை. இருவிதமான பறைகளும் கொட்டுகிற முறையில் வேறுபாடுடையன. பிணப்பறை ஒருவர் மரணமடைந்த நேரத்திலிருந்து அவரை அடக்கம் செய்யும் வரை கொட்டப்படும். இச்செய்தி நாலடியாரில் கூறப்பட்டுள்ளது.

விளவங்கோடு வட்டாரத்தில் ஒருவர் இறந்துவிட்டார் என்பதை மணி ஓசையினாலும் தாரை, தப்பட்டைகளின் சத்தத்தினாலும் அறிய முடிகிறது.

“அழுகிய பிணங்களோடு வாழ்வது சுகாதாரக் கேடானது. பிணங்களை அப்படியே விட்டுவிடுவதும் இடம்மாற்றுவதும் நடைமுறைக்கு ஒவ்வாது. எனவே மனிதன் அவற்றை ஒழுங்குபடுத்த வேண்டியுள்ளது.” 13 எனவே பிணத்தை நீராட்டித் தூய்மைப்படுத்துகின்றனர். இறந்தவரைக் குளிப்பாட்டுவதற்கு வீட்டின் வெளிப்புறம் ஒரு மறைப்பை ஏற்படுத்துவர். அதன் உள்ளே பெஞ்சு போட்டு அதன்மீது இறந்தவாரின் உடலை வைத்து எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டுவர். சோப்பு, எண்ணெய் எனத் தேவையான பொருட்கள் அனைத்தையும் புதிதாக வாங்குகின்றனர். இறந்தவருக்குப் பயன்படுத்திய பின்னர் அதனை வேறு யாரும் பயன்படுத்துவதில்லை. இறந்தவர் ஆணாக இருந்தால் ஆண்கள் குளிப்பாட்டுகின்றனர். பெண்ணாக இருந்தால் பெண்கள் குளிப்பாட்டுகின்றனர். குளிப்பாட்டிய பின்னர் இறந்தவாரின் உடலைப் பெட்டியில் வைக்கின்றனர். அப்பெட்டியை ‘சவப்பெட்டி“ என்று அழைப்பர். குளிப்பாட்டுவதால், இறந்தவருக்கு வீட்டின் மீதுள்ள பற்று நீங்குவதாகக் கருதப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் பிணத்தைத் தூக்கிச் செல்பவர்களுக்குக் கிருமிகள் பரவாமல் இருக்கச் சுகாதார முறையாக அமைகிறது.

“பிணத்தை அலங்காரம் செய்வதைப் ‘பிணக்கோலம்“ என்று கூறுவர்.” 14 இறந்தவரைக் குளிப்பாட்டியவுடன் அலங்காரிப்பது விளவங்கோடு வட்டார மக்களின் பழக்கவழக்கமாகும். புதிய துணி வாங்கி அணிவிக்கின்றனர். பெண்களாக இருந்தால் உள்ளாடை, பிளவுஸ், சேலை என வாங்கி அணிவிக்கின்றனர். இறந்தவருக்கு அணிவிக்கும் அனைத்து ஆடையும் வெள்ளை நிறமுடையதாக இருக்கும். குளிப்பாட்டித் தலை சீவி, பவுடர் பூசி அலங்காரித்த பின்னர்ச் சவப்பெட்டியில் வைப்பர். புதிய செருப்பு வாங்கி அணிவிப்பர். சவப்பெட்டியில் வைத்த பின்னர் இறந்தவர் பயன்படுத்திய மூக்குக் கண்ணாடி போன்ற முக்கியமான பொருட்களை அப்பெட்டியில் வைப்பர். இறந்தவர் குடும்பத் தலைவனாக இருந்தால் தலைவியினுடைய திருமணப் புடவையைச் சவப்பெட்டியில் வைப்பர். அவர்கள் இறப்பதற்கு முன்னர் அணிந்திருந்த கம்மல், செயின், வளையல் போன்ற தங்கத்தினாலான பொருள்களைக் கழற்றி விடுகின்றனர். காரணம் அவர்களை அடக்கம் செய்த பின்னர்த் தங்கத்திற்கு ஆசைப்பட்ட திருடர்கள் புதைகுழியைத் தோண்டி அப்பொருட்களை எடுத்து விடலாம் என்றெண்ணிக் கழற்றி விடுகின்றனர். விளவங்கோடு வட்டார மக்கள் இறந்தவாரின் உடலை வீட்டின் வெளியில்

வைப்பதில்லை. நடுவீட்டில் வைப்பார்கள். உறவினர்கள் பூமாலை (ஆரம்) வாங்கி வந்து இறந்தவர் உடலுக்கு அணிவிப்பர். நண்பர்கள், மன்ற உறுப்பினர்கள் போன்றோர் மலர் வளையம் வைத்துத் தங்களது ஆழ்ந்த இரக்கத்தைத் தொரிவிப்பர்.

இந்து சமயத்தினாரின் இறப்புச் சடங்கு

கன்னியாகுமாரி மாவட்டத்தில் விளவங்கோடு வட்டத்தில் இந்து சமூகத்தில் இறப்பு நேர்ந்தால் இறந்தவாரின் தலைப்பகுதியில் உடனே கைவிளக்கு ஒன்றினை ஏற்றி வைக்கிறார்கள். இறந்தவாரின் மகன்கள் பெரும்பாலும் அக்கம் பக்கத்திலேயே வாழ்வதால் உடனே அவர்கள் ஒன்று கூடிவிடுகிறார்கள்.

ஆள் சொல்லி விடுதல்

ஊருக்குப் பொதுவாக இருக்கும் குடிமகனுக்கு ஆள் அனுப்பி அழைத்து வருகிறார்கள். பெரும்பாலும் ஆள் அனுப்பாமலேயே குடிமகன் தானாகவே தகவல் தொரிந்து வருவது வழக்கம். இறந்தவாரின் மகன்கள் தங்கள் உறவினர்கள் அனைவாரின் பெயரையும் முகவாரியையும் எழுதியும் இறந்தவாரின் மகள்கள் மற்றும் கணவர்களின் பெயர்களையும் முகவாரியையும் எழுதியும் ஊர்க்குடிமகனிடம் தகவல் தொரிவித்து வருமாறு அனுப்புகிறார்கள். ஊர்க்குடிமகன் அவனது உறவினர்களை அழைத்து எல்லா ஊர்களுக்கும் பிரித்து அனுப்புகின்றான். பெரும்பாலும் இரண்டு மூன்று மணி நேரத்தில் சென்று திரும்பி வருமாறு தகவல் தொரிவிக்கும் நிகழ்வு நடக்கும். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வெகு தொலைவில் இருக்கும் உறவினர்களை அழைப்பது குறித்துக் கவலைப்படமாட்டார்கள். இருபத்து நான்கு மணி நேரத்துக்குள்ளாக இறந்தவரை அடக்கம் செய்ய வேண்டும் என்பதில் கவனமாக இருப்பார்கள். இறப்பு நிகழ்ந்த வீட்டின் முன்பாக ஒரு சில மணி நேரத்துக்குள்ளாகப் பந்தல் போடப்படும். ஊர்க்குடிமகன் போதிய இடைவெளிவிட்டு சங்கினை ஊதிக்கொண்டிருப்பான். பெரும்பாலும் சங்கு ஒலித்து விட்டால் ஊர் மக்கள் அனைவரும் இறப்பினை அறிந்து கொள்வார்கள். இறப்பினை அறிந்த பிறகு ஊர் மக்கள் யாரும் வெளியூருக்குச் செல்வதில்லை. இறந்தவாரின் உடலை அடக்கம் செய்த பிறகே வெளியூருக்குச் செல்வார்கள். இறந்தவர் குடும்ப வசதிக்கேற்ப உடனே மேள வாத்தியத்திற்கு ஏற்பாடு செய்யப்படும். போதிய இடைவெளி விட்டு அவ்வப்போது மேளம் அடிக்கப்படும். வயது முதிர்ந்து இறந்தவாரின் மகள் உறவு முறையில் உள்ளவர்கள் வரும்போதே மேளதாளத்தோடுதான் வருவார்கள். ஊர்க்குடிமகன் தென்னை மூங்கிலில் அழகிய பல்லக்கினைத் தயார் செய்வான். அந்தப் பல்லக்கில் வைத்துத்தான் இறந்தவரை இடுகாட்டிற்குக் கொண்டு

செல்வார்கள். இறப்பு நிகழ்ந்த வீட்டிலுள்ளவர்கள் தங்கள் வசதிக்கேற்ப இறந்தவரைப் பெட்டிக்குள் வைத்து அடக்கம் செய்வதற்காக உடனே சவப்பெட்டிக்கு ஏற்பாடு செய்வதும் உண்டு. இறந்தவாரின் இரத்தத்தோடு தொடர்புடைய உறவினரும், மிக நெருங்கிய உறவினரும் வந்த உடன் இறப்புச் சடங்கு தொடங்குகிறது.

நீர் மாலை கொண்டு வருதல்

அந்த ஊருக்குத் துணி வெளுக்கும் தொழிலைச் செய்பவர் வெள்ளைத் துணிகள் பலவற்றைக் கொண்டு வந்திருப்பார். அந்தத் துணியைத் தலைக்கு மேலாகப் பிடித்தபடி ஊர்க்குடிமகன் தயாராக இருப்பான். அவன் அங்குக் கூடியிருக்கும் உறவினர்களைப் பார்த்து, “அய்யா! நீர் மாலை எடுத்துக் கொண்டு வருவதற்கு எல்லோரும் வாருங்கள்” என்று கூவி அழைப்பான். உடனே அந்தக் குடும்பத்தில் உள்ள ஆண்கள் அனைவரும் குடத்தை எடுத்துக் கொண்டு தலைக்குமேல் விரிக்கப்பட்டிருக்கும் வெள்ளைத் துணியின்கீழ் நடந்தபடி ஊர்ப்பொதுக் கிணற்றுக்குச் செல்வார்கள். இறந்தவாரின் மகன்கள் அனைவரும் கட்டிய துணியோடு கிணற்று நீரில் குளிப்பார்கள். அதன் பிறகு உறவினர்கள் வழங்கும் புதுத்துணிகளை அணிந்தபடி இறந்தவரைக் குளிப்பாட்டுவதற்குத் தண்ணீரைச் சுமந்தபடி திரும்பி வருவார்கள். இவ்வாறு போகும் போதும் வரும் போதும் சங்கு முழங்கப்படும். மேளம் அடிக்கப்படும். இந்த நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது இறந்தவரை அடக்கம் செய்வதற்குரிய குழி வெட்டுவதற்காகச் சிலர் இறந்தவருக்குச் சொந்தமான கல்லறைத் தோட்டத்திற்கு அனுப்பப்பட்டிருப்பார்கள். அவர்கள் அங்கு ஆறடி நீளம் நான்கடி அகலம் என்னும் அளவில் ஆறடி ஆழத்தில் குழி தோண்டுவார்கள்.

குளிப்பாட்டுதல்

இறந்தவர் ஆண் என்றால் ஆண்கள் இறந்தவரைக் குளிப்பாட்டுவார்கள். அவருக்குப் புதுத்துணி அணிவிப்பார்கள். இவ்வாறு புதுத்துணி அணிவித்தவுடன் முகம் தலை முழுவதையும் வெள்ளைத்துணியால் போர்த்திக் கட்டிவிடுவார்கள். சிலர் முகத்தை மட்டும் மறைத்துக் கட்டாமல் விட்டு வைப்பதுவும் உண்டு. இறந்தவர் பெண் என்றால் குளிப்பாட்டும் நிகழ்வினைப் பெண்கள் நிகழ்த்துவார்கள். ஆண்களுக்குத் துணி போர்த்தப்படுவது போன்றே இறந்த பெண்ணுக்கும் போர்த்தப்படும். இந்நிகழ்வு மறைவாகவே நடைபெறும்.

வாய்க்காரிசி போடுதல்

இறந்தவாரின் வாயில் அரிசி போடும் நிகழ்வினை வாய்க்காரிசி போடுதல் என்று குறிப்பிடுகிறார்கள். ஊர்க்குடிமகன் பெண்களைப்பார்த்து, “அம்மாமாரெல்லாம் வாய்க்காரிசி போட வாங்க” என்று அழைப்பான். பெண்கள் ஒவ்வொருவராக வாரிசையாக வந்து வாய்க்காரிசி போடுவார்கள். வாய்க்காரிசி போடும் பெண்கள் காணிக்கையாக ரூபாய் வழங்குவார்கள். அந்த ரூபாயை ஊர்ப்பொரியவர் ஒருவர் பத்திரமாக வாங்கி வைத்துக் கொள்வார். எல்லோரும் வாய்க்காரிசி போட்டு முடித்தபின் இறந்தவாரின் உடல் தென்னை மூங்கில் பல்லக்கில் அல்லது பெட்டிக்குள் வைக்கப்படும். பெட்டிக்குள் வைக்கப்பட்டால் பெட்டியின் மூடி லேசாக ஆணி அடித்து மூடப்படும். இறந்தவாரின் உறவினர்கள் இறந்தவாரின் உடலைப் பெட்டியோடு அல்லது பல்லக்கோடு தோளில் தூக்குவார்கள். இவ்வாறு தூக்கும் போது சங்கொலியும் மேளச்சத்தமும் மிக அதிகமாக ஒலிக்கும். நீர் மாலை கொண்டுவருவதற்கு மேலே துணி பிடித்துச் செல்வது போல இப்போதும் எல்லோரும் துணிக்குக்கீழே நடந்து செல்வார்கள். சங்கொலியும் மேளமும் முன்னால் போக அதனைத் தொடர்ந்து இறந்தவாரின் மூத்த மகனின் தோளில் தண்ணீர் நிறைந்த சிறிய மண் குடம் ஒன்று ஏற்றப்பட்டு அவர் பின்னே செல்வார். அவரைத் தொடர்ந்து உடல் தூக்கிச் செல்லப்படும். உறவினர்கள் பின்தொடர்ந்து செல்வார்கள். இந்த வேளையில் பெண்கள் வருவதில்லை. இறந்தவரைக் கிடத்தி இருந்த அறையைச் சுத்தம் செய்வது முதலான வேலைகளை அவர்கள் கவனிப்பார்கள். மேலும் இறந்தவர் ஆண் என்றால் அவரது மனைவி உயிருடன் இருந்தால் அவரது கழுத்தில் அணிந்திருக்கும் தாலியை மூத்த பெண்கள் கழற்றி மூத்த மகனது மனைவியின் கையில் கொடுப்பார்கள். இறந்தவர் பெண் என்றால் உடல் எடுக்கப்படும் முன்பாக நகைகள் அனைத்தும் கழற்றப்படும். பெரும்பாலும் திருமணத்தின் போது எடுத்த முகூர்த்தச் சேலையை அனைவரும் பத்திரமாக வைத்திருப்பார்கள். அந்த முகூர்த்தச் சேலையை உடல் அடக்கம் செய்யப்படும் குழிக்கு எடுத்துச் செல்வார்கள்.

இறந்தவருக்குச் சொந்தமான இடுகாட்டில் தோண்டப்பட்ட குழிக்கு அருகே இறந்தவாரின் பல்லக்கு அல்லது பெட்டி இறக்கி வைக்கப்படும். பெட்டியின் மூடி திறக்கப்படும். ஊர்க்குடிமகன், “அய்யாமாரெல்லாம் வாய்க்காரிசி போட வாங்க” என்று அழைப்பான். ஒவ்வொருவரும் வாரிசையாக வந்து ஊர்ப் பொரியவாரிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு வாய்க்காரிசி போட்டு விட்டு வாழ்த்திச் செல்வார்கள். எல்லோரும் வாய்க்காரிசி போட்டு முடிந்தபின் இறந்தவாரின் மகன்களுக்கு மொட்டையடிக்கப்படும். இந்த மொட்டையடிக்கும் நிகழ்வு வீட்டிலேயே நடைபெறுவதும் உண்டு. சிலர் பேரப்பிள்ளைகளில் ஆண்களுக்கும் மொட்டையடிப்பது உண்டு.

மொட்டையடித்தல் நிகழ்வு முடிந்தபின் மீண்டும் கொள்ளிக்குடம் இறந்தவாரின் மூத்த மகனின் இடது அல்லது வலது தோளில் வைக்கப்படும். ஊர்க்குடிமகன் கையில் ஒரு வெட்டாரிவாள் வைத்திருப்பான். தண்ணீர் நிறைந்த அந்த மண் குடத்தில் வெட்டாரிவாளால் வெட்டிச் சிறிய ஓட்டை போடுவான். அந்த ஓட்டை வழியாகத் தண்ணீர் பாயும். இந்த நிகழ்வு நடக்கும்போது மண் குடத்தை வைத்திருப்பவர் அந்தக் குழியைச் சுற்றி நடக்க ஆரம்பிப்பார். மீண்டும் பெட்டியோடு அல்லது பல்லக்கோடு அந்தக் குழியைச் சுற்றி வருவார்கள். அவ்வாறு சுற்றும் போது"என் அம்மோ! என் அய்யோ!" என்று ஊர்மகன் சொல்ல அனைவரும் சொல்லியபடி சுற்றிவருவார்கள். மூன்று முறை சுற்றி வந்தபின் (அய்யா வழி என்றால் ஐந்து முறை) மண்குடம் தண்ணீரோடு உடைக்கப்படும். பல்லக்கிலிருக்கும் உடலைத் தூக்கியபடி கீழே வைக்காமல் குழிக்குள் இறக்குவார்கள். இவ்வாறு அடக்கம் செய்யும் போது உட்கார்ந்து இருப்பதைப் போல் அடக்கம் செய்யும் வழக்கமும், படுத்திருப்பதைப்போல அடக்கம் செய்யும் வழக்கமும் உள்ளது. உட்கார்ந்திருப்பது போல அடக்கம் செய்வதென்றால் உடல் பெட்டிக்குள் வைக்கப்படமாட்டாது. வெட்டப்பட்ட குழியின் மேற்கு ஓரத்தில் உட்கார வைப்பதற்கு வசதியாக ஓர் உட்குழி தோண்டப்படும். அதில் உடல் உட்கார வைக்கப்படும். இவ்வாறு உட்கார வைக்கும் போது கொள்ளிக் குடத்தை உடைக்காமல் அருகிலே வைப்பதுவும் உண்டு. படுக்க வைத்து அடக்கம் செய்யும் போது அப்படியே மேற்குப் பக்கம் தலையும் கிழக்குப் பக்கம் காலும் வருமாறு அடக்கம் செய்யப்படும். இறந்தவாரின் நெருங்கிய உறவினர் மேலே நின்றபடி பிடிமண் எடுத்துப் போடுவார்கள். அதன்பிறகு வேகமாக மண்ணால் குழி நிரப்பப்படும். வெட்டப்பட்ட மண்ணில் மீதம் கிடக்கும் மண்ணை அந்தக் குழியின் நடுவிலேயே குவித்து வைப்பார்கள். அவ்வாறு குவித்து வைப்பதை மையக்குழி என்பார்கள். அதில் உடனே கல்லறை கட்டும் வழக்கமும் உண்டு. இறந்தவருக்குப் பதினைந்தாம் நாள் முடியும்போது கல்லறை கட்டுவதும் உண்டு. கல்லறை கட்டாமல் விடுவதும் உண்டு.

எண்ணெய் வைத்தல்

இறந்தவாரின் நெருங்கிய உறவினர்கள் இறந்த நாள் முதல் தலையில் எண்ணெய் வைக்க மாட்டார்கள். ஏழாம் நாளன்று காலையில் உறவினர்கள் எல்லோரும் இறந்தவாரின் வீட்டிற்கு வந்து தலையில் எண்ணெய் வைத்துக் கொள்வார்கள். அந்த எண்ணெய் வைத்தல் நிகழ்வின் போது பெரும்பாலும் உறவினர்கள் அரிசியும் எண்ணெயும் கொண்டு வருவார்கள்.

பண்டம் சுட்டுப் போடுதல்

இறந்த பதினான்காம் நாளன்று மாலையில் இறந்தவர் விரும்பி உண்ணும் இனிப்புப் பண்டங்களைச் சுட்டு இறந்தவருக்கு வீட்டில் படைத்து விட்டு உறவினர்கள் அனைவரும் உண்டு மகிழ்வார்கள். இந்த நிகழ்வின்போது இறந்தவாரின் மகன் உறவின் முறையில் உள்ளவர்களுக்குப் பட்டங்கட்டும் நிகழ்வும் நடைபெறும். இந்தப் பட்டங்கட்டும் நிகழ்வினை இறந்த நாளிலிருந்து பதினைந்தாம் நாளுக்குள் எந்நாளிலும் நடத்துவார்கள்.

அடியந்தரம்

இறந்த நாளிலிருந்து பதினைந்தாம் நாளில் உறவினர்கள் அனைவருக்கும் விருந்து சமைக்கப்பட்டு அந்த உணவு இறந்தவாரின் மையக்குழிக்கு மேல் படைக்கப்படும். அதன்பின்னர் உறவினர்கள் அனைவருக்கும் வீட்டில் விருந்து பாரிமாறப்படும். இரத்தச் சம்மந்தப்பட்ட உறவினர் அல்லாதவர் அனைவருக்கும் இந்தப் பதினைந்தாம் நாள் நடைபெறும் அடியந்தர நிகழ்வோடு துக்கம் முடிந்து விடும். இரத்த உறவுகள் மட்டும் நாற்பத்தொரு நாள் வரை வேறு விருந்து விழாக்களில் பங்கேற்க மாட்டார்கள். நாற்பத்தோராவது நாள் வீட்டில் அல்லது மையக்குழியில் படையல் போடப்படும். இறந்தவர் ஆண் என்றால் அவரது மனைவிக்கு ஏழாம் நாள், அல்லது பதினைந்தாம் நாள் அல்லது நாற்பத்தோராம் நாளில் வெள்ளைச் சேலை வழங்குவார்கள். தற்காலத்தில் நீலச்சேலை வழங்குவதும் உண்டு.

இறந்த நாள் தொடங்கி ஓர் ஆண்டு நிறைவடைந்ததும் ஆண்டு இறுதி (நினைவு நாள்) கடைப்பிடிக்கப்படும். நெருங்கிய உறவினர்கள் அழைக்கப்பட்டு அன்று மையக்குழியில் அல்லது கல்லறையில் படையல் போடப்படும். அதன் பின்னர் ஆண்டு தோறும் இந்த ஆண்டிறுதி கொண்டாடப்படும்.

“ஒவ்வொரு இந்துவும் தனக்கு ஒரு மகன் இருக்கவேண்டுமென்று விரும்புவான். எதனாலென்றால், மகன் முறையாக இறுதி சடங்குகள் செய்தால்தான் இறந்தவருக்கு மகிழ்ச்சியான மறுபிறப்புக் கிடைக்கும் என நம்பப்படுகிறது.” 15 மனைவி இறந்தால் கணவனும், தந்தை இறந்தால் மகனும், மகள் அல்லது மகன் இறந்தால் தந்தையும் அந்த உறவுமுறையில் உள்ளவர்கள் இல்லை என்றால் நெருங்கிய உறவினர் ஒருவர் கையில் மாச விளக்கினை எடுத்துக் கொண்டு இறந்தவாரின் உடலினைச் சுற்றி வருவர். அவ்வாறு சுற்றி வருபவர் தன்னை ஒரு போர்வையால் போர்த்திக் கொண்டு போர்வையினுள் விளக்கை மூடி அணையாமல் கொண்டு வருவர்.

அவர் சுற்றி வரும்பொழுது நெருங்கிய உறவினர்கள் அவருடன் சுற்றுகின்றனர். மூன்று முறை இறந்தவாரின் உடலைச் சுற்றி வருகின்றனர். மூன்றாவது முறை சுற்றி வந்ததும் இறந்தவாரின் கால்மாட்டிலிருக்கும் விளக்கினை அணைத்து விடுகின்றனர். இதுவரை குடும்ப விளக்காக இருந்த உயிரானது அணைந்துவிட்டது என்பதை விளக்கவே இச்சடங்கு செய்யப்படுவதாகக் கருதுகின்றனர். இச்சடங்கானது நடைபெறும் பொழுது மற்ற உறவினர்கள் இறந்தவாரின் உடலைச் சுற்றி நிற்கின்றனர்.

“இறந்தவரைத் தூக்கிச் செல்லும் வாகனங்கள் பல வகைப்படும். அவை பல்லக்கு, பாடை, தொட்டி, இரதம், மயானப்பெட்டி எனபனவாகும்.” 16 விளவங்கோடு வட்டார மக்கள் இறந்தவர்களைப் புதைப்பதற்கு உடலைச் சவப்பெட்டியில் வைத்துத் தூக்கிச் செல்கின்றனர். சவப்பெட்டி தயாரிப்பதற்கென்று தனி ஆட்கள் இருக்கின்றனர்.

மரணமடைந்தவர் முதியவராக இருப்பின் பல்லக்கு, மேள வாத்தியங்கள், பொய்க்கால் குதிரை ஆட்டங்களோடு, வாண வேடிக்கை முழங்க ஆரவாரத்தோடு சவ ஊர்வலம் செல்லும் வழக்கம் பழங்காலத்தில் நடைமுறையில் இருந்திருக்கிறது. பொதுவாக வீட்டுக்கு வெளியே நடக்கும் ஈமச்சடங்குகளில் பெண்கள் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் வீட்டினுள்ளிருந்தபடியே தங்களுடைய சோக அழுகையின் மூலம் துக்கத்தை வெளிப்படுத்துவர்.

சீர்திருத்தக் கிறித்தவர்களின் இறப்புச் சடங்கு

கிறித்தவர் ஒருவர் மரணம் அடைந்துவிட்டால் உடனடியாக இறந்தவரைக் கட்டில் அல்லது பெஞ்சில் படுக்க வைக்கின்றனர். பின்னர் இறந்தவாரின் கை, கால்களை நேராக வைக்கின்றனர். இரு பாதத்தையும் இணைத்துத் துணியால் கட்டி விடுகின்றனர். கையை வயிற்றுப் பகுதியில் மடித்து வைக்கின்றனர். இறந்தவருடைய வாய் திறந்திருக்கக் கூடாது என்று முகத்தைச் சுற்றித் துணியால் கட்டுகின்றனர். இறந்தவாரின் காதுகளிலும் மூக்கிலும் பஞ்சு வைக்கின்றனர். தலைமாட்டில் மெழுகுவர்த்தி, ஊதுவத்தி போன்றவற்றைக் கொளுத்தி வைக்கின்றனர். பின்னர் இறந்த செய்தியைத் திருச்சபை போதகருக்குத் தொரிவிக்கின்றனர். உடனடியாக ஆலயத்தில் முதல் மணி அடிக்கப்படுகிறது. இந்த மணியோசை வித்தியாசமானதாக ஒலிக்கிறது. இதனைத் துக்கமணி என்று கூறுவர். இந்த ஓசையைக் கேட்ட உடன் ஊர் மக்கள் யாரோ ஒருவர் இறந்துவிட்டார் எனத் தொரிந்து அக்கம் பக்கத்தில் விசாரிக்கின்றனர். யார் இறந்து விட்டார் என்று தொரிந்தவுடன் ஊர் மக்கள்

இறந்தவாரின் வீட்டிற்குத் துக்கம் விசாரிக்கச் செல்கின்றனர். போதகர்கள் சென்று ஒரு சில பாடல்களைப் பாடி, வேதத்திலிருந்து ஒரு சில வசனங்களைப் படித்து, ஜெபித்து ஆறுதல் கூறிச் செல்கின்றனர். போதகாரிடம் அடக்கத்திற்குரிய நேரத்தைத் தொரிவிக்கின்றனர். வெளி ஊர்களில் வசிக்கின்ற மகன் அல்லது மகள் மற்றும் உறவினர்கள் வரும்வரை அடக்கம் செய்வதில்லை. ஊர் மக்களும் இறந்தவர் யார் என்று தொரிந்தவுடன் துக்க வீட்டிற்குச் செல்கின்றனர். இறந்தவாரின் உடலைச் சுற்றி உறவினர்கள், சுற்றத்தார் சூழ்ந்திருந்து அழுகின்றனர். இறந்தவர் எவ்வாறு இறந்தார் என்பதைச் சொல்லிச் சொல்லி அழுவர். அதுமட்டுமல்லாமல் இறந்தவருடைய பெருமைகளைக் கூறி அழுவர். இறந்தவாரின் வீட்டில் அடுப்பு எரியாது. பக்கத்து வீட்டில் உள்ளவர்கள் இறந்தவர்களின் வீட்டில் உள்ளவர்களுக்குத் தேயிலை, காப்பி போட்டுக் கொடுப்பர். இறந்தவர்களை அடக்கம் செய்யும் வரை உறவினர்கள் உணவு உண்பதில்லை. அடக்கம் செய்தபிறகு வீட்டைக் கழுவிச் சுத்தம் செய்துவிட்டுக் கஞ்சி வைத்து அனைவரும் குடிக்கின்றனர்.

ரோமன் கத்தோலிக்கக் கிறித்தவர்களின் இறப்புச் சடங்கு

ஒருவர் இறந்தவுடனே திருச்சபையில் மணி அடிப்பார்கள். கோயில் மணியின் ஓசையில் வித்தியாசம் உண்டு. ஒருவர் இறந்துவிட்டால் அடிக்கப்படும் மணி சோகமான இராகத்தில் இருக்கும். மணியடித்தவுடன் யாரோ இறந்துவிட்டார்கள் என்பதை ஊர் மக்கள் புரிந்து கொள்வார்கள். கோவிலிலும் மரணச் செய்தியைக் கூறுவார்கள். இன்னார் இறந்து விட்டார் அவரது உடல் இத்தனை மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும் என்று கூறுவதோடு மட்டுமல்லாமல் ஒருசில திருச்சபைகளில் அறிவிப்புப் பலகையிலும் எழுதிப் போடுவார்கள். மரணச் செய்தியைப் பார்பர் என்ற நாவிதர் தான் அனைவருக்கும் தொரிவிப்பார். வெள்ளை ஆடைதான் அதிகமாகப் பயன்படுத்துவார்கள். இறுதிச் சடங்கிற்கு முன் பங்குத்தந்தையை அழைக்கப் பொரியோர்கள் செல்வார்கள். கோயில்பிள்ளை மணி அடித்துக் கொண்டு முன்செல்ல பங்குத்தந்தை அடக்க ஆராதனை நடத்த இறந்தவாரின் இல்லத்திற்குச் செல்வார். அடக்க நேரத்தில் அனைவரும் மரண வீட்டில் கூடுவார்கள். பின்னர் உடலை தூம்பா என்னும் வண்டியில் எடுத்துக் கொண்டு தேவாலயத்திற்குக் கொண்டு வருவார்கள். “நித்திய இளைப்பாறுதல் இவருக்கு அளித்தருளும் ஆண்டவரே முடிவில்லாத ஒளி இவர்மீது ஒளிர்வதாக” எனப் பங்குத்தந்தை கூற கூடியிருந்த அனைவரும் தொடர்ந்து கூறுவார்கள். பின்னர்த் தேவாலயத்தில் திருப்பலி நடைபெறும். அடக்கச் சடங்குமுறை புத்தகத்தைப்

பங்குத்தந்தை வாசிப்பார். சாம்பிராணி தூபம் காட்டுவார்கள். பங்குத்தந்தை மந்திரிப்பார். பின்னர்த் தேவாலயத்தில் உள்ள சடங்குகளை முடித்துவிட்டுக் கல்லறைத் தோட்டத்திற்குக் கொண்டு வருவார்கள். அங்குச் சவப்பெட்டியின் மேல் பாகத்தை மூடுவர். பின்னர்ப் பெட்டியைக் குழிக்குள் வைப்பர். ஒவ்வொருவரும் மூன்றுபிடி மண்ணைத்தூவிக் கல்லறையை மண்ணால் மூடுவர். ஒரு சிலர் மலர்களைத் தூவுவார்கள். பின்னர் அடக்கம் பண்ணியதற்கு அடையாளமாக மரத்தால் ஆன ஒரு சிலுவையை வைப்பார்கள். மலர்மாலையையும் கல்லறையின் மேல் வைப்பார்கள். இரவு முழுவதும் எரிவதற்கு மெழுகுவர்த்தி கொளுத்தி வைப்பார்கள். மின்விளக்கும் போட்டிருப்பார்கள். பின்னர் எட்டாம் நாள் நினைவுத்திருப்பலி, பதினாறாம் நாள் நினைவுத்திருப்பலி, முப்பதாம் நாள் நினைவுத் திருப்பலி, ஆண்டு நினைவுத்திருப்பலி என நினைவுத்திருப்பலி நடத்துவார்கள்.

கல்லறை

விளவங்கோடு வட்டார மக்கள் ஒருவர் இறந்து விட்டால் அவர்களது நிலத்திலேயே அடக்கம் பண்ணுகின்றனர். ஒரு சிலர் குடும்பக் கல்லறைத் தோட்டம் வைத்துள்ளனர். அதில் அடக்கம் செய்கின்றனர். ஒரு சில ஆலயங்களில் கல்லறைத் தோட்டம் உள்ளது. ஒருவர் இறந்த உடன் அவர்களை அடக்கம் செய்வதற்காகக் குழி வெட்டுகின்றனர். குழி வெட்டும்பொழுது நிறுத்தி நிறுத்தி அவ்வப்போது மணி அடிக்கின்றனர். இந்த மணி குழிக்கரையில் கட்டப்பட்டு அடிக்கப்படுகின்றது.

இறுதி ஊர்வலம்

இறுதி ஊர்வலத்தில் உறவினர்கள், சுற்றத்தார் அனைவரும் கலந்து கொள்கின்றனர். பல பாடல்களைப் பாடுகின்றனர். இப்பாடல்களைத் துக்கப்பாடல்கள் என்று கூறுவார்கள். பலர் பூமாலை, மலர்மாலை போன்றவற்றைப் போட்டுத் தங்களது துக்கத்தை வெளிப்படுத்துவார்கள். பின்னர்ப் போதகர் மற்றும் பொரியோர் இறந்தவாரின் பெருமைகளைக் கூறுவர். போதகர் வேதவசனம் வாசித்து ஜெபித்து முடித்தபின் சவப்பெட்டியைத் தூக்குவார்கள். பெட்டியைத் தூக்குமுன் இறந்தவருக்கு உறவினர்கள் முத்தம் கொடுத்து அழுவார்கள். அனைவரும் மாரியாதை செலுத்திய பின்னர்ச் சவப்பெட்டியை மூடி விடுவார்கள். பின்னர்ப் பாடல் பாடிக்கொண்டே தூக்கிச் செல்வார்கள். அந்த ஊரில் உள்ள மக்கள் அனைவரும் சோகத்துடன் காணப்படுவார்கள். கல்லறைக் குழியின் அருகில் சென்று மீண்டும் பாடல்பாடி வேதம் வாசித்து ஜெபித்த பின்னர்க் கயிறால் பெட்டியைக் குழிக்குள் இறக்குவார்கள். போதகர் மற்றும் உறவினர் அனைவரும் மண் அள்ளிப் போடுவார்கள். இவ்வாறு

இறந்தவரை அடக்கம் செய்தபின்னர் வீட்டிற்கு வந்து போதகர் ஜெபித்து உறவினர்களுக்கு ஆறுதல் கூறிச் செல்வார். பின்னர் இறந்தவரை வைத்திருந்த வீட்டைக் கழுவிச் சுத்தப்படுத்துவார்கள். அனைவரும் குளித்து முடித்த பின்னர்க் கஞ்சி வைத்துக் குடிப்பார்கள். கல்லறை மற்றும் இறந்தவாரின் வீட்டில் இரவு முழுவதும் விளக்கு எரிந்து கொண்டே இருக்கும். பத்து அல்லது பதினைந்து நாட்கள் இரவு நேரத்தில் விளக்கு எரிந்து கொண்டே இருக்கும்.

இஸ்லாம் சமயத்தினாரின் இறப்புச் சடங்கு

'வாழ்வையும் மரணத்தையும் அளிப்பவன் இறைவனே" என்பதை முஸ்லிம்கள் மனதார ஒப்புக் கொள்ள வேண்டும். அவனன்றி அணுவும் அசையாது" என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். "உண்மையில் உயிரைக் கொடுப்பவனும், உயிரைப் பறிப்பவனும் அல்லாஹ்வே ஆவான்"17 அவனே வாழ்வை அளிக்கின்றான். இன்னும் அவனே மரணிக்கச் செய்கின்றான். பின்னர் அவனிடமே நீங்கள் (மறுமையில்) திரும்பக் கொண்டுசெல்லப்படுவீர்கள்."18 "அல்லாஹ்வின் அனுமதியின்றி எந்த உயிரினமும் மரணிக்க முடியாது."19

"வானங்கள், பூமி ஆகியவற்றின் ஆட்சி நிச்சயமாக அல்லாஹ்வுக்கே உரியது. அவனே உயிர் கொடுக்கின்றான். அவனே மரணிக்கும்படி செய்கின்றான். அல்லாஹ்வைத் தவிர உங்களுக்கு வேறு பாதுகாவலரும் இல்லை. உதவியாளரும் இல்லை."20 என்பன போன்ற கருத்துகளைத் திருமறையில் திருப்புகின்ற பக்கங்களில் எல்லாம் காணலாம்.

ஏழையாக இருந்தாலும் பணக்காரராக இருந்தாலும், வீரனாக இருந்தாலும் கோழையாக இருந்தாலும், மாளிகையில் வாழ்ந்தாலும், மண் குடிசையில் இருந்தாலும் மரணத்தைச் சந்தித்தே தீர வேண்டும். "நீங்கள் எங்கிருந்தபோதிலும் உங்களை மரணம் அடைந்தே தீரும். நீங்கள் மிகவும் உறுதியாகக் கட்டப்பட்ட கோட்டைகளில் இருந்த போதிலும் சாரியே!" 21 என்கிறது, திருக்குரான்.

'இன்று இருப்போர் நாளை இல்லை" - இதனால்தான் முஸ்லிம்கள், 'நாளை நான் உன்னைக் கண்டிப்பாகச் சந்திக்கிறேன்" என்று சொல்ல மாட்டார்கள். இன்ஷா அல்லாஹ் (இறைவன் நாடினால்) நாளை சந்திக்கிறேன் என்பார்கள்.

ஒருவர் இறந்தவுடன் அவசர அவசரமாக அடக்கம் பண்ண முயற்சிப்பார்கள். இன்றைய காலகட்டத்தில் உடனடியாக அடக்கம் பண்ண முடிவதில்லை. ஏனென்றால்

இறந்தவாரின் மகன் அல்லது மகள் போன்ற உறவுமுறையில் உள்ளவர்கள் யாராவது வெளி நாட்டில் பணிபுரிவதால் அவர்கள் வருவதற்குத் தாமதமாகும். ஆகவே உடனடியாக அடக்கம் பண்ண முடிவதில்லை. இறந்து விட்டார்கள் என்று உறுதி செய்தவுடன் இறந்தவரைக் குளிப்பாட்டுவார்கள். இதனை அஞ்கி கழுவுதல் என்பார்கள். அதன் பொருள் என்னவென்றால் வயிற்றைச் சுத்தப்படுத்துதல் மலம் முதலான கழிவுகளை நீக்கிச் சுத்தப்படுத்துவதற்காக உடனடியாகக் குளிப்பாட்டுவார்கள். அடக்கம் செய்யுமுன் மீண்டும் ஒருமுறை குளிப்பாட்டுவார்கள். பின்னர் இடது கையை நெஞ்சில் வைப்பார்கள். வலது கையை வலது பக்க வயிறோடு சேர்த்து வைப்பார்கள். இறந்தவர் அணியக்கூடிய ஆடை தையல் இல்லாமல் இருக்க வேண்டும். புதிய துணியை எடுத்துக் கை, கழுத்து முதலிய வடிவில் வெட்டி அணிவார்கள். பின்னர் ஒரு துணியால் சுற்றுவார்கள். பின் இரண்டாவது ஒரு துணியால் சுற்றுவார்கள். பின்னர் மூன்று கட்டால் கட்டுவார்கள். காலில் ஒரு கட்டு, நெஞ்சில் ஒரு கட்டு, தலையில் ஒரு கட்டு என மூன்று கட்டுக் கட்டுவார்கள். சுற்றி அமர்ந்திருப்பவர்கள் திருக்குரானை வைத்து ஓதிக்கொண்டிருப்பார்கள். பின்னர் இறந்தவரை உறவினர்கள் சந்தக் என்னும் பெட்டியில் வைத்துத் தூக்கி எடுத்துப் பள்ளி வாசலுக்குக் கொண்டு செல்வார்கள். மகன், அண்ணன், தம்பி, தந்தை போன்ற நெருங்கிய உறவினர்கள் நால்வர் தூக்கிச் செல்வார்கள். உறவினர்கள்தான் பள்ளிவாசலில் வைத்துத் தொழுகை நடத்த வேண்டும். தொழுகை நடத்தத் தொரியாத பட்சத்தில் அவர்கள் பள்ளி வாசலில் இருக்கக் கூடிய இமாமிடம் தொழுகை நடத்தக் கூறுவார்கள். தினந்தோறும் தொழும் ஐந்து நேரத் தொழுகைக்கும் இறந்தவர்களுக்கு நடத்தும் தொழுகைக்கும் வேறுபாடு உண்டு. தினந்தோறும் நடத்தும் ஐந்து நேரத் தொழுகையில் காலையில் ஐந்து மணிக்கு இரண்டு ரக்காத் தொழுகை நடைபெறும். இரண்டு ரக்காத் என்பது கைகட்டி நிற்பது, குனிந்து நிற்பது, தரையில் முட்டியிட்டு இருத்தல் இந்த மூன்றும் சேர்த்து ஒரு ரக்காத். இப்படி இரண்டு ரக்காத் தொழுகை நடைபெறும். மதியம் பன்னிரண்டு மணிக்கு நான்கு ரக்காத் தொழுகை நடைபெறும். மாலை நான்கு மணிக்கு நான்கு ரக்காத் தொழுகை நடைபெறும். மாலை ஆறு மணிக்கு மூன்று ரக்காத் தொழுகை நடைபெறும். இரவு எட்டு மணிக்கு நான்கு ரக்காத் தொழுகை நடைபெறும். இறப்புத் தொழுகையில் நான்கு ரக்காத் தொழுகை நடைபெறும். ஆனால் இறப்புத் தொழுகையில் யாரும் குனிய மாட்டார்கள். தரையில் முட்ட மாட்டார்கள். இறந்தவர் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் பள்ளி வாசலுக்குள் கொண்டு செல்வார்கள். இறந்தவருக்காகத் தொழுகை நடத்துவதால் இறந்தவரைச் சந்தக்

என்ற பெட்டியிலிருந்து வெளியில் வைத்து அதன்பின் நின்று தொழுகை நடத்துவார்கள். பின்னர் அடக்கம் பண்ணக்கூடிய இடத்திற்கு எடுத்துச் செல்வார்கள். அடக்கம் பண்ணக்கூடிய இடத்தில் ஆறு அடி ஆழத்தில் குழி தோண்டுவார்கள். தேங்காய்பட்டணம் கிராமம் கடற்கரைப் பகுதி. ஆகையால் நேராகக் குழி தோண்டாமல் மூன்று அடி வீதியாகத் தோண்டி அதன் உள் மூன்று அடி தோண்டுவார்கள். ஏனென்றால் மண் இடிந்து விழாமல் இருப்பதற்காக இவ்வாறு தோண்டுவார்கள். மண்ணுக்கு ஏற்றபடி தோண்டுவார்கள். ஆறு அடி தோண்ட வேண்டும் என்பது கட்டாயம். உள் குழியைச் சுற்றி நான்கு பக்கமும் பலகை வைப்பார்கள். ஒருவர் மட்டும் குழிக்குள் இறங்கி நிற்பார். இருவர் பிணத்தைத் தூக்கிக் கொடுப்பார்கள். மண்ணினுள் வைத்தவுடன் பிணத்தைக் கட்டியிருந்த மூன்று கட்டுகளையும் அவிழ்த்து விடுவார்கள். நேராகப் பிணத்தைப் படுக்க வைப்பதில்லை. வலது பக்கமாகச் சாரித்துச் சற்றுத் தூக்கி வைப்பார்கள். ஏனென்றால் அடக்கம் பண்ணி முடித்து மண்ணை போட்டவுடனே மயான இடத்தைவிட்டு வெளியில் வந்தவுடன் வானவர்கள் (தூதர்கள்) அங்கு வருவார்கள். வானவர்கள் உடனடியாக வந்து இறந்தவாரிடம் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக என்று கூறிப் பின்னர்க் கேள்விகள் கேட்பார்கள்.

மண்ணைப் போட்டுப் பின் பலகை வைத்து மூடுவார்கள். முற்காலத்தில் கல் வைப்பார்கள். சமாதியாகக் கட்டுவதில்லை. மண்ணோடு மண்ணாக வேண்டும் என்பது அவர்களது நம்பிக்கை. அடக்கிவிட்ட பின் மீண்டும் இறை வேண்டல் செய்வார்கள். அதனைப் பாவமன்னிப்பு என்று கூறுவார்கள். பின்னர் மூன்று நாள் கழிந்த பிறகு பள்ளிவாசலில் உள்ள ஆலிம் மற்றும் ஏழை எளியவர்கள், உறவினர்களை அழைத்து விருந்து கொடுப்பார்கள். அந்த நாட்களில் இறந்தவாரின் வீட்டில் உள்ள அனைவரும் திருக்குரானை ஓதிக்கொண்டு இருப்பார்கள். பதினைந்து நாட்கள் ஓதுவார்கள். ஒவ்வொருவரும் எத்தனை முறை ஓதுகிறார்கள் எனக் குறிப்பிடுவார்கள். இதனைக் கத்தம் என்பார்கள். பதினைந்தாவது நாளிலும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை அழைத்து உணவளிப்பார்கள். பின்னர் நாற்பதாவது நாள் சடங்கு செய்வார்கள். நாற்பதாவது நாளில்தான் இறந்தவாரின் ஆவி உலகத்தை விட்டுச் செல்லக்கூடிய நாள் என்ற நம்பிக்கை கொண்டு அன்றும் அனைவரையும் அழைத்து விருந்து பண்ணுவார்கள். குடும்பத்தலைவர் இறந்து விட்டால் அவரது மனைவி நான்கு மாதமும் பத்து நாட்களும் வீட்டிற்கு வெளியே வரமாட்டாள். அறைக்குள்ளேதான் இருப்பாள். உணவு, தண்ணீர் போன்ற அவளுக்குத் தேவையான பொருட்களை உறவினர்கள் அவளது அறைக்குள் கொண்டு கொடுப்பார்கள். கணவனை இழந்த

அந்தப் பெண் அவரது இரத்த உறவில் உள்ள ஆண்களை மட்டும் அந்த நாட்களில் பார்க்கலாம். பிற ஆண்களைப் பார்க்கக் கூடாது. அவளது சகோதரர்கள், மகன், மருமகன் போன்றவர்களைப் பார்க்கலாம். அன்னிய ஆண்களைப் பார்க்கக்கூடாது. எல்லாப் பெண்களையும் பார்க்கலாம். நான்கு மாதமும் பத்து நாட்களும் முடிந்த பிறகு அவர்கள் அன்னிய ஆண்களைப் பார்க்கலாம். இயல்பு வாழ்க்கை வாழலாம். பின்னர் ஒவ்வோர் ஆண்டும் இறந்தவாரின் நினைவு நாளைக் கொண்டாடுவார்கள். அந்நாளில் ஏழை எளியவர்கள், உறவினரை அழைத்து விருந்தளிப்பார்கள்.

இறப்புத் தொடர்பான நம்பிக்கைகள்

சவ ஊர்வலத்திற்கு எதிராகச் செல்லக் கூடாது.

சனிப் பிணம் துணை தேடும்.

புதன் கிழமை சாவு நல்லது.

மரண நாளில் மழை பெய்வது நல்லது.

மரண வீட்டிற்குச் சென்று வந்த பின்னர்க் குளிக்காமல் இருக்கக் கூடாது.

கனவில் மரணம் என்றால் சுபம்.

சனிக்கிழமை சாவுக்குச் சென்றால் அங்கே தங்கக் கூடாது.

சனிக்கிழமை பிணம் புதைத்தால் கோழியையும் சேர்த்துப் புதைக்க வேண்டும்.

ஒருவர் மார்கழித் திருவாதிரை நாளிலோ, ஏகாதசியன்றோ இறந்தால் அவர் பெரும்பேறு செய்ததாக நம்பப்படுகின்றது.

மூத்த குழந்தை இறப்பின் வீட்டினுள்ளே புதைப்பர்.

இறந்தவர் வாயில் அரிசி போட வேண்டும்.

இறக்கும் முன்னர் ஒருவர் விரும்பும் பொருளை அளித்தால் அவர் உயிர் எளிதில் பிரியும் என்பர்.

இறந்தவர்க்குரிய சடங்குகளைச் செய்யாவிட்டால் தீங்கு நேரும்.

இறந்தவர்களோடு அவர்கள் விரும்பிய பொருள்களையும் புதைப்பர்.

மரண வீட்டில் இரவு முழுவதும் விளக்கு எரிய வேண்டும்.

மரணம் அடைந்த நேரம் பகல் என்றால், நிறை நாழி நெல் பிணத்திற்கருகில் வைக்க வேண்டும்.

மரண வீட்டிற்குச் சென்று 'போய் வருகிறேன்" என்று கூறக்கூடாது. அப்படிக் கூறினால் அந்த வீட்டில் அடுத்து ஒரு சாவு நிகழும் என்று நம்புகின்றனர்.

மரண வீட்டில் பெண்கள் மாரடித்து அழுதால், மறு உலகம் கிட்டும் என நம்புகின்றனர்.

இறந்தவர்க்குச் செய்யும் ஈமக்கிரியையால் இறந்தவர் உயிர் வீடுபேறு அடையும் என நம்புகின்றனர்.

நல்வினை செய்தோருக்குத்தான் நல்ல சாவு கிட்டும்.

காகத்தைக் கனவிலே கண்டால், மரணச் செய்தி வரும்.

பல்லி சிரசிலும் இடக்கையிலும் விழுந்தால் மரணம் ஏற்படும்.

காகம் தண்ணீரில் உடம்பைக் கழுவுவதைப் பார்க்கக் கூடாது. அப்படிப் பார்த்தால் மரணம் வரும்.

வெள்ளி, திங்கள் என்னும் இரு நாட்களில் இறந்தவர்கள் கனவில் வந்தால் நிகழப்போகும் மரணத்தை முன்னுணர்த்துவதாக நம்புகின்றனர்.

திரி கொளுத்தி வைப்பதாகக் கனவு கண்டால் மரணம் வரும்.

தண்ணீர் ஓடுகிறது மாதிரி கனவு கண்டால் மரணம் வரும்.

திருமணத்தைக் கனவில் காண்பது மரணத்தைக் குறிக்கும்.

இயல் தொகுப்பு

தமிழ் மக்கள் பிறப்பினைப் போன்றே இறப்பினையும் ஒரு நிகழ்வாகவே கருதியுள்ளனர். அந்த நிகழ்வில் உணர்வுக் கலப்பு ஏற்பட்டபிறகு பல சடங்கு முறைகள் தோன்றியுள்ளன. அந்தச் சடங்கு முறைகள் இயல்பான தன்மையுடன் உருவாக்கப்பட்டு அவை கட்டாயச் சடங்குகள் என்னும் நிலையை அடைந்துள்ளன. கன்னியாகுமாரி மாவட்டத்தில் விளவங்கோடு வட்டத்தில் இந்து, கிறித்தவம், இஸ்லாம் என்னும் மதத்தினர் வாழ்ந்தாலும் மூன்று பிரிவினருமே பெரும்பாலும் இறந்தோரை மண்ணில் புதைக்கும் பண்டை வழக்கத்தினைப் பின்பற்றுகின்றனர். இந்து மதம், நிர்வனத்தன்மை அடைந்து பிறப்பண்புச் சார்புகள் கலந்த பிறகு விளவங்கோடு வட்டத்தைச் சார்ந்த இந்துக்களிடையே இறந்தோரை எரிக்கும் தன்மையும் காணப்படுகிறது. உழவுத்தொழிலை உயிராகக் கருதும் மக்களிடையே நிலத்தை எரியூட்டும் வழக்கம் மிக அரிதாகவே காணப்படும். சுடுகாடு என்னும் அமைப்புமுறை தோன்றிய பின்னரே எரிக்கும் வழக்கம் மிகுந்துள்ளது. விளவங்கோடு

வட்ட மக்களிடையே இறந்த மனித உடலானது மண்ணுடன் மட்கி மண்ணில் வேர்விட்டு வளரும் தாவரங்களுக்கு உரமாக வேண்டும் என்னும் எண்ணம் இருக்கிற காரணத்தினால் புதைக்கிற வழக்கத்தைப் பின்பற்றுகின்றனர். கல்லறை என்னும் கட்டுமானம் புதைக்கப்பட்ட இடத்தில் எழுந்து மரங்களின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதுபோல் தோன்றினாலும் புதைக்கப்பட்ட உடலானது உரமாக மாறி தாவரங்களின் வேர்களின் வழியாக ஊட்டமாக மாறுகிறது. ஒரு சிலரைத் தவிர ஏனையோர் அனைவரும் புதைக்கும் வழக்கத்தைப் பின்பற்றுவதால் இந்து, கிறித்தவம், இஸ்லாம் என்னும் மதத்தினாரிடையே இறப்புச் சடங்கில் காணப்படும் வேற்றுமைகள் மறைந்து புதைத்தலில் ஒற்றுமைபடுகிறது எனலாம்.

சான்றெண் விளக்கம்

1. திருக்குறள் : 339
2. கலைக்களஞ்சியம், தொகுதி 4 : பக். 392-394
3. கலைக்களஞ்சியம், தொகுதி 8 : ப. 117
4. டாக்டர் மா. கோதண்டராமன், நாட்டுப்புறவியலும் பண்பாடும் : ப. 127
5. டாக்டர் சு. சண்முக சுந்தரம், தமிழில் நாட்டுப்புறப்பாடல்கள் : ப. 177
6. முனைவர் ஆறு. அழகப்பன், நாட்டுப்புறப் பாடல்கள் : ப. 139
7. முனைவர் ஆறு. அழகப்பன், நாட்டுப்புறப் பாடல்கள் : ப. 132
8. கலைக்களஞ்சியம், தொகுதி 2 : பக். 189-190
9. த. இரமணி, ஒப்பாரிப் பாடல்கள், தொகுதி ஐ : ப. 249
10. தொல்காப்பியம் புறம் : 19
11. க. சண்முகசுந்தரம் , நாட்டுப்புறவியல் : ப. 208
12. ஆ. செல்லபெருமாள், சமூக மானிடவியல் : ப. 36
13. ஊாயஅடிநசள நுெஉலஉடழியநனயை, ஏழட., ஐஏ : ீ. 396
14. வுயஅடை டுநஒைஉழெ, ஏழட, ஏ. : ீ. 2657
15. நுெஉலஉடழிநஉயை டீசவையணைஉயன, ஏழட.9 : ீ. 107
16. சு. சண்முக சுந்தரம், நாட்டுப்புறப்பாடல் : ப. 221

17. திருக்குர் ஆன் 3:156

18. திருக்குர் ஆன் 10:56

19. திருக்குர் ஆன் 3:145

20. திருக்குர் ஆன் 9:116

21. திருக்குர் ஆன் 4:78

முடிவுரை

தமிழ்நாட்டிலுள்ள மாவட்டங்களில் கன்னியாகுமாரி மாவட்டம் தென் எல்லையில் உள்ள மாவட்டமாக விளங்குகிறது. பிற மாவட்டங்களிலிருந்து கன்னியாகுமாரி மாவட்டம் தனித்த அடையாளங்களைக் கொண்டதாக இயற்கை அமைவாலும் பழக்கவழக்கத்தாலும் விளங்குகிறது. கன்னியாகுமாரி மாவட்டம் 1956ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாள் வரை, பண்டைக்காலத்தில் திருவிதாங்கூர் சமஸ்தானம் என்று அழைக்கப்பட்ட கேரளத்துடன் இணைந்திருந்தது. மாநில அளவில் கேரளத்துடன் அமைந்திருந்தாலும் மொழி உணர்வில் தமிழர் என்ற எண்ணத்துடன் இப்பகுதி மக்கள் வாழ்ந்திருந்தனர். கன்னியாகுமாரி மாவட்ட, குறிப்பாக விளவங்கோடு வட்ட மக்களின் பேச்சு வழக்கில் மலையாள மொழி கலப்பு அதிகமாக இருந்தாலும் அந்த மலையாளச் சொற்களின் பெரும்பான்மையான வேர்சொற்கள் தமிழ் மொழியாக அமைந்திருப்பதை காணமுடிகிறது. சேரர் வழி வந்த தமிழ் மக்களாகிய விளவங்கோடு வட்ட மக்கள் தமிழ் உணர்வு மிக்கவர்களாக விளங்கியதால் கேரளப்பகுதியிலிருந்து தமிழ்ப் பகுதியைப் பிரித்தெடுத்துக் கன்னியாகுமாரி மாவட்டமாக உருவாக்குவதற்காக கிளர்ந்து எழுந்து போராடியதை வரலாறு சுட்டிக் காட்டுகிறது. தமிழகத்தில் உள்ள மாவட்டங்களில் வர்மக்கலை, சித்தமருத்துவம், களாரி, சிலம்பம் முதலானவற்றைத் தற்காலத்திலும் தொடர்ந்து வளர்த்துவரும் மாவட்டமாக கன்னியாகுமாரி மாவட்டம் விளங்குகிறது.

கன்னியாகுமாரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு என்னும் நான்கு வட்டங்களாக அமைந்துள்ளது. இந்த நான்கு வட்டங்களில் அகஸ்தீஸ்வரம், தோவாளை என்னும் இரண்டு வட்டங்களும் திருநெல்வேலி மாவட்ட எல்லைப்பகுதியை ஒட்டி அமைந்துள்ளன. கல்குளம், விளவங்கோடு என்னும் இரண்டு வட்டங்களும் கேரள எல்லைப்பகுதியை ஒட்டி அமைந்துள்ளன. இந்த நான்கு வட்டங்களில் விளவங்கோடு வட்டமே கேரளத்தை முழுமையும் ஒட்டிய வட்டமாக அமைந்துள்ளது. இந்த வட்டத்தில் நாடார் என்னும் சாதிப்பிரிவினர் இந்துக்களாகவும் கிறித்தவர்களாகவும் காணப்படுகின்றனர். பிள்ளை, நாயர், நாவிதர், மீனவர், தாழ்த்தப்பட்டோர் முதலான பிற சாதியினரும் வாழ்கின்றனர். நாடார் என்னும் சாதிப்பிரிவில் நாற்பது விழுக்காட்டிற்கு மேற்பட்டோர் கிறித்தவர்களாகவும், மீதமுள்ளோர் இந்துக்களாவும் உள்ளனர். இந்தச் சாதியினரைத் தவிர ஓரிருவராக பிற சாதியினரும் வாழ்கின்றனர்.

விளவங்கோடு வட்டத்தில் வாழ்வோரில் உள்ள மீனவர்கள் அனைவரும் கிறித்தவச் சமயம் சார்ந்தவர்களாக வாழ்கின்றனர். கிறித்தவச் சமயத்திலும் இவர்கள் ரோமன் கத்தோலிக்க மதப்பிரிவினராகக் காணப்படுகின்றனர். நாடார் சாதியில் கிறித்தவராக இருப்போரில் பெரும்பான்மையோர் தென்னிந்தியத் திருச்சபை கிறித்தவர்களாக உள்ளனர். பிற சாதியினாரில் தொன்னூறு விழுக்காட்டிற்கு மேற்பட்டோர் இந்துக்களாக வாழ்கின்றனர். தாழ்த்தப்பட்டோரில் நாற்பது விழுக்காட்டிற்கு மேற்பட்டோர் கிறித்தவராக இருந்தாலும் நாடார் கிறித்தவர்களுக்கும் தாழ்த்தப்பட்ட கிறித்தவர்களுக்கும் எந்த வேறுபாடும் காணப்படுவதில்லை.

விளவங்கோடு வட்டத்தில் ஐந்து விழுக்காட்டிற்கும் உட்பட்ட அளவில் இஸ்லாமியர்கள் வாழ்கின்றனர். மார்த்தாண்டம், தேங்காப்பட்டணம், இரவிபுதூர்கடை, நம்பாளி முதலான ஊர்களில் மட்டும் இஸ்லாமியர்கள் எண்ணிக்கையில் மிகுதியாக வாழ்கின்றனர். பிற ஊர்களில் மிகச் சிலராகவே இஸ்லாமியர்கள் வாழ்கின்றனர்.

கன்னியாகுமாரி மாவட்டத்தின் தென்பகுதியில் உள்ள அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் வாழ்கின்ற மக்களின் பழக்க வழக்கத்திற்கும் வட பகுதியில் உள்ள விளவங்கோடு வட்டத்தில் வாழும் மக்களின் பழக்கவழக்கத்திற்கும் மிகுந்த வேறுபாடு காணப்படுகிறது. இந்த வேறுபாடானது மொழியை அடிப்படையாகக் கொண்டதாகவே

காணப்படுகிறது. அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் உள்ள தமிழ் மொழி பயன்பாடும் விளவங்கோடு வட்டத்தில் உள்ள தமிழ் மொழி பயன்பாடும் ஐம்பது விழுக்காட்டிற்குமேல் வேறுபாடு உள்ளது.

பேச்சு மொழியே என்றும் வாழும் மொழியாக விளங்குகிறது. எழுத்து மொழியில் உள்ள நிலைத்த தன்மை பேச்சு மொழியில் இல்லை என்றாலும் மொழியின் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் அடிப்படை அமைத்துக் கொடுப்பது பேச்சு மொழி ஆகும். அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் வாழுகிறவர்களின் பேச்சு வழக்கில் காணப்படும் திருநெல்வேலி தன்மை விளவங்கோடு வட்டத்தில் வாழுகிறவர்களின் பேச்சு வழக்கில் காணப்படுவதில்லை. விளவங்கோடு வட்டத்தில் காணப்படும் மக்களின் மலையாளத் தன்மை அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் வாழும் மக்களின் பேச்சு வழக்கில் காணப்படவில்லை. அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் உள்ள மக்கள் கன்னியாகுமாரி மாவட்டத்தின் தலைநகரான நாகர்கோவிலுடனும் அதற்கு அடுத்த நிலையில் தமிழகத்தின் பிற மாவட்டத்தினருடன் தொடர்புடையவர்களாக விளங்குகின்றனர். விளவங்கோடு வட்டத்தில் உள்ள மக்கள் தமிழகத்தின் பிற மாவட்டத்தில் உள்ளோருடன் கொண்டிருக்கும் தொடர்பினை விடவும் கேரளத்துடன் கொண்டிருக்கும் தொடர்பு மிகுதியாக உள்ளது. எனவே இவர்களின் பேச்சு வழக்கில் மலையாளத்தன்மை மிகுந்துள்ளது எனலாம்.

விளவங்கோடு வட்டத்தில் உள்ள கிறித்தவர்கள் கிறித்தவ மதத்தொடர்புடைய விழாக்களைக் கொண்டாடுகின்றனர் இஸ்லாமியர்கள் இஸ்லாமிய மதத்தொடர்பான விழாக்களைக் கொண்டாடுகின்றனர் இந்துக்கள் இந்து மதம் தொடர்பான விழாக்களைக் கொண்டாடுகின்றனர். விளவங்கோடு வட்டத்தில் உள்ள கிறித்தவர்களின் மத விழாக்களில் கேரள அடையாளங்களை விடவும் தமிழ் அடையாளங்களே மிகுதியாகக் காணப்படுகின்றன. கேரள மக்கள் விரும்பி கொண்டாடும் ஓணம் முதலான விழாக்களை விளவங்கோடு வட்டத்தில் உள்ள மலையாளத்தை தாய்மொழியாக கொண்டவர்களைத்தவிர வேறு எவரும் விரும்பிக் கொண்டாடுவதில்லை. இஸ்லாமியாரின் மதச் சடங்குகள் ஓரளவிற்கு பொதுமைத் தன்மையுடன் காணப்படுவதால் மிகுந்த வேறுபாட்டினைக் காணமுடிவதில்லை.

கல்குளம் தாலுகாவில் உள்ள மண்டைக்காடு என்னும் கடற்கரைப் பகுதியில் மண்டைக்காட்டுக் கலவரம் என்னும் மதக் கலவரம் நிகழ்ந்தது. கல்குளம் வட்டத்தை

ஒட்டிய வட்டமாக விளங்கும் விளவங்கோடு வட்டத்தில் இந்த மதக் கலவரத்தின் தாக்கம் பரவியதை விடவும் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் மிகுதியாக பரவியது. மதக்கலவரமாக தொடங்கிய இந்தக் கலவரம் இரண்டு பெரும்பான்மை சாதியினாரிடையே எழுந்த கலவரமாக மாறியதன் பிறகு விளவங்கோடு வட்டத்தில் உள்ள மக்கள் அந்தக் கலவரத்தை ஒதுங்கி நின்றே பார்த்தவர்கள் எனலாம். விளவங்கோடு வட்டத்தில் உள்ள மக்களில் பெரும்பாலானோர் மதச் சடங்குகள் காட்டிய ஆர்வத்தைச் சாதி சடங்குகளில் காட்ட விரும்பாததால் இந்த மண்டைகாட்டு கலவரம் விளவங்கோடு வட்டத்தில் பொரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை எனலாம்.

விளவங்கோடு வட்ட இந்து மதம் சார்ந்தோரின் வாழ்வியல் சடங்குகள்

விளவங்கோடு வட்டத்தில் உள்ள இந்து மதச் சார்புடையோர் பின்பற்றும் பிறப்புச் சடங்கு, பூப்புச் சடங்கு, திருமணச் சடங்கு, இறப்புச் சடங்கு ஆகியவற்றில் தமிழகத்தின் பிற மாவட்டத்தில் உள்ளோர் பின்பற்றும் மதச் சடங்கு தன்மைகளை விட மாறுபட்டிருப்பதைக் காணமுடிகிறது. மதத்தால் இந்துக்களாக இருந்தாலும் சடங்கு முறைகளாலும் பழக்கவழக்கத்தாலும் விளவங்கோடு வட்டத்தை சார்ந்த மக்கள் பெருந்தெய்வ வழிபாட்டுச் சடங்குகளிலிருந்து வேறுபட்டவர்களாகவே காணப்படுகின்றனர். பெரும்பாலும் அவர்கள் வாழ்வியலில் காணப்படும் சடங்கு முறைகள் பண்டைத்தமிழர் பண்பாட்டை அடியொற்றியதாகவே காணப்படுகின்றன. வழிவழி வந்த சடங்கு முறைகளைத் தங்களுக்குத் தாங்களே செய்து கொள்ளும் பழக்கவழக்கம் கொண்டவர்களாக விளவங்கோடு வட்டத்தில் வாழும் இந்து மக்கள் விளங்குகின்றனர்.

இந்து மதத்தினாரிடையே காணப்படும் சடங்குகளில் ஒன்றான பிறப்புச் சடங்கில் சூல் அழைப்பு என்னும் சடங்கு முதன்மையானதாக விளங்குகிறது. இந்தச் சடங்கு கன்னியாகுமாரி மாவட்டத்தில் தனித்த பெயருடன் மதச் சார்பின்றி நடத்தப்படும் பொது சடங்குபோல் அமைந்துள்ளது. தற்காலத்தில் திருநீறு பூசுதல், திருமண் சாத்துதல் முதலானவை இடம்பெற்றாலும் இந்தச் சூல் அழைப்புச் சடங்கானது பொதுநிலை வழிப்பாட்டுடன் விளங்குவதைக் காணமுடிகிறது.

குழந்தை பிறந்தபிறகு நடைபெறும் சடங்குகளில் ஒன்றான கொப்பாடை புடைத்தல், பெயர் சூட்டுதல், தொட்டிலில் போடுதல், பொன் அணிவித்தல், தலைமுடி இறக்குதல் முதலான அனைத்துச் சடங்குகளும் பொதுமைத் தன்மை

வாய்ந்தவையாக அமைந்துள்ளன. இந்து மதம் சார்ந்தோரால் நடத்தப்பட்டாலும் இச்சடங்குகள் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்புவரை பொதுமைத் தன்மையுடன் விளங்கியுள்ளன. தற்காலத்தில் சமய நிறுவனங்கள் ஏற்படுத்திய விழிப்புணர்வின் காரணமாக இந்து சமய மக்களின் பிறப்புச் சடங்கில் பெருந்தெய்வத் தன்மை காணப்படுகிறது.

விளவங்கோடு வட்டத்தில் உள்ள இந்து மதத்தினாரிடையே காணப்படும் பூப்புச் சடங்கும் பெரும்பான்மையும் பண்டைத் தமிழ்த் தன்மை கொண்டனவாக காணப்படுகின்றனவே அல்லாமல் இந்து மதமென்னும் நிறுவனத்தன்மைக்கு உட்படவில்லை எனலாம். பூப்படைந்த பெண்ணிற்கு நடத்தப்படும் மாற்றுமுறை என்னும் சடங்குமுறையானது தமிழகத்தின் பிறபகுதிகளில் காணப்படாத ஒன்றாகும்.

விளவங்கோடு வட்டத்தில் உள்ள மக்கள் பின்பற்றும் இந்து சமயம் சார்ந்த திருமணச் சடங்கானது மாற்றுவாங்குதல் என்னும் திருமணச் சடங்குடன் தொடங்குகிறது. இது திருமணத்திற்கு முந்தைய நாள் நடைபெறும் சடங்காகக் காணப்படுகிறது. ஆலங்கால் நாட்டுதல், மாமன் கல்யாணம், எதிர்மாலைப் போடுதல், அனந்தரம் செய்தல், பாலும் பழமும் கொடுத்தல், மாமியார் வீடு காணுதல், சுருள் பணம் கொடுத்தல், மணமக்களை வாழவிடுதல், ஏழு கழித்தல், மறுவீடுகாணுதல், படிகொடுத்தல் முதலான அனைத்துச் சடங்குகளிலும் பண்பாட்டு பழமை வெளிப்படுவதைக் காணமுடிகிறது.

விளவங்கோடு வட்டத்தில் உள்ள இந்து சமயம் சார்ந்தோரின் இறப்புச் சடங்கு பெரும்பாலும் இறப்புச் சொல்லிவிடுதல் என்னும் சடங்குடன் தொடங்குகிறது. அதனைத் தொடர்ந்து நீர்மாலைக் கொண்டுவருதல், இறந்தவரைக் குளிப்பாட்டுதல், பல்லக்குக் கட்டுதல், வாய்க்காரிசி போடுதல், பெட்டியில் வைத்துப் புதைத்தல் முதலான அனைத்தும் பழமையான பண்பாட்டுச் சார்புடையனவாகக் காணப்படுகின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய ஐயா வைகுண்டாரின் சீர்த்திருத்தக் கருத்துப் பரவலுக்குப் பின்னர் இந்து சமயம் சார்ந்த பிறப்புச் சடங்கிலும் பூப்புச்

சடங்கிலும் திருமணச் சடங்கிலும் இறப்புச் சடங்கிலும் சடங்கு முறையில் சிற்சில வேறுபாடுகள் தோன்றியுள்ளன. பண்பாடு சார்ந்த அடிப்படை சடங்குமுறையில் பெருத்த மாறுபாடு எதுவும் ஏற்படவில்லை என்பதைக் காணமுடிகிறது.

பிறப்புச் சடங்கு முதலான அனைத்துச் சடங்குகளிலும் ஒரு சாதியினருக்கும் இன்னொரு சாதியினருக்கும் இடையே வேறுபாடு காணப்பட்டாலும் அந்த வேறுபாடுகள் அடிப்படை பண்பாட்டுத் தன்மையை ஒட்டியே அமைந்துள்ள தன்மையைக் காணமுடிகிறது.

விளவங்கோடு வட்ட கிறித்தவச் சமயம் சார்ந்தோரின் வாழ்வியல் சடங்குகள்

விளவங்கோடு வட்டத்தில் உள்ள கிறித்தவ மதச் சார்புடையோர் பின்பற்றும் பிறப்புச் சடங்கு, பூப்புச் சடங்கு, திருமணச் சடங்கு, இறப்புச் சடங்கு ஆகியவற்றில் தமிழகத்தின் பிற மாவட்டத்தில் உள்ளோர் பின்பற்றும் மதச் சடங்கு தன்மைகளை விட மாறுபட்டிருப்பதைக் காணமுடிகிறது. மதத்தால் கிறித்தவர்களாக இருந்தாலும் சடங்கு முறைகளாலும் பழக்கவழக்கத்தாலும் விளவங்கோடு வட்டத்தை சார்ந்த மக்கள் வேறுபடுகின்றனர். ரோமன் கத்தோலிக்க கிறித்தவர்களிடையேயும் சீர்திருத்த கிறித்தவர்களிடையேயும் சடங்குகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. வழிவழி வந்த சடங்கு முறைகளைத் தங்களுக்குத் தாங்களே செய்து கொள்ளும் பழக்கவழக்கம் கொண்டவர்களாக விளவங்கோடு வட்டத்தில் வாழும் கிறித்தவ மக்கள் விளங்குகின்றனர்.

கிறித்தவ மதத்தினாரிடையே காணப்படும் பிறப்புச் சடங்கில் முதன்மையானது கர்ப்பிணிப்பெண்ணைத் தாய்வீட்டிற்கு அழைத்து வருவதாகும். இதனைச் சூல் அழைப்பு எங்கின்றனர். பிள்ளை பிறந்தபிறகு தாலாட்டுதல், குழந்தையைக் குளிப்பாட்டல், பிள்ளை காண வருதல், குழந்தைக்குப் பெயாரிடுதல், திருமுழுக்கு, புது நன்மை, உறுதி பூசுதல், பிறந்த நாள் விழா போன்ற சடங்குகள் செய்யப்படுகின்றன.

விளவங்கோடு வட்டத்தில் வாழும் கிறித்தவ மக்களிடையே காணப்படும் பூப்புச் சடங்கில் அதிக வேறுபாடு காணப்படுவதில்லை. இந்து மதச் சார்புடைய மக்களைத் தழுவி கிறித்தவப் பூப்புச் சடங்குக் காணப்படுகிறது. கிறித்தவ மக்களிடையே காணப்படும் பூப்புச் சடங்கில் குறிப்பிடத்தக்கது பூப்படைந்த பெண்ணின் தலையில் தண்ணீர் ஊற்றுவதாகும். ஒரு சில கிறித்தவர்கள் பூப்புனித நீராட்டு விழா என்று அழைப்பிதழ் அச்சாக்கம் செய்து பூப்புச் சடங்கினை நிகழ்த்துகின்றனர்.

விளவங்கோடு வட்டத்தில் வாழும் கிறித்தவ மக்களிடையே காணப்படும் திருமணச் சடங்கில் அதிக வேறுபாடு காணப்படுவதில்லை. கிறித்தவத் திருமணச் சடங்கில் முதன்மையானது வாழ்க்கைத் துணையைத் தேர்தெடுத்தல் ஆகும். திருமண நிச்சயதாம்பூலம், திருமணத் தயாரிப்புப் பயிற்சி வகுப்பில் பங்கு பெறுதல், ஓலை வாசித்தல், திருமண உறுதி மொழி செய்தல், திருமண வரவேற்பு, எதிர்மாலை சந்தனம், திருமண ஆராதனை, பெண் மாப்பிள்ளை வீடு புறப்படுதல், பெண் வீட்டார் வீடு காண வருதல் போன்ற சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

விளவங்கோடு வட்ட கிறித்தவ மக்களின் இறப்புச் சடங்கில் முதன்மையானது ஒருவர் இறந்தவுடன் துக்க மணி அடித்தல் ஆகும். இறுதி சடங்கு செய்தல், கல்லறை தோண்டுதல், இறுதி ஊர்வலம், மண்ணில் புதைத்தல், கல்லறை கட்டுதல், நினைவு நாள் சடங்கு செய்தல் போன்றவற்றை நிகழ்த்துகின்றனர்.

விளவங்கோடு வட்ட இஸ்லாமியச் சமயம் சார்ந்தோரின் வாழ்வியல் சடங்குகள்

விளவங்கோடு வட்டத்தில் உள்ள இஸ்லாமிய மதச் சார்புடையோர் பின்பற்றும் பிறப்புச் சடங்கு, பூப்புச் சடங்கு, திருமணச் சடங்கு, இறப்புச் சடங்கு ஆகியவற்றில் தமிழகத்தின் பிற மாவட்டத்தில் உள்ளோர் பின்பற்றும் மதச் சடங்கு தன்மைகளை விட மாறுபட்டிருப்பதைக் காணமுடிகிறது. மதத்தால் இஸ்லாமியர்களாக இருந்தாலும் சடங்கு முறைகளாலும் பழக்கவழக்கத்தாலும் விளவங்கோடு வட்டத்தை சார்ந்த மக்கள் வேறுபடுகின்றனர். வழிவழி வந்த சடங்கு முறைகளைத் தங்களுக்குத் தாங்களே செய்து கொள்ளும் பழக்கவழக்கம் கொண்டவர்களாக விளவங்கோடு வட்டத்தில் வாழும் இஸ்லாமிய மக்கள் விளங்குகின்றனர்.

இஸ்லாமிய மதத்தினாரிடையே காணப்படும் பிறப்புச் சடங்கில் முதன்மையானது மடி நிறைத்தல் ஆகும். இதனைச் சூல் சீர் என்கின்றனர். பிள்ளை பிறந்தபிறகு குழந்தையின் காதில் பாங்கு சொல்லுதல், அகீகா கொடுத்தல், குழந்தையைத் தொட்டிலிடல், கத்னா (சுன்னத்) போன்ற சடங்குகள் செய்யப்படுகின்றன.

இஸ்லாமிய மக்களிடையே பொதுவாக பூப்புச் சடங்கு கடைப்பிடிக்கப் படுவதில்லை. தற்காலத்தில் இந்து மக்களைத் தழுவி சிற்சில சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. பூப்படைந்த பெண்ணிற்குத் தண்ணீர் ஊற்றுதல், சத்தான உணவுக் கொடுத்தல், தீட்டுக் கழித்தல் போன்ற சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன.

விளவங்கோடு வட்டார இஸ்லாமிய மக்களின் திருமணச் சடங்கு பிற மதச் சடங்கினை விட வேறுபாடு உடையதாகக் காணப்படுகிறது. இஸ்லாமிய மக்களின் திருமணச் சடங்கில் முதன்மையானது நிக்காஹ் எனும் திருமண ஒப்பந்தம் ஆகும். மணமகளின் சம்மதம், வலீமா விருந்து, சீதனம் கொடுத்தல், மணமக்களை வாழ்த்துதல்,ஷிஹார் திருமணம், நிக்காஹ் குத்பா போன்ற சடங்குகள் நிகழ்த்தப்படுக்கின்றன.

விளவங்கோடு வட்டார இஸ்லாமிய மக்கள் அஞ்கி கழுவுதல், சந்தக் பெட்டியில் வைத்தல், தொழுகை நடத்தல், அடக்கம் பண்ணுதல், திருக்குரான் ஓதுதல் போன்ற சடங்குகளைச் செய்கின்றனர்.

கன்னியாகுமாரி மாவட்டம் பரப்பளவால் சிறிய மாவட்டமாக விளங்குகிறது. இந்து மதமானது இந்த மாவட்டத்தில் சைவத்தன்மையும் வைணவத்தன்மையும் சார்ந்து விளங்குகிறது. கிறித்தவ மதமானது ரோமன் கத்தோலிக்கக் கிறித்தவம், தென்னிந்தியத் திருச்சபைக் கிறித்தவம் என்னும் இருபெரும் பிரிவுடன் வேறு சில கிறித்தவப் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக விளங்குகிறது. இஸ்லாமிய மதத்தில் லெப்பை, மரைக்காயர், ராவுத்தர் முதலான பிரிவுகள் தமிழகத்தில் காணப்பட்டாலும் கன்னியாகுமாரி மாவட்டத்தில் உள்ள இஸ்லாமியர் அனைவரும் லெப்பை முஸ்லிம் என்றே அழைக்கப்படுகின்றனர். உருது முஸ்லிம் என்னும் பிரிவினர் கன்னியாகுமாரி மாவட்டத்தில் காணப்படவில்லை. எனவே இஸ்லாம் எங்கள் வழி இன்பத் தமிழ்